ஸ்ரீகலா SRIKALA

# தித்திக்கும் எதிரி

THITHTHIKUM ETHIRI

ஸ்ரீகலா SRIKALA

# தித்திக்கும் எதிரி

THITHTHIKUM ETHIRI


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER

தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS

Download

## Contents


பகை : 1

பகை : 2

பகை : 3

பகை : 4

பகை : 5

பகை : 6

பகை : 7

பகை : 8

பகை : 9

பகை : 10

பகை : 11

பகை : 12

பகை : 13

பகை : 14

பகை : 15

பகை : 16

பகை : 17

பகை : 18

பகை : 19

பகை : 20

பகை : 21

பகை : 22

PDF தமிழ் .com
WWW.PDFTAMIL.COM

"அம்மா..."

வலமங்கை நச்சியார் அலறிய அலறலில் அவள் வீடு இருந்த பகுதி முழுவதும் பயங்கரமாய் அலறியது... அப்படி இருக்கும் போது வீட்டின் உள்ளே சமையலறையில் இருக்கும் அவளது அன்னைக்கு அவளது சத்தம் கேட்காமல் இருக்குமா...? அங்கிருந்தபடியே தலையை மட்டும் வெளியில் நீட்டியவாறு சித்ரவேணி,

"எதுக்கு நாச்சி இப்படிக் கத்துற...?" என்று அவரும் பதிலுக்குக் கத்தினார்...

'அவள் தான் புரியாம கத்துகிறாள்ன்னா... இவளும் சேர்ந்து கத்துறத பாரு... எனக்கு வந்து வாய்ச்சியிருக்கு ரெண்டு ஞானசூன்யங்கள்...' மானசீகமாகத் தலையில் அடித்துக் கொண்டார் வரவேற்பறையில் அமர்ந்திருந்த பொன்னுரங்கம்... செய்தித்தாளில் புதைந்திருந்த தலையை அவர் மறந்தும் வெளியில் நீட்டவில்லை...

"அம்மா... என் பேரு நாச்சி இல்லைன்னு உனக்கு எத்தனை தடவை சொல்றது...? என் பேரு நயன்தாரா..." என்று கோபமாய் அலுத்து கொண்டாள் வலமங்கை நாச்சியார்...

"எவ்வளவு அழகான பேரு வலமங்கை நாச்சியார்... அதை ஏன் பாப்பா இப்படி நயனு, கொயனுன்னு கொலை பண்ற...?" என்றபடி அங்கு வந்தார் அவளது தந்தையைப் பெற்ற தந்தை, அதாவது அவளது தாத்தா சுப்பிரமணியம்...

"க்கும்... அழகாயிருக்கும், அழகாயிருக்கும்... ஏன் அழகா இருக்காது...? ஏன்னா அது உன் பொஞ்சாதி பெயராச்சே... அது உனக்கு அழகாவும் இருக்கும், தித்திப்பா இனிக்கவும் செய்யும்..." என்று நொடித்த பேத்தியை கடிய அவருக்கு மனம் வரவில்லை...

"அதானே பாப்பா நானும் சொல்றேன்..." என்று பரிதாபமாகச் சொன்ன தந்தையைக் கண்டு பொன்னுரங்கத்திற்கு இரக்கமாய் இருந்தது போலும்,

PDF தமிழ் .com

"நீங்க விடுங்கப்பா... கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை..." என்றார் மகளை ஒரு மாதிரியாய் பார்த்தபடி...

‘நீங்க எந்த மாதிரி பார்த்தாலும் எனக்குக் கவலையில்லை’ என்பது போல் பதிலுக்குத் தந்தையைப் பல மாதிரி பார்த்து வைத்தவள் பின் தாத்தாவிடம் திரும்பி,

"தாத்தா, ஒரு கழுதை இன்னொரு கழுதையிடம் கற்பூர வாசனையைப் பத்தி சொல்லுகிறதே... அடடே ஆச்சிரியக்குறி...!" என்று கேலி போல் கூறியவளை முறைக்க முயன்று தோற்று புறமுதுகிட்டவராய் மீண்டும் செய்தித்தாளில் தலையைப் புதைத்துக் கொண்டார் பொன்னுரங்கம்...

கணவனின் வாயை திறமையாக அடைத்த மகளின் சாமர்த்தியத்தை எண்ணி வியந்தபடி நின்றிருந்தார் சித்ரவேணி... பின்னே இத்தனை காலமாய் அவரால் செய்ய முடியாத ஒன்றை மகள் வெகுசுலபமாய்ச் செய்துவிட்டாளே... அந்தப் பெருமை அவருக்கு...

"தாத்தா... உங்க புள்ளை கிட்ட சொல்லுங்க... கழுதையோட அப்பாவும் கழுதை தான்னு..."

"அது தான் ஊருக்கே தெரியுமே..." என்று இடையிட்டார் பொன்னுரங்கம்...

"எது...? நீங்க கழுதைன்னா...?"

"ம்... நீ கழுதைங்கிறது தான்..."

"அந்தக் கழுதை என்ன சாதிச்சிருக்கு தெரியுமா...?" என்று தன் கையிலிருந்த கவரை அவர் கண்முன் ஆட்டியவள்,

"என்னோட திறமைக்கு அடிச்சான் பாருங்க அப்பாயிண்ட்மென்ட் ஆர்டர்..." வடிவேல் பாணியில் அலட்டலாய் கூறியவளை கண்டு பொன்னுரங்கத்திற்கு மயக்கமே வந்துவிட்டது...

"உண்மையாவா சொல்ற நாச்சி...?"

"டோன்ட் கால் மீ நாச்சி... ஒன்லி நயன்தாரா..."

"இப்ப இது ரொம்ப முக்கியம்... உண்மையாவா...?" மீண்டும் கேட்ட தந்தையை அற்பப்பதர் போல் பார்த்து வைத்தவள்,

"சரியாக ஒன்பது வருசத்துக்கு முந்தி நீங்க என்ன சொன்னீங்கன்னு உங்களுக்கு ஞாபகம் இருக்கா...?" என்று தந்தை கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாது அவள் கொசுவர்த்திச் சுருள் ஓட்ட முயல,

"முதல்ல பதில் சொல்லு நாச்சி..."

"முதல்ல ப்ளாஷ்பேக்..." என்றவள் அன்றைய நாளிற்குச் சென்றாள் நினைவலையில் நீந்தி...

அப்போது அவள் ஒன்பதாவது படித்துக் கொண்டிருந்தாள்... பதினான்கு வயதிருக்கும்... ஆனால் அந்த வயதிற்கு அதிகமாய் அவளுக்கு அதிகக் குறும்பும் உண்டு... அதிக வாயும் உண்டு... அவள் பயப்படும் இல்லை இல்லை பயப்படுவது போல் நடிக்கும் ஒரே ஆள் அவளது தந்தை மட்டுமே... இப்போது தந்தையிடம் அந்தப் போலி பயம் கூடப் போய்விட்டது... அது வேறு தனி விசயம்...

காலாண்டு தேர்வில் நான்கு பாடத்தில் தோல்வியுற்று, அதைத் தந்தையிடத்தில் தைரியமாகச் சொன்னவள் அவள்... அந்தளவுக்கு அஞ்சா நெஞ்சம் கொண்ட பெண் சிங்கம் அவள்...

"அப்பா..." நெளிந்து குழைந்து நின்றிருந்த மகளைக் கண்டதும் பொன்னுரங்கத்தின் இரு கண்களும் அவளைக் கூர்மையாய் அளவிட்டது...

காரியமாக வேண்டும் என்றால் மட்டுமே அவள் இப்படிக் குழைந்து, நெளிந்து பணிவு காட்டுவாள்... இல்லை என்றால் அவள் பேசும் தோரணையே வேறு...

"என்ன...?" முகத்தை வேண்டுமென்றே கடுமையாக வைத்துக் கொண்டு கேட்டார் அவர்...

"ஃப்ராக்ரஸ் ரிப்போர்ட்..."

PDF தமிழ் .com

'ஆக இதற்குத் தான் இத்தனை பணிவா...?' என்று மனதில் நினைத்தபடி மகளின் கையிலிருந்த மதிப்பெண் அறிக்கையை வாங்கினார்... வெளியில் என்னவோ நிதானமாகக் காட்டி கொண்டாலும் அவரையும் அறியாமல் மனதில் ஒருவித பதட்டம் வந்து குடி கொண்டது...

ஆனாலும் முயன்று நிதானத்தை வரவழைத்துக் கொண்டு கையிலிருந்த மதிப்பெண் அறிக்கையைப் பார்த்தவர் அடுத்த நொடி ருத்ரமூர்த்தியாய் மாறிப் போனார்...

"எருமை மாடே... நீ எருமை மாடு மேய்க்கத்தான் லாயக்கு... உன்னைப் போய்க் கான்வென்ட்டில் படிக்க வைக்கிறேனே, என்னை..." என்று பல்லை கடித்தவரை பயத்துடன் பார்த்தவள் மனதிலோ கடுகளவும் பயமில்லை...

'செருப்பால அடிச்சிக்கணும்... அதைத் தானே நீங்க சொல்ல வர்றீங்க...? நேத்து தான் நான் புதுசா ஒரு ஹைஹீல்ஸ் செருப்பு வாங்கி வந்தேன்... கொண்டு வந்து தரட்டுமா...?' மெல்லமாய் முணுமுணுத்த அவளது வார்த்தைகள் நல்லவேளையாக அவரது காதில் விழவில்லை...

"என்னடி... என்னை அடிக்கச் செருப்பை ரெடி பண்ணுறியா...?" மகளின் மனம் அறிந்தவராய் அவராய் ஊகித்துக் கொண்டு அப்படிக் கேட்டார்...

"ஐயோ... அப்படி எல்லாம் இல்லைப்பா..." என்றவளின் வார்த்தையிலிருந்த பயம் மருந்துக்கும் அவளது கண்களில் இல்லை... மாறாக அது அவரைப் பார்த்துக் கேலியாய்ச் சிரித்தது...

"ஏன்டி... நாலு பாடத்தில் ஃபெயிலானதும் இல்லாம என்னைப் பார்த்து கேலி வேறு பண்றியா...?" என்றபடி அமர்ந்திருந்த நாற்காலியில் இருந்து வேகமாய் அவர் எழுந்தார்...

"நீங்க தானேப்பா சொன்னீங்க... அவனை விட எல்லாத்திலும் அதிகமா இருக்கணும்ன்னு... அவன் மூணு பாடத்தில் ஃபெயில்... ஆனா நான் நாலு பாடத்தில்

ஃபெயில்... மூணு பெருசா, நாலு பெருசா...? அவனை விட நான் தான் அதிகமான பாடத்தில் ஃபெயிலாகி இருக்கேன்... அப்போ நான் தானேப்பா ஃபர்ஸ்ட்..."

தேர்வில் தோல்வியுற்றதுக்கு அவரது மகள் புது அர்த்தம் சொன்னாள்...

"தறுதலை... பேசுறதை பாரு... அப்படியே உங்கம்மாவை போல ஞானசூன்யம்... ஏன்டி... அவன் மத்த மூணு பாடத்தில் பாசாகி இருக்கானே... அவனை விட அதிகமான பாடத்தில் பாசாகணும்ங்கிற நினைப்பு இருக்கா உனக்கு...? உனக்கு ஏத்த மாதிரி உன் இஷ்டத்துக்குப் பேசுவியா...? இன்னைக்கு உனக்கு இருக்குடி கச்சேரி..." என்றவர் மகளை அடிக்கக் கையை ஓங்கி கொண்டு வந்தார்...

அவர் தன் அருகில் வரும் முன் அவள் நாலு கால் பாய்ச்சலில் அவரிடம் இருந்து தப்பித்து வெளியில் ஓடினாள்... ஆனாலும் அவர் விடாமல் அவளைப் பின்தொடர்ந்து வெளியில் வந்து அவளது முதுகில் ஓங்கி அடுத்தடுத்து அடிகள் போட்டார்... அவ்வளவு கோபம், வருத்தம் அவருக்கு...

அப்போது தான் தனது வீட்டிற்குள் நுழைந்த அழகு சுந்தரப்பெருமாள் இந்தக் கண்கொள்ளா காட்சியைப் பார்த்துவிட்டான்... அவனுக்கு அப்படி ஒரு சிரிப்பு பீறிட்டது... அவனது கேலி சிரிப்பை கண்டு அவளுள் ஆத்திரம் எழுந்தது... தந்தை அடித்த வலி கூட அவளுக்கு வலிக்கவில்லை... அவன் கேலியாகச் சிரித்தது அவளுக்கு அத்தனை அவமானமாகப் போய்விட்டது...

இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டு அங்கு வந்த வைத்தியநாதன் மகனிடம், "மருமகளைப் பார்த்து நீ ஏன்டா சிரிக்கிற...? நீ ரொம்ப ஒழுங்கா...? ப்ளஸ்டூ படிக்கிறோம்ங்கிற பொறுப்பு கொஞ்சமாவது உனக்கு இருக்கா...? ஆமாம் உன்னோட ஃப்ராக்ரஸ் ரிப்போர்ட் எங்கேடா...?"

தந்தை கேட்டது கண்டு மகன் திருதிருவென முழித்தான்...

PDF தமிழ் .com

"மாமா... உங்க பையன் மூணு பாடத்தில் ஃபெயில்..." மாமாவிடம் மாமன் மகனை போட்டு கொடுத்தாள் அவள்...

"அப்படியாடா...?" அதைக் கேட்ட வைத்தியநாதன் உக்கிர மூர்த்தியாக மாறிப் போனார்... அதைக் கண்ட மகன் நடுநடுங்கி தான் போனான்...

"உன் பொழைப்பே இங்கே சிரிப்பா சிரிக்குது... இதுல நீ நாச்சியாவை பார்த்துக் கேலியா சிரிக்கிறியா..." என்றபடி அவனின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டார்...

"வாத்தி புள்ளை மக்குன்னு நிரூபிக்கிறடா..." இன்னமும் அவருக்குக் கோபம் குறையவில்லை... மீண்டும் அவனை அடிக்க அவர் தனது கையை ஓங்க, அவனோ 'ஆ'வென்று பயங்கரமாய் அலறியபடி வீட்டை சுற்றி ஓடி வந்தான்... வைத்தியநாதனும் விடாது மகனை பின்தொடர்ந்து ஓடினார்...

மருமகன் படும்பாடு கண்டு மனம் தாங்காது தன் வீட்டிலிருந்து பக்கத்து வீட்டிற்கு ஓடினார் பொன்னுரங்கம்... அத்தனை வருட பகை கூட அவருக்கு மறந்து போனது அவனது அலறலில்... வலமங்கை நாச்சியாரும் தந்தையின் பின்னே ஓடினாள் எதிரியின் நிலையை வேடிக்கை பார்க்க எண்ணி...

குறிஞ்சிப்பூ போன்று அபூர்வமாய்த் தான் இது போன்ற காட்சிகள் நடந்தேறும்... ஏனெனில் எப்போதும் வேதநாயகி தனது பேரனுக்குப் பாதுகாப்பு வளையம் போல் செயல்படுவார்... இன்று அவரை அங்குக் காணோம்... அதனால் தந்தையிடம் தனித்து மாட்டி கொண்டு விழி பிதுங்கி விழிக்கும் எதிரியை எள்ளி நகையாட கிடைத்த அருமையான சந்தர்ப்பத்தை நழுவ விட அவள் தயாராக இல்லை...

"அழகு..." என்றபடி அவனைத் தந்தையிடம் இருந்து காப்பாற்றிய பொன்னுரங்கம் தனது தோளோடு அணைத்துக் கொண்டார்...

"மாமா, என் பேரு ஆர்யா..." என்று அந்த நிலையிலும் தனது பெயரை தவறாகச் சொல்லும் மாமாவின் தவறை திருத்திய மருமகன் சலுகையுடன் அவரது தோளில் சாய்ந்து கொண்டான்...

அதற்குள் அவனது அலறல் சத்தம் கேட்டு அவனது தாய் வைதேகி மற்றும் பாட்டி வேதநாயகி இருவரும் வீட்டினுள் இருந்து ஓடிவந்தனர்... அது போல் சுப்பிரமணியமும், சித்ரவேணியும் அங்கு விரைந்து வந்தனர்...

"உனக்கு என்னடா பைத்தியமா பிடிச்சியிருக்கு...? இப்படிப் போட்டு பிள்ளைய அடிக்கிறியே..." மகனை கடிந்தபடி வேதநாயகி பேரன் அருகில் சென்றார்...

மாமியாரை போன்று தனது கோபத்தை வார்த்தைகளில் காட்ட முடியாது அதைத் தனது பார்வையில் காட்டியபடி மகனுக்கு ஆதரவாக நின்றார் வைதேகி...

"அத்தை... அவன் அடிக்கிறதுக்குள்ள நான் வந்து அழகை காப்பாத்திட்டேன்..." பொன்னுரங்கம் வேதநாயகியை சமாதானப்படுத்தியவர் அங்கு நின்றிருந்த வைத்தியநாதனை ஓரக்கண்ணால் பார்த்தபடி,

"அத்தை... உன் மகனுக்குப் புள்ளைய பிடிக்கலைன்னா என் கிட்ட கொடுத்துட சொல்லு... நான் அவனை வளர்த்துக்கறேன்... இப்படி வாயில்லா அப்புராணி புள்ளையைப் போட்டு அடிக்கச் சொல்லாதே..."

வேதநாயகியும், சுப்ரமணியமும் உடன் பிறந்தவர்கள்... அவர்களது இரண்டு வீடும் அருகருகே இருக்கிறது... அத்தை மகனுக்கும், மாமா மகனுக்கும் இடையில் வருடக்கணக்கில் பகை இருக்கிறது... பகை இவர்கள் இருவருக்கும் மட்டும் தான்... வீட்டு உறுப்பினர்களுக்கு இடையே கிடையாது... அவர்கள் அன்புடன் பழகி கொள்வார்கள்... அதற்கு இரு ஆண்களும் தடை போட்டது கிடையாது... அது போல் இருவரும் தங்களது பகை எதனால் என்பதைப் பற்றி இதுநாள் வரை வாய் திறந்து யாரிடமும் கூறியது இல்லை...

PDF தமிழ் .com

வைத்தியநாதன் அந்த ஊரில் இருக்கும் அரசாங்க பள்ளியில் ஆசிரியராக இருக்கிறார்... பொன்னுரங்கம் அங்கே உள்ள தொழிற்சாலையில் மேலாளராக வேலை பார்க்கிறார்... இருவருக்கும் ஒற்றைப் பிள்ளைகள் மட்டுமே...

"மாமா... அவன் பண்ணின வேலைக்குக் கொஞ்ச சொல்றானா உங்க புள்ளை..." வைத்தியநாதன் தாய்மாமனிடம் எகிறினார்...

"ஒத்த புள்ளை... அதுவும் ஆம்பிளை புள்ளை... அவன் சொல்லிக்கிற மாதிரி படிச்சு, நல்ல உத்தியோகத்தில் இருந்தா தானே ஊருக்குள்ள எனக்கு நல்ல மரியாதை கிடைக்கும்... இப்படிப் படிக்காத முட்டாளா இருக்கிறதுக்கா தனியார் ஸ்கூலுக்கு அவ்வளவு பீஸ் கட்டி படிக்க அனுப்பறேன்... மனசுக்கு ரொம்ப வெசனமா இருக்கு மாமா..." அவரது குரலில் அத்தனை வருத்தம் இருந்தது...

மகனது வருத்தத்தை விடப் பேரன் அடிவாங்கியது வேதநாயகிக்கு அதிக வருத்தத்தை அளித்தது...

"இந்த ஐப்பசி முடிஞ்சா அழகுக்கு நல்ல கெரகம் பிறக்குது வைத்தி... அப்போ என் பேரன் நல்லா படிச்சு உன் முகத்துல கரியை பூசுவான் பாரு..." என்றபடி பேரனின் தாடையைப் பற்றிச் செல்லம் கொஞ்சினார் அவர்...

"அப்படிச் சொல்லு ஆச்சி..." பேரனும் பாட்டியிடம் செல்லம் கொஞ்சினான்...

"அத்தை... அப்படிப் பார்த்தா இந்தப் பொட்டக்கழுதை நாலு பாடத்தில் ஃபெயிலாகிட்டு வந்திருக்கு... அதுக்காக அதோட கழுத்தை பிடிச்சி திருகவா முடியும்...?" என்று வேதநாயகியிடம் கூறவதும் போல் வைத்தியநாதனுக்குக் கூறிய பொன்னுரங்கத்தின் பேச்சில் அதைச் செய்ய இயலாத ஆற்றாமை ஒளிந்திருப்பதைக் கண்டு வலமங்கை நாச்சியார் பயத்துடன் தனது தாத்தாவின் பின் சென்று மறைந்தாள்...

ஆனாலும் அவளது விழிகள் தனது எதிரியை கண்டு கேலியாய் சிரிக்கத் தவறவில்லை... அதை அவனும் கவனிக்கத் தவறவில்லை... அவனது மனதில் ரோசம் பிறந்தது... இனி அவள் சிரிக்கத் தான் இருக்கக் கூடாது என்கிற வைராக்கிய எண்ணம் அவனுள் பிறந்தது...

அன்றிலிருந்து அழகு சுந்தரப்பெருமாள், வலமங்கை நாச்சியார் இருவரது வாழ்க்கை முறையும் அடியோடு மாறிப் போனது... அதுவரை இருந்த விளையாட்டுத்தனம் மறைந்து இருவரும் தங்களது பொறுப்புணர்ந்து படிக்க ஆரம்பித்தனர்... அழகு தீவிரமாகப் படித்தான் என்றால், நாச்சியார் ஓரளவுக்குப் படித்து எந்தவொரு பாடத்திலும் தோல்வி அடையாமல் பார்த்து கொண்டாள்...

நினைவலையில் நீந்தி ஒருவழியாகக் கரை சேர்ந்த வலமங்கை, "இப்போ எல்லாம் ஞாபகம் வந்திருச்சா...?" தந்தையைப் பார்த்து அவள் கேட்க...

"இப்போ இது ரொம்ப முக்கியம்...?" பொன்னுரங்கம் மகளை முறைத்தார்...

"வரலாறு ரொம்ப முக்கியம்ப்பா... அன்னைக்கு நான் பட்ட அவமானம் இன்னைக்கு என்னை இந்தளவுக்கு உயர்த்தியிருக்கு..." என்றாள் இரவு உடையில் இல்லாத காலரை தூக்கிவிட்டபடி...

"அன்னைக்கு உன்னால என் மருமகன் தான் அடி வாங்கினான்..."

"பெரிய மருமகன்... க்கும்..." பழிப்பு காட்டினாள் மகள்...

"பெரிய மருமகன் தான்டி என் மருமகன்... நல்லா படிச்சு பெரிய கம்பெனியில் கை நிறையச் சம்பளத்தில் இருக்கிறான்ல்ல..." அழகு சுந்தரப்பெருமாளை நினைத்து அவருக்கு அப்படி ஒரு பெருமை...

அதைக் கேட்டவள் ஏதோ நகைச்சுவையைக் கேட்டது போல் 'ஹா... ஹா...' என்று வாய்விட்டு சிரித்தாள்...

PDF தமிழ் .com

"இப்போ எதுக்கு இந்த வில்லி சிரிப்பு சிரிக்கிற நீ...?" மகளை முறைத்தார் பொன்னுரங்கம்...

"பின்னே நீங்க பண்ற காமெடிக்கு சிரிக்காம வேற என்ன பண்றது...?" என்றவள் கவரை பிரித்து அதில் இருந்த காகிதத்தை எடுத்து தந்தை முன் காண்பித்தவள்,

"அதே கம்பெனியில் தான் எனக்கும் வேலை..." என்றாள் பெருமையுடன்...

"ம்ஹூம்... இனி உன் இம்சையைத் தினமும் என் மருமகன் தாங்கணுமா...? பாவம் அவன்..." அழகுக்காக மிகவும் பரிதாபப்பட்டார் பொன்னுரங்கம்...

"தாத்தா..." பேத்தி தாத்தாவிடம் சிணுங்கினாள்...

"எதுக்குடா அவளைக் குறை சொல்லுற...? நீ தானே அவனை விட அதிகமா படிக்கணும், அப்படி இருக்கணும், இப்படி இருக்கணும்ன்னு சொன்ன... இப்போ இப்படிச் சொன்னா எப்படிடா...?" சுப்பிரமணியம் பேத்திக்கு வக்காலத்து வாங்கினார்...

"அது... ஒரு புள்ளையோட இன்னொரு புள்ளைய கம்பேர் பண்ணி பேசுறது இல்லையா அது மாதிரி... அதுக்காக இவ அவனை எதிரி மாதிரி பார்த்து வச்சா எப்படிப்பா...?"

"அதுக்கு நீ தான் காரணம்..." என்று மகனை சாடியவர் பேத்தியிடம்,

"உனக்குச் சப்போர்ட்க்கு நான் இருக்கேன் பாப்பா... என்ன மாதிரியான வேலை...? எப்போ வேலைக்குப் போகணும்...?" என்று அவளிடம் அடுத்தடுத்துக் கேள்விகள் கேட்க ஆரம்பித்தார்... அவளும் உற்சாகமாகத் தனது வேலையைப் பற்றி அவரிடம் விளக்க ஆரம்பித்தாள்...

அதைப் பார்த்தபடி எழுந்த பொன்னுரங்கம் அறைக்குச் செல்ல, சித்ரவேணியும் அவர் பின்னே சென்றார்... மனைவியின் முகம் தெளிவில்லாமல் இருப்பதைக் கண்டு,

"என்ன யோசனை...?"

"இல்ல... நம்ம அழகை நினைச்சா தான் பாவமாக இருக்கு..." என்றார் பரிதாபமாய்...

"ம்... எனக்கும் அதே யோசனை தான்... புள்ளை இப்பத்தான் கொஞ்ச நாளா நிம்மதியா இருக்கான்..." என்று தாடையைத் தடவி கொண்டு அவர் யோசித்தார்...

இவர்களது யோசனைக்கு நேர்மாறாய் அழகின் வீட்டின் நிலைமை இருந்தது... தாத்தாவிடம் பேசிய வலமங்கை நேரே சென்ற இடம் அழகின் வீடு...

"அப்படியா ரொம்பச் சந்தோசம் நாச்சியா..." வைத்தியநாதன் மருமகளுக்குக் கிடைத்த வேலையை நினைத்துச் சந்தோசப்பட்டார்...

"மாமா... நாச்சியா இல்லை நயன்தாரா..." எடுத்து சொல்லிய மருமகளைக் கண்டு சிரித்த வைத்தியநாதன்,

"எனக்கு நீ எப்பவும் நாச்சியா தான்..."

"என்னமோ போங்க மாமா..." என்று சிணுங்கியவள் அத்தையிடம் தனக்குப் பிடித்த பலகாரங்களின் பட்டியலை அடுக்கத் தொடங்கினாள்... எல்லாம் எதற்கு...? வேலைக்குச் செல்லும் போது உடன் எடுத்துச் செல்வதற்குத் தான்...

*******************************

வேதநாயகி அந்த விசயத்தை அப்படியே தனது பேரனிடத்தில் ஒலி பரப்பினார் அடுத்த நொடி...

'ஓ... அங்கே சுத்தி, இங்கே சுத்தி கடைசியில் நான் வேலை பார்க்கும் இடத்திற்கும் வந்துட்டியா குள்ளச்சி... வாடி இங்கே... உன்னை வச்சி செய்யிறேன்டி...'

பகை தீர்க்கும் எண்ணத்துடன் மனதில் வன்மமாய் நினைத்துக் கொண்டான் அழகு சுந்தரப்பெருமாள்...

அவன் அவளை 'வச்சி செய்ய' போகிறானா...? இல்லை அவள் அவனை 'வச்சி செய்ய' போகிறாளா என்பது போகப் போகத்தான் தெரியும்...

PDF தமிழ் .com

இப்படிப்பட்ட இருவரையும் வைத்துக் கொண்டு தான் என்ன செய்வது என்று தெரியாமல் விழி பிதுங்கினார் சர்வ வல்லமையும் படைத்த கடவுள்...!!!

தித்திக்கும்...!!!

வலமங்கை நாச்சியாரின் சென்னை விஜயம் அழகு சுந்தரப்பெருமாளுக்கு எரியும் நெருப்பில் எண்ணெயை வார்த்தது போல் அவனது மனதிற்குள் பற்றிக் கொண்டு எரிந்தது... இன்றா, நேற்றா, எத்தனை வருட பகை அவர்களுடையது...

'உன் தொல்லை தாங்க முடியலைன்னு தானே மதுரையில் இருந்து சென்னைக்கு ஓடி வந்தேன்... இங்கேயும் என்னை இம்சை பண்ண வந்துட்டியா குள்ளச்சி...' கோபத்தில் பல்லை கடித்தான் அவன்...

இப்போதைக்கு அவனால் அது மட்டுமே செய்ய முடியும்... ஏனெனில் அவனால் அவளைக் கடிக்க முடியாது... அப்படியே அவன் கடித்தாலும் பதிலுக்கு நன்றாக வலிக்கும்படி கடித்து வைத்து விடுவாள் அந்தப் பிசாசு...

அவள் மீதிருந்த கடுப்பில் அவனது நினைவுகள் பால்ய காலத்திற்குச் சென்றது... இனிமையாக அல்ல, மிகவும் கொடுமையாக... பின்னே அவனின் பால்ய காலம் மட்டுமல்லாது இதோ இந்த நொடி வரை அவனது வாழ்க்கையில் அவள் அல்லவா முக்கியப் பங்கு வகிக்கிறாள்... மாடு அசை போடுவது போல் மெல்ல அவனும் நினைவுகளை அசை போட ஆரம்பித்தான்...

அவனுக்கும் அவளுக்கும் இடையே இருந்த பகை ஒன்றா, இரண்டா...? எல்லாவற்றிற்கும் அவர்கள் இருவரும் அப்படி முட்டி கொள்வார்கள், மோதி கொள்வார்கள்... அவர்களுக்கு இடையில் நிகழும் யுத்தம் உலக யுத்தத்தை விட அதிபயங்கரமானது... ஆபத்தானதும் கூட...

அவனுக்குச் சிறுவயதில் இரவில் உறங்கும் போது படுக்கையை ஈரமாக்கும் பழக்கம் இருந்தது... அது அவனது எட்டு வயது வரை தொடர்ந்தது... இதை எப்படியோ அவனது அன்னை வைதேகி மூலம் தெரிந்து கொண்ட வலமங்கை அந்தச் செய்தியை அவர்களது பள்ளி முழுவதும் பரப்பி அவனுக்கு மிகுந்த அவமானத்தை ஏற்படுத்திவிட்டாள்...

PDF தமிழ் .com

"ச்சீச்சீ... இப்படி ஒரு ஃபேட் ஹேபிட்ஸ் உனக்கு இருக்கா...?" என்று வகுப்புத் தோழிகள் எல்லாம் அவனைப் புறக்கணித்த போது, அது அவனுக்குப் பெருத்த அவமானமாகி போனது...

அன்று வீதியில் தனியாய் சென்று கொண்டிருந்த வலமங்கையைக் கண்டு அவனது மனதில் வன்மம் ஏற, அங்கிருந்த தெருநாயை ஏவி விட்டு அவளை ஓட ஓட விரட்டியடித்தான்...

"ஐயோ அம்மா... ஐயோ அப்பா..." என்று கதறிக் கொண்டு அவள் ஓடியதை கண்டு,

"உனக்கு நல்லா வேணும்டி குள்ளச்சி... என்னையவா அசிங்கப்படுத்தின... இப்போ நீதான்டி அசிங்கப்பட்ட..." என்று இரு கைகளையும் பிசைந்தபடி நம்பியார் மாதிரி வில்லன் சிரிப்புச் சிரித்தான் அவன்...

அது போல் தான் இன்னொரு நாள்...

"அழகு... இன்னைக்கு மதியத்துக்கு உனக்குப் பிடிச்ச பிரியாணி வச்சியிருக்கேன்... மறக்காம சாப்பிட்டிரு..." பள்ளிக்கு கிளம்பி கொண்டிருந்தவனிடம் அவனின் அன்னை நினைவு படுத்தினார்...

எதை மறந்தாலும் அவன் உணவை மறப்பது இல்லை... அவன் எல்லாம் 'யார் எப்படிப் போனால் என்ன, நமக்கு எல்லாம் சோறு தான்ப்பா முக்கியம்' என்று கூறுபவர்களின் சங்கத் தலைவன்... அப்படிப்பட்டவனிடத்தில் அவனது அன்னை இப்படிக் கூறினால் அவ்வளவு எளிதில் அவன் மறப்பானா...?

பள்ளிக்கு சென்று வகுப்பறையில் அமர்ந்த தருணம் முதல் அவனது கண்கள் டிபன்பாக்சின் மீதே இருந்தது... போதாக்குறைக்கு அதில் இருந்து வந்த நறுமணம் அவனது நாசியைத் தீண்டி அவனது வயிற்றின் பசியைத் தூண்டிவிட்டுக் கொண்டிருந்தது...

மதிய உணவு இடைவெளியின் போது அவன் ஆசை ஆசையாக டிபன்பாக்சை திறந்தால் அதிலிருந்த பிரியாணி காணாமல் போய் அதன் நிறைய மண் நிரம்பியிருந்தது... அதைக் கண்டதும் அவனுக்கு அழுகை அழுகையாக வந்தது... தனது ஆசை நிராசையாகி போனதில் அத்தனை வருத்தம் அவனுக்கு...

"டேய் அருண்... இங்கே பாரேன் அழகு சாப்பாட்டுக்கு பதிலா மண்ணைக் கொண்டு வந்திருக்கிறான்..." என்ற கேலி குரலில் நிமிர்ந்து பார்த்தவன் கண்ணில் அங்குத் தனது வகுப்பு தோழனுடன் நின்று கொண்டிருந்த வலமங்கை நாச்சியார் தென்பட்டாள்...

அவள் கண்களில் தெரிந்த விசமத்திலேயே தெரிந்து போனது அவனது உணவை களவாடி உண்டது அவள் தான் என்று... அவளைக் கோபத்துடன் முறைத்துப் பார்த்தான் அவன்...

"அண்ணா... என்னண்ணா இது...?" அவள் கூறியதை கேட்டு நமட்டுச் சிரிப்பு சிரித்தபடி அவனிடத்தில் கேட்டான் அருண்... இப்போது அழகு சுந்தரப்பெருமாள் அருணை கண்டு முறைத்தான்...

"அது ஒண்ணுமில்லை அருண்... அவன் தலையில் இருந்து பொங்கி வழிந்ததை டிபன்பாக்சில் பிடிச்சு வச்சியிருக்கான்... அப்படித்தானே அழகு..."

அவனது தலையில் மூளையில் இல்லை, மண் தான் இருக்கிறது என்று சொல்லாமல் சொன்ன அவளது வார்த்தைகளில் அவனுக்குக் கோபம் தலைக்கேற அடுத்த நொடி,

"அடியேய்... வலமங்கை..." என்றபடி அவள் மீது பாய்ந்தான்...

பதிமூன்று வயது அழகும், பத்து வயது வலமங்கையும் கட்டிப்புரண்டு சண்டை போட்டார்கள்... அவர்களது சண்டையை அத்தனை மாணவர்களும் சுற்றி நின்று

வேடிக்கை பார்த்து கொண்டிருந்தனர்... அங்கு வந்த ஆசிரியர் ஒருவர் இருவரையும் சத்தம் போட்டு பிரித்து விட்டவர் இருவருக்கும் சேர்த்துத் தண்டனை கொடுத்தார்...

கொளுத்தும் வெயிலில் இருவரையும் மண்ணில் மண்டி போட வைத்தார் அவர்...

"கருவாயா... எல்லாம் உன்னால் தான்டா..."

"போடி குள்ளச்சி... எல்லாம் உன்னால் தான்டி..."

இருவரும் மாத்தி மாத்தி ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டி கொண்டனர்... அதைக் கண்ட ஆசிரியர் அவர்களது தண்டனை நேரத்தை மேலும் அரை மணி நேரம் அதிகரித்துவிட்டார்... இருவருமே கடுப்புடன் முகத்தை உம்மென்று வைத்து கொண்டிருந்தனர்...

பின் மெதுவே அவன், "எப்போடி என் சாப்பாட்டை எடுத்து சாப்பிட்ட...?" கண நேரம் கூடப் பிரியாது பிரியாணியைக் காத்தவனாயிற்றே அவன்...

"அது பிரேக் டைம்ல நீ சயின்ஸ் சார் கூப்பிட்டாருன்னு ஸ்டாஃப் ரூம் போனேல்ல... அப்போ லவட்டிட்டு வந்து சாப்பிட்டேன்..." என்றாள் பெருமையாக...

வகுப்பில் ஜன்னலோரம் அமர்ந்திருந்த தனது விதியை சபிப்பதா இல்லை இன்று பார்த்து அவனை அழைத்த அறிவியல் ஆசிரியரை சபிப்பதா என்று தெரியாது பரிதாபமாக விழித்தான் அவன்... ஆனால் அந்தக் கணம் முடிவு செய்தான் இனி வாழ்நாளில் மறந்தும் வகுப்பில் ஜன்னலோரம் அமர கூடாது என்று...

தனது உணவில் மண்ணை அள்ளி போட்ட அவளைச் சும்மா விட அவனுக்கு மனம் வரவில்லை... எப்படியாவது அவளைப் பழிக்கு பழிக்கு வாங்கியாக வேண்டுமே... இல்லை என்றால் இன்று அவனுக்குத் தூக்கம் வராது... நன்றே செய், அதை இன்றே செய் என்பதற்கிணங்க இன்றே அந்த நல்லதை செய்யத் திட்டமிட்டான்...

அன்று வகுப்பு முடிந்து வீட்டிற்குச் செல்லும் போது பள்ளியின் வெளியில் நின்றிருந்த ஐஸ்க்ரீம் வண்டியை பார்த்ததும் அவன் அவளிடம்,

"நாம ஐஸ்க்ரீம் சாப்பிடலாமா...?" என்று சின்னவளுக்கு ஆசை காட்ட...

ஐஸ்க்ரீம் சாப்பிடும் ஆசையில் பகையைக் கூட மறந்து நாக்கை சப்பு கொட்டி சுழற்றியபடி எதிரியின் பின்னால் நடந்தாள் அவள்... அவன் தனக்குப் பிடித்த 'கோலா' ஐஸ்க்ரீம் வாங்கி உண்ண, அவளும் தனக்குப் பிடித்த 'மேங்கோ' ஐஸ்க்ரீம் வாங்கி உண்ண ஆரம்பித்தாள்...

கையில் வழிந்த ஐஸ்க்ரீமை அவள் நக்கி நக்கி உண்ட அழகினை நக்கல் சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் அழகு...

'இருடி... இன்னைக்கு உன்னைப் பிழிய, பிழிய அழ வைக்கலை என் பேரு அழகு இல்லை...' என்று மனதில் நினைத்தவன் தான் உண்ட ஐஸ்க்ரீம்க்கு மட்டும் பணத்தைக் கொடுத்துவிட்டு அங்கிருந்து நகர்ந்தான்... அவன் செல்வதைக் கண்டு வலமங்கையும் அவனுடன் நடந்தாள்...

"பாப்பா..." ஐஸ்க்ரீம் விற்பவர் அவளைக் கூப்பிட்டார்...

"என்ன...?"

"காசு கொடுத்துட்டு போம்மா..."

"காசா...?" திருதிருவென விழித்தாள் அவள்...

"நீ சாப்பிட்ட ஐசுக்கு காசு கொடுத்துட்டு போ..." அவளின் திருட்டு முழியைக் கண்டு அவர் பேசும் தோரணை மாறியது...

இது எல்லாம் அவன் காதில் விழுந்தாலும் அவன் தனது நடையை நிறுத்தவில்லை...

"அழகு கொடுக்கலையா...? டேய் அழகு..." என்று கத்தி அவனை அழைக்க...

"என்ன...?" என்று திரும்பி பார்த்தவனிடம்,

"காசு கொடுத்துட்டு போடா..."

"ஆமாம் நீ யாரு...? உனக்கு எதுக்கு நான் காசு கொடுக்கணும்..." என்றுரைத்தவன் அதற்கு மேல் அங்கு நிற்கவில்லை... ஒரே ஓட்டமாய் வீட்டிற்கு ஓடி வந்துவிட்டான்...

பணம் கொடுக்காமல் ஐஸ்க்ரீம் விற்பனையாளர் அவளை வீட்டிற்குச் செல்ல அனுமதிக்கவில்லை... வெகுநேரம் அழுது கொண்டு நின்றிருந்தவளை கண்டு அந்த வழியாகச் சென்ற அவளது வகுப்பு ஆசிரியர் என்ன விசயம் என்று கேட்டறிந்து,

"நாளைக்கு அம்மா கிட்ட வாங்கிட்டு வந்து கொடு..." என்று அவளிடம் கூறிவிட்டு, அவர் தனது பணத்தை எடுத்து ஐஸ்க்ரீம் விற்பவரிடம் கொடுத்தவர்,

"இனி மேல் இப்படிக் காசு இல்லாம வாங்கிச் சாப்பிட கூடாது என்ன...?" என்று கண்டிப்புடன் இலவசமாக அறிவுரை கூறிவிட்டு சென்றார்...

அதில் அவளுக்குப் பெருத்த அவமானமாகப் போய்விட்டது... அன்று ஒரு நாள் மட்டும் தான் அவனின் வார்த்தைகளை நம்பி அவள் ஏமாந்தது... அதன் பின் அவள் அவனிடத்தில் ஏமாந்தது இல்லை... ஏனெனில் அந்த நிகழ்விற்குப் பிறகு அவள் அவனது பேச்சை கேட்டது கிடையாது...

வருடங்கள் இரண்டு கடந்த போதும் இருவரிடத்திலும் இருந்த பகை மட்டும் சிறிதளவும் குறையவில்லை... மாறாக விலைவாசி போல் அது அதிகரித்துக் கொண்டே சென்றது... அவனது பதினைந்தாவது வயதில் அவனது வகுப்பு தோழி மானசா அவனிடத்தில் வந்து பேசி கொண்டிருந்தாள்...

அவள் ஒரு வட இந்திய பெண்... சற்று நிறமாக, அழகாக இருப்பாள்... அப்படிப்பட்ட அழகான பெண் வலிய வந்து தன்னிடம் பேசியதில் அவனுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது... அவனும் உற்சாகமாகப் பேசி கொண்டிருந்தான்...

"கருவாயா..." அப்போது எங்கிருந்தோ ஒரு குரல் அசரீரி போல் ஒலித்தது... வேறு யார் எல்லாம் நம் வலமங்கை தான்...

"குள்ளச்சி..." அழகு பல்லை கடித்தான்...

"கருவாயா..." மீண்டும் அவனை விளித்தபடி அருகிலிருந்த தூணின் பின் இருந்து வெளிப்பட்டாள் அவள்...

"ஒழுங்கு மரியாதையா இங்கிருந்து போயிரு குள்ளச்சி..." அவன் பல்லை கடித்தபடி கூறியதை காதில் வாங்கிக் கொண்டால் அது வலமங்கை இல்லையே...

"போடா கருவாயா..." என்றாள் அவனது இமேஜை டேமேஜ் செய்யும் பொருட்டு... அதுவும் ஒரு அழகான பெண்ணின் முன்னால்...

"அழக்கு... வாட்ஸ் த மீனிங் ஆஃப் கருவாயா...?" மானசா அர்த்தம் புரியாது அழகை பார்த்து கேட்க... அழகோ அழகான பெண்ணான அவளைப் பார்க்காமல் வலமங்கையை முறைத்துக் கொண்டிருந்தான்...

"அதே தான் மானசா அக்கா... அழுக்கு... அது தான் இதுக்கு மீனிங்..." என்று மானசாவிடம் ஆங்கிலத்தில் கூறியவள்,

"நம் பள்ளியின் அழகு தேவதை மானசா அக்காவே உன்னைப் பார்த்து அழுக்கு என்று கூறிவிட்டதால், இன்றிலிருந்து கருவாயா என்கிற உனது பட்டப்பெயர் நீங்கி, இனிமேல் நீ அழுக்கு என்ற பட்டப்பெயரில் அழைக்கப்படுவாயாக..." இரு கைகள் உயர்த்தி ஆசிர்வாதம் செய்வது போல் கூறியவளின் பாவனையில் அழகு மானசாவை மறந்தவனாய்,

தமிழ் நாவல்

"குள்ளச்சி... நீ மட்டும் என் கையில் கிடைச்ச செத்தேடி..." என்று வலமங்கையைத் துரத்தி கொண்டு ஓடினான்...

அன்று மாலை வீட்டிற்கு வந்ததும் தனது பாட்டி வேதநாயகியிடம் அதைப் பற்றிக் கூறி வருத்தப்பட்டான் அவன்... மறுநாளே அவர் பேரனின் கவலைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்...

மகனுக்குக் காபியை எடுத்துக் கொண்டு வந்த வைதேகி அவனது அறையில் இருந்த உருவத்தைக் கண்டு பயத்தில் 'அம்மா' என்று அலறியவர் கையில் இருந்த காபித் தம்பளரை 'ணங்' என்ற சத்தத்துடன் கீழே போட்டார்...

"அம்மா... நான் தான்ம்மா..."

"கூறுகெட்ட மவனே... இது என்னடா கூத்து...?"

மகன் முகத்தில் அப்பியிருந்த பல வண்ணத்தில் இருந்த அந்தக் கலவையைச் சுட்டிக்காட்டியபடி அவர் கேட்டார்...

"உன்னை மாதிரி நல்ல நிறமா வர்றதுக்குப் போட்டிருக்கேன்ம்மா..."

"க்கும்... அப்படியே நிறமா வந்துட்டாலும்..." என்று நொடித்துக் கொண்டவர், "அப்படியே அப்பனை போல் கருவாயனா வந்து பிறந்து தொலைச்சிருக்கிற உனக்கு என்ன பூசினாலும் உன் நிறம் மாறாதுடா மகனே..."

அன்னையின் 'கருவாயா' என்ற சொல்லில் மகனுக்கு மிகுந்த கோபம் வந்தது... கூடவே தனது எதிரியின் முகமும் சேர்ந்து அவனது நினைவில் வந்தது...

"அம்மா..." என்று கோபத்தில் கத்தினான் அவன்...

"என்ன என் மகனையும், பேரனையும் ஏதோ சொன்னாப்பல இருந்தது...?" என்றபடி அங்கு வந்து சேர்ந்தார் வேதநாயகி... அவனது தந்தையைப் பெற்ற அன்னை...

மாமியாரை கண்டதும் அப்படியே அடங்கிப் போய்ப் பவ்யம் காட்டினார் வைதேகி...

"அது ஒண்ணுமில்லை அத்தை..."

"ஆச்சி... அம்மா பொய் சொல்றாங்க... நான் அப்பா மாதிரி கறுப்பா இருக்கேன்னு சொல்றாங்க..." என்று மகன் அன்னையைப் பாட்டியிடம் போட்டுக் கொடுத்தான்...

'தடிமாடு... இதிலேயும் அப்பனை கொண்டு பிறந்திருக்கு பாரு...' மனதுக்குள் மகனுக்கு அர்ச்சனை செய்தார் வைதேகி...

"அது மட்டுமா சொன்னா ராசா... உன்னைக் கூறுகெட்ட மவன்னு சொன்னாளே... அப்படின்னா என் மகன் உன் ஆத்தாளுக்குக் கூறுகெட்டவனா...?" என்று சொல்லியபடி மருமகளை ஓரக்கண்ணால் விசமமாய்ப் பார்த்தார் வேதநாயகி...

'அடியாத்தி... இதில் இம்புட்டு வில்லங்கம் இருக்கா...? இந்த மனுசனுக்கு மட்டும் நான் சொன்னது தெரிஞ்சது அவ்வளவு தான் நான் தொலைஞ்சேன்..."

கணவரை நினைத்து அவருக்கு இப்போதே அடிவயிறு கலங்கியது...

"ஐயோ அத்தை... நான் உங்க மகனை சொல்லலை... என் மகனை சொன்னேன்..." என்று வைதேகி பதறி போய்ச் சமாளித்தார்...

"என் ராசாவுக்கு என்ன...? அவனைப் போய் நீ எப்படிக் கூறுகெட்டவன்னு சொல்லலாம்...? அப்படிச் சொல்ற உனக்குத் தான் கூறில்லை..." என்று மருமகளை அவர் திட்ட,

"அப்படிச் சொல்லு ஆச்சி..." பேரன் பாட்டிக்கு ஹை-பை கொடுத்தான்...

வேதநாயகி பேரனிடத்தில், "ராசா... இந்த ஜூஸை குடி..."

"ஆச்சி... ஜூஸ் கலரே ஒரு மாதிரியா இருக்கே..." முகத்தைச் சுழித்தான் பேரன்...

தமிழ் நாவல்

தன் முகத்தில் பூசிய கலவை போன்று அந்தப் பழச்சாறின் கலவையும் இருந்ததில் பேரன் சற்று யோசித்தான்...

"இது குடிச்சா நீ நல்ல கலரா வருவ... நம்ம கடைவீதியில் ப்யூட்டி பார்லர் வச்சிருக்காளே ராதா பொண்ணு, அவ கிட்ட கேட்டு உனக்காக நானே தயாரிச்சது ராசா... இதுல கேரட், வெள்ளரிக்காய், தேனு எல்லாம் கலந்து இருக்கேன்..."

"இது குடிச்சா நான் நல்லா கலரா வருவேனா..." என்று கேட்ட பேரனின் கண்களில் அப்படியொரு ஆசை மின்னியது...

"நிசமா ராசா..."

"அந்தக் குள்ளச்சிய விடவா...?"

"அந்தக் கொந்தவரங்காய விட நீ நல்ல நிறமா வருவ பாரு..." என்று வேதநாயகி ஆசை காட்ட... உடனே அடுத்த நொடி பழச்சாறை வாங்கியவன் அது முழுவதையும் குடித்து முடித்திருந்தான்...

"ஏண்டா... இது உனக்கே அதிகமா தோணலை... அவளோட எலுமிச்சம்பழ கலருக்கும், உன்னோட கருங்கல் கலருக்கும் ஏணி வச்சாலும் எட்டுமாடா...?"

"அவளும் அப்படிச் சொல்லித்தான் என்னைய கிண்டல் பண்றா ஆச்சி... என்னைப் பார்க்கும் போது எல்லாம் கருவாயா, கருவாயான்னு கேலியா கூப்பிடறா..." பேரன் பாட்டியிடம் சிணுங்கினான்...

அவன் சிணுங்குவதைக் கேட்டபடி அங்கு வந்து சேர்ந்தார் வைத்தியநாதன்...

"உனக்கு வெக்கமா இல்லையாடா..."

தந்தையைக் கண்டதும் அவன் பாட்டியின் பின் பம்மினான்...

"எப்பப்பாரு அவளோட போட்டி போடுறது...? அவளும் நீயும் ஒண்ணாடா...? ஆம்பிளை புள்ளையும், பொட்டப்

புள்ளையும் ஒண்ணா...? அவ என்ன செய்றாளோ அதை எல்லாம் ஒண்ணு விடாம செய்றது... உனக்கே அது வெக்கமா இல்லை... அவ டான்ஸ் க்ளாஸ், பாட்டு க்ளாஸ் போனாள்ன்னு நீயும் போன பாரு... அப்பவே உன்னோட கிறுக்குப்புத்தி எனக்குத் தெரிஞ்சு போச்சு... நீ எல்லாம் எங்கே உருப்படப் போற..."

"அது அறியாத வயசு..." என்றான் மகன் மெல்லமாய்... தந்தையைக் கண்டால் மட்டும் அவனது நாக்கு இப்படிச் சதிராட்டம் ஆடுகிறதே... அவனும் என்ன செய்வான் பாவம்...

பத்து வயதில் அவள் பரதநாட்டியம், வாய்ப்பாட்டு கற்றுக் கொள்ளச் சென்றாள் என்று தானும் அடம்பிடித்துச் சென்றதை இப்போது மிகுந்த அவமானமாகக் கருதினான்... என்ன செய்ய எல்லாம் காலம் கடந்து வந்த ஞானோதயம்...

"ஓஹோ... இப்போ எல்லாம் அறிஞ்ச வயசு தானே..." என்றவரின் பார்வை அவனது முகத்தில் அழுத்தமாய்ப் படிந்தது...

"முதல்ல இந்தக் கோமாளி வேசத்தைச் சோப் போட்டுக் கழுவு... எனக்குன்னு வந்து வாய்ச்சிருக்கப் பாரு... தடிமாடு..." என்றவர் மனைவியிடம்,

"உனக்கு வேற தனியா சொல்லணுமா...? வந்து சாப்பாடு எடுத்து வை..." என்று மனைவியை அதிகாரம் பண்ணியபடி உணவு மேசையை நோக்கி சென்றார் அவர்...

தந்தை மீது எழுந்த அவனது கோபம் எல்லாம் இப்போது அவள் மீது திரும்பியது...

'குள்ளச்சி... உன்னைய...?' என்று ஆத்திரமாய்ப் பல்லைக் கடித்தான் அவன்...

அதற்கு அடுத்து வந்த நாட்களில் அவனும் தனது நிறம் மாற எத்தனையோ முயற்சி எடுத்துப் பார்த்தான்... ம்ஹூம், அவனது நிறத்தை மட்டும் மாற்ற முடியவில்லை... அந்தச்

தமிழ் நாவல்

சமயம் தான் தலைவரின் சிவாஜி படம் வெளிவந்தது... அதில் தன்னைப் போல் எல்லா வித்தையும் செய்து பார்த்த தலைவர் கடைசிவரை நிறம் மாறாமல் இருப்பதைக் கண்டு அவனும் தன் முயற்சியைக் கை விட்டு விட்டான்...

அவனுக்கு என்று ஒரு ஸ்ரேயா கிடைக்காமலா போவாள்...? அப்படியொரு நம்பிக்கை விதை அவனுள் விழுந்ததும் அன்று தான்...

******************************************

"ஹாய் அழகு... என்ன உட்கார்ந்திட்டு கனவா...?" என்று அவனது தோளில் உரிமையாய் தட்டினாள் ரேஷ்மா...

"ஆங்..." உண்மையில் கனவில் இருந்து விழித்தவன் போல் திருதிருவென முழித்தான் அழகு...

"இந்தப் பால் வடியும் முகம் தான்டா உன்னோட ப்ளஸ் பாயிண்ட்..." கையிலிருந்த பேனாவால் அவனது முகத்தைச் சுற்றி வட்டம் போட்டாள் அவள்...

"ரேஷூ..." அவள் கூறியதை கேட்டு அவனது முகம் ஆயிரம் வாட்ஸ் பல்ப் போல் பிரகாசமாய் ஒளிர்ந்தது...

ஒருவேளை அவனது ஸ்ரேயா அவள் தானோ... இப்போது கொஞ்ச நாளாய் அவனுக்கு இந்தச் சந்தேகம் இருந்து கொண்டே இருக்கிறது... அவளது இது போன்ற நடவடிக்கையினால்... அன்று அவன் மனதில் விழுந்த நம்பிக்கை விதை இன்று ரேஷ்மா காட்டிய குளிர்சாரலில் சிறிது துளிர்விட்டது...

ரேஷ்மாவும் வட இந்திய பெண் தான்... இந்தக் கணினி நிறுவனத்தில் அவனுடன் வேலை செய்யும் அழகு தேவதை இல்லை, இல்லை அழகு புயல் என்றே சொல்லலாம்... அப்படியொரு அழகு, செய்யும் வேலையில் அப்படியொரு வேகம்...

ஏனோ தெரியவில்லை வெள்ளை மனதுடன், புன்னகை முகமாய் இருக்கும் அழகு சுந்தரப்பெருமாளை அவளுக்கு

நிரம்பப் பிடிக்கும்... உதவி என்று எப்போது கேட்டாலும் ஓடி வந்து உதவுபவன்... எந்தவொரு பிரதிபலனையும் எதிர்பாராதவன்... அதே சமயம் பெண்களைத் தவறான கண்ணோட்டத்தில் பார்க்காதவன்... இப்படி நிறையச் சொல்லி கொண்டே போகலாம்...

"ஆமாம்... நான் வரும் போது கனவு கண்டுட்டு இருந்தியே... என்ன கனவு...? டூயட்டா...? திவ்யாவா, கீர்த்திச் சுரேஷா இல்லை நயன்தாராவா...?"

அவள் கடைசியாய் சொன்ன நயன்தாராவில் அவன் கடுப்பாகி போனான்...

"ராட்சசி கூட..." கடுப்பாய் உரைத்தவனை ஆச்சிரியமாய்ப் பார்த்தாள் ரேஷ்மா...

"என்னது...? ராட்சசியா...?"

"ஆமாம்..." என்றவன், "இப்போ அது எதுக்கு நமக்கு..." என்று வலமங்கையை ஐந்தறிவு பிராணியாக்கி அல்ப சந்தோசப்பட்டுக் கொண்டான்...

"சரி அப்போ வேறு விசயம் பேசலாமா...?" என்று தலை சாய்த்து கேட்டவள்,

"இந்தச் சன்டே மூவி பார்க்க போகலாமா...?" இரு புருவம் உயர்த்திக் கேட்டவளின் பின்னே நாய்க்குட்டியாய் செல்ல அவனது மனம் ஆசை கொண்ட போதும் பெற்றோரின் வளர்ப்பு அதற்குத் தடை விதித்தது...

"மூவி பார்க்கிற அளவுக்கு எனக்குப் பொறுமை எல்லாம் கிடையாது ரேஷூ..." நாகரீகமாக மறுத்தான் அவன்...

"டேய்... உன்னைப் பத்தி எனக்கு நல்லா தெரியும்டா... நானும், நீயும் மட்டுமில்லை, நம்ம டீம்ல எல்லோரும் சேர்ந்து தான் போறோம்... என்ன, இப்போ வர்றியா...?" கண்கள் மின்ன சிறு எதிர்பார்ப்புடன் கேட்டவளை ஏமாற்ற மனமில்லாது,

"ம்... ஓகே..." என்று அவன் முகம் மலர கூறினான்...

அதைக் கண்ட ரேஷ்மா அவன் முகம் நோக்கி குனிந்தாள்... அவன் தன்னிச்சையாய்ப் பின்னால் நகர, அவளோ விடாது அவன் முகம் அருகே குனிந்தவள்,

"எங்கே போனாலும் என் கிட்டயிருந்து நீ தப்பிக்க முடியாது பேபி... தியேட்டர்ல உனக்குப் பக்கத்துச் சீட் எனக்குத் தான்... என்ன புரிஞ்சதா..."

கண்சிமிட்டி அவள் கூறிய அழகை கண்டு அவனது மனம் குத்தாட்டம் போட்டாலும் வெளியில் அடக்கி வாசித்தவன் அவளின் வார்த்தைக்குச் சம்மதம் என்று நேரிடையாய்ச் சொல்லாமல் தோராயமாய் நாலாப்புறமும் தனது தலையை ஆட்டி வைத்தான்...

"தட்ஸ் மை குட் பேபி..." அவனது முன்னுச்சி முடியை செல்லமாய்க் கலைத்து விட்டபடி புன்னகையுடன் அவள் அங்கிருந்து சென்றாள்...

அவளது தொடுகையில் மனம் கிறங்கி போய் அமர்ந்திருந்தான் அழகு... அந்தக் கணம் தனது வாழ்நாள் முழுவதும் அந்தக் கிறக்கம் வேண்டுமென்றே அவனுக்குத் தோன்றியது...

அப்போது அழகுக்கும், ரேஷ்மாவுக்கும் தெரியவில்லை... அவர்கள் இருவருக்கும் இடையில் அவனது வாழ்நாள் எதிரி வந்தமர போகிறாள் என்று...

திரையரங்கில் மட்டுமல்ல அவர்களது வாழ்க்கையிலும்...!!!

தித்திக்கும்...!!!

"ஏன்டா தடிமாடு... ஃபோனை எடுக்க இவ்வளவு நேரமாடா...? அப்படி என்னத்தடா வெட்டி முறிக்கிற... தடிமாடு, தடிமாடு..." என்ற வைத்தியநாதன் குரலோடு கவுண்டமணியின் 'ஐயம் வெரி பிசி... காந்த கண்ணழகி இங்கே பூசு, அங்கே பூசு...' நகைச்சுவை காட்சியின் பின்னணி இசை இரண்டும் சேர்ந்து அழகு சுந்தரப்பெருமாளின் அலைப்பேசியில் 'காலர் ட்யூனாக' ஒலித்தது... அதைக் கேட்டதும் அவனது முகத்தில் புன்னகை அரும்பியது...

அவன் தனது தந்தைக்கு என்று பிரத்யேகமாக இந்தக் 'காலர் ட்யூனை' தனது அலைப்பேசியில் வைத்திருந்தான்... அவன் தான் தனது கணினி அறிவை பயன்படுத்தி இந்த 'ரீமிக்ஸ்' வேலையைப் பார்த்திருந்தான்... அந்தளவுக்குத் தந்தை மீது அவனுக்கு ஏக கடுப்பு...

"ம்ப்ச்... இப்போ இவர் எதுக்கு ஃபோன் பண்றாரு...?" என்று முணுமுணுத்துக் கொண்டே தந்தையின் அழைப்பை எடுத்தான்...

"ஏன்டா தடிமாடு... ஃபோனை எடுக்க இவ்வளவு நேரமாடா...? அப்படி என்னடா வெட்டி முறிக்கிற... தடிமாடு, தடிமாடு..." 'காலர் ட்யூனில்' வைத்திருந்த அதே வார்த்தைகள் அட்சரம் பிசகாமல் நானூத்தி எழுபது கிலோமீட்டருக்கு அப்பால் இருந்து அதிகாரமாய் ஒலித்ததில் அவன் தனது அலைப்பேசியைக் காதிலிருந்து சற்று தள்ளி வைத்தபடி முகத்தைச் சுளித்தவன் பின் மீண்டும் அலைப்பேசியைக் காதில் வைத்தான்...

"ஏன்டா... ஃபோனை எடுத்தா உம்முன்னு ஒரு வார்த்தையாவது சொல்ல மாட்டியா...?"

"ம்..." அவர் கூறியதற்காக வேறுவழியின்றி அவன் 'உம்' கொட்டினான்...

"என்னைக்குத் தான் சுயமா சிந்திக்கப் போறியோ...?" அதற்கும் மகனுக்கு ஒரு குட்டு வைத்துவிட்டு

வைத்தியநாதன் மேலே தொடர்ந்தார்...

"நம்ம நாச்சியாவுக்குச் சென்னையில் அதுவும் உன் கம்பெனியில் தான் வேலை கிடைச்சிருக்கு... அவளுக்குத் தங்குறதுக்குப் பாதுகாப்பான நல்ல இடமா பார்த்து சொல்லு... நீ தங்குற இடம் மாதிரி இல்லாம நல்ல இடமா பாருடா... பொம்பளை புள்ளை பார்த்தியா... அவளோட பாதுகாப்பு ரொம்ப முக்கியம்... என்ன புரிஞ்சதா...?"

'அவளுக்கா பாதுகாப்பு வேணும்...? அவள் கிட்ட இருந்து இந்தச் சென்னை மக்களுக்குத் தான் பாதுகாப்பு வேணும்... முதல்ல எனக்கு இன்சூரன்ஸ் எடுக்கணும்... குள்ளச்சி என்னை என்ன செய்யக் காத்துக்கிட்டு இருக்காளோ...?'

"டேய்... அழகு..." பல்லை கடிக்கும் தந்தையின் குரலில் தன்னினைவு கலைந்தவன்,

"பார்க்கிறேன்..." என்றான் பட்டும் படாமல்...

'அவள் தங்குவதற்கு நான் இடம் பார்க்கணுமா...?' என்று அவனுக்கு மனதிற்குள் எரிச்சலாக இருந்தது...

அதற்குள் தந்தையிடமிருந்த அலைப்பேசி தாயின் கைக்கு இடம் மாறியது... அதில் அவன் பெருத்த நிம்மதி அடைந்தான்...

"அழகு... எப்படிடா இருக்கிற...?"

"நல்லா இருக்கேன்ம்மா... நீங்க எப்படியிருக்கீங்க...?"

"எனக்கு என்ன ராசா... நல்லா இருக்கேன்... நீ அடிக்கடி ஊர் பக்கம் வந்துட்டு போப்பா..."

"வர்றேன்ம்மா... லீவு கிடைக்க மாட்டேங்குது... நான் என்ன செய்ய...?"

"பொய் சொல்லாதடா... நல்ல நாளும் அதுவுமா கூட லீவு இல்லைன்னா எப்படி அழகு...? அப்படிப்பட்ட வேலை உனக்கு வேண்டாம்..." தாய் பாசத்தில் அவர் உருகினார்...

"ஏன்டி... அறிவுகெட்டவளே... அவன் தான் வர முடியாதுன்னு சொல்றானே... விட வேண்டியது தானே... எதுக்கு அவனை வற்புறுத்துர... லீவு விடும் போது அவன் வரட்டும்... இதுக்குன்னு லீவு எல்லாம் போட்டுட்டு இங்கே கிளம்பி வர வேண்டாம்..." தந்தையின் குரல் அவனது காதில் கர்ண கொடூரமாக ஒலிக்க,

"அம்மா... எனக்கு வேலையிருக்கு... நான் பிறகு ஃபோன் பண்றேன்..." என்று அவன் வெறுப்புடன் அழைப்பை துண்டித்தான்...

'நான் என்ன வேலை செய்யும் இயந்திரமா...? எனக்கும் ஆசாபாசம் இருக்காதா...? அம்மா மடியில் படுத்துக்கிட்டு ஆச்சி ஊட்டி விடச் சுகமாய் வாழ்க்கையை அனுபவிக்கணும்ன்னு ஆசை இருக்காதா எனக்கு... எப்பப்பாரு வேலைய பாரு, வேலைய பாரு...' அவனது மனதுக்குள் தந்தை மீது கோபம், வெறுப்பு எல்லாம் கலந்த ஒரு உணர்வு எழுந்தது...

அப்போது அவனது அலைப்பேசியில் ஒலித்த இன்னிசையில் அவனது எண்ணங்கள் அப்படியே எதிர்மறையாய் மாறிப் போனது...

"ஸநிப மக ஸகம மாமா
தும்தகத் தரிகிட தகதகத் தரிகிட மாப்ளே
நீ மாமா... நீ மாப்ளே...
நீ மாமா... நீ மாப்ளே
மாமா... மாப்ளே...
மாமா... மாப்ளே..."

பலே பாண்டியா படத்தின் பாசமிகு ‘மாமா – மாப்ளே’ பாடலில் மனதில் சந்தோசம் முகிழ்க்க அவசரமாய் அலைப்பேசியை உயிர்ப்பித்தான் அழகு... அவனது அருமை மாமா பொன்னுரங்கம் அல்லவா அழைக்கிறார்... இங்கு ஆடு உறவு, குட்டி தான் பகை... அவரது மகளுக்கும், அவனுக்கும் தான் ஏழாம் பொருத்தம்... மகளைத் தான் அவனுக்குப் பிடிக்காது, ஆனால் அந்த மகளைப் பெற்ற தந்தையை அவனுக்கு மிகவும் பிடிக்கும்...

அவன் அலைப்பேசியை உயிர்ப்பித்ததும், "மருமகனே... சௌக்கியமா இருக்கியாப்பா...?" என்ற அன்பான குரல் அவனது காதில் தேனாய்ப் பாய்ந்தது... தந்தை திட்டியதில் கோபம் கொண்டிருந்த அவனது மனதிற்கு அந்தப் பாசம் சற்று ஆறுதலாக இருந்தது...

"நல்லாயிருக்கேன் மாமா..." என்றான் மனதார...

"ஐயோ மருமகனே... இதுநாள் வரை நீ நல்லா தான் இருந்த... இனிமேலும் நீ அப்படி இருக்க முடியுமான்னு தெரியலையே அழகு..." வருத்தத்துடன் கூறியவரை கண்டு அவனது வருத்தம் மறைந்து அவனுக்குச் சிரிப்பு வந்தது... சட்டென்று அவன் வாய்விட்டு சிரித்துவிட்டான்...

"மதுரையில் இருந்து புயல் ஒண்ணு புறப்பட்டு இங்கே வர போறதை தானே நீங்க சொல்றீங்க...?"

"மருமகனே... அது எப்படி உனக்குத் தெரியும்...?"

"இப்போ தான் ஆச்சி, அப்பா எல்லாம் பேசினாங்க...?"

"ஓ..." என்ற பொன்னுரங்கம் அமைதியாகிவிட்டார்...

அவரது மகளால் மருமகன் அனுபவிக்கும் இடைஞ்சல்கள் ஏராளம்... இப்போது வேலை செய்யும் இடத்தில் போய் இந்த ராணி மங்கம்மாள் என்ன செய்யக் காத்திருக்கிறாளோ...? அவருக்கு அத்தனை பயமாக இருந்தது மகளை நினைத்து...

"என்ன மாமா... என் கிட்ட எதுவும் சொல்லணுமா...?" தன்மையான குரலில் கேட்டவனைக் கண்டு அவரது கண்கள் பனித்தது...

அழகின் அருமை தெரியாது மகள் அவனைப் போட்டு படுத்துகிறாளே என்று அவருக்கு ஆதங்கமாக இருந்தது...

"மாமா... மங்கையைப் பத்தின கவலையை விடுங்க... நான் பத்திரமா பார்த்துக்கிறேன்... அவள் பாதுகாப்பா தங்குவதற்கு ஒரு இடம் பார்த்து வைக்கிறேன்... நீங்க அவளைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்..."

அவரது மனம் புரிந்து அவன் கூறினான்... அவரும் அதைப் பற்றிப் பேச எண்ணி தான் அவனை அழைத்தார்... ஆனால் எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவனிடத்தில் உதவி கேட்பது அதுவும் மகளுக்கு என்று...

"எப்படி உன் கிட்ட கேட்கிறதுன்னு நினைச்சேன் அழகு...?" தயங்கியது அவரது குரல்...

"நான் என்ன அடுத்தவனா மாமா... நீங்க இப்படித் தயங்குவதற்கு...? அவளுக்கு நான் செய்யாம வேறு யார் செய்வாங்க... எல்லாம் நான் பார்த்துக்கிறேன்... நீங்க பயப்பட வேண்டாம்..." என்று மாமனிடம் ஆறுதலாய் உரைத்தவன் பின்பு அத்தையிடம் இரண்டொரு வார்த்தை பேசிவிட்டு அலைப்பேசியை வைத்தான்...

தந்தை சொல்லியிருந்தால் கூட இந்தக் காதில் வாங்கி அந்தக் காதில் விட்டிருப்பான்... ஆனால் இப்போது உதவி கேட்பது அவனது மாமாவாயிற்றே... அவனால் மறுத்து பேச முடியவில்லை... அவன் என்றுமே பாசத்துக்குக் கட்டுப்பட்டவன்...

காலையில் அவன் அலுவலகம் வந்ததில் இருந்து இந்த நொடி வரை ஒரு வேலை செய்யவில்லை... அவனது நேரத்தை எல்லாம் அவனது 'குள்ளச்சி' களவாடி கொண்டாள்...

'படுத்தி எடுக்கிறியேடி குள்ளச்சி...' என்று சலித்தபடி அழகு ரேஷ்மாவை தேடி சென்றான்...

"ரேஷூ..." கணினி திரையை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்த ரேஷ்மாவின் முன்வந்து நின்றவன் மெதுவே அவளை அழைத்தான்...

"ஹேய் அழகு... வா... வா... வந்து உட்காரு..."

அவனை யாரும் அழகு என்று கூப்பிட்டால் அவனுக்கு அப்படியொரு கோபம் வரும்... 'ஆர்யா என்று கூப்பிடுங்கள்' என்று கோபமாய்த் திட்டிவிடுவான்... என்று ரேஷ்மா அவனை அழகு என்று கூப்பிடத் துவங்கினாளோ

அன்றிலிருந்து அந்தப் பெயரில் அவனுக்குத் தனி மயக்கமே உண்டாகி விட்டது...

அவளுக்கு அருகில் இருந்த நாற்காலியில் அவன் அமர, அவள் தனது நாற்காலியை அவன் பக்கத்தில் ஒட்டி போட்டுக் கொண்டு அவனை உரசியபடி அமர்ந்தவள்,

"என்ன விசயம் அழகு...?"

அவனோ நாசுக்காய் அவளின் அருகாமையைத் தவிர்த்தவனாய் தனது நாற்காலியை பின்னால் நகர்த்தியவன்,

"ஏதாவது விசயம் இருந்தால் தான் வரணுமா...?"

"நீ சும்மா எல்லாம் என் கூடப் பேசுவியா அழகு...? நீ எப்போ என் கிட்ட பேசினாலும் வேலை சம்பந்தமா தான் பேசியிருக்க... வேறு எதுவும் பேசியதா எனக்கு ஞாபகம் இல்லையே..." என்று உதட்டை பிதுக்கியவளை கண்டு அவன் தனது உதட்டை கடித்தான் குற்றவுணர்வில்...

இப்போதும் அவன் அவளின் தயவு வேண்டி தான் வந்திருக்கிறான்...

"ரேஷூ... நீ தங்கியிருக்கிற அப்பார்ட்மெண்ட்ல ஏதாவது ஃபோர்சன் வெகண்ட்டா இருக்கா...? இல்லை ஏதாவது லேடிஸ் ஹாஸ்டல்ல ரூம் கிடைக்குமா...? கொஞ்சம் சேஃப்ட்டியா இருந்தா நல்லது..." தயங்கி தயங்கி கேட்டவனைக் கண்டு அவள் வியப்பில் விழிகளை மலர்த்தினாள்...

"அட அழகு லேடிஸ் ஹாஸ்டல் பத்தி எல்லாம் பேசுறாப்பல இருக்கு... என்ன மேட்டர்...?" கேலியாய் புருவத்தை உயர்த்தியவளை கண்டு,

"என்னோட மாமா பொண்ணுக்கு இங்கே நம்பக் கம்பெனியில் தான் வேலை கிடைச்சிருக்கு... அதான் கேட்டேன்..."

"ஓ..." என்று இழுத்தவள் பின் சந்தேகமாய் அவனைப் பார்த்து, "உன் மாமா பொண்ணு என்னை விட அழகாயிருப்பாளா...?"

அதற்கு அவன் ஒரு நொடி நேரம் கூடத் தாமதிக்கவில்லை... பட்டென்று அவன் பதிலளித்தான்...

"ம்... ரொம்ப அழகாயிருப்பாள்... அவளை நீ நேரில் பார்க்கத்தானே போகிற... அப்போ உனக்கே தெரியும்..."

அவனது குரலில் அவனையும் அறியாது ஒரு பெருமிதம்... அதை அவன் உணரவில்லை... ஆனால் ரேஷ்மா அதை உணர்ந்தாள்... அவளது மனதில் ஒருவித ஏமாற்றம் கவிழ்ந்தது... அதை அவள் வெளிக்காட்டி கொள்ளவில்லை...

"என் கூடத் தங்கியிருந்த ஒரு பொண்ணு ட்ரான்ஸ்பர் கிடைத்து நார்த்க்கு போகிறாள்... வேணும்ன்னா உன் மாமா மகளை என் கூட வந்து தங்க சொல்லேன்..."

ரேஷ்மா இருக்கும் குடியிருப்பும், அவன் இருக்கும் குடியிருப்பும் ஒரே வளாகத்தில் தான் இருந்தது... அதனால் அவனுக்குப் பெருத்த நிம்மதியாக இருந்தது...

"தேங்க்ஸ் ரேஷூ... அவளை எங்கே தங்க வைக்கிறதுன்னு ரொம்ப யோசனையா இருந்தது... இப்போ ரொம்பச் சந்தோசம்..." என்று அவன் நன்றியுரைக்க...

"உனக்காக நான் இதைக் கூடச் செய்ய மாட்டேன்னா..." என்று அவனது கண்ணோடு கண் கலந்து கூறியவளின் கண்களில் அவனும் விருப்பமாய் மூழ்கித்தான் போனான்...

ஆழ்கடல் ஆழம் போல் அவளது விழி அவனை அப்படியே உள்ளிழுத்துக் கொண்டது...

"அழகு... உனக்கு என்னைப் பிடிக்குமா...?"

"உன்னை மாதிரி நல்ல பொண்ணைப் பிடிக்காதவங்க யாராவது இருக்க முடியுமா ரேஷூ...? உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கும்..."

"நான் கேட்பது அந்த அர்த்தத்தில் இல்லை..." மேலே அவள் பேசும் முன் அவர்களின் சக பணியாளன் அவனிடம் வந்து,

"உன்னை நம்ம டீம் லீடர் கூப்பிடுறார்..." என்றழைக்க... அழகின் கவனம் அங்குச் சென்றது...

"தேங்க்ஸ் ரேஷூ..." என்றபடி அவன் எழுந்து செல்ல, ரேஷ்மா அவனையே பார்த்திருந்தாள்...

அழகு அவனது மாமன் மகளைப் பற்றிப் பேசும் போது அவனின் முகத்தில் வந்து போன பெருமிதத்தைக் கண்டு அவளுள் யோசனை எழுந்தது... இதுநாள் வரை அழகு எந்தவொரு பெண்ணையும் பெரிதாகக் கண்டு கொண்டது கிடையாது... வழிந்து பேசியதும் கிடையாது... அது போல் இப்படிப் பெருமிதமாகப் பேசியதும் கிடையாது...

ஆனால் தன்னிடம் பேசும் போது அவனது கண்களில் வரும் சிறு மின்னல், உதடுகளில் தவழும் புன்னகை, மலரும் முகம் எல்லாம் அவளுக்கு வேறு கதை அல்லவா அவளிடத்தில் சொல்கிறது... மொத்தத்தில் அழகின் மனதில் என்னயிருக்கிறது என்று தெரியாமல் அவள் பெரும் குழப்பத்துடன் அமர்ந்திருந்தாள்...

****************************************

அன்னை சித்ரவேணி தனது உடைமைகளை அடுக்கி வைத்துக் கொண்டிருக்க அதனை மேற்பார்வை பார்த்து கொண்டிருந்தாள் வலமங்கை நாச்சியார்... கையில் கொய்யாப்பழத்தை வைத்துக் கொண்டு வாயோடு சண்டை போட்டு கொண்டிருந்தாள்...

"அம்மா... என்னோட நெயில் கட்டர் எடுத்து வச்சீங்களா...? காது குடையற ஃபட்ஸ்... அப்புறம் விஸ்ப்பர்..."

"ஏன்டி... இது எல்லாம் கிடைக்காத காட்டுக்கா நீ குடி போகப் போற...? சென்னையிலும் இது எல்லாம் கிடைக்கும்..." என்று மகளிடம் அங்கலாய்த்தபடி அவளுக்குத் தேவையான பொருட்களைப் பெட்டியில் அடுக்கி வைத்துக் கொண்டிருந்தார் சித்ரவேணி...

"ஆஹா... இது நல்ல கதையாயிருக்கே... அங்கே வாங்கினா என்னுடைய சொந்த காசுல வாங்கணும்... இதே இது இங்கேன்னா உங்க புருசன் பணத்தை ஆட்டைய போடலாம்ல, அதுக்குத் தான்..."

இப்போது கொய்யாப்பழம் முடிந்து கடலை உருண்டைக்குத் தாவியிருந்தாள்...

"ஏன் அவரு உங்கப்பா இல்லையாக்கும்...? என் புருசன் மட்டும் தானா...?"

"க்கும்... அவர் எனக்கு அப்பாவா இருந்துட்டாலும்... உங்களுக்குப் புருசன் வேலை பார்க்கிறதுக்கு மட்டும் தான் அவர் லாயக்கு..."

"வாயிலேயே ஒண்ணு போடுவேன்..." அடிப்பது போல் சித்ரவேணி கையை உயர்த்திக் காண்பிக்க... அதற்கு எல்லாம் அசருவாளா நம் சண்டிராணி...

"ஏன்...? உண்மையைச் சொன்னால் கசக்குதாக்கும்...?" என்று நொடித்தவள் அருகில் இருந்த பாத்திரத்தில் இருந்து முறுக்கை எடுத்து வாயில் போட்டபடி,

"அம்மா... ரவா லட்டுச் செய்யச் சொன்னேனே... செய்யலையா...?" என்று கேட்டபடி ரவா லட்டுவை தேடி உணவு பண்டங்கள் இருந்த பைகள் மீது தனது கண்களை ஓட்டினாள்...

"நீ கேட்ட மத்தது எல்லாம் செஞ்சிட்டேன்... அது மட்டும் தான் செய்யலை... கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கோ நாச்சி..."

"ம்ஹூம்... மாட்டேன் போ... நீ செஞ்சு தரலைன்னா என்ன...? நான் அத்தை கிட்ட போய்க் கேட்டுக்கிறேன்..." மூக்கை உறிஞ்சி கொண்டு அழகின் வீட்டிற்குச் சென்றாள் அவள்...

வலமங்கை சென்று விசயத்தைக் கூறியதும் வேலைக்குக் கிளம்பி கொண்டிருந்த வைத்தியநாதன் உடனே ரவை

வாங்க கடைக்குக் கிளம்பிவிட்டார்... வைதேகி அதற்கான மற்ற வேலைகள் செய்ய ஆயுத்தமானார்...

"வாடியம்மா... வா... நீ சென்னைக்கு வேலைக்குப் போறியா...? இல்லை சாப்பிட போறியா...? அங்கே உங்கம்மா அவ்வளவு செஞ்சி வச்சியிருக்காள்... அது பத்தாதுன்னு இங்கே வேறயா...?"

"உனக்கு என்ன வந்தது கெழவி...? பேசாம வாயை மூடிட்டு போ..." பதிலுக்கு எகிறியவளை கண்டு வேதநாயகி வாய் திறக்கும் முன் வைதேகி அவளிடம்,

"நாச்சி... பெரியவங்களை அப்படிப் பேச கூடாதும்மா... மன்னிப்பு கேளு..."

"ம்... ம்..." என்று சிணுங்கினாலும் அவள் மன்னிப்பு கேட்க தவறவில்லை...

"என்னை மன்னிச்சுக்கோ ஆச்சி..." என்று எல்லாப் பற்களையும் காட்டி அத்தை முன்பு மன்னிப்பு கேட்டவள் பின்பு மெல்லிய குரலில்,

"கெழவி... என்னைக்காவது ஒரு நாள் என் கிட்ட தனியா மட்டுவேயில்ல... அப்போ உனக்கு இருக்கு..." என்று வில்லி போல் கூற...

அதை எல்லாம் லட்சியம் செய்வாரா வேதநாயகி...

"போடி... போடி பொடுசு..." என்று அலட்சியமாய் வார்த்தைகளை உதிர்த்தபடி அவர் சென்றுவிட்டார்...

"அசிங்கப்பட்டாள் வலமங்கை நாச்சியார்... இதுக்குத் தான் அத்தை நான் மன்னிப்பு கேட்க மாட்டேன்னு சொன்னது... இந்தக் கெழவிக்கு இது எல்லாம் பத்தாது..." என்று முகத்தைச் சுளித்தபடி கூறிய வலமங்கையைச் சமாதானப்படுத்திய வைதேகி,

"உனக்குத் திரட்டுப்பால் பிடிக்கும் இல்லையா... அதுவும் சேர்த்து செஞ்சி தர்றேன்..." அவர் சொன்னதும் அவளது முகம் மலர்ந்துவிட்டது...

"ஐய்... அத்தைன்னா அத்தை தான்..." என்றவள் அதன் பின் சமையலறையை விட்டு எழவில்லை... அங்கேயே குடியிருந்து விட்டாள்...

"உங்க பையனுக்கு ஒண்ணும் செய்யலையா அத்தை... அங்கே அம்மா அவனுக்குன்னு தனியா ஒரு பொட்டியை கட்டி வச்சியிருக்காங்க..."

அத்தையுடன் சேர்ந்து ரவா லட்டை உருட்டியவளின் கைகள் அதிலிருந்து கொஞ்சம் எடுத்து வாயில் போட்டுக் கொண்டது...

"அது எல்லாம் தனியா செஞ்சு வச்சியிருக்கேன்..."

"அதானே பார்த்தேன்..."

"நாச்சி..."

"சொல்லுங்கத்தை..."

"நீ அழகு கிட்ட ஊருக்கு வர சொல்லி சொல்லும்மா... அவனைப் பார்த்து ரொம்ப நாளாகுது..." என்றவரின் குரலில் இருந்த துயரை அவள் கண்டு கொண்டாள்...

அத்தையை ஆதரவாய் அணைத்து கொண்டவள், "கவலையே படாதீங்க அத்தை... நான் எதுக்கு அங்கே போகிறேன்...? நான் ஊருக்கு வரும் போது எல்லாம் அவனையும் கூட அழைச்சிக்கிட்டு வர்றதுக்குத் தான்... இல்லைன்னா என் தொந்திரவு தாங்காம அவனே இங்கே ஓடி வந்திருவான் பாருங்களேன்..."

மருமகள் கூறிய பாவனையில் அவருக்குச் சிரிப்பு வந்தது...

"கடைசியா சொன்ன பாரு... அதில் எனக்கு நம்பிக்கை வந்திருச்சு... அடுத்த லீவுக்கு என் மகன் கண்டிப்பா வீட்டுக்கு வந்திருவான்..."

"அத்தை..." அவர் கூறியதன் அர்த்தம் புரிந்து அவள் செல்லமாய்ச் சிணுங்கினாள்...

இன்னமும் சிறு பிள்ளை போன்று சிணுங்கும் மருமகளை அன்போடு அணைத்துக் கொண்டார் வைதேகி...

அன்று இரவு இரயிலுக்கு வலமங்கை சென்னைக்குக் கிளம்பினாள்... கிளம்பும் ஐந்து நிமிடத்திற்கு முன்பு வரை ஒவ்வொன்றாய் நினைவுப்படுத்தி எடுத்து கொண்டிருந்தவளை கண்டு பொன்னுரங்கத்திற்குக் கடுப்பாக இருந்த போதும் வெகு தூரம் பயணம் மேற்கொள்ளும் மகளைக் கடிய மனமில்லாது அமைதியாக நின்று கொண்டிருந்தார்...

ஒருவழியாய் கிளம்பி வந்தவள் தந்தையிடம், "நீங்க என் கூட வந்திருக்கலாம்ப்பா..." என்று குறைபட்டு கொண்டாள்...

"நாளைக்குப் பேக்டரியில் ஆடிட்டிங் இருக்குது... நான் என்ன பண்றது நாச்சி..."

அவருக்கும் அவளைத் தனியாக அனுப்புவது குறித்துச் சற்றுக் கவலையாகத் தான் இருந்தது... ஆனால் இடையில் வேலை வந்து தடை போட்டு விட்டதே...

"உங்களுக்கு என் மேல் அக்கறையே இல்லைப்பா..." என்று தந்தையிடம் கோபித்துக் கொண்டவள் மாமாவிடம்,

"மாமா... நீங்களாவது என் கூட வந்திருக்கலாமே..."

"நானும் வரணும்ன்னு தான் நினைச்சேன் நாச்சியா... ஆனா நாளைக்குப் பார்த்து ஸ்கூலில் இன்ஸ்பெக்சன் வந்திருச்சும்மா... நீ ஒண்ணும் கவலைப்படாதே... நீ அங்கே போய் இறங்கியதும் உன்னைக் கூட்டிட்டு போக அழகு வருவான்... ஏற்கெனவே நான் அவன் கிட்ட சொல்லியிருக்கேன்..."

"யாரு...? உங்க மகன் தானே... அவனை நம்ப முடியாது மாமா..."

"அவனை நீ நம்ப வேண்டாம்... என்னை நம்பு நாச்சியா..." வைத்தியநாதன் அவளைச் சமாதானம் செய்தார்...

இதைப் பார்த்துக் கொண்டிருந்த சுப்பிரமணியம், வேதநாயகி இருவரது கண்களும் அர்த்தத்துடன் பார்த்துச் சிரித்துக் கொண்டது...

எல்லோரிடமும் விடைப்பெற்று இரயிலில் ஏறியமர்ந்தவளுக்குச் சற்று உற்சாகமாகத் தான் இருந்தது... இத்தனை நாள் படிப்பு, படிப்பு என்று பெற்றோரின் பாதுகாப்பில் இருந்தவளுக்கு இப்போது வேலைக்கு என்று தனியாகச் சென்னை செல்வது குறித்துத் திடீரென்று தனக்குப் பொறுப்பு அதிகரித்து விட்டது போல் மலைப்பாகத் தோன்றியது...

எல்லோரும் கண்கள் கலங்க விடை கொடுத்த போதும் அவள் மகிழ்ச்சியாகத் தான் விடை பெற்றாள்... மனதிற்குள் அத்தனை மகிழ்ச்சி இருந்த போதும் ஓரத்தில் சிறு படபடப்பு இருந்தது என்னவோ உண்மை...

இரவு எல்லாம் தூங்காது விழித்திருந்தவள் அதிகாலையில் சென்னையில் கால் பதித்தாள் உற்சாகமாய்... அவளது அத்தனை நேர உற்சாகம் எல்லாம் இன்னமும் அவளை அழைத்துப் போவதற்கு அழகு வராததைக் கண்டு அப்படியே புஸ்சென்று இறங்கி போனது... திருவிழாவில் தொலைந்து போன சிறு குழந்தை போல் செய்வதறியாது அவள் திருதிருவென விழித்தாள்...

அதே நேரம் மதுரையில் மீனாட்சி அம்மன் கோவில் தெப்பக்குளத்தின் படிக்கட்டில் சுப்பிரமணியம், வேதநாயகி இருவரும் யோசனையுடன் அமர்ந்திருந்தனர்...

"எல்லாம் சரியா வருமாண்ணா...?"

"எல்லாம் சரியா வரும் வேதா... அதனால் தானே இத்தனை பாடுபட்டு நேத்து அவளைச் சென்னைக்கு அனுப்பி வைத்தோம்..."

ஆம்... சுப்பிரமணியம் தான் நாள் சரியில்லை, அது இது என்று சாக்குபோக்கு சொல்லி வலமங்கையை நேற்று சென்னைக்குக் கிளப்பி விட்டது... இல்லையென்றால்

திங்கள் அன்று சேரும் வேலைக்கு வியாழன் இரவு செல்ல அவள் அவ்வளவு எளிதில் ஒத்துக் கொண்டிருக்க மாட்டாள்...

"இனி அழகு அவளைப் பார்த்துக்குவான்..." என்று சுப்பிரமணியம் நிம்மதியாய் கூற...

"அண்ணா... இப்படி ரெண்டு பேரும் எலியும், பூனையுமா இருக்காங்களே... இப்படி இவங்க ரெண்டு பேரும் இருந்தால் நாம எப்படி இவங்களுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கிறது..."

"இனிமேல் ரெண்டு பேரும் பக்கத்தில் பக்கத்தில் இருக்கப் போறாங்க... யாரும் இல்லாததால் ஒருத்தரை ஒருத்தர் அனுசரிச்சு வாழ வேண்டியிருக்கும்... அதனால் ரெண்டு பேருக்கும் இடையில் நல்ல புரிதல் ஏற்படும்... அப்படியே நம்ம வேலையும் சுலபமா முடிந்துவிடும் வேதா..."

"ஏதோ நல்லது நடந்தால் சரி தான்..." என்றதோடு முடித்துக் கொண்டார் வேதநாயகி...

***************************

மீண்டும் மீண்டும் அலறிய அலாரத்தை எரிச்சலுடன் அணைத்த அழகு மீண்டும் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு உறங்க ஆரம்பித்தான்... உடன் தங்கியிருக்கும் மூர்த்தி அவனிடம்,

"டேய்... எட்டு மணியாகுதுடா... வேலைக்குக் கிளம்பலையா...?" என்று கேட்டதும் தான் அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்தமர்ந்தான் அழகு...

மூர்த்திக் கூறியதை உறுதிப்படுத்தியது அவனது அலைப்பேசி... அடுத்தப் பத்து நிமிடத்தில் வேகமாய்க் கிளம்பியவன் தனது இரு சக்கர வாகனத்தைப் புயல் போல் கிளப்பிக் கொண்டு சென்னை போக்குவரத்தில் கலந்தான்...

'போச்சு... சும்மாவே குள்ளச்சி பத்திரகாளி மாதிரி டான்ஸ் ஆடுவாள்... இப்ப கேட்கவும் வேண்டாம்... இன்னைக்கு நான் தொலைஞ்சேன்...' என்று மனதுக்குள் புலம்பியவன் அதே சமயம்,

'என்னை எப்படி எல்லாம் படுத்தி எடுத்தாள்... இன்னைக்கு ஒரு நாள் காத்திருக்கட்டும்...' என்று அவனுக்குக் கோபமும் வந்தது...

இது எல்லாவற்றையும் விட அவள் சென்னைக்குப் புதிது என்கிற பதட்டம் அடங்கிய கவலை வேறு மனதின் ஓரத்தில் அரித்து எடுக்க அவன் தனது வாகனத்தை முடுக்கினான் வேகமாய்...

அவன் இரயில் நிலையம் வந்து பார்த்த போது வலமங்கை அங்கு எங்கும் இல்லை... ஒரு இடம் விடாமல் எல்லா இடமும் தேடி பார்த்தவன் அவளைக் காணாது மிகவும் ஓய்ந்து போனான்... மனதிற்குள் பயம் சத்தமாய் மத்தளம் வாசிக்க ஆரம்பித்தது...

'ஏய் குள்ளச்சி... விளையாடாதேடி... நீ இங்கே எங்கேயோ தான் மறைஞ்சிருக்க... என்னைப் பயமுறுத்தத்தானே இப்படி எல்லாம் பண்ற...' மனதுக்குள் அவளிடம் புலம்பியவனாய் கண்ணில் பட்ட மறைவிடங்களில் எல்லாம் ஓடி ஓடி போய் அவளைத் தேடினான்... அந்தோ பரிதாபம் எல்லா இடத்திலும் அவனுக்கு ஏமாற்றமே மிஞ்சியது...

எங்கும் வலமங்கையைக் காணாது அழகின் கண்கள் லேசாகக் கலங்க ஆரம்பித்தது அவனின் மனதினை போல்...!!!

தித்திக்கும்...!!!

வலமங்கை நாச்சியாரை எங்கும் காணாது அழகு சுந்தரப்பெருமாள் செய்வதறியாது அதிர்ந்து நின்றான்... இதற்கு முன் இப்படி ஒரு பதட்டமான சூழ்நிலையை அவன் கையாண்டது கிடையாது... மூளை மரத்துப் போனது போல் அப்படியே அசையாது சிலையாய் நின்றிருந்தான்...

தினசரி செய்தித்தாள்களில் படிக்கும் பெண்கள் மீதான வன்முறை செய்திகள் அவன் கண்முன் வலம் வந்து அவனை உள்ளம் பதற செய்தது... எங்கே போனாளோ, எப்படிக் கஷ்டப்படுகிறாளோ என்கிற அச்சத்தில் அவன் உறைந்து போய் நின்றான்...

புத்தி பேதலித்தார் போன்று அவன் நின்றிருந்த தோற்றமும், கலங்கி சிவந்திருந்த அவனது கண்களும் அவனைக் கடந்து சென்ற மனிதர்களை ஒரு மாதிரியாகப் பார்க்க செய்தது... பலர் யாருக்கு வந்த விருந்தோ என்று அவனைக் கடந்து சென்றனர்... சிலர் அவனின் தோற்றம் கண்டு இரக்கம் கொண்டாலும் எதற்கு வம்பு என்று பயந்து விலகி சென்றனர்...

அப்படியிருந்தும் ஒரு பெரியவர் தைரியமாக அவனிடம் வந்து, "தம்பி..." என்று அவனது தோள் தொட்டு அழைத்தார்...

அதில் தன்னுணர்வு பெற்ற அழகு அவரைத் திரும்பி பார்த்தாலும் அவனால் உடனே என்னவென்று பதிலுக்குக் கேட்க முடியவில்லை... அவனது சிந்தனை முழுவதும் அவனது அழகான ராட்சசியே நிறைந்திருந்தாள்...

"தம்பி... மனசுக்கு எத்தனை வருத்தம் இருந்தாலும் தவறான முடிவு எடுத்துவிடாதே... நம்மை நம்பி நம்ம குடும்பம் இருக்குப்பா..."

இவர் என்ன சொல்கிறார் என்று புரியாது முழித்தான் அவன்... அவனது முழியை வேறு மாதிரி எடுத்துக் கொண்ட அந்தப் பெரியவர்,

"உன் மனசுல உள்ளதை நான் எப்படிக் கண்டுபிடிச்சேன்னு நினைக்கிறியா... என் சர்வீசில் உன்னைப் போல் எத்தனை பேரை நான் பார்த்திருப்பேன்..." என்று பெருமைப்பட்டுக் கொண்டவர்,

"தம்பி... தற்கொலை பண்றது எல்லாம் கோழைத்தனம்..." என்று அறிவுரை கூற ஆரம்பிக்க...

அப்போது தான் அவனுக்குச் சுற்றுபுறம் உறைத்தது... தான் இரயில் தண்டவாளத்தை வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்ததைக் கண்டு அந்தப் பெரியவர் தவறாக எண்ணிவிட்டார் என்று...

"ஐயா பெரியவரே... எனக்கு நூறு வயசு வாழணும்ன்னு ஆசையிருக்கு... இப்படி அபத்தமான முடிவு எல்லாம் எடுக்க மாட்டேன்... அதனால் நீங்க கவலைப்படாம போயிட்டு வாங்க..." என்று அவரை வழியனுப்பி வைத்தவன் தன்னைச் சுதாரித்துக் கொண்டு வலமங்கையின் அலைப்பேசிக்கு அழைப்பு விடுத்தான்...

அழைப்புப் போய்க் கொண்டே இருந்தது... ஆனால் மறுமுனையில் அவள் எடுக்கும் வழி தெரியவில்லை... மீண்டும் மீண்டும் அழைத்தவனுக்கு அத்தனை முறையும் தோல்வியே கிட்டியது... எப்போதும் அவளிடம் கோபம் கொள்பவனால் இன்று அவளிடம் கோபப்பட முடியவில்லை தனது தவறால்... மீண்டும் மனதுக்குள் கலவரப்பந்து அவஸ்தையாய் உருண்டது...

அந்நேரம் அவனது அலைப்பேசி அழைத்தது... 'காலர் ட்யூன்' வைத்தே அது தனது தந்தை என்று அவனுக்குப் புரிந்து போனது... என்ன பதில் சொல்வது என்று தெரியாது தலையைக் கோதி கொண்டவன் அவரது அழைப்பை எடுக்கவில்லை... தந்தை அழைத்த பின் மாமா அவனை அழைத்தார்... குற்றவுணர்வில் அவன் அவரது அழைப்பையும் எடுக்கவில்லை...

மீண்டும் இரயில் நிலையம் உள்ளே, வெளியே என்று சுமார் இரண்டு மணி நேரம் வலமங்கையைத் தேடியவனுக்கு

ஏமாற்றமே மிஞ்சியது... இப்போது என்ன செய்வது...? வீட்டினருக்கு அழைத்து விசயத்தைக் கூறுவதா இல்லை காவல்நிலையம் சென்று புகார் அளிப்பதா என்ன செய்வது என்று தெரியாது குழப்பத்துடன் நின்றிருந்தான் அவன்...

மீண்டும் அவனது தந்தை அழைத்ததும் வேறுவழியின்றி அழைப்பை எடுத்தவன் விசயத்தைக் கூறும் முன் வைத்தியநாதன் படபடவென அவனைப் பொரிந்து தள்ளிவிட்டார்...

"உன்னை நம்பி பொட்டப்புள்ளைய அனுப்பி வச்சா நீ இப்படித்தான் பொறுப்பில்லாம இருப்பியா... நாச்சியா சென்னைக்குப் புதுசுன்னு உனக்குத் தெரியாதா...?"

"அப்பா... அது வந்து..."

எப்போதும் அவர் திட்டும் போது எரிச்சல் படுபவனுக்கு இன்று அழுகை வரும் போலிருந்தது...

"நீ ஒண்ணும் பேசாதே படவா..." என்று அவர் கத்தி கொண்டிருக்கும் போதே பொன்னுரங்கம் கோபத்துடன் அலைப்பேசியை அவரிடம் இருந்து பிடுங்கினார்...

"அழகு... அவன் திட்டினதுக்கு எல்லாம் நீ கவலைப்படாதே... நீ கம்யூட்டர் கம்பெனியில் ராத்திரி, பகல்ன்னு நேரங்காலம் தெரியாம கண் முழிச்சு வேலை செய்கிறவன்... காலையில் எழுந்துக்கத் தாமதமாகி கொஞ்சம் லேட்டா கூப்பிட போனால் ஒண்ணும் தப்பில்லை... நீ வரும் வரைக்கும் அவள் அங்கேயே காத்திட்டு இருக்க வேண்டாமா... அதுக்குள்ள என்ன அவசரம் அவளுக்கு...?" மாமா தனக்கு ஆதரவாகப் பேசியது கேட்டு அவனுக்குச் சந்தோசமாக இருந்த அதே நேரம் வலமங்கை பற்றி அவர் கூறியது கேட்டு அவன் பெருத்த நிம்மதி அடைந்தான்...

"மாமா... மங்கை எங்கே இருக்கிறாள்...?" அவனது முகத்தில் சந்தோசம் வந்து அப்பிக் கொண்டது...

"அந்தக் கழுதை நம்ம அருணோட அக்கா வீட்டில் போய் உட்கார்ந்திட்டு இருக்கு மருமகனே..." அதைக் கேட்டதும்

அவனுக்கு அப்படி ஒரு சந்தோசம்... அவள் பத்திரமாக இருப்பதே அவனுக்கு நிம்மதியாக இருக்கிறது...

"நான் அங்கே போய் அவளைக் கூப்பிட்டுக்கிறேன் மாமா... நீங்க கவலைப்படாதீங்க... இனி நான் அவளைப் பத்திரமா பார்த்துக்குவேன்..." மனதில் குற்றவுணர்வு பொங்க அவனது குரல் சிறிது கம்மியது...

"அழகு... உன்னைப் பத்தி எனக்கு நல்லா தெரியும்ப்பா..." பொன்னுரங்கம் கூறியதும் அவன் நிம்மதியுடன் அலைப்பேசியை அணைத்தான்...

எல்லோரும் அவரவர் வேலையைப் பார்க்க சென்றதும் வேதநாயகி சுப்பிரமணியத்திடம், "அண்ணா... இந்த ராசா இப்படிச் சொதப்பி வச்சிட்டானே...? இனி என்ன நடக்கப் போகுதோ தெரியலையே..." என்றார் கலவரமாய்...

தங்கையின் கலவரம் அண்ணனுக்கும் தொற்றிக் கொண்டது... அவரும் கலவரமாய் யோசனையில் ஆழ்ந்தார்...

அருணின் அக்கா ரேணுகாவின் வீடு அழகிற்கு ஏற்கெனவே தெரியும்... ஏனெனில் எல்லோரும் ஓர் ஊர்க்காரர்கள் என்பதால் வந்த சொந்தம்... அவர்களின் வீட்டின் வாயிலில் தனது வாகனத்தை நிறுத்தியவன் வெளிக்கதவை திறந்து கொண்டு உள்ளே சென்றான்...

கதவு திறக்கும் சத்தம் கேட்டு வெளியில் வந்த அருண் அவனைக் கண்டதும் முகம் மலர, "வாங்கண்ணா... வாங்க..." என்று வரவேற்றான்...

ஏனோ அருணை கண்டால் அழகிற்குப் பிடிக்காது... ஒருவேளை வலமங்கை தன்னைக் கேலி செய்யும் போது எல்லாம் அவன் உடனிருந்ததால் கூட அப்படித் தோன்றியிருக்கலாம்...

பதிலுக்கு உதட்டை இழுத்து வைத்து இளித்தவன், "மங்கை இருக்கிறாளா...?"

"இருக்காண்ணா... நீங்க வரலைன்னதும் எனக்கு ஃபோன் பண்ணினாள்... நான் போய் அவளைக் கூட்டிட்டு வந்தேன்... நாங்க ரெண்டு பேரும் உங்க கம்பெனியில் தான் ஜாயிண்ட் பண்ண போறோம் அண்ணா..."

'சுத்தம்... ஏன்டா... ஊரில் தான் ரெண்டு பேரும் படுத்தி எடுத்தீங்கன்னா வேலைக்கு வந்த இடத்திலும் பின்தொடர்ந்து வந்து டார்ச்சர் பண்றீங்களே...' மானசீகமாகத் தலையில் கை வைத்தான் அழகு...

ஆனாலும் வெளியில் சிரித்தபடி அருணிடம், "இனிமேல் அது என் கம்பெனி இல்லை அருண்... நம்ம கம்பெனி சரியா..." என்க...

"அட ஆமாண்ணா... இது எனக்குத் தோணவே இல்லை பாருங்க..." வெகுளியாய் உரைத்தான் அருண்...

'உனக்கு அந்த அளவுக்கு அறிவு இருந்தால் நீ ஏன் அந்தக் குள்ளச்சி கூடப் பிரெண்ட்ஷிப் வைச்சியிருக்கப் போற... அவளுக்கு உன்னை மாதிரி ஒரு அடிமை தான் தேவை... நல்லா மாட்டினடா நீ... சாவுடா மவனே...!' மனதில் கறுவியபடி உள்ளே சென்றான்...

அங்கே அழகு தான் கண்ட காட்சியில் திகைத்து போய் அப்படியே நின்றுவிட்டான்...

வரவேற்பறை சோபாவில் அமர்ந்தபடி வலமங்கை உணவை வளைத்து கட்டிக் கொண்டிருந்தாள்... அவளது தட்டில் அம்பாரம் போல் இட்லி குவித்து வைக்கப்பட்டிருக்க அதன் மேல் தாராளமாய்க் கறிக்குழம்பு ஊற்றப்பட்டுப் பார்க்கவே கண்கொள்ளா காட்சியாக இருந்தது...

"அக்கா... சூப்பர்க்கா... உங்க கைப்பக்குவம் யாருக்கும் வராது... என்னா டேஸ்ட்... என்னா டேஸ்ட்... ஆஹா... அற்புதம்..." என்று நாக்கை சப்பு கொட்டியபடி ரசித்து ருசித்து உண்டவளை அருகிலிருந்த ரேணுகா ரசித்துப் பார்த்து கொண்டிருந்தாள்... அவள் முகத்தில் அப்படியொரு மகிழ்ச்சி... பின்னே அவளது சமையலையும் பாராட்டி

ஒருவர் பேசுவது அவளுக்கு அத்தனை பெருமையாக இருந்தது...

ரேணுகாவின் கணவன் வாசு வலமங்கையை முறைத்து பார்த்துக் கொண்டிருந்தான்... பின்னே சுமாராகச் சமைக்கும் மனைவியின் சமையலை இப்படி அளவுக்கு அதிகமாய்ப் புகழந்தால் அவனுக்கு எரிச்சல் வருமா? வராதா...? மனைவி சமையலை உண்பதற்கு அவன் படும் பாடு அவனுக்கு மட்டும் தானே தெரியும்...

திகைத்து நின்ற அழகின் முகத்தில் அடுத்த நொடி புன்னகை மலர்ந்தது அவளது செயல் கண்டு...

'குள்ளச்சி எங்கே போனாலும் சாப்பாடு கடையை விரிச்சிருவாளே... வயித்துக்குள்ள அரவை மிசின் எதுவும் வச்சியிருப்பாளோ... இப்படி விடாம அரைச்சுக்கிட்டு இருக்காளே...' என்று நினைத்தவனுக்கு அவளைக் கண்டு மெல்லியதாய் பொறாமை எழுந்தது...

பின்னே இத்தனை சாப்பிட்டும் கொடி போன்ற இடையுடன் ஒல்லியாய் இருப்பவளை கண்டு பொறாமை வராமல் என்ன செய்யும்...? அவனுக்கு மட்டும் கொஞ்சம் உண்டாலே எடை போட்டுவிடும்... அதற்குப் பயந்தே அவன் உணவு விசயத்தில் சிறிது கட்டுப்பாட்டுடன் தான் இருப்பான்...

"நாச்சி... அழகு அண்ணா வந்திருக்காங்க..."

அருண் சொன்னதும் ரேணுகா அவசரமாய் எழுந்து நின்று அவனை வரவேற்றாள்... அவளது கணவனும் அப்படியே... ஆனால் நம் சண்டிராணி அவனைச் சிறிதும் கண்டு கொள்ளவில்லை... அவன் மீது கோபமாக இருக்கிறாளாக்கும்... அவள் அமைதியாகக் கைக்கும், வாய்க்கும் சண்டையிட்டு கொண்டிருந்தாள்...

அழகும் ஒன்றும் பேசாது அவளைப் பார்த்துக் கொண்டே அங்கிருந்த சோபாவில் அமர்ந்தான்... ரேணுகா காபி கலந்து அவனது கைகளில் கொடுத்தவள் அங்கிருந்து சென்றுவிட, சூழ்நிலை கனம் உணர்ந்து அருணும் நைசாக

நழுவினான்... அவனுக்குத் தான் ஏற்கெனவே தெரியுமே இருவருக்கும் இடையில் நடக்கும் அக்கப்போர் பற்றி... இருவரும் செல்வதைக் கண்டு வாசுவும் நாசுக்காக நகர்ந்துவிட்டான்...

இப்போதைக்கு வலமங்கை வாய் திறக்கும் வழி தெரியாததால் அழகே வாய்த் திறந்தான்...

"கிளம்பு போகலாம்..."

'எங்கே...?' என்பது போல் அவனைப் பார்த்து வைத்தாள் வலமங்கை...

"உனக்குப் பார்த்திருக்கும் அப்பார்ட்மெண்ட்க்கு..." என்று பதில் சொல்லியபடி பல்லை கடித்தான் அவன்...

"நான் உன் கூட வர மாட்டேன்... இங்கேயே இருந்துக்கிறேன்..."

"அடுத்தவங்க வீட்டில் உட்கார்ந்துட்டு நீ என்ன பேசிட்டு இருக்க...? எனக்கும் பொறுமைக்கும் ரொம்பத் தூரம்... கோபப்படுத்தாம கிளம்பு..."

"இது நம்ம அருணோட அக்கா வீடு... நம்ம ரேணுகா அக்கா தான்..."

"அருணோட அக்கா தான்... உன்னோட அக்கா இல்லை... விருந்தும் மருந்தும் மூணு நாள் தான்..."

"அடப்பார்றா... பிள்ளைப்பூச்சி எல்லாம் தத்துவம் பேசுறதை..." கொஞ்சமும் அலட்டாது பதில் பேசியவள் தட்டிலிருந்த கடைசி இட்லி துண்டை எடுத்து வாயில் போட்டாள்...

"இப்போ என் கூட வர போறியா இல்லையா...?"

"ம்... இது நல்ல கேள்வி..." முன்னிருந்த மேசை மீது தட்டை வைத்தவள் சோபாவில் சம்மணம் போட்டு அமர்ந்து கொண்டு,

"உன்னை நம்பி நான் எங்கும் வர மாட்டேன்... பத்து வயசில் உன்னை நம்பி வந்து நான் அசிங்கப்பட்டது போதும்... இனியும் அசிங்கப்பட நான் விரும்பலை..." இதைச் சொல்லும் போது அவளது முகம் மிகவும் சீரியசாக இருந்தது...

"ஏய் குள்ளச்சி... ரொம்பப் பண்ணாதேடி... எதுக்கு எதை இணை கூட்டுற...? அருணுக்கு ஃபோன் பண்ணி உன்னைக் கூட்டிட்டுப் போகச் சொல்ல தெரிஞ்சிச்சு இல்ல... நான் இருக்கும் அப்பார்ட்மெண்ட் அட்ரஸ் தான் உனக்குத் தெரியுமே... அவன் கூட அங்கே வந்து தொலைய வேண்டியது தானே... இல்லை எனக்கு ஃபோன் பண்ணி நான் எப்போ வருவேன்னு கேட்க வேண்டியது தானே... அதை எல்லாம் செய்யாம விட்டுட்டு இது என்ன அடுத்தவங்க வீட்டில் உட்கார்ந்துக்கிட்டு அலப்பறை கொடுத்துட்டு இருக்க..."

"நான் ஒண்ணும் இங்கேயே டேரா போட்டுட மாட்டேன்... இன்னும் இரண்டு நாளில் லேடிஸ் ஹாஸ்டலுக்குப் போயிருவேன்..."

"ஓ... லேடிஸ் ஹாஸ்டலுக்குப் போகிறவள் என் கூட வர மாட்ட அப்படித்தானே..."

"அப்படியே தான்..." என்றாள் அழுத்தமாய் அவள்...

அவளின் அழுத்தம் அவனுள் கொதிப்பை ஏற்படுத்திய போதும் தந்தையின் நரசிம்ம அவதாரம் நினைவில் எழுந்ததும் அந்தக் கொதிப்பு அப்படியே புஸ்சென்று அடங்கிப் போனது...

"குள்ளச்சி... படுத்தாதடி... உன் மாமாவுக்கு என்னால் பதில் சொல்ல முடியாது..."

"அது பத்தி எனக்கு என்ன கவலை...?"

"உனக்கு எதைப் பத்தி தான் கவலையிருந்தது..." என்று வாய்க்குள் முணுமுணுத்தவன்,

"நான் உன்னை நேரத்துக்குக் கூப்பிட வராதது என் தப்பு தான்... மன்னிச்சுக்கோடி..."

எப்போதும் இப்படி மன்னிப்பு கேட்பவன் கிடையாது... ஆனாலும் தனது தவறின் வீரியம் புரிந்ததால் என்னவோ அவன் மனதார அவளிடத்தில் மன்னிப்பு கேட்டான்... அவன் மன்னிப்பு கேட்டதும் கண்கள் மின்ன அவனைப் பார்த்தாள் அவள்...

"அட... உனக்கு மன்னிப்பு எல்லாம் கேட்க வருமா...?" கிண்டலும், கேலியும் அவளுடன் பிறந்தது அல்லவா... அதனால் அப்படிக் கேட்டாள்...

அதற்கு அவன் அவளை முறைக்க முயன்று பின் தன்னைச் சுதாரித்துக் கொண்டு, "ப்ளீஸ் கிளம்புடி..." என்றான் தன்மையாய்... காரியமாக வேண்டுமானால் காலை பிடிக்க வேண்டும் என்பதினை நன்கு உணர்ந்தவனாய்...

"ம்... ம்... போனால் போகிறது என்று உன்னுடன் வருகிறேன்... இன்னொரு முறை இது போல் செய்த... அப்புறம் என் வழி தனி வழி... ஆக்காங்... சொல்லிப்புட்டேன்..." என்று அவள் முறுக்கி கொள்ள...

"எல்லாம் என் நேரம்டி..." முணுமுணுத்து கொண்டவன்,

"உன் லக்கேஜ் எல்லாத்தையும் ரெடி பண்ணி வை... கால் டாக்சி புக் பண்ணிட்டு வர்றேன்..." என்றவன் தனது அலைப்பேசியை எடுத்துக் கொண்டு வாயிலுக்குச் சென்றான்...

அடுத்தப் பத்து நிமிடத்தில் கார் வந்ததும் அவளது பொருட்களை எல்லாம் அழகு காரில் எடுத்து வைக்க, வலமங்கை மகாராணி போல் அவனை வேலை ஏவி கொண்டிருந்தாள்...

"அழகு... பார்த்து எடுத்து வை... என் பொருளுக்கு ஏதாவது டேமேஜ் ஆச்சு அவ்வளவு தான்..." இதில் மொட்டை அதிகாரம் வேறு...

தன்னை நம்பி வந்திருக்கும் அவளிடத்தில் ஏனோ அவனால் கோபத்தைக் காட்ட முடியாது போனது...

"அதெல்லாம் ஒண்ணுமாகாது... உன் ஓட்டை சாமானுக்கு நான் கியாரண்ட்டி... நீ பேசாம காரிலேறு..."

அவன் சொன்னப் பிறகும் மேலும் சில நிமிடங்கள் எல்லோரிடமும் விடைப்பெறுவதில் நேரத்தை கடத்தியவள் அவனது பொறுமையை வெகுவாய் சோதித்த பின்பே காரிலேறினாள்...

அவள் காரிலேறிய பின்பே அழகு தனது இருசக்கர வாகனத்தில் ஏறினான்...

காருக்குள் ஏறிய வலமங்கைக்கு முன்புற கண்ணாடியில் இருந்து தன்னை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த ஓட்டுநரை கண்டு மனதிற்குள் பயம் வந்தது... உடனே அவளது கற்பனை குதிரை கன்னாபின்னாவென்று தறிகெட்டு ஓடியது... அடுத்த நொடி வேகமாய்க் கார் கதவின் கண்ணாடியை கீழே இறக்கிவிட்டவள்,

"டேய் அழகு சுந்தரம்..." என்று கத்த... அதில் அவனது மானம் போனது...

வண்டியை கிளப்பிக் கொண்டிருந்தவன் பின்னால் திரும்பி பார்த்து எரிச்சலுடன், "என்னடி...?"

"இங்கே வாடா..."

வேகமாய்க் கைகளை அசைத்து அழைத்தவளை கண்டு யோசனையுடன் வண்டியை பின்னால் நகர்த்தியவன் அவள் அருகில் வந்ததும்,

"என்னடி...?"

"நீயும் என் கூட வாடா..." என்றவளை உற்று நோக்கியவன் அவளது கண்களில் தெரிந்த பயத்தைக் கண்டதும் ஒன்றும் பேசாது வண்டியை ஓரமாய் நிறுத்திவிட்டு அதன் சாவியை அருணிடம் கொடுத்து,

"நீ ஓடிட்டு வா..." என்று அவனைப் பணித்தவன் காரின் அருகில் வந்தான்...

அழகு வந்ததைக் கண்டு நிம்மதி அடைந்த வலமங்கை அவன் காரின் முன்னிருக்கையில் அமர போவதை கண்டு, "டேய் அழகு..." என்று அலற...

"ம்ப்ச்... என்னடி பிசாசே..."

"இங்கே வா..." தனது பக்கத்து இருக்கையைச் சுட்டிக்காட்டி அழைத்தாள்...

திறந்திருந்த முன் கதவை மூடிவிட்டு அழகு பின்னால் ஏறியமர கார் கிளம்பியது...

"இவ்வளவு தானா உன் தைரியம்...? வாய் மட்டும் தான்டி உனக்கு இருக்கு..."

"டேய் அழகு வேண்டாம்டா..."

தன்னை அவன் கேலி செய்வது கண்டு பொறுக்காது அவள் ஒற்றை விரல் நீட்டி அவனை எச்சரிக்க...

"அவ்வளவு பயம்...?" கேலியாய் கேட்டவனிடத்தில் குரலை தாழ்த்தி,

"டிரைவரை பார்த்தா வில்லன் மாதிரி இருக்குதுடா..."

அவள் என்ன சொல்கிறாள் என்று புரியாது விழித்தவன், "என்னடி சொல்ற...? கொஞ்சம் சத்தமா பேசு..."

அவள் அவன் உயரத்திற்கு எக்கியபடி அவன் காதில் தான் கூறியதை திரும்பக் கூற... அவனோ அதைக் கவனிக்காது அவள் எக்கி கொண்டிருந்த நிலையைக் கண்டு வாய்விட்டுச் சிரித்தான்... அவனைப் புரியாது நோக்கியவள்,

"நான் என்ன ஜோக்கா அடிச்சேன்... எதுக்குடா எருமை இப்படிச் சிரிக்கிற...?"

அவளது தலையில் வலிக்காது குட்டியபடி, "எல்லாத்திலேயும் என்னை விட அதிகமா இருக்கணும்ன்னு சொல்லுவியே... என்னை விட உயரமா வளராம எப்படி இப்படி நீ குள்ளச்சியா நின்னு போன..." என்றுவிட்டு அவன் சிரிக்கத் துவங்க...

"அழகு..." என்று பல்லை கடித்தவள் அவனைச் சராமாரியாக அடிக்கத் துவங்க... அவனோ சிரித்தபடி அவள் அடித்த அடிகளை வாங்கிக் கொண்டிருந்தான்...

இருவரது விளையாட்டைக் கண்டு சிரித்த ஓட்டுநர், "லவ்வர்ஸ்ன்னா உங்களைப் போல் தான் இருக்கணும்..." என்று சொல்ல...

அதில் அதிர்ந்த இருவரும் அடுத்த நொடி அவசரமாய் விலகி அமர்ந்தனர்... இருவரும் ஒருவரை ஒருவர் முறைத்துக் கொண்டே,

"நாங்க லவ்வர்ஸ் இல்லை..." என்று உறுதியாய் மறுத்தவர்கள்,

"எதிரிகள்..." என்றனர் ஒருமித்த குரலில்...

அதைக் கேட்டு ஓட்டுநர் தான் அதிர்ந்து போனார்... அதன்பின் அவர் வாய் திறக்கவில்லை...

முகத்தைத் திருப்பிக் கொண்டமர்ந்த இருவரும் குடியிருப்பு வரும் வரை அமைதியாக வந்தனர்... அவர்களுக்கு முன் குடியிருப்பிற்கு வந்து சேர்ந்த அருண் அழகின் வண்டியின் சாவியை அவனிடம் கொடுத்துவிட்டு கிளம்பி சென்றான்...

அழகு வலமங்கையை அழைத்துக் கொண்டு ரேஷ்மா வீட்டிற்குச் சென்றான்... அவர்களை எதிர்பார்த்து காத்திருந்தாள் ரேஷ்மா...

"இவங்க ரேஷ்மா... என் கூட வேலை செய்றவங்க..." என்று ரேஷ்மாவை வலமங்கையிடத்தில் அவன் அறிமுகம் செய்து வைத்தான்...

"அப்போ நம்ம கூட வேலை செய்றவங்கன்னு சொல்லுடா..." என்ற வலமங்கை,

"ரேஷ்மிக்கா..." என்றபடி ரேஷ்மாவை கட்டியணைத்து கொண்டாள்...

வலமங்கையின் இந்தத் திடீர் செயலில் ரேஷ்மா திகைத்து விழித்தவள் தன்னைச் சுதாரித்துக் கொண்டு,

"வாங்க மங்கை..." என்க...

"ஐயோ... என் பெயர் மங்கை இல்லை... நயன்தாரா..." என்று அவள் திருத்த... ரேஷ்மாவோ திருதிருத்தாள்...

இருவரையும் புன்னகையுடன் பார்த்தபடி நின்றிருந்த அழகு, "அவள் பெயர் வலமங்கை நாச்சியார் தான்... ஆனா அம்மையாருக்கு நயன்தாரான்னு கூப்பிட்டா தான் தொண்டையில் சோறு இறங்கும்..."

"நீ மட்டும் என்ன ஒழுங்கா... நீயும் தானே ஆர்யான்னு பெயர் வச்சிக்கிட்டு அலைஞ்ச... இப்போ கம்பெனிக்காரன் உன் உண்மை பெயரை கழுத்தில் கட்டி தொங்கவிட்டதும் அதை நீ மறந்து போயிட்ட..." என்று வலமங்கை அவனிடத்தில் எகிற துவங்கினாள்...

இப்போது திருதிருப்பது அழகின் முறையாயிற்று...

"ஏன் அழகுங்கிற பெயர் அழகா தானே இருக்கு...?" ரேஷ்மா கேட்கவும்...

"அழகாத்தான் இருக்கு ரேஷூ..." என்று இழுத்தான் அழகு...

அழகு விளித்த 'ரேஷூ' என்கிற வார்த்தை வலமங்கையின் புருவத்தை வியப்பாய் உயர செய்தது... இதில் ஏதோ விசயம் இருக்கிறதே என்று அவளின் துப்பறியும் மூளை எச்சரிக்கை செய்தது...

"அழகு எப்பவும் அழகு தான்..." என்று கூறி சிரித்தாள் ரேஷ்மா...

"அப்போ நான் அழகாயில்லையா...?" என்று முந்தி கொண்டு கேட்ட வலமங்கையின் வெகுளித்தனத்தில் கவரப்பட்ட ரேஷ்மா அவளைக் கவனித்துப் பார்த்தாள்...

அழகு கூறியது போல் ஆர்ப்பாட்டமில்லாத எளிமையான அழகுடன் கண்களுக்குக் குளிர்ச்சியாக அழகாக இருந்தாள் வலமங்கை...

"நீயும் அழகு தான் மங்கை... உன்னைப் பத்தி அழகு சொல்லியிருக்கிறான்... ஆனால் இப்போது தான் நேரில் பார்க்கிறேன்... அவன் சொன்னதை விட நீ ரொம்ப அழகு..."

ரேஷ்மா கூறியதை கேட்டு மயக்கம் வருவது போல் பாவனைச் செய்த வலமங்கை, "என்னதுதுதுது... அழகு என்னைப் பார்த்து அழகுன்னு சொல்லிட்டானா...?"

அதைக் கேட்ட அழகிற்கு ஐயோவென்று வந்தது... இந்த ரேஷ்மா இதைப் போய் வலமங்கையிடம் சொல்ல வேண்டுமா என்றிருந்தது அவனுக்கு...

"என்ன செய்ய... மாமன் மகளாச்சேன்னு பொய் சொல்லி வச்சேன்... அதுக்காக நீ இதை எல்லாம் உண்மைன்னு நம்பிவிடாதே..." என்று கூறி அவன் கேலியாய் சிரிக்க...

"அழகு..." என்றபடி அவனை அடிக்க அவள் வர...

அவளது கைகளில் அகப்படாமல் போக்குக் காட்டினான் அழகு... கடைசியில் வெறுத்து போன வலமங்கை வேறுவழியின்றி அவனுக்கு விட்டு கொடுக்க வேண்டியதாய் போயிற்று...

"சரி மங்கை... நான் ஆபிசுக்கு கிளம்ப வேண்டும்... நீ இங்கே பத்திரமாக இருந்துக்குவ தானே..."

"எனக்கு என்ன பயம்...? அதெல்லாம் நான் பத்திரமா இருந்துக்குவேன்..." என்றாள் அவள் அசால்ட்டாய்...

"அதானே... உனக்கு என்ன பயம்...? உன்னைக் கண்டு இங்குள்ளவர்கள் தான் பயப்படணும்... எல்லோர் வீட்டு கதவிலும் ஒரு போர்டு மாட்டி வைக்கச் சொல்ல

போகிறேன்... 'Beware of Valamangai' என்று..." என்று தன்னைக் கிண்டலடித்தவனைக் கண்டு அவள் மீண்டும் துரத்தி கொண்டு ஓட...

அவனோ பயந்து போய் வெளியில் ஓடினான்...

"போடா... இந்தப் பக்கம் வந்தே... நீ செத்த..." என்று கத்தியபடி அவள் வீட்டின் வாயிலில் தேங்கி நிற்க...

மின்தூக்கி அருகில் சென்றவன் திரும்பி பார்த்து, "அம்மா, அத்தை இருவரும் எனக்கு ஏதாவது கொடுத்து விட்டாங்களா...?"

"கொடுத்து விட்டிருக்காங்க தான்... ஆனா நீ என்னைக் கேலி பண்ணியதால் அதெல்லாம் உனக்கு நான் கொடுக்க மாட்டேன்... எல்லாம் எனக்கு மட்டும் தான்... போடா..."

"போடி குள்ளச்சி..."

"டேய்...." என்று கத்தியபடி அவனை நோக்கி நகர முயன்றவளை கண்டு பயந்து போனவன் போல் பாவனைச் செய்தவன் வேகமாய் மின்தூக்கியினுள் நுழைந்தான்...

மின்தூக்கியினுள் தனிமையில் நின்ற அழகின் முகத்தில் அப்படி ஒரு மலர்ச்சி... இத்தனை நாள் சென்னை தனிமை வாழ்க்கையைக் கண்டு மனம் வெறுத்து போயிருந்தவனுள் இன்று ஏனோ அதற்கு உயிர்ப்பு வந்தது போல் ஒரு தோற்றம்...

அங்கு வீட்டு வாசலில் நின்று கொண்டு மின்தூக்கியின் கதவினை பார்த்துக் கொண்டிருந்த வலமங்கை முகத்திலும் புன்னகை நிறைந்திருந்தது... இத்தனை நாள் எதையோ இழந்தார் போன்று இருந்த ஒரு உணர்வு இப்போது சுத்தமாய்த் துணி கொண்டு துடைத்தார் போன்று அதற்கு எதிர்ப்பதமாய் வண்ணமயமாய் மாறிப் போயிருந்தது... மனதிற்குள் நிறைவாய், மகிழ்ச்சியாய் உணர்ந்தாள் அவள்...

இருவரின் நெஞ்சிலும் தங்களது எதிரியின் நினைவுகள் தித்திப்பாய் இனித்தது...!!!

தித்திக்கும்...!!!

முகம் கொள்ளாப் புன்னகையுடன் உள்ளே வந்த வலமங்கை நாச்சியாரை கண்டதும் ரேஷ்மாவிற்கு மனதிற்குள் பகீரென்றது... ஏனெனில் இன்று கண்ட அழகு சுந்தரத்தின் புன்னகை முகம் இதுநாள் வரை அவள் பார்த்தறியாதது... அது வலமங்கை வரவினால் வந்த புன்னகை என்பது அவளுக்குத் தெளிவாகத் தெரியும்... அவன் இயல்பாக வலமங்கையுடன் பேசி பழகி விளையாடும் விதம் ரேஷ்மாவின் மனதில் கவலையை உண்டாக்கியது... ஏனோ அழகு தன் கையை விட்டு போவது போல் ஒரு தவிப்பான எண்ணம் அவளுள்...

"ரேஷ்மிக்கா... என்ன யோசனை...?" ரேஷ்மாவின் முகத்தின் முன் கையை ஆட்டியபடி கேட்டாள் வலமங்கை...

அதில் தன்னுணர்வு பெற்ற ரேஷ்மா வலமங்கையின் முகத்தைப் பார்த்தாள்... கள்ளங்கபடமற்ற அவளின் முகத்தில் தெரிந்த வாஞ்சையான புன்னகையில் தனது கவலையைத் தள்ளி வைத்தவள்,

"என்ன மங்கை...?"

"என்னோட ரூம் எதுக்கா...?"

"இங்கே இருக்கிறது இரண்டு ரூம் தான்... நீ என்னோட ரூமில் தங்கிக்கோ... அந்த ரூம்ல ஏற்கெனவே ரெண்டு பேர் இருக்காங்க..." என்ற ரேஷ்மா அவளைத் தனது அறைக்கு அழைத்துச் சென்றாள்...

அந்த அறையில் ஒற்றைக் கட்டில் இரண்டு போடப்பட்டு இருவர் தங்குவதற்கு ஏற்றவாறு வசதியாக இருந்தது...

"பிடிச்சிருக்கா மங்கை..."

"பிடிச்சியிருக்காவா...? ரொம்ப ரொம்பப் பிடிச்சியிருக்கு அக்கா... என்னோட காலேஜ் ஹாஸ்டலுக்கு இது நூறு மடங்கு தேவலை..." பெட்டியை தூக்க முடியாமல் தூக்கி

கொண்டு உள்ளே வந்தவளை கண்டு ரேஷ்மிக்குச் சிரிப்பு வந்தது...

"சரி... நீ உன் திங்க்சை அடுக்கி வை... எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு..." என்றவள் தனது மடிகணினியோடு அமர்ந்து விட்டாள்...

ஏனெனில் அவள் அனுமதி கேட்டிருந்த விடுப்பு நேரம் முடிய இன்னும் சில மணித்துளிகள் இருந்தது... அதற்குள் முடிக்க வேண்டிய வேலைகளை முடித்துவிடலாம் என்று நினைத்து வேலையில் ஆழ்ந்து விட்டாள்...

தனது உடமைகளை அடுக்க வேண்டி அதை எடுத்த வலமங்கை அதிலிருந்த அழகிற்குக் கொடுக்க வேண்டிய உணவு பொருட்களைக் கண்டதும் அவளையும் அறியாது அவனின் ஞாபகம்... அதிலும் அவன் கேட்டது வேறு அவளது நினைவில் எழுந்தது...

'ஐயோ பாவம், எவ்வளவு ஆசையா கேட்டான்...' என்று அவனுக்காக இரங்கியவள் உடனே அவனுக்குக் கொடுத்தனுப்பிய பொருட்களை எல்லாம் பொட்டலம் கட்டி கொண்டு அவனைக் காண கிளம்பிவிட்டாள்...

"அக்கா... அழகு எங்கே தங்கியிருக்கான்...? இங்கே பக்கத்தில் தான்னு மாமா சொன்னாங்க..." அவளுக்கு அழகின் வீடு தெரியாததால் ரேஷ்மாவிடம் கேட்டாள்...

"அடுத்து இருக்கிற அப்பார்ட்மெண்ட் தான்... சிக்ஸ்த் ப்ளோர், டோர் நம்பர் பிஃப்டீன்..."

"சரிக்கா..." என்றபடி கிளம்பியவளை வெறித்துப் பார்த்தாள் ரேஷ்மா...

வலமங்கை போல் தன்னால் அழகை காண இப்படி எளிதாகச் செல்ல முடியுமா? என்றொரு கேள்வி தோன்றி அவளை வண்டு போல் குடைந்தது... அப்படி அவள் அவனைப் பார்க்க சென்றாலும் அதை அவன் ரசிக்க மாட்டான் என்பதும் அவளுக்கு நன்கு தெரியும்...

"ரேஷூ... இங்கே எல்லாம் எதுக்கு வந்தீங்க... எதுவாக இருந்தாலும் ஆபிசில் பேசிக்கலாம்..." என்று அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து அவளைத் திருப்பி அனுப்பிவிடுவான்...

பேசாமல் தான் வலமங்கையாகப் பிறந்திருக்கலாம் என்றே அவளுக்குத் தோன்றியது... பெருமூச்சுடன் தனது வேலையைத் தொடர்ந்தாள்...

வலமங்கை உற்சாகமாக அழகின் வீட்டின் முன் சென்று நின்றவள் அழைப்பு மணியை அழுத்திவிட்டு ஆவலுடன் காத்திருந்தாள்... வெகுநேரம் கழித்து ஒருவன் வந்து கதவை திறந்தான்... அவன் அழகுடன் தங்கியிருப்பவன்... தங்கள் வீட்டின் முன் தேவதை போன்று ஒரு இளம்பெண் நிற்பதை கண்டு நம்ப முடியாது இமைச்சிமிட்டி விழித்தவன் அப்போதும் அந்தப் பெண் உருவம் போகாது இருக்கவும் அவள் கனவல்ல நனவு என்பதை உணர்ந்தவனாய்,

"ஹாய் ப்யூட்டி... உங்களுக்கு என்ன வேண்டும்...?" என்று அவளைப் பார்த்து ஜொள்ளினான்...

'கர்மம், கர்மம்... இப்படிப்பட்ட பிரகதிகளோடவா இந்த அழகு தங்கியிருக்கான்... முதல் வேலையா இந்த விசயத்தை மாமா காதில் போட்டு வைக்கணும்... உன் நண்பனை சொல், உன்னைப் பற்றிச் சொல்கிறேன்னு சும்மாவா சொல்லியிருக்காங்க... இவனைப் பார்த்தால் நல்லவன் மாதிரி தெரியலையே... அப்போ நம்ம அழகுவும் இப்படித்தானா...?' அவளுக்கு உள்ளுக்குள் பகீரென்றது...

"ப்யூட்டி..."

அவன் மீண்டும் அழைக்கவும் அவனை முறைத்து பார்த்தவள், "இன்னொரு தடவை ப்யூட்டின்னு கூப்பிட்ட பல்லை தட்டி கையில் கொடுத்துடுவேன்... எங்கே அந்த அழகு...?" என்றாள் கோபமும், கெத்துமாய்...

வந்தவள் உடன் தங்கியிருக்கும் நண்பனை பற்றி விசாரிக்கவும் அவன் சற்று பயந்து போனான்...

"இருக்கான்... உள்ளே வாங்க..." என்று வரவேற்க...

"இல்லையில்லை... நான் இங்கேயே இருக்கேன்... அவனை வர சொல்லு..." முகத்தைச் சுளித்துக் கொண்டு கூறியவள் வாயிலை விட்டு அகலவில்லை...

அழகை அழைத்து விசயத்தைக் கூறிய அந்த நண்பன் விட்டால் போதுமென்று வெளியில் ஓடிவிட்டான்... அப்போது தான் அலுவலகத்திற்குக் கிளம்பி கொண்டிருந்த அழகு நண்பன் கூறியதும் 'யார்டா அது நம்மைத் தேடி வந்திருப்பது' என்று யோசித்துக் கொண்டே சென்றவனுக்கு அங்கே வலமங்கையைக் கண்டதும் இனிய அதிர்ச்சியாக இருந்த அதே சமயம் கோபமும் வந்தது...

"இங்கே எல்லாம் எதுக்குடி வந்த...?" கோபத்தில் அவன் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான்...

அவன் நின்றிருந்த கோலம் கண்டு லஜ்ஜையுடன் முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டவள், "ஏன் நான் இங்கே எல்லாம் வர கூடாதாக்கும்...?"

"அடிச்சேன்னு வையி பேசுற வாய் அப்படியே கிழிச்சிரும்... என் கூடத் தங்கியிருக்கிற ஒவ்வொருத்தனும் ஒவ்வொரு மாதிரி... எல்லோரின் பார்வையும் ஒரே மாதிரியாய் நல்லதா இருக்காது... இனி எதுவாக இருந்தாலும் ஃபோன் பண்ணு... நான் வந்து உன்னைப் பார்க்கிறேன்..."

"அது மட்டும் எதுக்கு...? நீ அங்கே வந்து கேர்ள்சிடம் கலர்ஸ் காண்பிக்கிறதுக்கா...? ஒண்ணும் வேண்டாம்... எனக்குச் சொன்னது தான் உனக்கும்... ஃபோன் பண்ணு நானே உன்னைப் பார்க்க வர்றேன்..."

"சரி அதை விடு... இப்போ எதுக்கு வந்த...?"

அழகு கேட்டதும் தான் வந்த விசயம் அவளுக்கு நினைவில் வந்தது...

"ஐயோ பாவமேன்னு உனக்குக் கொடுத்தனுப்பிய பொருட்களைக் கொடுக்க வந்தேன்... நீ திட்டியதால் இது

உனக்குக் கிடையாது போடா..."

இரு கைகளில் இருந்த பைகளை எடுத்துக் கொண்டு அவள் நகரத் துவங்க... சட்டென்று அவளது கையைப் பிடித்துத் தடுத்தவன்,

"ஏய் லூசு... இருடி..."

"டேய் லூசு... முதல்ல நீ என் கையை விடுடா... பார்க்கிறவன் தப்பா நினைக்கப் போறான்..."

"இதுல தப்பா நினைக்க என்னயிருக்கு...?"

"நீ நிக்கிற கோலத்தில் ஒரு பொண்ணு கையைப் பிடிச்சு இழுத்தா நல்லதாவா நினைக்கப் போறாங்க..." அப்போதும் அவள் அவனைத் திரும்பி பார்க்கவில்லை...

"ஏன் எனக்கு என்ன...?" என்றவன் தன்னை மேலிருந்து கீழாகப் பார்த்தான்...

பேண்ட் மற்றும் பனியனுடன் இருந்தவன் தோற்றத்தில் அப்படி ஒன்றும் குறையில்லை... சட்டை போடுவதற்கு முன் நண்பன் அவசரமாக அழைத்ததால் அப்படியே வந்துவிட்டான்... இது ஒரு குற்றமா...

குற்றம் தான் என்று அவள் அடித்துப் பேசினாள்...

"இப்படி அரைகுறையாக உடுத்தி கொண்டு வந்து நிற்க உனக்கு வெட்கமா இல்லையா... போடா..."

"சரி சரி... நான் போய்ச் சட்டையைப் போட்டுட்டு வந்திர்றேன்... நீ எங்கேயும் போகாம இங்கேயே அடங்கியிரு..." என்றுரைத்தவன் அவளது கையை விடுவித்து விட்டு உள்ளே சென்று வேகமாய்ச் சட்டையை அணிந்து கொண்டு திரும்பி வந்தான்...

"இப்போவாவது என்னைத் திரும்பி பார்க்கலாம் இல்லையா...?"

அவனது குறும்பு குரலில் திரும்பி பார்த்தவள் அவனின் தோற்றம் கண்டு மெச்சுதலுடன், "இது கொஞ்சமே கொஞ்சம் ஓகே..." என்று கூறி சிரிக்க...

"கொழுப்பு..." என்றவன் அவள் எதிர்பார்க்காத தருணத்தில் அவளது கைகளில் இருந்த பைகளைப் பறித்துக் கொண்டான்...

"டேய் இது சீட்டிங்..." என்று அவள் கத்த...

"எதுடி சீட்டிங்... என்னோட திங்க்சை எடுத்து வச்சிக்கிட்டு கொடுக்காம இருக்கிறது தான் சீட்டிங்..." என்று சிரித்தவன் அதை உள்ளே வைத்துவிட்டு வீட்டை பூட்டி கொண்டு கிளம்பியவன்,

"வா... உன்னை வீட்டில் விட்டு விட்டு நான் ஆபிசுக்கு போகிறேன்..."

"கிளம்பி வந்தவளுக்குப் போகத் தெரியும்..." என்று நொடித்துக் கொண்டவளை கண்டு அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்...

அவனுக்கே தன்னைக் குறித்து ஆச்சிரியமாக இருந்தது... நேற்று வரை வேம்பாகக் கசந்தவளை நினைத்து இன்று இப்படிச் சிரிப்பு வருமா என்று...?

வலமங்கை கோபத்துடன் முன்னே செல்ல பின்னே ஓடிவந்தவன் அவள் அருகே வந்ததும் உடன் சேர்ந்து நடக்கத் துவங்கினான்...

"மதியத்துக்குப் பக்கத்தில் இருக்கும் மெஸ்ஸில் சாப்பாடு சொல்லியிருக்கேன்..."

உணவு பற்றி அவன் கூறியதும் அவளது கோபம் எல்லாம் பஞ்சாய் பறந்து போனது...

"எனக்குப் பிடித்தது தானே சொல்லியிருக்கிறாய்..."

"ஆமாம்டி... பறப்பது, ஊர்வது, நடப்பது, நகர்வதுன்னு எல்லா நான்வெஜ் அயிட்டமும் சொல்லி இருக்கிறேன்..."

அதைக் கேட்டு மகிழ்ந்தவள் பின் சோகமாய், "எனக்குப் பன்னிரெண்டு மணிக்கு ஜூஸ், சாலட் வேணுமே..." என்றவள் தனது கைக்கடிகாரத்தைப் பார்த்தபடி,

"அதுக்கு இன்னும் அரை மணி நேரம் தான் இருக்கு..."

அதற்குள் இருவரும் கீழே இறங்கி வந்திருந்தனர்... அவன் தனது இரு சக்கர வாகனத்தின் அருகே சென்றவன்,

"அனுப்பி வைக்கச் சொல்லுறேன் குள்ளச்சி... அப்படிச் சாப்பிட்டாவது உயரமா வளருகிறாயா என்று பார்க்கலாம்..."

"டேய்..." அவள் அடிக்க வரும் முன் வாகனத்தைக் கிளப்பியவன்,

"வெவ்வவ்வே..." என்று பழிப்பு காட்டியபடி வாகனத்தை முடுக்கி விடுமுன் அங்கு வந்து சேர்ந்தாள் ரேஷ்மா...

அவளைக் கண்டதும் தனது குரங்கு சேட்டையைக் கைவிட்டு அழகு அமைதியாகி விட... வலமங்கை பொருமும் மனதுடன் நின்றிருந்தாள்...

"மங்கை... வீட்டை பூட்டிட்டு வந்திட்டேன்... இந்தா உன்னோட சாவி..." என்று அவளிடத்தில் ஒரு சாவியைக் கொடுத்த ரேஷ்மா அலுவலகத்திற்குக் கிளம்பி செல்ல...

அவளைப் பார்த்துக் கொண்டிருந்த வலமங்கை, "நீயும் அவங்களும் ஒண்ணா தானே வேலை பார்க்கிறீங்க... இப்போ நீ அவங்களை உன் கூடக் கூட்டிட்டுப் போகலாம் இல்லையா...?"

"அது எப்படி நான் கூட்டிட்டு போக முடியும்... என்னோட பைக்கின் பின்பக்கம் உட்கார என் மனைவிக்கு மட்டும் தான் அனுமதி இருக்கு..."

அப்படிச் சொல்லும் தான் தான் ரேஷ்மாவிடத்தில் மதிமயங்கி கொண்டிருக்கிறோம் என்பது அந்தக் கணம் அவனது புத்தியில் உறைக்கவில்லை...

"டேய் அழகு... பார்த்துக்கிட்டே இரு... என்னைக்காவது ஒருநாள் ஒரு அழகான பொண்ணு வந்து உன்னிடம் லிப்ட் கேட்க போகிறாள்... அப்போ நீ உன் கொள்கையைக் காற்றில் பறக்கவிட்டு விட்டு அவளை உன் பைக்கில் ஏத்த தான் போற பாரு..."

"ஹா... ஹா... உலக அழகியே வந்தாலும் இந்த அழகு அசர மாட்டானாக்கும்..." என்று அவன் சிரிக்கத் துவங்க...

"உனக்கு இருக்கிற கொழுப்புக்கு..." அப்போது அடிக்காததற்கும் சேர்த்து இப்போது நன்றாக அடி போட்டாள் அவள்...

"போடி பிசாசே... உனக்கு ஏன்டி இத்தனை காண்டு..."

"உன் மேலே எனக்கு என்ன காண்டு... ரேஷ்மிக்கா பாவம்ன்னு சொன்னேன்..."

"அவள் உண்மையில் பாவம் தான்..." என்று உடனே ஒத்துக் கொண்டவனைச் சந்தேகமாகப் பார்த்தாள் அவள்...

"பின்னே உன்னை மாதிரி ஒருத்தியை கூடத் தங்க வச்சியிருக்காளே... அப்போ அவள் பாவமில்லையா...?" என்று கிண்டலடித்தவன் அவள் அடிக்க வரும் முன் தனது வண்டியை கிளப்பிக் கொண்டு வேகமாய்ப் பறந்தான்...

"எப்படியும் இங்கே தானே வந்தாகணும்... அப்போ உன்னை நல்லா கவனிச்சிக்கிறேன்டா..." என்று கத்தியவள் தனது வீட்டிற்குச் சென்றாள்...

அடுத்து சில மணித்துளிகள் அவளது பொருட்களை எல்லாம் அடுக்கி வைப்பதில் நேரம் சென்றது... அழகு சொன்னது போல் பன்னிரெண்டு மணிக்கு பழச்சாறு வந்தது... அடுத்து ஒரு மணிக்கு அவளுக்குப் பிடித்த அசைவ உணவு வகைகள் வகை வகையாய் வந்து சேர்ந்தது...

"டேய் அழகு... நீ இப்படி எல்லாம் நல்லா கவனிப்பன்னு தெரிஞ்சிருந்தா நான் காலேஜ் படிக்கிறதுக்குச் சென்னை

வந்திருப்பேனே... நீ கொஞ்சமே கொஞ்சம் நல்லவன் தான்டா..." என்று மனதிற்குள் அவனைச் சிலாகித்தபடி உணவை மொக்கினாள் அவள்...

தன் வயிறு வாடாமல் பார்த்துக் கொண்ட அழகு உண்டானா, என்ன செய்கிறான் என்று அவனை அழைத்து ஒரு வார்த்தை கேட்கவில்லை அவள்... மாறாக அவன் தான் அவளை அழைத்துக் கேட்டான்...

"சாப்பாடு எல்லாம் சரியான நேரத்துக்கு வந்ததா...?"

"எல்லாம் வந்தது அழகு... எல்லாம் நல்லா இருந்தது... ஒரே ஒரு குறை தான் அழகு... கொஞ்சுண்டு ஐஸ்க்ரீம் கொடுத்திருக்கலாம்..."

"அடிங்... இதுவே அதிகம்... இதில் உனக்குப் பீடா, ஐஸ்க்ரீம், ஃப்ரூட் சாலட் எல்லாம் வேணுமாக்கும்..."

"கரெக்ட் அழகு... எதுவோ மிஸ்சாகுதேன்னு நினைச்சேன்... நீ கரெக்ட்டா சொல்லிட்ட... எஸ்... பீடா, ஃப்ரூட் சாலட் தான் மிஸ்ஸாகுது..." என்று துள்ளிக் குதித்தவளை கண்டு அவன் மானசீகமாகத் தலையில் அடித்துக் கொண்டான்...

"ஃபோனை வையிடி..."

"நீ தான்டா ஃபோன் பண்ணின... அப்போ நீ தான் வைக்கணும்..." என்று அவள் சட்டம் பேச...

இந்த முறை உண்மையாகவே அவன் தலையில் அடித்துக் கொண்டு அழைப்பை துண்டித்தான்...

அழகு பேசி முடித்ததும் வீட்டிலிருந்து அழைப்பு வந்தது... எடுத்து உற்சாகமாகப் பேச துவங்கினாள் வலமங்கை...

ஆளாளுக்கு அவளின் நலத்தைப் பற்றி அக்கறையாக விசாரித்தனர் என்றால் வேதநாயகி மட்டும் தனது பேரனின் நலத்தைப் பற்றி விசாரித்தார்...

"என் ராசா எப்படியிருக்கான்...?"

"கெழவி... நான் தான் இந்த ஊருக்கு புதுசா வந்திருக்கேன்... உன் பேரன் இல்லை..." அலைப்பேசியை முறைத்து பார்த்தாள் வலமங்கை...

"அதனால் தான்டியம்மா கேட்கிறேன்..."

"கெழவி... உன் ரவுசுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை... இரு கெழவி உன் பேரன் கிட்டயிருந்து உன்னைப் பிரிக்கிறேன்..."

"ஹ... என் பேரனாவது என்னை விட்டு பிரியறதாவது..." பாட்டியும் கெத்து காட்டினார்...

அதைக் கேட்டு அவள் பல்லை கடித்தாள்...

"ரொம்பச் சந்தோசப்பட்டுக்காதே கெழவி... உன் பேரன் இப்போ என் கிட்ட நல்லா பேசறான், பழகிறான்... இப்படியே போச்சுன்னு வையி, உன்னைப் பத்தி இல்லாதது பொல்லாதது எல்லாம் போட்டு கொடுத்து உன் பிரெண்ட்ஷிப்பை கட் பண்ணி விடலை என் பேரு நயன்தாரா இல்லை... ச்சே ச்சே வலமங்கை நாச்சியார் இல்லை..."

"போடி போடி போக்கத்தவளே... உன் பெயரை கூட ஒழுங்கா சொல்லி சத்தியம் பண்ண தெரியலை... நீ என் பேரனை உன் பேச்சு கேட்க வைக்கப் போறியா...?" பாட்டி பேத்தியை உசுப்பேத்தி விட்டார்...

"செஞ்சு காண்பிக்கிறேன் கெழவி... இது இந்த வலமங்கை நாச்சியாரின் சபதம்..." என்று சபதம் பூண்டாள் அவள்...

அலைப்பேசியை அணைத்த வேதநாயகி சுப்பிரமணியத்திடம், "அண்ணா... நம் திட்டம் வெற்றி..." என்று வலதுகை கட்டை விரலை உயர்த்திக் காண்பிக்க...

அதைக் கண்டு பெரியவர் முகத்திலும் புன்னகை மலர்ந்தது...

********************

உடமைகளை அடுக்கி வைக்கும் எல்லா வேலைகளையும் செய்து முடித்த வலமங்கை குளித்து முடித்து வேறு உடை மாற்றிக் கொண்டு தான் கொண்டு வந்திருந்த உணவு பொருட்களில் இனிப்பு, காரங்களில் கொஞ்சம் தனக்கு எடுத்து வைத்துக் கொண்டு மீதியை பங்கிட்டவள் அவளது வீடு இருக்கும் தளத்தில் இருந்த மற்ற வீடுகளுக்கு எல்லாம் சென்று கொடுத்துவிட்டு வலிய சென்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு வந்தாள்...

அத்தனை வருடங்கள் அங்கிருந்த அழகை விட இன்று வந்த வலமங்கை அங்கே எல்லோருக்கும் நன்கு பரிச்சயமாகி இருந்தாள்... பெரியவர்களுக்கு மட்டுமில்லாது சிறியவர்களுக்கும் சேர்த்து...

அன்று மாலை அழகு வேலை முடிந்து வந்த போது வலமங்கை அங்கு இருந்த சிறார்களுடன் சேர்ந்து கிரிக்கெட் விளையாடி கொண்டிருந்தாள்... சிறுவர்களை ஏமாற்றி அவள் பேட் செய்ததைப் பார்த்தபடி வந்த அழகு அவள் அடித்த பந்தை தனது கைகளில் பிடித்தபடி,

"கேட்ச்..." என்று உற்சாகமாகக் கத்தினான்...

அவனைத் தொடர்ந்து சிறுவர்கள் அனைவரும் கோரசாக, "அக்கா அவுட்..." என்று கத்த...

வலமங்கைக்கு அப்படியொரு கோபம் வந்தது... பேட்டை தூக்கி எறிந்தவள் அவன் அருகே வேகமாய் வந்து,

"டேய் கருவாயா... உன்னை யார் ஃபால்லை பிடிக்கச் சொன்னது...?" என்று கோபமாய் மூக்கை விடைத்துக் கொண்டு சண்டைக்கு நின்றாள்...

அந்நேரம் ரேஷ்மாவும் வேலையை முடித்துக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தாள்... அவளும் வலமங்கையின் வார்த்தைகளைக் கேட்டுவிட்டாள்...

அதை உணர்ந்த அழகின் முகம் அவமானத்தில் சிறுத்துப் போனது... காலையில் இருந்த இதம் அவனிடத்தில் காணாமல் மறைந்து போனது...

"வாயை மூடுடி குள்ளச்சி... இதுக்கு மேல எதாவது பேசின கொன்னுருவேன் கொன்னு..." ஆள்காட்டி விரல் நீட்டி அவளை எச்சரித்தவன் கையிலிருந்த பந்தை வீசியெறிந்துவிட்டு கோபமாய் அங்கிருந்து சென்று விட்டான்...

"போடா போ..." என்று பதிலுக்கு அடங்காது கத்தியவள் தனது வீட்டிற்குச் சென்றுவிட்டாள்...

வெகுநாட்கள் கழித்துப் பார்க்காது பார்த்ததும் காலையில் பாசமழையைப் பொழிந்த இருவரும் அன்று மாலையே எலியும் பூனையுமாய், கீரியும் பாம்புமாய் எதிரெதிர் அணியில் சிலிர்த்துக் கொண்டு நின்றனர்...

எதிரிகள் என்றுமே எதிரிகள் தான் என்பதை மறுபடியும் நிரூபித்தனர் இருவரும்...!!!

தித்திக்கும்...!!!

வலமங்கை மீதிருந்த கோபத்தில் தனது அறைக்கு வந்த அழகு சுந்தரம் உடையைக் கூட மாற்றாமல் அப்படியே அமர்ந்திருந்தான்... வலமங்கை அவனைக் 'கருவாயா' என்று அழைத்தது கூட அவனுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை... அவள் எப்போதுமே அப்படித்தான்... அவளை மாற்ற முடியாது... ஆனால் அவள் ரேஷ்மா முன் அப்படிக் கூறியது தான் அவனுக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை...

அவனை நாயகனாக நினைத்திருக்கும் ஒரு பெண்ணின் முன் இந்த வலமங்கை அவனை ஜோக்கராக்கி விட்டதை எண்ணி எண்ணி அவனது மனம் குமுறியது...

'குள்ளச்சி வாயில் ஒண்ணு ஓங்கி போட்டால் தான் சரிப்பட்டு வருவாள்...' பற்களை நறநறவென்று கடித்தான்...

எத்தனை நேரம் அப்படியே அமர்ந்திருந்தானோ அவனது அலைப்பேசி ஒலித்ததில் நினைவு கலைந்தவன் அதை எடுத்துப் பார்த்தான்... ரேஷ்மா தான் அவனை அழைத்தாள்... அவளது அழைப்பை எடுக்க அவனுக்கு மிகுந்த அவமானமாக இருந்தது... யோசித்தபடி அப்படியே அமர்ந்திருந்தான்... அலைப்பேசி மீண்டும் மீண்டும் அழைக்கவும் மிகுந்த தயக்கத்துடன் அவளது அழைப்பை எடுத்தான்...

"அழகு..."

"சொல்லுங்க ரேஷூ..."

"மங்கை சாப்பிட வர மாட்டேங்கிறாள்... நான் எவ்வளவோ கூப்பிட்டுப் பார்த்துட்டேன்... பதிலே பேச மாட்டேங்கிறாள்..."

"சாப்பாடு வாங்கிட்டு வந்து அவள் மூக்குப் பக்கத்தில் கொண்டு போய்க் காட்டுங்க... வாசனையை மோப்பம் பிடிச்சு சாப்பிட உட்கார்ந்திருவாள்..."

வலமங்கை மீதிருந்த கோபத்தில் அவன் பட்டென்று பொரிந்து தள்ளினான்...

"அழகு..."

ரேஷ்மாவின் தயக்கத்தில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவன், "அவளை அப்படியே விடுங்க ரேஷூ..." என்றுரைத்துவிட்டு அழைப்பை துண்டித்து விட்டான்...

வெகுநேரம் சென்றும் எரிச்சல் போகாமல் அமர்ந்திருந்தவனை வயிறு அழைத்தது 'என்னையும் கொஞ்சம் கவனி...' என்று... எப்போதுமே வஞ்சனை செய்யாது நேரத்திற்கு உண்டு பழகியவன் இப்போது உண்ணாது இருக்கவும் வயிறு கண்ணீர் விட்டு கதறியது பசியில்...

அறை தோழனிடம் சொல்லிவிட்டு வெளியில் வந்தவனுக்கு உண்பதற்காக வெளியில் செல்ல பெரும் யோசனையாய்... அவனது மனதில் வலமங்கை வலம் வந்து அவனைப் பெரிதும் இம்சித்தாள்... அவளும் அவனைப் போல் தான் பசி தாங்க மாட்டாள்...

ஒரு முறை அவள் தனது தந்தையிடம் கோபித்துக் கொண்டு சாப்பிடாமல் இருந்துவிட்டாள்... எப்போதும் அவள் அப்படி இருப்பவள் இல்லை... அன்று ஏனோ பொன்னுரங்கம் அவளை அதிகமாகத் திட்டி விட்டார் போலும்... அதனால் அன்று முழுவதும் உண்ணாது சத்தியாகிரகம் செய்தாள்... பிறகு அவளின் கோபத்தை மலை இறக்குவதற்குள் எல்லோருக்கும் போதும் போதுமென்றாகி விட்டது...

அந்த நிகழ்வை நினைத்து பார்த்தவனுக்கு உள்ளுக்குள் பகீரென்றது... அய்யனார் போன்று மிரட்டும் உருவத்துடன் கையில் அருவாளோடு அவனது தந்தை வைத்தியநாதன் அவனை அச்சுறுத்திய தோற்றத்தில் அடுத்து அவன் நேரே சென்று நின்ற இடம் வலமங்கையின் இருப்பிடம்...

இதை எல்லாம் விட அவனது மனதினை செலுத்திய வேறு ஒரு உண்மையான காரணம் பொன்னுரங்கத்தின் பாசம்...

'அவ லூசு மாதிரி வாயடிப்பாள்... ஆனா மனசுக்குள்ள சூதுவாது ஒண்ணும் கிடையாது... ரொம்ப வெகுளியான பொண்ணு மருமகனே... அவளைப் பத்திரமா பார்த்துக்கோப்பா...' அவரது வார்த்தைகள் இப்போதும் அவனது காதில் ஒலித்தது... அதனால் தான் அவன் கடமை தவறாத கர்ம வீரன் போன்று அவளைத் தேடி வந்துவிட்டான்...

பெண்கள் மட்டும் தனித்து இருக்கும் வீட்டின் கதவை இந்நேரம் சென்று தட்டுவது தவறு என்று அவனது மனசாட்சி உறுத்திய போதும் வலமங்கையின் சோர்ந்த முகம் அந்த உறுத்தலை உடனே மறைய செய்தது...

கதவை திறந்தது ரேஷ்மா தான்... அவனைக் கண்டதும் அவளது முகம் மலர்ந்தது... ஆனால் அவனது விழிகளோ வலமங்கையைத் தேடி வீட்டினுள் அலைபாய்ந்தது...

"மங்கை எங்கே...?"

அவன் வலமங்கையைக் கேட்டதும் அவளுள் எதுவோ ஒன்று புஸ்சென்று அடங்கிப் போனது...

"உள்ளே தான் இருக்கிறாள்... இரு கூப்பிடுறேன்..."

"நான் வெறுமனே கூப்பிட்டேன்னு சொன்னால் வர மாட்டாள்... அதனால் அவள் வரலைன்னா நான் உள்ளே வந்து குண்டுக்கட்டா தூக்கிட்டு போயிருவேன்னு சொல்லுங்க..."

அவன் கூறிய விதத்தில் ரேஷ்மாவின் இதழ்களில் புன்னகை தவழ்ந்த போதும் அவளது மனதில் ஏதோ ஒரு காயம் ஏற்பட்டது...

"சரி..." என்றபடி உள்ளே சென்றாள் ரேஷ்மா...

அழகு வெளியில் சுவற்றில் சாய்ந்தபடி அலைப்பேசியைப் பார்த்துக் கொண்டு வலமங்கைக்காகக் காத்திருந்தான்...

சுமார் பத்து நிமிடங்கள் கழித்து அம்மணி அவனுக்குத் தரிசனம் கொடுத்தாள்... அதுவும் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு... அதை அவன் கண்டு கொள்ளவில்லை...

"சாப்பிட்டியா...?"

"இல்லை..." அவன் முகம் பார்க்காது எங்கோ பார்த்துக் கொண்டு அவள் கூற...

அதில் அவனுக்கும் கோபம் வந்தது... முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவன், "சரி... கிளம்பி வா... சாப்பிட போகலாம்..."

"நான் உன் கூட வரலை..."

"ப்ச்... படுத்தாதே மங்கை... இதுக்கு மேல் லேட்டாக்கினால் கடையை இழுத்து மூடி விடுவாங்க..."

அதில் அவள் சற்று மலை இறங்கினாள்... ஏனெனில் அவளுக்கும் பசியில் உயிர் போனது...

ஐந்து நிமிடங்களில் கிளம்பி வந்தவளை அழைத்துக் கொண்டு அவன் நடந்தான்... மூன்று ஆட்கள் இடையில் நடந்து வரும் அளவுக்கு இடைவெளி விட்டு நடந்தவளை கண்டு அவன் பல்லை கடித்தான்...

"தப்பு செஞ்சது நீ... எதுக்கு இத்தனை கோபம் உனக்கு...?"

"யார்டா தப்பு செஞ்சது...?" பதிலுக்கு எகிறினாள் அவள்...

"நீ தான்... நீ தானே என்னைப் பார்த்து கருவாயான்னு கூப்பிட்ட குள்ளச்சி..."

"ஏன் நீ மட்டும் என்னை வார்த்தைக்கு வார்த்தை குள்ளச்சி குள்ளச்சின்னு கூப்பிடுற தானே... அதுக்கு எல்லாம் நான் ஏதாவது சொல்றேனா... இல்லையில்ல... அப்புறம் நீ மட்டும் எதுக்குக் கத்துற...? ஐயாவுக்கு உண்மையைச் சொன்னால் கசக்குதாக்கும்..." என்று நொடித்துக் கொண்டவளை கண்டு

தன் தவறு உணர்ந்து அவன் உதட்டை கடித்தான்... ஆனாலும் அவளிடம் மன்னிப்பு கேட்கவில்லை...

"எப்போதுமே ஆரம்பித்து வைப்பது நீ தான்... நானில்லை..." என்று சிறுவயது நிகழ்வுகளை நினைவுப்படுத்தியவள்,

"அன்னைக்கு என் மார்க் பார்த்து நீ கேலியா சிரிச்சதால் தான் நான் மாமா கிட்ட உன்னைப் போட்டுக் கொடுத்தேன்... அதே மாதிரி நீ பிரியாணி கொண்டு போன அன்னைக்கு எங்கம்மாவுக்கு உடம்புக்கு முடியலை... அதனால நான் சாப்பாடு கொண்டு வரலைன்னு சொன்னப்போ கூட நீ எனக்குச் சாப்பாடு கொடுக்க மறுத்துட்ட... அத்தை உன் கிட்ட சொன்னாங்களா இல்லையா எனக்குக் கொடுக்கச் சொல்லி..."

அன்று தனக்கு வசதியாக அன்னை கூறியதை மறந்து அனைத்து பிரியாணியையும் தான் மட்டும் உண்ண வேண்டும் என்கிற பேராசையில் அவன் தான் அப்படியொரு சதிதிட்டம் தீட்டினான்... அதை அவன் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்... ஏனோ அந்த வயதில் அப்படியொரு விபரீத ஆசை... இப்போது அதை அவளிடத்தில் சொல்லவா முடியும்... வாயை இறுக மூடி கொண்டு வந்தான்...

"அன்னைக்கு நான் உன்னைக் கூப்பிட்டுட்டே இருந்தேன்... நீ என்னைப் பார்க்காம அந்த மனீஷா அக்கா கூடப் பேசிக்கிட்டு இருந்த... அதனால் தான் அன்னைக்கு உன்னைக் கருவாயான்னு கூப்பிட்டேன்..."

சிறுவயதில் நடந்த மோதல்களை ஒவ்வொன்றாய் வரிசைப்படுத்திக் கோபப்பட்டவளை கண்டு அவனுக்கு இப்போது கோபம் வரவில்லை... மாறாகச் சிரிப்பு வந்தது... அன்று அவனைக் கோபப்படுத்திய விசயங்கள் அனைத்தும் இன்று கேலியாய் அவனைப் பார்த்துச் சிரித்தது...

"இப்போ சொல்லு எல்லா விசயத்திலும் நீ ஆரம்பிச்சு வச்ச... நான் முடிச்சு வச்சேன்... அது தப்பா..." கைகளைக்

கட்டி கொண்டு கெத்தாகக் கேட்டவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்த போதும் அதை வெளிக்காட்டி கொள்ளாது,

"அதை விடு... இன்று ஏன் அப்படிக் கூப்பிட்ட...? அது தப்பு தானே..."

"டேய் நீயும் தான் என்னைக் குள்ளச்சின்னு கூப்பிட்ட... நான் உன்னை ஏதாவது சொன்னேன்னா...?" அவன் கண்ணைக் குத்தி விடுவது போல் கோபத்துடன் ஆள்காட்டி விரலை அவனது முகத்துக்கு நேரே நீட்டினாள் அவள்...

"ஆனாலும் நீ சொன்னது தப்பு..." ரேஷ்மா முன்னிலையில் அவள் சொன்னதை எப்படிச் சொல்வது என்று தெரியாது அவன் இதை மட்டும் சொன்னான்...

"ஐய்யே... இப்போ மட்டும் ஐயா அப்படியே இரத்த சிவப்பாகிட்டீங்களாக்கும்... இப்பவும் அதே கறுப்பு தான்..."

மீண்டும் அவனது நிறத்தை பழித்தவளை கண்டு அவன் முறைத்துப் பார்த்தான்...

"போடி... ஐயோ பாவமேன்னு சாப்பிட கூப்பிட்டு வந்ததுக்கு எனக்கு இதுவும் வேணும், இன்னமும் வேணும்..." என்று கோபமாய் உரைத்தவன் அவளைத் தனியே விட்டு விட்டு வேகமாய் முன்னால் நடந்தான்...

அவள் பயந்து கொண்டு அவன் பின்னே எல்லாம் ஓடி வரவில்லை... தனது அலைப்பேசியை எடுத்துக் காதில் வைத்து,

"ஹலோ மாமா..." என்று உரக்க கத்தி பேச...

அதைக் கேட்டு அழகு தான் அலறியடித்துக் கொண்டு ஓடி வந்தான் அவள் அருகில்...

"டீ... என்னடி பண்ற...? இந்த நேரத்துக்கு அந்தாளுக்கு ஃபோன் போட்டு ஏன் என் உயிரை வாங்கிற...?" என்றபடி அவளது அலைப்பேசியை அவன் பிடுங்கினான்...

"மாமா... அவன் உங்களைப் பார்த்து அந்தாளுன்னு சொல்றான்..." என்று அவள் கத்தினாள்...

அதில் பயந்து போனவனாய் அவன் அலைப்பேசியை அணைப்பதற்கு எடுத்தவன் ஏற்கெனவே அணைந்திருந்த அதன் திரையைக் கண்டதும் அவனுக்கு நிம்மதியாகி போனது... ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுத் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டவன்,

"லூசு... பிசாசே... ஏன்டி என்னைப் பயமுறுத்துற..." என்றவனது வார்த்தையில் இருந்த கோபம் முகத்தில் இல்லை... அவனது இதழ் கடையோரம் சிரிப்பில் துடித்தது...

"அந்தப் பயம் இருக்குல்ல... அப்புறம் எதுக்கு இந்த வெட்டி பந்தா...?" என்றவளுடன் மனதுக்குள் புன்னகைத்தபடி இணைந்து நடந்தான் அழகு...

நள்ளிரவு நேரம் என்பதால் பெரும்பாலான உணவு விடுதிகள் மூடியிருக்க அருகிலிருந்த கையேந்தி பவனில் சுட சுட கொத்து ரொட்டியை ஒரு பிடி பிடித்தனர் இருவரும்...

"சூப்பரா இருக்கு அழகு..." என்றபடி உணவை அள்ளி வாய்க்குள் வைத்து அடைத்த வலமங்கையைக் கண்டு அவன் அடக்க மாட்டாமல் சிரித்து விட்டான்...

"ஏய் குள்ளச்சி... பேசாம சாப்பிடு..."

"கருவாயா..." பதிலுக்குக் கேலியாய் அவனை அவள் அழைத்தாலும் மெதுவாகத் தான் அழைத்தாள்...

"இனி குள்ளச்சின்னு கூப்பிட மாட்டேன் போதுமா...?" சாப்பிட்டுக் கொண்டிருந்த தட்டை அருகில் இருந்த இருக்கையில் வைத்து விட்டு இரு கைகளை உயர்த்தி அவன் சரணடைந்தான் அவளிடத்தில்...

"அது..." என்று கெத்து காண்பித்தவள்,

"டேய் அழகு... அங்கே பாருடா... அந்தப் பொண்ணு உன்னையவே பார்த்துட்டு இருக்கு..." பரிமாறிக்

கொண்டிருந்த அந்த இளம்சிட்டை சுட்டிக்காட்டினாள் அவள்...

"யார் பார்த்தும் நோ யூஸ் மா... ஐயாவுக்கு ஆல்ரெடி ஆள் இருக்கு..." சட்டை காலரை தூக்கி விட்டுப் பந்தா காண்பித்தவனை அவள் குறுகுறுவென்று பார்த்தாள்...

"யாருடா அது...?" இரு புருவங்களையும் உயர்த்தி விழிகளில் குறும்பை தேக்கி கேட்டவளை கண்டு திகைத்தவனுக்கு அப்போது தான் புத்தியில் உறைத்தது தான் உளறிக் கொட்டியதை... உண்மையை அவளிடத்தில் சொல்லாது மறைத்தான் அவன்...

"அது சும்மா ஒரு பேச்சுக்கு சொன்னது..."

அவனது நொடி நேர தடுமாற்றத்தை அவளது துப்பறியும் மூளை வேகமாய்க் கண்டு கொண்டது... சில பல கணக்குகளை வேக வேகமாய்ப் போட்டது அவளது குட்டியூண்டு மூளை... கிடைத்த விடையோ சுவாரசியமாய்...

'நல்லா மாட்டினியாடா மவனே... உனக்கு இருக்கு கருவாயா...' மனதில் அவனிடத்தில் கறுவி கொண்டாள்...

"நம்பிட்டேன்..." என்றபடி வெளியில் சிரித்து வைத்தாள்...

சாப்பிட்டு முடித்ததும் அழகு அதற்கான பணத்தைக் கொடுக்க முயன்ற போது அதைத் தடுத்தவள்,

"நீ எப்பவும் என்னோட எதிரி தான்... எனக்காக ஒண்ணும் நீ பணம் கொடுக்கத் தேவையில்லை... உனக்கு மட்டும் நீ கொடுத்தால் போதும்..." கழுத்தை நொடித்துக் கொண்டு கூறியவள் தனது கைப்பையில் இருந்து தனக்கு மட்டுமான பணத்தை எடுத்து அவனிடத்தில் நீட்டினாள்...

"உன்னோடது கூடச் சேர்த்து மொத்தமாய்க் கொடுத்திரு..." என்றபடி...

'எல்லாம் ரெடியா தான் கொண்டு வந்திருக்கிறாள் குள்ளச்சி...' மனதில் அவளை வசைப்பாடியபடி பணத்தைக் கொடுத்துவிட்டு எழுந்தான் அவன்...

தெருவில் நடந்தவன் அவளைச் சிறிதும் கண்டு கொள்ளாது முன்னே செல்ல,

"அழகு... நில்லுடா..." என்று கத்தியபடி அவள் அவனைப் பின்தொடர்ந்து ஓடி வந்தாள்...

"எருமை மாடு... சாப்பிட்டது எல்லாம் ஜீரணமாகிரும் போலிருக்கே..." என்று அவனது தோளில் அடித்தவள் மூச்சு வாங்கியபடி அவனுடன் இணைந்து நடந்தாள்...

"நீ என்னோட எதிரி... அதனால் நீ என் கூட வராதே..." அவளைப் போல் சொல்லி காட்டியவன் தனது நடையை எட்டி போட்டான்...

"டேய் படுத்தாதேடா..."

நள்ளிரவு நேரத்தில் ஆளில்லாத சாலை அவளுக்கு மிகுந்த அச்சத்தை அளித்தது... போதாக்குறைக்குப் புது இடம் வேறு... இதே இது மதுரையாக இருந்திருந்தால் அவளது தோரணையே வேறு... இராணி மங்கம்மாவாய் துணிச்சலாய் வலம் வந்திருப்பாள்... அந்தக் கணம் அழகு எதிர்பட்டிருந்தால் கூட அவனைப் பார்த்து யாரென்று கேள்வி கேட்டிருப்பாள்... அப்படிப்பட்ட தைரியமான பெண் சென்னையைக் கண்டு பயந்து அவனுடன் ஒட்டி நடந்தாள்...

குடியிருப்பு வரும் வரை அவன் ஒன்றும் பேசவில்லை... ஆனாலும் நேரே தன்னுடைய குடியிருப்புக்குச் செல்லாமல் அவளது குடியிருப்புக்கு சென்றவன் மின்தூக்கியில் அவளுடன் இணைந்து வந்து அவளை அவளது வீட்டில் கொண்டு வந்து விட்ட பின்னரே கிளம்பினான்...

"அழகு... குட் நைட் டா..." என்றவளை கண்டு நின்று திரும்பி பார்த்தவன்,

"ஃபேட் நைட்... உன் கனவில் பேய், பிசாசு வந்து பயமுறுத்தட்டும்..." என்று எரிச்சலோடு அவன் சொல்ல...

அதைக் கேட்டுக் கலகலவெனச் சிரித்தவள், "அப்படி என்றால் நீ தான் என் கனவில் வரணும்..." என்று

கூறியவளை கண்டு முறைத்தவன்,

"பேசாம ஓடி போயிருடி..."

"ஹா... ஹா... நிச்சயமா நான் ஓடி போகத்தான் போகிறேன்... என்னோட பேவரைட் சித்தார்த் மல்ஹோத்ரா கூட..." கண்சிமிட்டி அவள் சிரித்தாள்...

அதைக் கேட்டு அவனுக்கு உள்ளுக்குள் பக்கென்றது... அவன் ஒன்றும் காதலுக்கு எதிரியில்லை... ஆனால் வலமங்கை சொல்லும் பெயர் வட இந்திய பெயர் போன்று இருந்ததால் அவனுக்குத் திகைப்பாய் இருந்தது...

"யாருடி அது...?"

இடுப்பில் இரு கைகளை வைத்து தலையைச் சரித்து அவனது திகைப்பை ஒரு நிமிடம் ரசித்துப் பார்த்தவள் பின்,

"ஹா... ஹா... இது கூடத் தெரியலை... நீயெல்லாம் எப்படிக் கம்யூட்டர் கம்பெனியில் வேலை பார்க்கிற... பேசாம காய்லான் கடைக்கு வேலைக்குப் போயிரு..."

"கொழுப்புடி உனக்கு..." பல்லை கடித்தான் அவன்...

"பின்னே சித்தார்த் பேமஸ் ஹிந்தி ஆக்டர்... இது கூட உனக்குத் தெரியலை பார்..." என்று கூறிவிட்டு அவள் விழுந்து விழுந்து சிரிக்கத் துவங்க...

"ஆமாம்... அவனைத் தெரியலைன்னா எனக்குச் சம்பளம் தர மாட்டாங்க பாரு... போடி இவளே..." என்றுவிட்டு அவன் மின்தூக்கி நோக்கி செல்ல...

"டேய்... குட்நைட்..." மீண்டும் கத்தியவளை கண்டு திரும்பி பார்க்காமல்,

"குட்நைட் டி குள்ளச்சி..." என்று சத்தமாக உரைத்தவன் சட்டென்று மின்தூக்கியினுள் நுழைந்து கொண்டான்...

"கருவாயா... என் கிட்ட மாட்டாமலா போயிருவ..." என்று முணுமுணுத்துக் கொண்டே அவள் வீட்டினுள் சென்றாள்...

மின்தூக்கியினுள் நின்றவனுக்குத் தன்னை மீறி சிரிப்பு வந்தது... புன்னகை முகமாய் நின்றிருந்தான் அவன்...

********************************

மறுநாள் காலை விடுமுறை என்பதால் சற்றுத் தாமதமாக எழுந்தான் அழகு... எழுந்தமர்ந்தவனுக்கு அப்போது தான் வலமங்கை நினைவு வந்தது... பல்லை கூட விளக்காது முதல் வேலையாக அவளுக்கு அழைத்தான்...

"என்ன சொல்லு...?" எடுத்தவுடன் மொட்டையாக ஆரம்பித்தவளை கண்டு அவன் பல்லை கடித்தான்...

ஒரு நாளில் அவனை எத்தனை தடவை தான் இப்படிப் பல்லை கடிக்க வைப்பாளோ ராட்சசி... அந்தக் கணக்கு இனி தானே தெரியும்...

"என்னடி பண்ணிக்கிட்டு இருக்க...?"

"அது எதுக்கு உனக்கு...?"

"நேரில் வந்தேன்னு வச்சுக்கோ... வாயிலேயே ஒண்ணு போடுவேன்..."

"க்கும் போட்டுட்டாலும்..." நொடித்துக் கொண்டாள் அவள்...

"சாப்பிட்டியா...?"

"இன்னும் இல்லை..."

"சரி கிளம்பி ரெடியாயிரு... நான் வந்து கூட்டிட்டு போறேன்..."

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்... அருண் கூட நான் வெளியில் போறேன்... அப்படியே வெளியில் சாப்பிட்டுக்கிறேன்..."

"ஹேய்... இரு... இரு... நீ எதுக்கு அவன் கூடப் போகிற... அதெல்லாம் வேண்டாம்..." உடனடியாக அழகு மறுத்தான்...

"நான் உன் கிட்ட பெர்மிசன் கேட்கலை மிஸ்டர். அழகு சுந்தரம்... ஜஸ்ட் இன்பர்மேசன் சொன்னேன்... அதுவும் நீ ஃபோன் போட்டதால்... இல்லை கிளி சொல்லாமல் கொள்ளாமல் பறந்து போயிருக்கும்..."

ஏற்ற இறக்கத்துடன் சொன்னவளை கண்டு மீண்டும் பல்லை கடித்தவன் ஒன்றும் பேசாது அழைப்பை துண்டித்து விட்டு அவசர அவசரமாகக் காக்கா குளியல் குளித்துவிட்டு தானும் வெளியில் கிளம்பினான்... அவன் தனது குடியிருப்பை விட்டு வெளியில் வந்த போது வலமங்கை கீழே வந்து அருணுக்காகக் காத்திருந்தாள்...

"மங்கை... நான் கூட்டிட்டு போறேன்... என் கூட வா..." அவன் அவளிடம் கேட்டுக் கொண்டிருக்கும் போதே அருண் இரு சக்கர வாகனத்தோடு வந்து சேர்ந்தான்...

"அண்ணா... எப்படி இருக்கீங்க...?"

"ரெண்டு பேரும் எங்கேடா கிளம்பிட்டீங்க...?" அருணுக்குப் பதில் சொல்லாது அவன் திருப்பிக் கேள்வி கேட்டான்...

"சென்னையைச் சுத்தி பார்க்கணும்ன்னு நாச்சி சொன்னாள்... அதான்..." அருண் தயக்கத்துடன் இழுத்தான்...

"ஓகோ... உனக்குச் சென்னையைப் பத்தி என்னடா தெரியும்...?"

"என்ன அண்ணா... இப்படிக் கேட்டுட்டீங்க...? நான் இங்கே அடிக்கடி வந்திருக்கேன்... எல்லா இடமும் எனக்கு அத்துப்படி..."

'அசிங்கப்பட்டான்டா அழகு...' என்று மனதுக்குள் நொந்து கொண்ட அழகு,

"சரி... நானும் உங்க கூட வர்றேன்..."

"வாங்கண்ணா... ஜாலியா இருக்கும்..." என்றுரைத்த அருணை கண்டு அழகிற்கு ஒரு மாதிரியாகப் போய்விட்டது...

"அவன் வேண்டாம் அருண்... எப்பப்பாரு என்னைய திட்டிக்கிட்டே இருப்பான்..." முறுக்கி கொண்டாள் வலமங்கை...

அதைக் கண்டு கொள்ளாது அழகு அருணிடம், "அருண்... அதோ அங்கே போய் உன் பைக்கை நிறுத்திட்டு வா... நான் கால் டாக்சி புக் பண்றேன்..."

வலமங்கையைக் கண்டு கொள்ளாது அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்தபடி அங்கிருந்து அகன்றான் அழகு... செய்வதறியாது நகத்தைக் கடித்துக் கொண்டு எரிச்சலுடன் நின்றிருந்தாள் வலமங்கை... எதிரியை உடன் வைத்துக் கொண்டு சந்தோசமாக ஊர் சுற்றி பார்க்க முடியுமா என்கிற பெரும் கவலை அவளுக்கு... அவளுக்குத் தான் கடிவாளம் போட்டால் பிடிக்காதே...

இருபது நிமிடத்தில் கார் வந்து நின்றது... அதன் கதவை திறந்துவிட்ட அழகு வலமங்கையிடம்,

"ஏறு..." என்க...

கோபத்தில் முணுமுணுத்துக் கொண்டே அவள் காரில் ஏறியமர்ந்தாள்... மறுபுறம் ஏற போன அருணை கண்டு,

"அருண் நீ முன்னாடி ஏறுடா..." என்று தடுத்தவள் தான் சற்று உள்ளே நகர்ந்து அமர்ந்து அழகை பார்த்து கழுத்தை நொடித்துக் கொண்டே,

"நீ இங்கே உட்கார்..." என்று போனால் போகிறது என்பது போல் கூறினாள்...

அதைக் கேட்டு சிரித்தபடி உள்ளே ஏறியமர்ந்தான் அழகு... அருணை அவள் பக்கத்தில் அமர விடாது தடுத்தது அவனுக்குச் சற்று நிறைவாக, நிம்மதியாக இருந்தது...

"எங்கே போகணும்...? மெரினா போகணுமா இல்லை வள்ளுவர் கோட்டம் போகணுமா...?" என்று கேட்ட அழகினை கண்டு அவள் வாய் விட்டு சிரித்து விட்டாள்...

"ஏன்டி சிரிக்கிற...? நீ தானே ஊர் சுத்தி பார்க்கணும்ன்னு சொன்ன...?" கோபமாய் அவளைப் பார்த்து கேட்டான்...

"நீ எந்தக் காலத்தில் இருக்கிற அழகு...? இது கம்யூட்டர் காலம்... ஏதாவது ஷாப்பிங் மால் போனால் போதும்... மொத்த சென்னையையும் சுற்றி பார்த்து விடலாம்..."

அதைக் கேட்டு அவன் தலையில் கை வைத்தான்...

"ஆக மொத்தம் நீ திங்கிறதுக்கும், வாங்குறதுக்கும் தான் சென்னை வந்திருக்கிறியா...?"

"ஹா.... ஹா... எஸ்... எஸ்... இப்பத்தான் என்னைச் சரியா புரிஞ்சிக்கிட்ட அழகு..."

"எல்லாம் சரி... அதுக்கு டப்பு இருக்கா...?" வலதுகை ஆள்காட்டி விரல், கட்டை விரலை சேர்த்து சுண்டி காண்பித்தவனை அற்பப்பதர் போல் பார்த்து வைத்தாள் வலமங்கை...

"யாரை பார்த்து என்ன கேள்வி கேட்டு விட்டாய் அழகு..." என்று வசனம் பேசியவள்,

"அப்பா, அம்மா, தாத்தா, மாமா, அத்தை எல்லோரும் ஆளுக்குப் பத்தாயிரம் ரூபாய் தந்திருக்காங்க..." என்றாள் அலட்டலாய்...

"அவ்வளவா...?" வாயை பிளந்தான் அழகு...

ஏனெனில் அவன் சென்னை வந்த போது எண்ணி எண்ணி கொஞ்சமாய்ப் பணம் கொடுத்து அனுப்பினார் அவனது தந்தை... மற்றவர்களையும் கொடுக்க விடாமல் சதி செய்து தடுத்து விட்டார்... அப்படியிருந்தும் மாமா பொன்னுரங்கம் அவன் வங்கி கணக்கு ஆரம்பித்ததும் அவனது செலவுகளுக்காக அதில் பணம் போட்டது தனிக் கதை... ஆனாலும் தந்தை தனக்கு மட்டும் சதி செய்தது அவனது இரத்தத்தைக் கொதிக்கச் செய்தது...

"எனக்கு யாரும் இப்படிக் கொடுக்கலையேடி..." ஆற்றாமையாக இருந்தது அவனுக்கு...

"அதுக்கு எல்லாம் அதிர்ஷ்டம் பண்ணியிருக்கணும்டா..."

"எல்லாம் காலக்கொடுமை..." என்று தலையில் அடித்துக் கொண்டான் அவன்...

"ஆமாம் அழகு காலக்கொடுமை தான்... உன் ஆச்சி கெழவி மட்டும் ஐயாயிரம் தான் கொடுத்துச்சு..." மூக்கை உறிஞ்சினாள் அவள்...

பாட்டி தன் மானத்தைக் காப்பாற்றியதில் அவனுக்கு அப்படியொரு சந்தோசமாக இருந்தது...

"இப்போ இந்த உலகத்திலேயே பணக்காரி நான் தான்... சந்தோசமான ஆளும் நான் தான்..." என்று கத்தி கூவியவளை கண்டு அவன் அவசரமாய் அவளது வாயை மூட போக...

"இருக்கட்டும் தம்பி... இருக்கிறதை வச்சு சந்தோசப்படுற அருமையான குணம் தங்கச்சிக்கு..." என்று அவளைச் சிலாகித்துப் பேசினார் காரின் ஓட்டுநர்...

அதில் அவனுக்கும் மாற்று கருத்து இல்லாததால் மௌனமாய் அதை ஆமோதித்தவன்,

"சரி எங்கே போகணும்ன்னு நீயே சொல்லு..."

அங்கிருந்த ஒரு பெரிய மாலின் பெயரை அவள் சொன்னதும் ஆச்சிரியமாய் அவளைப் பார்த்தவன்,

"இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்...?"

இத்தனை வருசமாய் இங்கிருந்து கொண்டு அவனுக்குக் கூட இது எல்லாம் தெரியாது...

"நெட் எதுக்கு இருக்கு...? நாங்க எல்லாம் மதுரையில் இருந்துக்கிட்டுச் சென்னையில் வாழ்றவங்க..." என்று அவள் கெத்து காட்டினாள்...

"அண்ணா... அவள் சொல்கிற மால்க்கு போங்க..." என்றுவிட்டு இருக்கையில் சாய்ந்த அழகின் முகத்தில்

நிறைவான ஒரு புன்னகை தோன்றியது...

ஷாப்பிங் மாலில் வலமங்கை வாங்கியதை விட உண்டது தான் அதிகம்... அங்கிருந்த ஒரு உணவு கடையை அவள் விடவில்லை... ஒன்றுவிடாது புதுப் புது உணவு வகைகளை வாங்கி ருசித்துப் பார்த்தாள்... அழகுவும், அருணும் அவளது வாயை வேடிக்கை பார்த்து கொண்டிருந்தனர்...

ஒருவழியாய் பெரிய மனது பண்ணி கிளம்பியவளை கும்பிடு போட்டு குண்டுக்கட்டாய் தூக்கி வீட்டில் கொண்டு வந்து பத்திரமாகச் சேர்த்தனர்...

மறுநாள் ஞாயிறு எப்போதும் போல் உற்சாகமாக விடிந்தது... இன்று திரைப்படம் பார்க்க போகும் உற்சாகத்தில் விசிலடித்தபடி கிளம்பி கொண்டிருந்தான் அழகு... அதுவும் அவனது மனம் கவர்ந்த ரேஷ்மாவுடன் செல்வது அவனுக்கு அத்தனை உல்லாசமாக இருந்தது...

உற்சாகமும், உல்லாசமுமாய்க் கிளம்பி வந்தவனின் மகிழ்ச்சி அனைத்தும் ரேஷ்மாவுடன் நின்றிருந்த வலமங்கையைக் கண்டதும் அப்படியே இறங்கி போனது...

'இவளை எப்படி மறந்தேன்...?' யோசித்துக் கொண்டே அவர்கள் இருவரின் அருகில் வந்தான்...

வலமங்கை அழகை கண்டதும் வாயை பொத்தி கொண்டு நமட்டுச் சிரிப்பு சிரித்தாள்...

"எதுக்குடி இப்படிச் சிரிக்கிற...?" அவளுக்கு மட்டும் கேட்கும்படி அடிக்குரலில் உறுமினான் அவன்...

ரேஷ்மா முன்னிலையில் அவனை இவள் இப்படி டேமேஜ் செய்தால் எப்படி...?

"ரேஷ்மிக்கா... அழகு இங்கிலீஷ் படமெல்லாம் பார்க்க மாட்டான்னு உங்களுக்குத் தெரியாதா...? அப்படியே அவன் இங்கிலீஷ் படம் பார்த்தாலும்..." என்று கூறி மீண்டும் சிரித்தவள்,

"அது எல்லாம் வேற லெவல்..." என்று கையைக் காற்றில் சுழற்றியபடி அவள் கூற...

"வாயை மூடு... இல்லை என் கிட்ட அடி வாங்க போறடி..." அழகு அவளை மிரட்ட... அதற்கு எல்லாம் அடங்குவாளா நம் வலமங்கை...

"அதுக்கு மொழி தேவையில்லை..." என்று அவனது குட்டை போட்டு உடைக்க...

அழகிற்கு எங்கே போய்த் தன் முகத்தை வைத்துக் கொள்வது என்று தெரியவில்லை... ரேஷ்மா முகம் பார்க்க சங்கடப்பட்டவனாய் வேறுபக்கம் பார்த்தான்...

'குள்ளச்சி... இப்படிக் காலை வாரி விட்டுட்டாளே... இவளை நம்பவே கூடாது...' மனதில் அவள் மீது கோபம் கொண்டான்...

"மங்கை பேசாம இரு..." ரேஷ்மா அவளை அதட்டியவள் மற்ற நண்பர்களைக் கிளம்பி வர சொல்லி அலைப்பேசியில் அழைத்தாள்...

ஒருவழியாய் எல்லோரும் வந்ததும் திரைப்படத்திற்குக் கிளம்பினர்... கூடவே கிளம்பிய வலமங்கையைத் தடுத்து நிறுத்தினான் அழகு...

"நீ எதுக்கு எங்க கூட வர்ற...? பேசாம வீட்டிலிரு..."

"ஏன் நான் வந்தா படம் போட மாட்டேன்னு சொல்றாங்களா...?" அவள் எகிற துவங்க...

"உனக்கு யாருடி டிக்கெட் எடுக்கிறது...?"

"நான் எடுத்துட்டேன் அழகு..." ரேஷ்மா அவனைச் சமாதானப்படுத்தி வலமங்கையை உடன் அழைத்துச் சென்றாள்...

திரையரங்கிற்குள் சென்று அமர்ந்த போது தான் ரேஷ்மா வலமங்கையை உடன் அழைத்து வந்தது எவ்வளவு தவறு என்பதை வெகுதாமதமாக உணர்ந்தாள்... ஏனெனில் அழகு

மற்றும் ரேஷ்மா இருவருக்கும் இடையில் இருந்த இருக்கையில் வலமங்கை இயல்பு போல் சென்று அமர்ந்து கொண்டாள்... அதைக் கண்டு ரேஷ்மா செய்வதறியாது முழித்தாள்... அழகோ கோபத்தில் கடுப்புடன் அமர்ந்திருந்தான்...

திரைப்படம் ஆரம்பித்ததும் வேறுவழியின்றி அழகின் கவனம் அதில் சென்றது... அந்நேரம் அவனது காதோரம் குனிந்த வலமங்கை,

"கல்யாணத்துக்கு முன்னாடி இப்படி எல்லாம் சேர்ந்து உட்காருவது ரொம்ப ரொம்பத் தப்பு கருவாயா..."

அவளது வார்த்தைகளில் அதிர்ந்து போய் அவன் அவளைத் திரும்பி பார்த்தான்... அவள் கண்சிமிட்டி குறும்பு புன்னகை புரிந்தது அந்த அரை வெளிச்சத்திலும் அவனுக்கு நன்றாகத் தெரிந்தது...

"மங்கை..." சற்று பயத்துடன் ஒலித்தது அவனது குரல்...

"காதலிக்கிறது தப்புன்னு யார்டா சொன்னது... யூ கேரி ஆன் கருவாயா..." என்று அவள் வலதுகை கட்டை விரலை உயர்த்தி அவனது காதலுக்குப் பச்சை கொடி காண்பித்தாள்...

இப்போது அவள் கூப்பிட்ட 'கருவாயா' என்ற வார்த்தை அவனுக்குத் தித்திப்பாய் இனித்தது...!!!

தித்திக்கும்...!!!

அழகு சுந்தரத்தின் முகம் மலர்ந்ததைக் கண்டு தனக்குள் புன்னகைத்துக் கொண்ட வலமங்கை, "அழகு... கல்யாணத்துக்கு முன்னாடி இப்படிச் சேர்ந்து உட்காருவது தப்பு தான்... ஆனால் இதுக்குச் சில பல பரிகாரங்கள் செய்தால் இந்தத் தோஷம் நிவர்த்திச் செய்யப்படும்... நீ அதற்குத் தயாரா...?" என்று அவனுக்கு ஆசை காட்டினாள்...

"என்ன பரிகாரம் செய்யணும்டி...?" கண்ணில் ஆர்வமும், ஆசையும் மின்ன கேட்டவனை ஏமாற்றாது,

"நான் லிஸ்ட் போடுற ஸ்நாக்ஸ் எல்லாம் வாங்கிட்டு வந்து கொடுத்தேன்னா தோஷம் நிவர்த்தியாகிவிடும்..." என்று கூறியவள் தின்பண்டங்களை நீளமாகப் பட்டியல் போட ஆரம்பித்தாள்...

"அடிப்பாவி..." என்று அவன் வாயில் அடித்துக் கொண்டாலும் அவள் கேட்டதை வாங்கிக் கொடுக்க மறுக்கவில்லை...

படம் பார்ப்பதை விட அவளுக்குப் பிடித்ததை வாங்கிக் கொடுக்க நினைத்தான் அவன்... ஆனாலும் அவனது மனதின் ஓரம் ரேஷ்மாவுடன் அமரும் ஆசையும் மெல்ல எட்டிப்பார்த்தது...

பாப்கார்ன், சமோசா, சிப்ஸ், பிஸ்கெட்ஸ், சாக்லெட்ஸ் என வகை வகையாக அவள் கேட்காததை எல்லாம் சேர்த்து வாங்கிய அழகு அதைக் கொண்டு வந்து அவள் கையில் கொடுத்தான்... வலமங்கையும் அதை ஆவலுடன் வாங்கிக் கொண்டவள்,

"ஹா... ஹா... அழகு... சூப்பர் மச்சி..." என்று அவனைச் சிலாகித்துப் பாராட்டினாள்...

"குள்ளச்சி... இனியும் நந்தி மாதிரி குறுக்கே உட்காராம கொஞ்சம் நகரு..." கேலி குரலில் உரைத்தவனை முறைத்துப் பார்த்தாலும் அவன் வாங்கிக் கொடுத்த

தின்பண்டங்களுக்காக அவனை மன்னித்து எழுந்தாள் அவள்...

"ரேஷ்மிக்கா... நீங்க இந்தப் பக்கம் வாங்க... எனக்கு ஸ்க்ரீன் தெரிய மாட்டேங்குது..." என்று ரேஷ்மாவை அழகின் அருகில் அமர சொன்னவள் தான் சுவர் பக்கமாய்ச் சென்று அமர்ந்து கொண்டாள்...

முதலில் திகைத்த ரேஷ்மா பின்னர் முகம் கொள்ளா புன்னகையுடன் அழகின் அருகில் வந்தமர்ந்தாள்... ரேஷ்மா தன்னருகில் வந்தமர்ந்ததும் ஜில்லென்று பனிச்சாரலாய் ஏதோ ஒன்று மனதை வருடி சென்றது அழகிற்கு... அதையும் மீறி சிறு தயக்கம் அவனுள்...

"ஹி... ஹி..." என்று அசடு வழிய ரேஷ்மாவை பார்த்து அவன் சிரித்து வைத்தான்...

"அழகு... நான் சொன்னது போல் வசமா என் கிட்ட மாட்டிக்கிட்ட பார்த்தியா...?" என்று குறும்பாய் கண்ணைச் சிமிட்டிய ரேஷ்மா கைப்பிடி மீதிருந்த அவனது கரத்தோடு தனது கரத்தை கோர்த்து கொண்டாள்...

அவள் தனது கையைப் பிடித்துக் கொண்டது அவனுக்குத் தேவலோகத்தில் இருப்பது போன்றதொரு உணர்வில் சுகமாய் மிதந்து கொண்டிருந்தான்...

"என்ன அழகு... ஒண்ணுமே பேச மாட்டேங்கிற...?" ரேஷ்மா அவனிடம் கிசுகிசுக்க...

"என்ன பேசணும்...?" வார்த்தைகள் திக்கி திணறியது அவனுக்கு...

'ச்சே... அந்தக் குள்ளச்சி கிட்ட மட்டும் எட்டூருக்கு வாய் கிழிய பேசுவியேடா... உன் ரேஷூ கூடப் பேச உனக்கு ஏன் வார்த்தை வர மாட்டேங்குதே...' தன்னைத் தானே காறி துப்பிக் கொண்ட போதும் அவனுக்கு ரேஷ்மாவிடத்தில் பேச வார்த்தைக்குப் பஞ்சமாகி போனது...

"பேசுவதற்கா விசயங்கள் இல்லை...? அது எவ்வளவோ இருக்கு..." என்று கூறியபடி அவனைப் பார்த்தாள் ரேஷ்மா...

"சரி... நீ பேசு... நான் கேட்கிறேன்..." என்று பெருந்தன்மையாக அவன் விட்டுக் கொடுத்தான்...

ரேஷ்மா மெல்லிய குரலில் பேச துவங்கினாள்... முதலில் ஆர்வமாய்க் கேட்டு கொண்டிருந்தவனுக்குப் பிறகு போகப் போகச் சலிப்பு தட்டியதோ என்னவோ, அவனது கண்கள் அவனையும் அறியாது ரேஷ்மாவை தாண்டி வலமங்கையை நோக்கியது...

அவள் சமோசாவை வாய் நிறைய அடைத்துக் கொண்டு திரைப்படத்தில் ஆர்வமாய் ஆழ்ந்திருந்தாள்... அவனைச் சிறிதும் கண்டு கொள்ளவில்லை... அதைக் கண்டு முதலில் அவனுக்கு ஆத்திரம் வந்தது... பிறகு நேரம் நேரம் செல்ல மனதில் ஒருவித தவிப்பு, குற்றவுணர்வு எழுந்தது அவனுள்...

தன்னை நம்பி வந்திருக்கும் அவளை இப்படித் தனித்து அமர வைத்தது அவனுக்குத் தவிப்பாக இருந்த அதே சமயம் குற்றவுணர்வையும் சேர்த்து அதிகரித்தது... அதன் பின் அவனால் நிம்மதியாய் ரேஷ்மாவுடனும் உரையாட முடியவில்லை... திரைப்படத்தையும் மனம் ஒன்றி பார்க்க முடியவில்லை...

'சரியான தின்னிப் பண்டாரம்... எப்படித் திங்குது பாரு...? கொஞ்சமாவது அடுத்தவங்களுக்குக் கொடுத்து சாப்பிடுவோம்ன்னு எண்ணம் இருக்கா...' குற்றவுணர்வில் அவள் மீது அவனுக்குக் கோபம் வந்தது...

இடைவேளை வரை பொறுத்தவனால் அதற்கு மேல் பொறுக்க முடியாது போனது... இடைவேளை விட்டதும் வலமங்கையைப் பார்த்து,

"மங்கை... என் கூடக் கொஞ்சம் வா..." என்றான் கடுமையுடன்...

அவன் நல்லவிதமாகக் கூப்பிட்டாலே அவள் வர மாட்டாள்... இப்படிக் கடுமையுடன் கூப்பிட்டால் வந்து விடுவாளா என்ன...? இதில் வேறு அவளது கைகளில் தின்பண்டங்கள் சிலது மிச்சமிருந்தது...

"நான் வரலை அழகு..." என்றவள் சாக்லெட்டை எடுத்து வாயில் போட்டு ருசிக்க ஆரம்பித்தாள்...

"நீ வந்தேன்னா கட்லெட் வாங்கித் தருவேன்... இந்தத் தியேட்டர்ல கட்லெட் ரொம்பப் பேமஸ் தெரியுமா..." என்று ஆசை காட்டினான் அவன்...

"ஐய்... அப்போ சரி, நான் வர்றேன்..." என்று அவள் ஆசை கொண்டு வேகமாய் எழ, உடன் ரேஷ்மாவும் எழுந்தாள்...

ரேஷ்மாவை தவிர்க்க முடியாத காரணத்தால் உடன் அழைத்துச் சென்ற அழகு உண்மையில் கட்லெட் வாங்கிக் கொடுத்து வலமங்கையைக் குளிர்வித்தான்... அதன் பின்னரே அவனது மனம் சற்று ஆறியது...

"ரேஷ்மிக்கா... கட்லெட்டில் பட்டாணியைக் குறைச்சிட்டு இன்னும் கொஞ்சம் பீட்ரூட்டை துருவி போட்டு இருக்கலாம்... இல்லையாக்கா..."

நொட்டை சொல்லிக் கொண்டே வலமங்கை கட்லெட்டை விடாது உள்ளே தள்ளினாள்... ரேஷ்மா ஒன்றும் பேசவில்லை... அவளும் அழகுவும் இடைவேளையின் போது தனித்து வெளியில் வரலாம் என்று எண்ணி இருந்தாள்... ஆனால் அவன் வலமங்கையை அழைத்துக் கொண்டு வந்தது அவளுக்குச் சற்றுச் சுணக்கமாக இருந்தது... அதனால் அமைதியாக நின்றிருந்தாள்...

"இந்த வாய் மட்டும் இல்லைன்னா உன்னை நாய் தூக்கிட்டு போயிரும்டி..." அழகு வலமங்கையின் தலையில் வலிக்காது மெல்லமாய்க் கொட்டினான்...

அவனது செயல் கண்டு வலமங்கையின் மனம் கொதித்த போதும் அமைதியாக இருந்தாள்... ஏனெனில் கையில் இன்னமும் கட்லெட் மிச்சமிருந்தது... அவசரமில்லாது

நிதானமாய் அவள் உண்டு கொண்டிருந்தாள்... அவளது அந்த அமைதியை அழகு அதிசயமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான்...

உண்டு முடித்து டிஷ்யூ பேப்பரில் கையைத் துடைத்தவள் அடுத்த நொடி அழகின் தலையின் ஓங்கி கொட்டு வைத்தவள்,

"என்னையவாவது நாய் தூக்கிட்டு போகும்... ஆனால் உன்னைச் சொறி நாய் கூடத் தூக்கிட்டு போகாதுடா..." என்று பழிப்பு காட்டியவள் அடுத்த நொடி திரையரங்கிற்குள் ஓடி ஒளிந்தாள்...

"அடியேய் மங்கை..." என்று பல்லை கடித்த அழகு ரேஷ்மாவை மறந்தவனாய் வலமங்கையைத் துரத்தி கொண்டு ஓடினான்...

தனித்துப் பரிதாபமாய் நின்றிருந்த ரேஷ்மா தனது மற்ற தோழர்களுடன் இணைந்து உள்ளே வந்தாள்...

அதற்குள் வலமங்கை அருகிலிருந்த இருக்கையில் அமர்ந்திருந்த அழகு அவளிடம் வம்பிழுத்துக் கொண்டிருக்க அவனுக்கு அடுத்து இருந்த இருக்கையில் அமர்ந்தாள் ரேஷ்மா...

ரேஷ்மா அழகை பார்த்துக் கொண்டிருக்க அவனோ வலமங்கையின் தலையில் கொட்டுவதில் குறியாக இருந்தான்... வலமங்கையோ சிரித்தபடி அவனது கைகளைப் பிடித்துத் தடுத்து கொண்டிருந்தாள்...

இவர்களது சண்டையைக் கண்டு பின்னாடி அமர்ந்திருந்தவர் அழகுவிடம், "தம்பி... கொஞ்சம் அமைதியா உட்காருப்பா... படம் தெரிய மாட்டேங்குது..." என்க...

அதில் சற்று அடங்கிப் போய் அமர்ந்தான் அழகு... அதைக் கண்டு வலமங்கை வாயை பொத்தி கொண்டு சிரித்தாள்... அவன் அவளை முறைத்து பார்த்துக் கொண்டிருக்க, வலமங்கையோ அவனை நோக்கி பழிப்பு காட்டியவள்

திரையில் கண்களைப் பதித்தாள்... அதன் பின் அவள் அழகை மறந்து போய்விட்டாள்...

அவளது செயல் கண்டு தனக்குள் சிரித்துக் கொண்ட அழகு தானும் படத்தில் லயித்தான்... இப்போது அவனது மனதில் தவிப்பு, குற்றவுணர்வு சிறிதும் இல்லை... அதே சமயம் ரேஷ்மாவிடம் பேச வேண்டும் என்கிற ஆவலும் அவனுள் தலை தூக்கவில்லை...

படம் முடிந்து வெளிவந்த பின்னரும் அழகு வலமங்கை உடனே இருந்தான்... அதனால் ரேஷ்மா அவனிடம் தனித்து இருக்க முடியவில்லை... அவள் மனச்சுணக்கத்துடன் மற்ற தோழர்களுடன் இணைந்து கொண்டாள்...

அங்கிருந்து உணவு விடுதிக்கு சென்ற போதும் அழகு தன்னுடன் வலமங்கையை அமர்த்திக் கொண்டான்... அவளோ அவனைக் கண்டு கொள்ளாது ரேஷ்மாவுடன் சென்று அமர துடித்தாள்...

"பேசாம அடங்கி இங்கே உட்காரு... உனக்கு ஐஸ்க்ரீம் வாங்கித் தர்றேன்..." பல்லை கடித்துக் கொண்டு தாழ்ந்த குரலில் அழகு கூற...

"ம்... அப்படின்னா எனக்குப் பேமிலி பேக் தான் வேணும்..."

"அவ்வளவு வாங்கி என்ன பண்ண போற...? வீட்டில் ப்ரிஜ் கூட இல்லையே..." என்றவனை அற்பப்பதர் போல் பார்த்து வைத்தாள் அவள்...

"நான் இப்போ சாப்பிடறதுக்குக் கேட்டேன்..."

"கொடுமைப்படுத்துறடி குள்ளச்சி..." என்று தலையில் கை வைத்தாலும் அவள் கேட்டது எல்லாம் வாங்கிக் கொடுத்து அவளைக் குளிர்வித்து அவனும் மனதிற்குள் குளிர்ந்து போனான்...

அன்று முழுவதும் அவளைத் தன்னுடன் வைத்துப் பத்திரமாகப் பார்த்துக் கொண்டான்... அது ஏனென்று அவனுக்குத் தெரியவில்லை... ஆனால் அவனது மனதிற்கு

இதமாக, நிம்மதியாக இருந்தது... வீட்டில் கொண்டு வந்து அவளை விடும் வரை அவனது அந்த இதம் குறையவில்லை...

"நாளைக்கு ரெடியாயிரு... நான் உன்னைக் கம்பெனிக்கு கூட்டிட்டு போறேன்..."

"நாங்களே போய்க்குவோம்... நீ ஒண்ணும் என்னைக் கூட்டிட்டு போக வேண்டாம்..." என்று அவள் நொடித்துக் கொள்ள...

"ஏன்டி...?"

"ஏன்னா நீ என்னோட எதிரிடா..." என்றாள் அசால்ட்டாய்...

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி என் காசுல திங்கிறப்போ இது உனக்கு ஞாபகம் வரலையோ..." கடுப்புடன் கேட்டவனை எடுப்பாய் பார்த்தவள்,

"அது தெய்வத்துக்குத் தட்சணை வச்சது... வேணும்னா சொல்லு நீ வாங்கிக் கொடுத்ததை எல்லாம் இப்பவே வாந்தி எடுத்து உன் கையில் கொடுத்துடறேன்..." என்றவள் வாந்தி எடுப்பது சைகை செய்ய...

"ஐயோ வேண்டாம் தாயி..." என்று அலறியபடி அங்கிருந்து தலை தெறிக்க ஓடினான் அழகு...

"அந்தப் பயம் இருக்கணும்..." என்று சிரித்தபடி தனது அறைக்குச் சென்றாள் வலமங்கை...

அங்கு ரேஷ்மா அவளுக்காகக் காத்திருந்தாள்...

"அக்கா... ரொம்ப டயர்டா இருக்குக்கா... தூக்கம் வருது... குட்நைட்..." என்றபடி அவள் படுக்கையில் விழுந்தாள்...

"மங்கை... உனக்கு அழகுவை பிடிக்குமா...?"

"ச்சேச்சே... அந்தக் கருவாயனை எனக்குப் பிடிக்கவே பிடிக்காதுக்கா..." தூக்க கலக்கத்திலும் நல்ல தெளிவாக உரைத்தாள் அவள்...

"அப்போ அழகுக்கு உன்னை ரொம்பப் பிடிக்குமா...?"

"ஐயோ அக்கா... எங்க ரெண்டு பேருக்குமே ஒருத்தரை ஒருத்தர் பிடிக்காது... நாங்க ரெண்டு பேருமே எதிரிங்க..." என்று கடுப்புடன் கூறியவள் அடுத்த நொடி தூங்கி போனாள்...

ஆனால் ரேஷ்மாவால் அப்படித் தூங்க முடியவில்லை... ஏதேதோ யோசனைகள் அவளது மனதிற்குள்...

**************************************

மறுநாள் பொழுது இனிதாக விடிந்தது... வலமங்கைக்காக அலாரம் வைத்து எழுந்த அழகு அவசரமாக அலுவலகத்திற்குக் கிளம்பினான்... அவளைத் தேடி அவன் சென்ற போது அவள் அவனை முந்தி கொண்டு கிளம்பி சென்றிருந்தாள்...

"குள்ளச்சி... சொல் பேச்சுக் கேட்கிறது இல்லை..." பல்லை கடித்துக் கொண்டு தனது இரு சக்கர வாகனத்தைக் கோபத்துடன் ஓங்கி உதைத்தான்...

குடியிருப்பை விட்டு வெளியில் வந்தவன் அங்கிருந்த பேருந்து நிலையத்தில் நின்றிருந்த வலமங்கையைக் கண்டதும் அவனது கோபம் உச்சத்துக்குச் சென்றது... அவனுக்கு வந்த கோபத்தில் அவளை அப்படியே விட்டு விட்டுச் சென்றிருக்க வேண்டும்... ஆனாலும் அதற்கு மனம் இடம் கொடாது நேரே அவள் அருகில் சென்று வண்டியை நிறுத்தினான்...

"நான் வந்து கூட்டிட்டு போறேன்னு சொன்னேன் தானே... அதுக்குள்ள என்னடி அவசரம்...?" பல்லை கடித்தான் அவன்...

"என்னை எதுல கூட்டிட்டு போவ...?" என்று கேட்டவள் அவனை ஒருமாதிரியாக மேலிருந்து கீழாகப் பார்த்து வைத்தாள்...

"கோபத்தைக் கிளப்பாதேடி குள்ளச்சி... என் பைக்கில் தான்..."

அவன் சொன்னதும் ஆச்சிரியத்தில் வாய் பிளந்தவளாய், "'அதில் யாரையும் ஏத்த மாட்டேன்... என் பொண்டாட்டியை மட்டும் தான் ஏத்திட்டு போவேன்னு' வீரசபதம் எல்லாம் போட்டியேடா..."

"அது வெளியாளுங்களுக்கு... உனக்கு இல்லை... வாயடிக்காம வண்டியில் ஏறு... நான் என்னமோ உன் கிட்ட வம்பிழுத்த மாதிரி எல்லோரும் என்னை ஒருமாதிரியா முறைச்சு பார்க்கிறாங்க... லேட்டாக்காம ஏறு குரங்கே..." கடுப்பாய் கூறியவனைக் கண்டு,

"ம்ஹூம்... அதெல்லாம் நான் மாட்டேன்ப்பா... நான் ரேஷ்மிக்கா கூடப் பஸ்ல போகப் போறேன்..." என்று அலட்டலாய் சொன்னவள் பேருந்து வரும் வழி மீது விழி வைத்து காத்திருந்தாள்...

அழகின் கெட்ட நேரம் அந்நேரம் பார்த்து ஒரு பேருந்து வந்து நின்றது... நிறைமாத கர்ப்பிணி பெண் போல் நிரம்பி வழிந்த பேருந்தை கண்டு விழி பிதுங்கி நின்றாள் வலமங்கை... அவள் பேருந்தில் பயணம் செய்யாதவள் அல்ல... கூட்டம் இல்லாத பேருந்தில் சாவகாசமாக ஏறியமர்ந்து நிம்மதியாய் பயணம் செய்பவள்... அப்படிப்பட்டவளை போய் இது மாதிரி கும்பலில் ஏற சொன்னால், செய்வாளா...?

"வா மங்கை..." என்றபடி ரேஷ்மா முன்னால் விரைந்து செல்ல... இவளோ தயக்கத்துடன் தேங்கி நிற்க...

அதை நமட்டுச் சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் அழகு சுந்தரம்...

ரேஷ்மா கூட்டத்தில் முண்டியடித்துக் கொண்டு பேருந்தினுள் ஏறிவிட்டாள்... ஆனால் வலமங்கை ஆடாது அசையாது இருந்த இடத்தில் அப்படியே சிலையாய் நின்றிருந்தாள்... பேருந்து கிளம்பியதும் தான் ரேஷ்மா

அவளைக் கவனித்தாள்... இருந்த கூட்டத்தில் அவளாலும் உடனே கீழே இறங்கி செல்ல முடியவில்லை...

அதனால் அழகு வலமங்கையைப் பார்த்து கொள்வான் என்று எண்ணியவளாய் அவள் தன் பயணத்தைத் தொடர்ந்தாள்...

வலமங்கைக்கு வேறுவழியில்லை... அவளுக்கு இருந்த ஒரே வழி அழகு மட்டும்... அவள் தன்னிடம் தான் வர வேண்டும் என்ற நம்பிக்கையில் அழகு கெத்தாக அவள் புறம் திரும்பாது வேறு பக்கம் பார்த்துக் கொண்டிருந்தான்... அவனது கைகளில் வாகனம் உறுமி கொண்டிருந்தது...

"அழகு... நான் உன் கூட வரவா...?"

"ம்ஹூம்... இது என் மனைவிக்குச் சொந்தமான இடம்... நீ உட்கார கூடாது..."

"அழகு... கடுப்பை கிளப்பாதேடா... நீ இப்படிப் பேசினேன்னா... உன்னோட கல்யாணத்துக்கு அப்புறம் நீ முதல் தடவையா உன் பொண்டாட்டியை பைக்ல கூட்டிட்டு போகிறப்போ சீட்டில் ஆணியைக் குத்தி வச்சிருவேன்... ஜாக்கிரதை..."

"அப்போ நான் கார் வாங்கிருவேனே..." என்று பெருமை பீற்றிக் கொண்டான் அவன்...

"கார்லேயும் சீட் இருக்கும்டா கருவாயா..." என்று கறுவியவளை கண்டு உள்ளுக்குள் பயந்து போனான் அழகு...

இதற்கு முன் அவளிடம் தான் அடைந்த 'டேமேஜ்'களை ஒன்றுவிடாது எண்ணிப் பார்த்தவன் சட்டென்று வாயை மூடி கொண்டான்...

"உட்கார்ந்து தொலை..." கடுப்புடன் கூறியவனை அலட்சியம் செய்தவளாய் அவள் வண்டியின் பின்னால் அமர்ந்தாள்...

அவள் அமர்ந்ததும் வண்டியை கிளப்பியவன் அதைச் சீராக ஓட்டியபடி, "இது மதுரை இல்லை..." என்று ஆரம்பிக்க...

"தெரியும்... இது சென்னைன்னு..."

"வாயை மூடிட்டு வரணும்... இல்லை பாதியில் இறக்கி விட்டுட்டு போயிட்டே இருப்பேன்..."

"சரி... சரி..." சட்டென்று அமைதியானது போல் அவள் காட்டி கொண்டாலும் மனம் கொதித்துக் கொண்டிருந்தது...

'என் கிட்ட நீ மாட்டாமலா போவ கருவாயா... அப்போ இருக்குடா உனக்கு...' கறுவியபடி வந்தாள் அவள்...

"வேலை பார்க்கிற இடத்தில் ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு விதமா இருப்பாங்க... நல்லவங்களும் இருப்பாங்க... கெட்டவங்களும் இருப்பாங்க... நல்லவனை, கெட்டவனை எல்லாம் ஈசியா கண்டுபிடிச்சிடலாம்... ஆனால் நல்லவன் மாதிரி வேசம் போடுற கெட்டவனைக் கண்டுபிடிக்கிறது தான் ரொம்பக் கஷ்டம்... நீ தான் அவங்களை இனம் கண்டு ஜாக்கிரதையா பழகணும்..."

அழகு கூறிய அறிவுரை எதையும் அவள் காதில் வாங்கிக் கொள்ளவில்லை... அவள் தான் அவன் மீது கடுப்பாக இருக்கிறாளே...

இருவரும் ஜோடியாகச் சென்று அலுவலகத்தின் முன் இறங்க, அப்போது தான் உள்ளே நுழைந்த ரேஷ்மா அதைக் கண்டு உள்ளம் துணுக்குற்றாள்... ஏனெனில் அழகு இதுவரை அவனது வண்டியில் அவளை ஏற்றிச் சென்றது இல்லை...

"ரேஷ்மிக்கா..." வலமங்கை உற்சாகமாகக் கையசைத்தாள் அவளைக் கண்டு...

வலமங்கையின் உற்சாகம் அவளையும் தொற்றிக் கொள்ளப் புன்னகையுடன் அவர்களை நோக்கி சென்றாள் அவள்...

அதன் பிறகு அலுவலகச் சம்பிரதாயங்கள் எல்லாம் முடிந்து வலமங்கையும், அருணும் ஒரே அணியில் பணியில் அமர்த்தப்பட்டனர்... அவர்களது அணிக்கு தலைவனாக இருந்தவன் அஜய்... பார்ப்பதற்கு வட இந்திய நடிகன் போன்று அம்சமாய் மிகவும் அழகாக இருந்தான்... பார்த்த முதல் பார்வையிலேயே வலமங்கையின் மனதினை மிகவும் பாதித்து விட்டான்...

"என்னோட ஹீரோ சித்தார்த் மல்ஹோத்ராவை விட இவன் செம அழகா இருக்கானே அழகு... ஐயோ நான் என்ன பண்ணுவேன்... ஏது பண்ணுவேன்...?" என்று மதிய உணவு இடைவெளியின் போது புலம்பியவளை கண்டு அழகு எரிச்சலுற்றான்...

"அவன் அழகாயிருந்தா நீ என்னடி பண்ணணும்...?"

"அட லூசு அழகு... எனக்குக் கையும் ஓடலை, காலும் ஓடலைன்னு சொன்னேன்டா..." என்று அலுத்து கொண்டவள் அவன் காதருகில் குனிந்து,

"அழகு... ப்ளீஸ் டா... அவனை ப்ராக்கெட் போடுறது எப்படின்னு எனக்குக் கொஞ்சம் சொல்லிக் கொடேன்...?"

"எதுக்குடி...?"

"நானும்... நானும்..." நாணிக் கோணியவளை கண்டு,

"அடச்சீ... சட்டு புட்டுன்னு விசயத்தைச் சொல்லுடி குள்ளச்சி..."

"நானும் காதலிக்கலாம்ன்னு முடிவு பண்ணி இருக்கேன்டா... நான் உன் காதலுக்குச் சப்போர்ட் பண்ற மாதிரி நீயும் என் காதலுக்குச் சப்போர்ட் பண்ணணும்... என்ன ஓகேவா...?"

அவள் கூறிய பதிலை கேட்டு உண்டு கொண்டிருந்த அழகிற்குப் பலமாய்ப் புரையேறியது...!!!

தித்திக்கும்...!!!

"அழகு நீ நடந்தால் நடை அழகு...
நீ சிரித்தால் சிரிப்பழகு...
நீ பேசும் தமிழ் அழகு...
நீ ஒருவன் தான் அழகு...
ஓஓ நெற்றியிலே சரிந்து விழும் நீள முடி அழகு...
அந்த முடி கோதுகின்ற அஞ்சு விரல் அழகு..."

வலமங்கையின் மனதில் பின்னணி பாடல் இசைக்க அவளோ கனவில் சுகமாய் மிதந்து கொண்டிருந்தாள்... எதிரில் லேசாய் நடைப் பயின்றபடி அடுத்துத் தாங்கள் செய்யப் போகும் ப்ராஜெக்ட் பற்றிப் பேசி கொண்டிருந்த அஜயை கண்ணிமைக்காது பார்த்து கொண்டிருந்தாள் அவள்... அவளைப் பொருத்தவரையில் அவனும், அவளும் மட்டுமே அங்கிருப்பது போல் ஒரு மாயத்தோற்றம்... அந்தத் தோற்றமே அவளுள் ஒருவித சுகானுபவத்தைக் கொடுத்தது என்றால் மிகையில்லை...

வட இந்திய அன்னைக்கும், தமிழ் தந்தைக்கும் பிறந்த அஜய் வனப்பில் சற்றும் குறைவில்லாது இருந்தான்... தாயின் நிறம், அழகு மற்றும் தந்தையின் கம்பீரம் மூன்றையும் ஒருங்கே அவன் தன்னிடத்தில் கொண்டிருந்தான்... அதனால் பார்க்கும் கன்னியர் மனதினை எளிதில் சுண்டி இழுத்தான் தனது வசீகரத்தால்...

ஆனால் அவன் மனதினை இதுவரை அப்படி யாரும் சுண்டி இழுக்கவில்லை... இத்தனை வருடங்களாக வேலை விசயமாக வெளிநாட்டில் இருந்த போது கூட ஒரு பெண் கூட அவனின் மனதை கவரவில்லை... ஏனோ அவனுக்குமே அதில் பெரிதாய் நாட்டம் இருந்தது இல்லை... அப்படிப் பெண்களைக் கவர முயல்வதற்கு அவனும் எந்தவித முயற்சியும் செய்யவில்லை... அதுவே அவனுக்குத் தனிச் சோபையைக் கொடுத்தது... அது தான் வலமங்கையையும் அவன் பால் கட்டி இழுத்தது...

வலதுகையில் இருந்த பேனாவை லேசாகச் சுழற்றியபடி, இடது கையால் முன்நெற்றியில் சிலுப்பிக் கொண்டு விழுந்த முடியை அவன் கோதி கொண்ட அழகில் அவள் ஆவென வாயை பிளந்தபடி அமர்ந்திருந்தாள்... இடையிடையே அவன் மீசையை வேறு முறுக்கி கொண்டதில் அவளது மனம் முற்றிலும் அவனிடத்தில் சரணடைந்து போனது...

'என்னம்மா இருக்கான்...? என்ன ஒரு அழகு...!' என்று நினைத்தபடி மனதிற்குள் ஜொள்ளி வைத்தாள் அவள்...

அஜய் பேசி முடித்ததும் எல்லோரும் கிளம்பி செல்ல வலமங்கை மட்டும் இன்னமும் கன்னத்தில் கை வைத்தபடி அவனைப் பார்த்து கொண்டிருந்தாள்...

"நாச்சி... போகலாம் வா..." அருண் அழைக்கவும் தான் அவள் நிகழ்காலத்திற்கு வந்தாள்...

"எங்கே அருண்...?"

"மீட்டிங் முடிஞ்சது, போய் வேலையைப் பார்க்கலாம்ன்னு கூப்பிட்டேன்..." என்று அருண் சொல்லவும் தான் அரக்கப்பரக்க அவள் எழுந்தாள்...

கைகளைக் கட்டியபடி மேசை மீது சாய்ந்து நின்ற அஜய் அவளது ஒவ்வொரு செய்கையையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்... அவன் தன்னைப் பார்த்து கொண்டிருப்பதைக் கண்டு புல்லரித்துப் போன வலமங்கை அவனைக் கண்டு ஈயெனப் பல்லை காட்டியபடி அந்த அறையை விட்டு வெளியில் வந்தாள்...

'இவள் என்ன லூசா...? இப்படி இளித்து வைக்கிறாள்...? இவள் இந்த வேலைக்குச் சரிப்பட்டு வருவாளா...?'

அவனின் நினைப்பு அவளைப் பற்றி இப்படித்தான் இருந்தது... ஏனெனில் பார்ப்பதற்குச் சாதாரணமாக இருந்த வலமங்கையின் தோற்றம் அவனுள் பெரிதாய் பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்பது தான் நிஜம்... அவன் கடந்து

வந்த பெண்கள் எல்லோரும் அவளை விடப் பன்மடங்கு அழகானவர்கள்...

வெளியில் வந்த வலமங்கையோ உற்சாகத்தில் துள்ளிக் குதிக்காத குறை தான்... உதட்டில் புன்னகை உறைய, தேவலோகத்தில் நடந்து செல்வது போல் மிதந்தபடி வந்தவள் அங்கு அமர்ந்து வேலை செய்து கொண்டிருந்த அழகை கண்டதும் அவளது முகம் கோபத்தில் கடுகடுத்தது... வேண்டுமென்றே அவனைத் தாண்டி செல்லும் போது,

"அழகு நீ நடந்தால் நடை அழகு...
நீ சிரித்தால் சிரிப்பழகு...
நீ பேசும் தமிழ் அழகு..."

என்று பாடி அவனைத் திரும்பி பார்க்க வைத்தவள் சும்மா போயிருந்திருக்கலாம்... ஆனால் அவள் அப்படிச் செல்லாமல் அவனைச் சீண்ட வேறு செய்தாள்...

"அருண்... சிலருக்குப் பேரில் மட்டும் தான்டா அழகு இருக்கு... ஆனால் அதுக்கும் அவங்களுக்கும் சம்பந்தமே இருக்காது... ஆனா நம்ம டீம் லீடர் இந்தப் பாட்டுக்கு ஏத்த மாதிரி ரொம்பப் பொருத்தமா அழகா இருக்கான்டா..." என்று அவள் அழகின் கோபத்தினை ஏகிற வைத்துவிட்டு அந்த இடத்தைக் காலி செய்தாள்...

அவள் பாடியது கேட்டு திரும்பி பார்த்த அழகு, அவள் பேசியதை கேட்டுக் கோபம் கொண்டவனாய் கணினி முன் திரும்பியவன் தனது கோபத்தினைக் கீ போர்ட்டில் காண்பித்தான்...

நேற்று புட் கோர்ட்டில் வலமங்கை பேசியது அவனின் நினைவில் எழுந்தது... அப்போது அவள் தன்னிடத்தில் காதலிப்பதற்கு உதவி கேட்டது இப்போதும் அவனுக்கு மிகுந்த அதிர்ச்சியாக இருந்தது... அவளுக்குத் தான் ஒரு தவறான உதாரணமாகப் போய்விட்டோமே என்று இப்போதும் அவன் குற்றவுணர்வில் உள்ளம் குமைந்தான்...

நேற்றே அவளிடத்தில் முடிவாய் சொல்லிவிட்டான்...

"இங்கே பார் மங்கை... இந்தக் காதல் கத்திரிக்காய் எல்லாம் நம்ம குடும்பத்துக்குச் சரி வராது... பேசாம மாமா பார்த்து வைக்கிற பையனை கல்யாணம் பண்ணிக்கோ... அது தான் உனக்கும் நல்லது... நம்ம குடும்பத்துக்கும் நல்லது..."

"ஏன்... ஏன், ஏன்னு கேட்கிறேன்...? நீ மட்டும் காதலிக்கலாம்... நான் காதலிக்கக் கூடாதா...?" சண்டைக்காரியாய் சிலிர்த்துக் கொண்டு நின்றாள் வலமங்கை...

அவன் மட்டும் எந்த விதத்தில் உசத்தி... அவள் மட்டும் அப்படி எந்த விதத்தில் தாழ்ந்து போனாள்... கோபத்தில் எரிமலையாய் கனன்றாள் அவள்...

"ஏன்னா நீ பொண்ணு... நீ காதலிச்சு ஓடி போய்க் கல்யாணம் பண்ணிக்கிட்டா நம்ம குடும்பக் கௌரவம், மானம் என்னவாகிறது...? மாமாவால் வெளியில் தலை காட்ட முடியுமா...? பாவம் மனுசன், அவமானத்தில் தலை குனிஞ்சு போயிருவார்... அதை எல்லாம் என்னால் கண் கொண்டு பார்க்க முடியாது... அதனால் நீ காதலிப்பதற்கு எல்லாம் என்னால் ஐடியா கொடுக்க முடியாது... ஐயம் வெரி சாரி..." என்றான் இறுக்கமான முகத்துடன்...

அவன் சராசரி இந்திய ஆண்மகன் போன்று பேசினான்... நம் எல்லோரது வீட்டிலும் இருக்கும் ஆண்கள் பலரின் மனநிலை இது தான்... அவர்கள் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் சைட் அடிக்கலாம், காதலிக்கலாம்... ஆனால் அவர்கள் வீட்டுப் பெண் யாரையும் சைட் அடிக்கக் கூடாது, காதலிக்கக் கூடாது... அவர்கள் கை காட்டும் மணமகனை தான் திருமணம் செய்ய வேண்டும்... அப்படிப்பட்ட ஒருவனாகத் தான் அழகு இருந்தான்...

"ஓகோ... நீ காதலிச்சு ஓடி போய்க் கல்யாணம் பண்ணிக்கிட்டா மட்டும் நம்ம குடும்பக் கௌரவம் அப்படியே உலகப் புகழ் பெற்று விடுமாக்கும்...? உங்க

மாமாக்கு மட்டுமில்லை என் மாமாவுக்கும் அதே அவமானம் தான்... பாவம் மனுசன், நீ பண்ணும் வேலையால் அவர் தான் ஊரார் முன் அவமானப்பட வேண்டி வரும்..." என்று அவனைப் போல் ஏற்ற இறக்கத்துடன் பேசி காட்டியவள்,

"நான் காதலிக்கக் கூடாதுன்னா, அப்போ நீயும் காதலிக்கக் கூடாதுடா... எனக்கு ஒரு சட்டம், உனக்கு ஒரு சட்டம் எல்லாம் இங்கே கிடையாது.... ஆணும், பெண்ணும் சரி சமம்... அதை நீ முதலில் ஞாபகம் வச்சுக்கோ..." பதிலுக்கு அவளும் சீறினாள் அவனிடத்தில்...

முதன்முறையாகத் தான் ஒரு பெண்ணை விரும்புவதற்காக வருத்தப்பட்டான் அழகு... ஆனாலும் அவளிடத்தில் அதை ஒத்துக் கொள்வதற்கு ஆண் என்கிற அகங்காரம் இடம் கொடுக்கவில்லை...

"ஆமாம்டி... நான் ஆம்பளை அப்படித்தான் இருப்பேன்... நீ பொம்பளை கொஞ்சம் அடக்கி வாசிக்கிறது நல்லது... இல்லைன்னா விளைவுகள் விபரீதமாக இருக்கும்..." என்று ஆள்காட்டி விரல் நீட்டி எச்சரித்தவன் சாப்பிட கூடப் பிடிக்காமல் பாதிச் சாப்பாட்டில் எழுந்து சென்றுவிட்டான்... அப்போதிருந்து இப்போது வரை வலமங்கை அவனை முறைத்து கொண்டிருக்கிறாள்... அவனும் அவளைக் கண்டு கொள்ளவும் இல்லை... அவளின் காதலுக்குப் பச்சை கொடி காட்டவும் இல்லை...

அன்று முழுவதும் வலமங்கை சந்தோசத்தில் இருந்ததால் என்னவோ அவளது வேலையில் அவளது கவனம் சிதறியது... அதை விட அவள் வேலைக்கும் புதிது... ஆகையால் வேலையில் நிறையவே சொதப்பி வைத்தாள்...

அதைக் கண்டு அஜய் அவளைத் தனது அறைக்கு வரவழைத்து 'லெப்ட் அன்ட் ரைட்' வாங்கி விட்டான்... அவன் திட்டியது ஒன்று கூட அவளது காதில் ஏறவில்லை... மாறாகப் புன்னகை மாறாத முகத்துடன் அவனைப் பார்த்து கொண்டிருந்தாள் அவள்... அதாவது எருமை மாட்டின் மீது மழை பெய்தது போல்...

"மிஸ். வலமங்கை நாச்சி...யார்..." என்று இழுத்து கூறியவனைக் கண்டு,

'இல்லை என் பெயர் நயன்தாரா...' என்று சொல்ல போனவள் அவன் தனது பெயரை கூறிய அழகில் மனம் மயங்கி சொல்லாமல் விட்டவள் அவனை இமைக்காது பார்த்து வைத்தாள்...

"நீங்க வேலை பார்க்க வந்தீங்களா...? இல்லை வேறு எதற்கும் வந்திருக்கீங்களா...? உங்க கூட வேலை செய்றவங்க எல்லோருமே உங்களைப் போல் ஃப்ரெஷர்ஸ் தான்... அவங்க எல்லாம் சரியா செய்யும் போது... உங்களுக்கு மட்டும் என்ன...?"

அவன் கூறியதற்கு அவள் என்ன பதில் கூறுவாள்... தலையைச் சொரிந்து கொண்டு அசடு வழிந்தாள்...

"ஹி... ஹி... அது வந்து..."

அவளது அசட்டுத்தனத்தைக் காண அவனுக்குச் சகிக்கவில்லையோ என்னவோ... கையால் கதவை சுட்டிக்காட்டியவன்,

"ப்ளீஸ்... கெட் அவுட்..." என்றான் எரிச்சலுடன்...

ஏனோ அவளைப் பார்க்க பார்க்க அவனுக்கு எரிச்சலாக வந்தது... கழுத்து வரை மூடிய சுடிதார், எண்ணெய் தேய்த்து இழுத்து வாரப்பட்ட தலைமுடி, நெற்றியில் விபூதி, குங்குமம் சகிதம் பார்ப்பதற்கு அச்சு அசல் பட்டிக்காடு போல் தெரிந்தாள் அவள், அவனது கண்களுக்கு... அதை விட அவளது அசட்டுத்தனம் அவனை மிகவும் எரிச்சல் படுத்தியது...

அவனுக்கு எப்போதுமே 'ஸ்மார்ட்டான' பெண்களைத் தான் பிடிக்கும்... இது போன்ற அசட்டுத்தனமான பெண்கள் அருகில் கூடச் செல்ல மாட்டான்... அப்படிப்பட்டவனை வலமங்கையிடத்தில் மாட்டி வைத்து சதி செய்தது அவனது விதி...

'இவளை எல்லாம் வைத்து வேலை வாங்கணும் என்பது என் தலைவிதி...' என்று முணுமுணுத்துக் கொண்டே தன் முன்னிருந்த கணினி மீது கவனத்தைச் செலுத்தினான் அஜய்...

வெளியில் வந்த வலமங்கையோ தனக்குள் சபதம் போட்டு கொண்டாள்...

'எத்தனை மணியானாலும் சரி... அஜய் சொன்ன வேலையை ஒழுங்கா முடிச்சு கொடுத்த பின்பு தான் இன்னைக்கு வீட்டுக்கு கிளம்பணும்...' என்று...

அடுத்து கழிந்த மணித்துளிகளில் அவளது கவனம் முழுவதும் வேலையில் தான் இருந்தது... அவளது இந்த நிலையைக் கண்டு அழகு கூட அருணிடம் சைகையில் 'என்னவாயிற்று...?' என்று கேட்டான்... அருணோ 'தெரியவில்லை' என்பது போல் தோளை குலுக்கினான்...

அன்று அவள் வேலையை முடிக்கும் போது இரவு வெகுநேரமாகி இருந்தது... அப்போது தான் அவள் கவனித்தாள்... அலுவலகத்தில் முக்கால்வாசி பேர் வீட்டிற்குக் கிளம்பி சென்று விட்டதை... முக்கியமாக அழகு சுந்தரம்... அதைக் கண்டு அவளுக்கு அப்படியொரு கோபம் வந்தது... ஆனால் இப்போது அழகு மீதுள்ள அவளது கோபம் முக்கியமில்லை... அஜயிடம் நல்ல பெயர் வாங்க வேண்டும்... அது தான் இப்போது அவளுக்கு மிக முக்கியம்... அதனால் அழகு பின்னுக்குத் தள்ளப்பட்டான்...

வேலையை முடித்துக் கொண்டு அவள் அஜயின் அறைக்குச் சென்ற போது அவனும் வேலையில் ஆழ்ந்திருந்தான்... அவளது வருகை உணர்ந்து அவளை உள்ளே அனுமதித்தவன் 'என்ன...?' என்பது போல் பார்த்தான்...

"என்னோட வொர்க் முடிச்சிட்டேன்... உங்க மெயிலுக்கு அனுப்பியிருக்கேன்..." என்று கூறியவளை சிறுவியப்புடன் பார்த்தவன் அவளை அமர சொல்லிவிட்டு மின்னஞ்சலை எடுத்துப் பார்த்தான்...

எந்தவித பிழையும் இல்லாது இருந்த அவளது வேலையைக் கண்டு அவனது கண்களில் மெச்சுதல் தோன்றியது...

"குட்..." என்று அவளைப் பாராட்டியவன் நாற்காலியில் சாய்ந்தமர்ந்து கொண்டு லேசாக நாற்காலியை சுழற்றியபடி,

"அப்போ உங்களுக்கு வேலை தெரிந்திருக்கு... பிறகு ஏன் தப்பு செஞ்சு திட்டு வாங்கினீங்க...?"

'திட்டுறது நீயாயிருந்தா காலம் முழுவதும் கேட்க நான் தயாராயிருக்கேன்டா...' என்று மனதுக்குள் ஜொள்ளினாள் அவள்...

அவள் ஒன்றும் பேசாமல் அமர்ந்திருப்பதைக் கண்டு அவன், "சரி நீங்க போகலாம்..." என்றபடி தானும் எழுந்தான்...

அதற்கு மேல் என்ன காரணம் சொல்லி அங்கிருக்க என்று தெரியாது வலமங்கையும் அந்த அறையை விட்டு வெளியில் வந்தாள்...

தனது இடத்திற்கு வந்து தனது பொருட்களை எடுத்துக் கொண்டு வெளியில் வந்தவளுக்கு அப்போது தான் உறைத்தது இரவின் தனிமை... அதுவும் மழை பெய்து கொண்டிருந்த அந்த மழை இரவு அவளை வெகுவாய்ப் பயமுறுத்தியது... இடி வேறு சத்தமாய்க் காதில் விழுந்து அவளை நடுங்க செய்தது... அவள் எப்போதுமே 'பில்டிங் ஸ்ட்ராங்... பேஸ்மென்ட் வீக்' ரகத்தைச் சேர்ந்தவள்...

'இந்த அழகு பய இருந்து என்னைக் கூட்டிட்டுப் போனா தான் என்ன...? மத்த நேரமெல்லாம் வாய் கிழிய பேசுவான்... பரதேசி...' அழகை அர்ச்சனை செய்தபடி வெளியில் வந்தாள் அவள்...

அந்நேரம் அங்கு வந்த அஜய் அவளைத் தாண்டி சென்றவன் பின் திரும்பி வந்து, "நான் எதுவும் உதவி பண்ணட்டுமா...?" என்று கேட்க...

வலமங்கை மகிழ்ச்சியாய் அவனைப் பார்த்து ஏதோ சொல்ல போகும் முன் வேகமாய் அங்கு வந்து சேர்ந்தான் அழகு...

"அஜய்... வலமங்கை என்னோட கசின் தான்... நான் பார்த்துக்கிறேன்..." என்று கூறி அஜயை கிளம்பச் சொல்லியவன் வலமங்கையை முறைத்துப் பார்த்தான்...

அவளோ இடுப்பில் கையை வைத்துக் கொண்டு அவனை விட அதிகமாய் அவனை முறைத்து கொண்டிருந்தாள்...

"உன்னை யாருடா எங்களுக்கு இடையில் வர சொன்னது...?"

அதைக் கேட்டு அழகுவின் முகம் சுருங்கி போய்விட்டது...

"ஐய்யோ, ஐய்யோ... நீ மட்டும் வராம இருந்திருந்தா இந்நேரம் அஜய் அவனோட காரில் என்னைக் கூட்டிட்டு போயிருப்பானே... நானும் ஜம்முன்னு ஏறி போயிருந்து இருப்பேனே..." என்று கனவில் மிதந்தபடி அவள் கூறினாள்...

அதைக் கேட்டவன் ஒன்றும் பேசாது தனது வாகனத்தை நோக்கி நடந்தான்... அவன் அதைக் கிளப்பும் சத்தத்தில் தன்னுணர்வு பெற்ற வலமங்கை அழகு கிளம்புவதைக் கண்டு அரண்டு போய் அவன் அருகில் ஓடி வந்தாள்...

"டேய்... இருடா... உதவிக்கு வந்த மகாராசனையும் விரட்டி விட்டுட்டு நீயும் கழட்டி விட்டுட்டு போனா என்ன அர்த்தம்...? என்னைய கூட்டிட்டு போடா...?" என்று சட்டம் பேச...

"நான் யாரு உனக்கு...? நீ யாரு எனக்கு...?" அழகு தெரியாத பாவனையை வெளிப்படுத்தினான் தனது பார்வையில், வார்த்தையில்...

வாயில் கை வைத்தபடி அவனைப் பார்த்தவள், "ஐயோ... இப்படி எல்லாம் நீ பேச கூடாது அழகு..." என்று பயந்தவள் போல் பேசி காட்டியவள் மறுநொடி சந்திரமுகியாக மாறினாள்...

"இது போல் பயந்து போய் டயலாக் பேசுவேன்னு நினைச்சியா...? நான் யாரா...? என்னைய தெரியாதா உனக்கு... இரு, இரு... இப்பவே மாமா கிட்ட கேட்டு சொல்லுறேன்..." என்றபடி தனது அலைப்பேசியை அவள் எடுக்க...

அதைக் கண்டு அவன் அசராது நின்றிருந்தான்... அவனின் பதட்டம் இல்லாத நிலை கண்டு அவளுக்குத் தான் யோசனையாக இருந்தது... 'என்னவானது இவனுக்கு...?' என்று புரியாது அவனைப் பார்த்தவள்,

"அழகு, மாமாவுக்கு ஃபோன் போட போறேன்..." என்று அலைப்பேசியின் தொடு திரையில் கையை வைத்தபடி அவள் சொல்ல...

"போடு... நானும் சொல்றேன்... எல்லாவற்றையும்..." அவன் அழுத்தி சொன்ன விதத்தில் அவளுக்கு உள்ளுக்குள் குளிரெடுத்தது...

தான் காதலிப்பதை அழகு சொல்லிவிட்டால்...? அதை நினைத்து பார்த்தவளுக்கு அச்சமாக இருக்க அமைதியாக நின்றாள்...

"என்னம்மா... மொபைல்ல பேலன்ஸ் இல்லையா...? நான் வேணா என் மொபைலை தரட்டுமா..." என்று கேலி போல் உரைத்தவனைக் கண்டு அவளுக்குக் கோபம் வந்தது... இருந்தாலும் இப்போது அவளுக்கு இருக்கும் ஒரே துணை அவன் மட்டும் தான்... அதனால் அவனை வெறுப்பேத்தாமல் தழைந்து போனாள்...

"அழகு... என்ன அழகு இப்படிச் சொல்லிட்ட...? நாம என்ன அப்படியா பழகியிருக்கோம்...? நான் என்ன அடுத்தவளா அழகு...?"

பேச்சுச் சுவாரசியத்தில் அவன் கையிலிருந்த மெல்லிய பிரேஸ்லெட்டை இழுத்து வருடியபடி பேசியவளை கண்டு அவனது கோபம் சிறிது குறைந்தது... அவனது உதட்டில் புன்னகை அரும்பியது... சிறுவயதில் அவள் இப்படித்தான்

அவன் கையில் கட்டியிருக்கும் கறுப்புக் கயிறை வருடியபடி பேசி கொண்டிருப்பாள்... வளர்ந்த பின், இருவருக்கும் பகை முற்றிய பின்பு அவளது பழக்க வழக்கம் எல்லாம் அப்படியே மாறிப் போய் விட்டது...

இதோ சிறுமி வலமங்கையாய் மாறி நின்றிருந்தவளை கண்டு அவனின் மனம் உருகி போனது... அதற்கு மேல் அவளிடம் வாதாட விரும்பாதவனாய்,

"ஏறு..." என்றான் மொட்டையாக...

"ம்க்கும்..." என்று அவனுக்குக் கேட்காத வண்ணம் நொடித்துக் கொண்டவள் அவனின் பின்பக்கம் ஏறியமர்ந்தாள்...

மழை வெளுத்து வாங்கியதில் இருவருமே தொப்பலாக நனைந்து விட்டனர்...

"அழகா காரில் போய் இறங்கியிருப்பேன்... கடங்காரா, என்னை இப்படி மழையில் நனைய வச்சிட்டானே..." என்று புலம்பியபடி வந்தவளை கண்டு அவனது கோபம் அதிகரித்தது...

அதில் அவனது வாகனம் வேகமெடுத்தது...

"டேய் அழகு, பார்த்து போடா... எங்கேயாவது குழிக்குள் வண்டியை விட்டு என்னைய கீழே தள்ளிப்புடாதே... சொல்லிட்டேன்..." என்று அதற்கும் அடங்காது கத்தியவளை கண்டு அவன் இன்னமும் வேகமெடுத்தான்...

அதில் முற்றிலும் நிலைக்குலைந்தவள் அவனது இடுப்பை இறுக அணைத்துக் கொண்டு அவனது தோள்வளைவில் முகத்தைப் புதைத்தபடி,

"ப்ளீஸ் அழகு... வேகத்தைக் குறைடா... எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு..."

அவளது வார்த்தையிலா இல்லை அவளது செயலிலா ஏதோ ஒன்றில் அவன் தனது வண்டியின் வேகத்தினைச்

சற்று மட்டுப்படுத்தினான்... அதில் மனதைரியம் வரப் பெற்றவளாய்,

"கொஞ்ச நேரத்தில் என்னைப் பயமுறுத்திட்டியேடா கருவாயா..." என்றவள் தனது கைப்பையைக் கொண்டு அவனது முதுகில் அடித்தாள்...

"ஹா... ஹா..." என்று வாய்விட்டு சிரித்தபடி அவன் வண்டியை ஓட்டினான்...

ஏனோ தெரியவில்லை அவனது மனம் மயிலிறகு போல் லேசாகி இருந்தது...

போகும் வழியில் மறக்காமல் உணவு வாங்கிக் கொடுத்து அவளது வயிற்றை வாடாது பார்த்து கொண்டவன் இறுதியில் தங்களது குடியிருப்பிற்கு வந்து சேர்ந்தான்...

இறங்கியவள் ஒன்றும் பேசாது செல்ல, அதைக் கண்டு அவனால் சும்மாயிருக்க முடியவில்லை...

"இவ்வளவு தூரம் பத்திரமா கூட்டிட்டு வந்து விட்டிருக்கேனே... ஒரு நன்றி கிடையாதா...?"

அதில் அவனைத் திரும்பி பார்த்தவள், "நீ பண்ணிய வேலைக்கு உனக்கு நன்றி எல்லாம் கிடையாது கருவாயா... இன்னைக்கு மழையில் செமையா ஒரு டூயட் பாடியிருக்க வேண்டியவளை இப்படி வெறுமனே மழையில் நனைய வச்சு கூட்டிட்டு வந்ததுக்கு நான் நன்றி சொல்லணுமா... போடா..." என்றுரைத்து விட்டுப் பழிப்பு காட்டியபடி அவள் செல்ல...

அவனோ அவளைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான்... அவனது மனதிலோ பெருத்த யோசனை...

***************************

மறுநாள் அலுவலகம் வந்த போது வலமங்கை அவனைச் சிறிதும் கண்டு கொள்ளவில்லை... அருணுடன் ஒட்டி கொண்டு அலைந்தாள்... இல்லை அஜயை பற்றிப் பேசி

அவனை எரிச்சல் படுத்தினாள்... அழகிற்கு அவளை என்ன செய்வது என்று தெரியவில்லை...

அந்நேரம் அவனின் அருகில் வந்தமர்ந்தாள் ரேஷ்மா...

"அழகு..."

அவள் அழைத்தும் அவனின் கவனம் அங்கில்லை... அவனது கவனம் முழுவதும் சற்றுத் தள்ளியிருந்த வலமங்கை மீதிருந்தது...

"அழகு..." அவனின் கை தொட்டு ரேஷ்மா அசைக்க...

"ஆங்... சொல்லுங்க ரேஷூ..." என்றான் அழகு, தூக்கத்தில் இருந்து எழுந்தவன் போல்...

"இந்த வீக் எண்ட் எங்கேயாவது போகலாமா...?" கண்ணைச் சிமிட்டியபடி கேட்டவளை கண்டு நியாயத்திற்கு அவன் அகமகிழ்ந்து போயிருக்க வேண்டும்...

ஏனோ அவனால் அது போல் சந்தோசப்பட முடியாமல் போயிற்று... வலமங்கைக்குத் தான் ஒரு தவறான உதாரணமாகப் போய்விட்டதை எண்ணி அவன் மனம் வருந்தினான்... அதே சமயம் இனியும் அப்படியிருக்கக் கூடாது என்று குடும்பத்தின் தலைமகனாய் உறுதி எடுத்துக் கொண்டான்... குடும்ப நலனுக்காகத் தனது மனதின் விருப்பத்தைத் தொடக்கத்திலேயே அழிக்க முடிவு செய்தான் அவன்...

அந்தக் கணம் விருப்பாய் இருந்த ரேஷ்மா மீதான அவனது சிறு ஈர்ப்பு கூடப் பின்னுக்குத் தள்ளப்பட்டது... அந்த நேரம் அவனுக்குத் தங்களது குடும்பக் கௌரவம் தான் முக்கியமாகப் பட்டது...

"எதுக்கு ரேஷூ...?"

அவனது கேள்வியில் அவள் அவனைப் புரியாது பார்த்தாள்...

"இப்படிக் கேட்டால் என்ன அர்த்தம் அழகு...? உன்னைப் பத்தி நானும், என்னைப் பத்தி நீயும் நல்லா புரிஞ்சிக்க, தெரிஞ்சிக்க வேண்டாமா...?"

"புரிஞ்சு, தெரிஞ்சு என்ன பண்ண போறோம் ரேஷூ...?"

அதில் ரேஷ்மா திகைத்து போய் அவனைப் பார்த்தாள்...

"அழகு... நமக்குள் ஒண்ணுமே இல்லையா..."

"ம்ஹூம் இல்லை ரேஷூ..." என்று உறுதியாய் மறுத்து கூறியவனை அதிர்ச்சியாய் பார்த்தாள் அவள்...

என்ன இருந்தாலும் பெண் மனம் அல்லவா... அதிர்ச்சியைத் தாங்க முடியாது தவித்தது... கண்கள் கூடச் சிறிது கலங்கி போனது மனம் தாங்காது...

"பொய் சொல்ற அழகு... உனக்கு என்னைப் பிடிக்கும்ன்னு எனக்கு மட்டுமல்ல, இந்த முழு ஆபிசுக்கே தெரியும்..."

அதைக் கேட்டவன் உதட்டை கடித்தபடி சற்று நேரம் அமைதியாக இருந்தான்...

"இப்பவும் பிடிக்கும் தான் ரேஷூ... ஆனால் இந்தப் பிடித்தம் திருமணம் வரை செல்ல முடியாது... நாம நல்ல நண்பர்களாக இருப்பது தான் நமக்கு நல்லது..."

"நமக்கு நல்லதுன்னா... யாருக்கு நல்லதுடா...? எனக்கா...? இல்லை உனக்கா...?"

"இருவருக்கும் தான்..." என்றுரைத்தவனைக் கண்டு விரக்தி புன்னகை எழுந்தது அவளது இதழ்களில்...

"எனக்கு ஒரு உண்மை தெரிஞ்சாகணும் அழகு...?" என்றவளை நேருக்கு நேர் பார்த்தவன்,

"என்ன உண்மை...?"

"நீ மங்கையைக் காதலிக்கிறியா...?"

"ச்சீச்சீ... அபத்தமா பேசாதீங்க... அவள் என்னோட மாமன் மகள்... அவள் கூடச் சண்டை போட்டாலும் அவளை எனக்கு ரொம்பப் பிடிக்கும்... இதுக்குப் பெயர் காதல் இல்லை... அக்கறை... அவ்வளவு தான்..." என்று படபடத்தவனைக் கண்டு அவளுக்குச் சற்று நிம்மதியாக இருந்தது...

"அப்புறம் நீ என்னைக் காதலிப்பதற்கு எது தடையாக இருக்கிறது...?"

"நான் மங்கைக்கு மோசமான உதாரணமாக ஆகிவிடக் கூடாது..." என்றுரைத்தவனைக் கண்டு இப்போது அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது...

"அவ்வளவு தானே அழகு... நான் கூட என்னவோ ஏதோன்னு பயந்து போயிட்டேன்... மங்கைக்குக் கல்யாணம் முடியும் வரை நாம விலகி இருக்கலாம்... அவள் கல்யாணம் முடிந்தபின் நாம கல்யாணம் பண்ணிக்கலாம்... என்ன ஓகேவா அழகு...?"

"இல்லைங்க இது சரிப்பட்டு வராது..." என்றான் அழகு யோசனையாக...

"அதெல்லாம் சரியாய் வரும்..." என்று சொன்ன ரேஷ்மா அங்கிருந்து அகன்றாள் சந்தோசமான மனநிலையுடன்...

அவள் கூறியதை முழுவதுமாய் ஏற்றுக் கொள்ள முடியாவிட்டாலும் வலமங்கைக்குத் திருமணம் செய்து வைக்கச் சொன்ன ரேஷ்மாவின் யோசனை அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது...

அன்றிரவு தனது பாட்டி வேதநாயகியிடம் பேசியவன், "ஆச்சி... மங்கைக்குத் தான் வயசாகிட்டே போகுதே... கல்யாணம் பண்ணி வைச்சா என்ன...?"

அழகு கூறியதை கேட்டு அகமகிழ்ந்து போனார் வேதநாயகி... தங்களது திட்டம் வெற்றி பெற்று விட்டது என்று எண்ணி மனதிற்குள் சந்தோசப்பட்டுக் கொண்டவர்,

"அதுக்கு என்ன ராசா அவசரம்...? வீட்டில் மூத்தவன் நீ இருக்கும் போது அந்தக் குள்ளச்சிக்கு எதுக்குக் கல்யாணம் பண்ணணும்...? முதல்ல உன் கல்யாணம்... அதுக்கு அப்புறம் தான் அந்தக் குள்ளச்சிக்கு..." என்று அவர் திட்டவட்டமாகக் கூற...

அழகிற்கு எரிச்சலாக வந்தது... தான் சொல்ல வருவதைப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறார்களே என்று... அடுத்த நொடி பேரன் பாட்டியின் தலையில் அணுகுண்டை தூக்கி போட்டான்...

"நாளைக்கே அவள் யாரையாவது காதலிச்சிட்டு வந்து 'இது தான் என் காதலன், கல்யாணம் பண்ணி வைங்கன்னு' சொன்னால் நீங்க எல்லோரும் என்ன பண்ணுவீங்க...?" கடுப்புடன் அவன் கேட்டதில் வேதநாயகி தனது நெஞ்சில் கை வைத்தபடி அதிர்ந்து போனார்...

"சட்டுப்புட்டுன்னு அவளுக்குக் கல்யாணத்தைப் பண்ணி வைக்கிற வழியைப் பார்க்க சொல்லுங்க உங்க அண்ணன் கிட்ட..." என்றுரைத்தவன் அழைப்பை துண்டித்து விட்டான்...

அதற்கு மேல் தாங்க மாட்டாதவராய் வேதநாயகி அண்ணன் சுப்பிரமணியத்திடம் ஓடி வந்து புலம்பினார்... அவருக்குமே விசயம் கேள்விப்பட்டுத் திக்கென்று இருந்தது...

அடுத்து என்ன செய்வது என்று இருவரும் சேர்ந்து சதியாலோசனையில் ஈடுபட்டனர்...

வலமங்கையைத் திருமணப் பந்தத்தில் சிக்க வைக்க நினைத்த அழகு சுந்தரம், தானே வலிய சென்று திருமணப் பந்தத்தில் சிக்கிக் கொண்டான்...

இதைத் தான் விதி வலியது என்றார்களோ நம் முன்னோர்கள்...!!!

தித்திக்கும்...!!!

தந்தையும், அத்தையும் பேசி கொண்டிருந்ததைத் தற்செயலாக அந்தப் பக்கம் வந்த பொன்னுரங்கம் கேட்டுவிட்டார்... அவ்வளவு தான் அடுத்தக் கணம் அவரது மீசை துடித்தது கோபத்தில்... ஆத்திரத்தில் அவரது கண்கள் சிவந்தது... இப்போது மட்டும் அவரது மகள் எதிரில் இருந்திருந்தால் வெட்டி போட்டு இருந்திருப்பார்... அந்தளவுக்கு அவருக்கு ஆங்காரம் வந்தது...

'அண்ணா... ராசா சொல்றதை நாம சாதாரணமா எடுத்துக்க முடியாது... ஏதோ இருக்கப் போய்த் தான் இப்படிச் சொல்றான்... இல்லைன்னா இப்படிச் சொல்ல மாட்டான்... எனக்கு என்னமோ நாச்சி காதலில் ஏதாவது விழுந்திருப்பாளோன்னு சந்தேகமா இருக்கு...'

அவரது காதில் மீண்டும் மீண்டும் வேதநாயகி கூறிய வார்த்தைகள் ஒலித்துக் கொண்டிருந்தது... வேதநாயகி சொல்வது போல் அழகு காரணம் இல்லாமல் எதுவும் சொல்ல மாட்டான்... அதுவும் பெண் பிள்ளையின் விசயத்தில் அவன் பொய் கூற மாட்டான்... அவரது மகள் அவனை என்னபாடு படுத்திய போதும் அவன் பதிலுக்குக் கோபப்பட்டாலும், அந்தக் கோபத்தையும் மீறி அவனுக்கு அவள் மீது ஒரு அக்கறை இருப்பதை அவர் கவனித்து இருக்கிறார்...

அதனால் மகள் விசயம் தொடர்பாக மருமகனிடம் கேட்டு தெரிந்து, தெளிந்து கொள்வோம் என்றெண்ணி அவனுக்கு அழைத்தார்...

"மாமா... நல்லா இருக்கீங்களா...?" அழைப்பை எடுத்ததும் நலம் விசாரித்த மருமகனின் அன்பில் அவரது மனம் நெகிழ்ந்தது...

"எங்கே மருமகனே நான் நல்லாயிருக்க முடியும்... அதுவும் இந்த மாதிரி ஒரு தறுதலையைப் பொண்ணா பெத்துக்கிட்டு நான் நிம்மதியாயிருக்க முடியுமா...?"

பொன்னுரங்கத்தின் பேச்சில் அவன் மனம் துணுக்குற்றான்...

"ஏன் மாமா இப்படிச் சொல்றீங்க...? மங்கை ரொம்ப நல்ல பொண்ணு மாமா..."

"உன் மனசாட்சி தொட்டு சொல்லு மருமகனே... அவள் ரொம்ப நல்ல பொண்ணா...? அவள் எந்தத் தப்பு தண்டாவும் செய்யலை அப்படித்தானே..."

அவர் கேட்டதும் அவன் அமைதி காத்தான்... அவர்களது வீட்டை பொருத்தவரை காதல் என்பது தவறு தான்...

"இல்லை மாமா..." என்றான் அவளைக் காப்பாற்ற எண்ணி... பின்னே மாமனது கோபம் தான் அவனுக்குத் தெரியுமே...

"பின்னே எதுக்கு மருமகனே, அத்தை கிட்ட அப்படிச் சொன்ன...?"

"ஆச்சி கிட்ட... நான்..." அவருக்குப் பதில் அளிக்க முடியாது அவன் திணறிப் போனான்...

"சொல்லு அழகு..."

"அது ஒண்ணும் இல்லை மாமா... அவளுக்கு வயசாகிட்டு போகுதேன்னு சொன்னேன்... அதுக்கு வேறு எந்த அர்த்தமும் இல்லை மாமா..."

ஆனாலும் அவரது மனம் அவனது கூற்றை ஏற்றுக் கொள்ள மறுத்தது...

"இல்லையே அழகு... நீ எப்பவும் என் கிட்ட சொல்லுவியே... பொம்பளை புள்ளையா இருந்தாலும் நாச்சியை நல்லா படிக்க வச்சு, வேலைக்கு அனுப்பணும்ன்னு... அப்படிச் சொன்ன நீயே இப்படிச் சொல்றேன்னா ஏதோ விசயம் இருக்கு... இப்போ தான் எனக்குச் சந்தேகம் வலுக்குது மருமகனே..."

அவர் சொன்னதைக் கேட்டு அவன் தலையில் கை வைத்தபடி அமர்ந்து விட்டான்... 'அவசரப்பட்டு விட்டோமோ' என்று மனதுக்குள் குழம்பி போனான் அவன்...

"மருமகனே... என்னோட மானம், மரியாதை எல்லாம் நீ சொல்ல போகிற விசயத்தில் தான் இருக்கிறது... உன்னைக் கையெடுத்து கும்பிட்டு கேட்கிறேன்ய்யா..."

நா தழுதழுத்து உணர்ச்சிவசப்பட்டுக் கூறிய மாமனின் வார்த்தையில் மருமகனின் கண்களும் சேர்ந்து கலங்கி விட்டது... அவருக்கு ஒரு கலக்கத்தைக் கொடுத்து விட்டு அவன் மட்டும் எப்படி நிம்மதியாக இருந்து விட முடியும்...

"ஐயோ என்ன மாமா இது...? பெரிய பெரிய வார்த்தைகள் எல்லாம் சொல்லிக்கிட்டு... நம்ம மங்கை அப்படிப்பட்ட பொண்ணு எல்லாம் கிடையாது மாமா... சிட்டி லைஃப், மத்த பொண்ணுங்களைப் பார்த்து மங்கை மனசு மாறிட கூடாதேன்னு நினைச்சு தான் நான் ஆச்சி கிட்ட அப்படிச் சொன்னேன்... மத்தபடி வேறு ஒண்ணும் இல்லை மாமா..."

அழகு கூறியதை கேட்டு சற்று ஆசுவாசமானார் பொன்னுரங்கம்...

"இதை நீ என் கிட்ட சொல்லியிருக்கலாமே மருமகனே... கொஞ்ச நேரத்தில் நான் பயந்து போயிட்டேன்..."

"நீங்க பயப்படும்படி இங்கே எதுவும் நடக்கலை.. நிம்மதியா தூங்குங்க மாமா... குட் நைட்..." என்று அழைப்பை துண்டித்தவனுக்கு அப்போது தான் நிம்மதியாக இருந்தது...

பாட்டியிடம் சொன்னது தவறோ என்று மனது ஒரு புறம் நினைத்தாலும், மறுபுறம் எப்படி இருந்தாலும் வலமங்கை திருமணம் முடிந்தால் நல்லது என்றே அவனுக்குத் தோன்றியது...

வெகுநேரம் யோசித்த பொன்னுரங்கம் தனது ஒரே தங்கை இராணியிடம் பேச எண்ணினார்... அவர் திருமணமாகி கணவன் மகன்களுடன் அமெரிக்காவில் இருந்தார்... தங்கையின் மகன்களில் யாராவது ஒருவனுக்கு

வலமங்கையைத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்கிற எண்ணம் அவருக்கு இருந்தது...

அழகு அருகிலேயே அவரது கண் பார்வையில் வளர்ந்ததால் என்னவோ அவனைத் தனது மகனாகத் தான் அவர் எண்ணினார்... அதனால் தான் உறவின் முறையில் அவர் அவனை மருமகன் என்று விளித்தாலும் அவனைத் தனது மகளின் கணவனாக அவரால் நினைத்து பார்க்க முடியவில்லை...

"அப்பா... ராணியிடம் பேசலாம்ன்னு இருக்கேன்..." என்றுரைத்த மகனை கண்டு யோசனையாய் இருந்தது சுப்பிரமணியத்திற்கு...

"என்ன பேச போற பொன்னு...?"

"நம்ம ரிஷிக்கு வலமங்கையைப் பேசலாம்ன்னு நினைக்கிறேன்..."

மகனது வார்த்தை கேட்டு அவர் உள்ளுக்குள் திடுக்கிட்டுப் போனார்... இராணி அவரது சொந்த மகள் தான்... ரிஷி அவரது சொந்த பேரன் தான்... ஆனால் அழகிடம் அவருக்கு இருக்கும் பாசம் அவர்களிடம் இருந்தது கிடையாது... ஏனெனில் இராணியின் குணம் அப்படிப்பட்டது... சுயநலம் மிக்கவர், பேராசை கொண்டவர், சகோதரன், தந்தையாக இருந்தாலும் பணம் இல்லாததால் அவர்களை மதிக்கக் கூட மாட்டார்... அப்படிப்பட்டவர் வீட்டில் தனது அருமை பேத்தியை மருமகளாக அனுப்புவதா...?

அந்த யோசனையே அவருக்குப் பிடிக்கவில்லை... அழகு போல் அன்புள்ளம் கொண்ட அழகு இருக்கும் போது ஏன் வீண் பகட்டை கண்டு மனம் மயங்க வேண்டும்... அழகுவின் குணம், பெரியவர்களிடம் அவனுக்கு இருக்கும் மரியாதை, குடும்பித்தினரிடம் அவன் காட்டும் அன்பு, இதை எல்லாம் விடத் தனது பேத்தியிடம் அவன் காட்டும் அக்கறை இது எல்லாம் சேர்ந்து அழகுவை தான் அவருக்கு அதிகம் பிடித்தது...

ஆனால் தான் சொல்லி மகன் கேட்பானா இல்லை அவனாகப் புரிந்து கொள்வானா என்று அவருக்குத் தெரியாது, அவனே பட்டு திருந்தட்டும் என்று அவர் மகனது போக்கில் விட்டு விட்டார்... அவர் நினைத்தது போல் தான் அவரது மகளும் பேசினாள்...

"அண்ணா... நானே உனக்கு ஃபோன் பண்ணலாம்ன்னு இருந்தேன்... நம்ம ரிஷி ஒரு பொண்ணை லவ் பண்றான்... பொண்ணோட அப்பா இங்கே பெரிய பிசினஸ்மேன்... எங்களுக்கு இந்தச் சம்பந்தத்தில் ரொம்பத் திருப்தி... சீக்கிரமா கல்யாண பத்திரிக்கை அனுப்பறேன்..."

சகோதரனை பேச விடாமல் அவரே பேசி கொண்டு போனார்... அதைக் கேட்டு பொன்னுரங்கத்தின் முகம் விழுந்து விட்டது... ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"ரொம்பச் சந்தோசம்மா..." என்று தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தவர் மேற்கொண்டு சிறிது நேரம் பேசி கொண்டிருந்தவர்,

"ராணி... நாச்சிக்குக் கல்யாணம் பண்ணலாம்ன்னு இருக்கேன்..."

"ஓ... பேஷா பண்ணலாம்ண்ணா..." என்று தங்கை உரைத்ததும் அவரது முகம் மலர்ந்தது...

"ஏதாவது பண உதவி வேணும்ன்னா சொல்லு... நான் அவர் கிட்ட கேட்டு சொல்றேன்..."

அடுத்துத் தங்கை பேசிய வார்த்தையில் அவரது முகம் அவமானத்தில் சிறுத்துப் போய்விட்டது... தங்கையின் பேச்சிலேயே தெரிந்து போனது அவளுக்குத் தனது வீட்டில் சம்பந்தம் பண்ண விருப்பம் இல்லை என்று...

சகோதரனின் அமைதி அந்தச் சகோதரிக்கும் புரிந்ததோ என்னவோ, "தப்பா எடுத்துக்காதே அண்ணா... பெரியவனுக்குப் பெரிய இடத்தில் பொண்ணு எடுத்துட்டு, சின்னவனுக்கு நாச்சியை முடிச்சு வச்சா அவன் ரொம்ப

ஃபீல் பண்ணுவான்... ஏற்கெனவே பிரகாஷ் ரொம்பப் பிரஸ்டீஜ் பார்க்கிறவன்... அவனைப் பத்தி தான் உங்களுக்கே தெரியுமே..."

'ஆமாம்... அப்படியே உன்னைக் கொண்டு பிறந்திருக்கிறான்...' என்று மனதில் நினைத்த பொன்னுரங்கம் தங்கையிடம் ஒன்றும் சொல்லவில்லை...

பின்பு தந்தையிடம் பேசிய இராணி அண்ணனிடம் கூறியதை அப்படியே கூற சுப்பிரமணியம் எந்தவித உணர்வும் இல்லாது கேட்டு கொண்டவர்,

"பேரனுக்குத் திருமணம் கூடி வந்ததில் ரொம்பச் சந்தோசம்மா... அது போல் நாச்சிக்கும் மாப்பிள்ளை அமையும்ன்னு எனக்கு நம்பிக்கை இருக்கு..." என்றதோடு அவர் முடித்துக் கொண்டார்...

பொன்னுரங்கம் தான் தங்கை பேசிய பேச்சில் இருந்து வெளியில் வர முடியாது தவித்துக் கொண்டிருந்தார்... சித்ரவேணிக்கும் நாத்தனாரை பற்றி நன்கு தெரியும்... அதனால் அவரும் மாமனாரை போன்று இதைப் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை...

மறுநாள் வைத்தியநாதனின் காதிற்கு இந்த விசயம் சென்றுவிட்டது... வேறு யார் வேதநாயகி தான் புலம்பி தள்ளிவிட்டார்...

"அவளுக்கு என்ன அப்படியொரு பவிசு வந்திருச்சுன்னு இந்த ஆட்டம் ஆடுறா...? எல்லாம் இந்த மதுரை மண்ணில் பிறந்து வளர்ந்தவத் தானே... என்னமோ அமெரிக்காவில் பிறந்து வளர்ந்த மாதிரி ரொம்பத்தேன் அலட்டிக்கிறா..." என்று அவர் இராணியைத் திட்டி தீர்த்துவிட்டார்...

"அம்மா... சும்மா சும்மா புலம்பாம இதுக்கு என்ன தீர்வுன்னு யோசிங்க... அதை விட்டு அவளைப் பத்தி நீங்க புலம்பி என்னவாகப் போகுது...?" என்றுரைத்தவர்,

"அம்மா... நான் பொன்னு வீட்டுக்குப் போகிறேன்... நீங்க என் கூட வாங்க..." என்று அவர் அன்னையை உடன்

அழைத்தார்...

இதுவரை பொன்னுரங்கத்தின் வீட்டு வாசற்படி ஏறாத மகன் இன்று இப்படிச் சொன்னது கேட்டு வேதநாயகியின் முகம் மலர்ந்து விட்டது...

"வாய்யா போகலாம்..." என்று அவர் உடனே கிளம்பிவிட்டார்...

"ஏங்க... நானும் கூட வரட்டுங்களா..." பவ்யமாய்க் கேட்ட மனைவியைக் கண்டு வைத்தியநாதனுக்குச் சிரிப்பு வந்தது...

"என்னமோ மத்த நேரம் எல்லாம் என் கிட்ட கேட்டுட்டு போகிற மாதிரி பெர்மிசன் எல்லாம் கேட்கிற... சரி நீயும் வா..."

மூவரும் பொன்னுரங்கத்தின் வீட்டிற்குச் சென்றனர்... வாசலில் அமர்ந்து செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்த பொன்னுரங்கம் தனது நண்பனும், அத்தை மகனுமான வைத்தியநாதனின் திடீர் வருகையைக் கண்டு திகைத்துப் போனார்... ஆனாலும் வெளியில் எதையும் காட்டி கொள்ளவில்லை... மரியாதையின் பொருட்டு எழுந்தவர்,

"வாங்க..." என்று பொதுவாக வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார்...

அவர்கள் வந்த விசயத்தைக் கேட்டதும் சுப்பிரமணியம் அங்கு வந்து சேர, காபி கலந்து கொண்டு வந்த சித்ரவேணியும் என்ன நடக்கப் போகிறது என்பதைப் பார்க்கும் ஆவலில் அங்கேயே நின்று கொண்டார்...

"மதினி... என்ன விசயமாக இருக்கும்...?" சித்ரவேணி அருகில் நின்றிருந்த வைதேகியின் கையைச் சுரண்டினார்...

"எனக்கும் தெரியலையே மதினி..." வைதேகியும் புலம்பினார்...

பொன்னுரங்கம், வைத்தியநாதன் இருவருக்கும் இடையில் கனத்த அமைதி நிலவியது... முதலில் வைத்தியநான் தான் மௌனத்தைக் கலைத்தார்... எழுந்து பொன்னுரங்கத்தின் அருகில் சென்று அமர்ந்தவர் அவரது கைகளை இறுக பிடித்துக் கொண்டார்... அவரது கண்கள் உணர்ச்சியின் வேகத்தில் சிறிது கலங்கியிருந்தது...

நண்பனின் செயலில் பொன்னுரங்கத்தின் கோபமும் தூள் தூளாக உடைந்தது... அவரது கண்களும் கலங்கியது...

"பொன்னு... என் மகனுக்கு உன் பொண்ணைக் கட்டி கொடுக்க உனக்குச் சம்மதமாடா...?"

வைத்தியநாதன் இப்படிக் கேட்டது கண்டு திகைத்துப் போய்ப் பார்த்தார் அவர்... இதுவரை இப்படியொரு எண்ணம் அவருக்கு வந்ததில்லை... ஆனாலும் நண்பன் கேட்டது அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது என்றால் மிகையில்லை...

அழகை விட அருமையான மருமகன் அவருக்குக் கிடைத்துவிடக் கூடுமா இல்லை அவனை விட அவரது மகளை அன்பாகக் கவனித்துக் கொள்ளும் கணவன் தான் கிடைத்துவிடக் கூடுமா... நிச்சயமாக இல்லை என்பது தான் அவரது ஒரே பதில்...

"வைத்தி..." உணர்ச்சி வேகத்தில் வார்த்தை வராது தடுமாறினார் பொன்னுரங்கம்...

"உனக்கு விருப்பமா பொன்னு...? எங்க வீட்டுக்கு நாச்சியா மருமகளா வர்றதுக்கு நாங்க ரொம்பக் கொடுத்து வச்சியிருக்கணும்..."

"அழகு மருமகனா கிடைக்க நாங்க தான் கொடுத்து வச்சியிருக்கணும்..." அதிலேயே பொன்னுரங்கம் தனது சம்மதத்தைக் கூறிவிட... அங்கு ஆனந்தம் தாண்டவமாடியது எல்லோரது முகத்திலும்...

சுப்பிரமணியமும், வேதநாயகியும் ஒருவரை ஒருவர் அர்த்தத்துடன் பார்த்து கொண்டனர்... தாங்கள் எந்தவித

முயற்சியும் செய்யாமல் எல்லாம் சுபமாய் முடிந்ததில் அவர்கள் இருவருக்கும் மிகவும் சந்தோசமாக இருந்தது...

"மதினி பார்த்தீயா... வடக்கும், தெற்கும் ஒண்ணான கதையை..." மோவாயில் கை வைத்து அதிசயப்பட்டார் வைதேகி...

"மதினி... நீ இதைச் சொல்ற...ஆனா எனக்குக் கிழக்கும், மேற்கும் எப்போ ஒண்ணு சேருமோன்னு கவலையா இருக்கு..." சித்ரவேணி சொன்னதைக் கேட்டு திடுக்கிட்டுப் போய்ப் பார்த்தார் வைதேகி...

"நீ என்ன சொல்ற...?"

"எல்லாம் நான் பெத்து வச்ச வானரத்தை நினைச்சு தான் எனக்குக் கலவரமா இருக்கு..."

அதைக் கேட்டு சிரித்து விட்டார் வைதேகி...

"நாச்சி கொஞ்சம் விளையாட்டு பிள்ளை அவ்வளவு தான்... மத்தபடி நல்ல பொண்ணு தான்... அழகு அவளைப் பத்திரமா பார்த்துக்குவான் மதினி..."

"அது எல்லாம் சரி தான்... ஆனா என் மருமகனை யாரு பத்திரமா பார்த்துக்கிறது...?" சித்ரவேணி கேட்ட தொனியில் வாய் விட்டு சிரித்துவிட்டுக் கணவனிடம் முறைப்பை பரிசாக வாங்கிக் கொண்டார் வைதேகி...

"மதினி... கொஞ்சம் நேரம் பேசாம இரு... உங்க அண்ணன் என்னைய வெட்டவா, குத்தவான்னு பார்த்து வைக்கிறாரு..."

அதையே தான் தனது கணவனும் செய்து கொண்டிருப்பதைக் கண்டு சித்ரவேணி வாயை இறுக மூடி கொண்டார்...

"எப்படியிருக்க வைத்தி...?"

"உன் கூடப் பேசாம நான் எப்படிடா நல்லா இருப்பேன்... மனசு பூரா பாரத்தைச் சுமந்துக்கிட்டு அலைஞ்சிக்கிட்டு

இருக்கேன்..."

வைத்தியநாதனின் பேச்சில் பொன்னுரங்கத்தின் மனம் பாகாய் உருகிவிட்டது...

"நான் புத்தி கெட்டுப் போய்ப் பேசாம இருந்தா நீயும் என் கூடப் பேசாம இருந்திருவியா...?"

அன்றைய காலக் கட்டத்திற்குச் சென்றுவிட்ட வைத்தியநாதன் பதில் பேசாது அமைதியாகி விட்டார்... சில நேரங்களில் உண்மையைச் சொல்லாது இருப்பதற்கு மௌனம் ஒரு பெரிய கவசமாக மாறிப் பாதுகாக்கிறது...

"ராணி பேசியது எல்லாம் கேள்விப்பட்டேன் பொன்னு... அவளைப் பத்தி தான் உனக்குத் தெரியுமே... விட்டு தள்ளு... என் மருமக மகாராணி... அவளை மருமகளா அடைய அவளுக்குக் கொடுத்து வைக்கலை..."

வைத்தியநாதன் சொன்னது கேட்டு பொன்னுரங்கத்தின் முகம் யோசனையில் ஆழ்ந்தது... நண்பன் யோசிப்பதை கண்டு பேச்சை மாற்றினார் வைத்தியநாதன்...

"கல்யாணத்தை எப்போ வச்சுக்கலாம்ன்னு சொல்லுங்க மாமா..."

வைத்தியநாதன் தனது தாய்மாமனை பார்த்து கேட்க...

"இப்போதாவது ஒரு பெரிய மனுசன் நான் இருக்கேன்னு உங்க கண்ணுக்கு தெரிஞ்சதே..." பெரிய மனித தோரணையுடன் கால் மேல் கால் போட்டு அமர்ந்து கொண்டு மீசையை முறுக்கிய சுப்பிரமணியத்தைக் கண்டு எல்லோரும் சிரித்துவிட்டனர்...

அங்கே அழகு, வலமங்கை நிலை எப்போதும் போல் பகையோடு சென்று கொண்டிருந்தது... அவனைக் காணும் போது எல்லாம் அஜயை பற்றிப் பேசி அவனை வெறுப்பேற்றுவாள்... இல்லை அவனைக் கண்டு கொள்ளாது சென்று அவனைக் கோபப்படுத்துவாள்...

அழகு இது எதையும் கண்டு கொள்ளவில்லை... வீட்டில் விசயத்தைச் சொல்லியாகிவிட்டது... இனி அவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று நிம்மதியாக இருந்தான்... ஆனாலும் அவள் மேல் ஒரு கண் வைத்துக் கொண்டே இருந்தான்... வலமங்கை அவனை வெறுப்பேற்றினாலும் வரம்பு மீறி சென்று எந்த வம்பையும் விலைக்கு வாங்கவில்லை... அதனால் அவனுக்குக் கவலை அகன்றது...

நாட்கள் அது பாட்டிற்குச் சென்றது... ஒரு நாள் அழகின் அன்னை அவனை அழைத்து,

"அழகு... நம்ம ஊரில் திருவிழா வருதுப்பா... இந்தத் தடவையாவது வீட்டுக்கு வாயேன்..."

"திருவிழா வருசா வருசம் தான் வருது... அதுக்கு நான் என்ன பண்ணட்டும்மா..." என்று அவன் மறுக்க...

சித்ரவேணி அலைப்பேசியைப் பிடுங்கி, "மருமகனே... ஒழுங்கா இந்த அத்தை சொல் பேச்சு கேளு... இந்த முறை திருவிழாவுக்கு நீ கட்டாயம் வரணும்... இல்லைன்னா நான் உன் கூடப் பேச மாட்டேன்..." என்று கூற...

அதை மற்றவர்களும் ஆமோதித்தனர்... அழகு தலையைப் பிடித்துக் கொண்டான்... ஊருக்கு சென்றால் இன்னமும் அவனது தந்தை எல்கேஜி பாப்பா போல் தன்னை நடத்துவது கண்டு அவனுக்கு எரிச்சலாக இருக்கும்... அதே சமயம் எல்லோரையும் பார்க்க வேண்டும் என்றும் தோன்றியது... அதனால் இறுதியாகச் சரியென்று ஊருக்கு வர சம்மதம் தெரிவித்தான்...

பெரியவர்கள் விரித்த வலையில் அழகு வலிய வந்து மாட்டி கொண்டான்...

"உன் மருமகனை கூப்பிட்ட சரி... என் மருமகளை நான் கூப்பிட வேணாம்மா...?" என்றபடி வைதேகி அலைப்பேசியை எடுத்து வலமங்கைக்கு அழைக்கப் போனார்...

"ஐயோ மதினி... காரியத்தைக் கெடுத்தியே..." என்ற சித்ரவேணி பாய்ந்து வந்து அலைப்பேசியைப் பிடுங்கி கொண்டார்...

"அழகு மட்டும் கல்யாணத்துக்கு வந்தா போதுமா... என் மருமக இல்லாம எப்படிக் கல்யாணம் நடக்கும்..." கவலை கொண்டார் வைதேகி...

"நீ கூப்பிட்டா தான் அவள் வர மாட்டாள் மதினி... இப்போ தான் வேலைக்குச் சேர்ந்திருக்கிறேன்... இது என்ன உன் அப்பன் வீட்டு கம்பெனியான்னு ஆயிரம் நொட்டை காரணம் சொல்லுவாள்..."

"ஆமாம், ஆமாம்... நீ சொல்றது சரி தான்... நாச்சி சொல்லக் கூடியவள் தான்..." என்று ஆமோதித்தார் வைதேகி...

"அழகுவை நாம கிளப்பினால் பின்னாடியே நாச்சியும் கிளம்பி வந்துவிடுவாள்... அவன் எவ்வழியோ அவ்வழியே அவள் வழி..." என்று கூறி சிரித்தார் சித்ரவேணி...

சித்ரவேணி மகளைப் பற்றிக் கணித்தது நூற்றுக்கு நூறு உண்மையே...

***********************************

மறுநாளே அழகு வலமங்கையிடம் வந்து நின்றான்... அவளோ அவனைப் பார்க்காது வீம்பாய் கணினியை பார்த்து கொண்டிருந்தாள்... அருண் தான் இருவருக்கும் இடையில் பரிதாபமாக விழித்தான்...

"அருண்... இந்த வீக் என்ட் நான் ஊருக்கு போறேன்..."

அதைக் கேட்டு உள்ளுக்குள் அதிர்ந்தாலும் வெளியில் எதையும் காட்டி கொள்ளாமல் கணினி திரையை வெறித்துக் கொண்டிருந்தாள் வலமங்கை...

'இவன் எதுக்கு இப்போ ஊருக்குப் போறான்... என்ன விசயமா இருக்கும்...?' என்ற கேள்வி அவளது மண்டையைக் குடைந்தது...

ஆனால் அதற்கு எல்லாம் பதில் தராது அழகு வெறுமனே விசயத்தை மட்டும் கூறிவிட்டு செல்ல முற்பட்ட போது பாய்ந்து சென்று அவனது கைப்பிடித்துத் தடுத்து நிறுத்திய வலமங்கை,

"டேய்... இப்போ நீ எதுக்குடா ஊருக்கு போகிற... உண்மையைச் சொல்லு..." என்று ஏறக்குறைய மிரட்டல் த்வனியில் கேட்க...

அதைக் கண்டு அழகிற்குச் சிரிப்பு வந்தது... ஆனாலும் அடக்கி கொண்டு வெளியில் அவளைக் கண்டு முறைத்தபடி,

"அது எதுக்கு உனக்கு...?" என்றான் வீம்பாக...

இவனிடம் காரியமாக வேண்டும் என்றால் கெஞ்சினால் தான் சரி வரும் என்று உணர்ந்தவளாய்,

"ப்ளீஸ் சொல்லுடா..." கெஞ்சியவளை கண்டு அவனும் போனால் போகிறது என்பது போல் விசயத்தைக் கூறினான்...

"என்னது...?"

அவன் கூறியதை கேட்டு வலமங்கை பெருத்த அதிர்ச்சியடைந்தாள்... அவள் அதிர்ச்சியைக் கண்டு அழகுவும் சேர்ந்து அதிர்ச்சி அடைந்தான்... என்னவானது இவளுக்கு என்று...

"உன்னை மட்டும் திருவிழாவுக்குக் கூப்பிட்டு இருக்காங்க... என்னை இவங்க கூப்பிடலை பாரேன்... இந்த நாச்சி அந்தளவுக்கு இவங்களுக்குச் சீஃப்பா போயிட்டாளா..." என்று கோபத்தில் பல்லை கடித்தவள் நொடி நேரம் கூடத் தாமதியாது தனது வீட்டிற்கு அழைத்தாள்...

சித்ரவேணி அப்போது தான் சமையலுக்குக் கீரை ஆய்ந்து கொண்டிருந்தார்... உடன் வைதேகியும்... அலைப்பேசி அழைப்பதை கண்டு எடுத்து பார்த்த சித்ரவேணி,

"நான் நேத்தே சொன்னேன்ல மதினி..." என்றபடி அலைப்பேசியை வைதேகி முன் காட்டினார்...

அதில் ஒளிர்ந்த வலமங்கை பெயரை கண்டு வியந்து போய் மோவாயில் கை வைத்தார் வைதேகி...

"உனக்குத் தான் உன் பொண்ணைப் பத்தி நல்லா தெரிஞ்சியிருக்கு..."

"என்ன செய்ய...? பெத்து தொலைச்சிட்டேன்ல..." என்று அலுத்துக் கொண்டே அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்தார்...

"உங்க மனசுல நீங்க என்ன நினைச்சிக்கிட்டு இருக்கீங்க... அவனை மட்டும் வெத்திலை, பாக்கு வச்சு திருவிழாவுக்கு அழைக்கத் தெரியுது... என்னைய கூப்பிட தெரியாதா உங்களுக்கு...?" என்று ஏகத்துக்கும் அவள் எகிறினாள்...

அதை எல்லாம் தூசி போல் உதறி தள்ளிய சித்ரவேணி, "என்ன நாச்சி இப்படிச் சொல்லிட்ட...? உன் மேல பாசம் இருக்கப் போய்த் தான் கண்ணு உன்னைய கூப்பிடலை..." என்று அவர் தனது குரலில் நவரசத்தைப் பிழிந்தார்...

வலமங்கைக்குச் சற்றுச் சந்தேகமாகப் போய்விட்டது... பேசுவது தனது அன்னை தானா என்று... அலைப்பேசியை எடுத்து பார்த்தாள்... அன்னையின் எண் தான்...

"எம்மா பேசுறது நீ தானாம்மா...?"

"அட லூசு மவளே... உன் ஆத்தாக்காரி சித்ரவேணி தான் பேசுறேன்..." என்று மகளது சந்தேகத்தைத் தீர்த்து வைத்தவர்,

"நீ இப்போ தானே வேலைக்குச் சேர்ந்திருக்க... இப்போ போய் உன்னை நாங்க வீட்டுக்கு கூப்பிட்டால் அது உனக்குத் தானே கண்ணு தொந்திரவு... ஒருவேளை வேலையில் இருந்து உன்னைய தூக்கிட்டா என்ன செய்யக் கண்ணு..."

"ஓஹோ... அப்படி வேலையில் இருந்து தூக்கிருவானோ... தூக்கினா தூக்கிட்டு போகட்டும்மா... இது இல்லைன்னா இன்னொரு கம்பெனி..." அந்தக் கணம் அங்கு அவளைக் காந்தம் போன்று ஈர்க்கும் அஜயை அவள் மறந்து தான் போனாள்...

"அதுக்காக நான் நம்ம திருவிழாவுக்கு வராம இருக்க முடியுமா... வருசத்துக்கு ஒரு முறை வரும் விழா இது... பஞ்சு மிட்டாய், மிட்டாய் வாட்ச், பால் ஐசு எல்லாம் இப்போ தானே கிடைக்கும்... நான் கட்டாயம் திருவிழாவுக்கு வந்தே தீருவேன்..."

மகளின் பேச்சை கேட்டுத் தலையில் அடித்துக் கொண்டார் சித்ரவேணி... அங்கே அழகுவும் அதைத் தான் செய்து கொண்டிருந்தான்... அருணோ அவள் பேச ஆரம்பிக்கும் போது தலையில் கை வைத்து குனிந்தவன் தான் அதன் பிறகு நிமிரவே இல்லை...

"சரி நீயும் வா... மருமகன் இருந்தா ஃபோனை கொடு..."

அன்னை கூறியதும் அருணை முழங்கையால் இடித்தாள் அவள்...

"அம்மா அவன் கிட்ட பேசணுமா... இந்த ஃபோனை அவன் கிட்ட கொடு..."

அவள் சொல்லி முடிக்கும் முன் அவளை முறைத்துக் கொண்டே அதைத் தனது கையில் வாங்கிக் கொண்டான் அழகு...

"சொல்லுங்கத்தை..."

"பார்த்து பத்திரமா நாச்சியைக் கூட்டிட்டு வந்திருப்பா..."

"சரி அத்தை..." என்றவன் அலைப்பேசியை அணைத்து விட்டு மேசை மீது வைத்து விட்டு நகர்ந்தான்...

"டேய் அழகு..." அவள் கூப்பிட்டதும் அவன் திரும்பி பார்க்க...

"எப்போ டிக்கெட் போட போற...?" என்று அவள் கேட்க...

"நான் எதுக்கு உனக்குப் போடணும்...?" அவன் வேண்டுமென்றே புரியாத பாவனையைக் காண்பித்தான்...

"டேய்... உன் ரீலு அந்து போயி ரொம்ப நேரமாகுது... உன் அத்தை அதைத் தானே இவ்வளவு நேரமா உன் கிட்ட சொன்னது... ஒழுங்கு மரியாதையா பதில் சொல்லுடா..."

"எல்லாம் என் நேரம்டி..." என்று அலுத்து கொண்டாலும்,

"இந்த வெள்ளிக்கிழமை இரவு..." என்றான்...

"சாப்பிட்டுட்டு தானே போறோம்... ஏன்னா என்னால எல்லாம் பசி தாங்க முடியாதுப்பா..."

"ஆமாம்டி... பதினோரு மணிக்கு தான் பஸ்..."

அவன் அப்படிச் சொன்னதும் தான் அவள் நிம்மதியடைந்தாள்... அவன் சாப்பாட்டைப் பற்றிப் பேசியது நிம்மதி தான் என்றாலும் அவனும் உடன் வருவதாய்ச் சொன்னது இன்னமும் அவளுக்கு நிம்மதியாக இருந்தது... ஊர் போய்ச் சேரும் வரை நிம்மதியாக உறங்கி கொண்டு செல்லலாமே... அது தான் அவளுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது...

அஜயிடம் அவள் விடுமுறை வேண்டி நின்ற போது அவன் முடியவே முடியாது என்று நிலையாய் நின்றான்...

"வேலைக்குச் சேர்ந்து ஒரு மாசம் கூட ஆகலை... அதுக்குள்ள லீவா...? நோ வே..." என்று அவன் மறுக்க...

அவளோ பாவம் போல் முகத்தை வைத்துக் கொண்டு, "எனக்கு இருக்கிறது ஒரே ஒரு பாட்டி... இப்பவோ அப்பவோன்னு இழுத்துக்கிட்டு இருக்கு... நான் போய்ப் பாலை ஊத்தினால் தான் பொட்டுன்னு உயிரை விடும்... பார்த்து செய்ங்க அஜய்..."

அவள் கூறிய பாவனையிலேயே அவனுக்குத் தெரிந்து போனது... அவள் பொய் கூறுகிறாள் என்று... அவளது சாமார்த்தியத்தைக் கண்டு அவனது உதடுகளில் மெச்சுதல் புன்னகை தோன்றியது...

"பொய் சொல்லக்கூடாது மிஸ். வலமங்கை நாச்சி...யார்..."

'ஐயோ மறுபடியும் பெயரை சொல்லி மனசை அள்ளுறானே...' என்று மனதிற்குள் ஜொள்ளியவள்,

"இல்லை அஜய்... சாமி சத்தியமா..." இரு விழிகளையும் உருட்டியபடி, தனது கையில் அடித்துச் சத்தியம் செய்து சொன்னவளை கண்டு, அவன் தான் வகிக்கும் பதவியை மறந்து வாய் விட்டு சிரித்து விட்டான்...

அவனது கம்பீரமான சிரிப்பை ஆர்வமாய்ப் பார்த்து கொண்டிருந்தாள் வலமங்கை...

"மீண்டும் பொய்..." கையிலிருந்த பேனாவை ஆட்டியபடி கூறியவனைக் கண்டு,

"இல்லை அஜய் இது சத்தியமான மெய்..." என்க...

"உண்மையைச் சொன்னா லீவு கொடுக்கிறேன்... பொய்க்கு எல்லாம் லீவு கிடையாது..."

வேறுவழியின்றி அவள் உண்மையை ஒத்து கொண்டாள்...

"சோ திருவிழாவுக்குப் போவதற்குத் தான் இத்தனை பொய்யா...?"

"என்ன இப்படிச் சாதாரணமா சொல்லிட்டீங்க... எங்க ஊரு திருவிழாவை நேரில் வந்து பாருங்க எப்படி இருக்கும்ன்னு..." பெருமையாய் கூறியவளை கூர்ந்து பார்த்தவனுக்கு அவளிடம் இருந்த ஏதோ ஒன்று அவனைப் பெரிதாய் ஈர்த்தது...

எது என்று அவன் யோசித்த போது விடை மின்னலாய் பளிச்சிட்டது மனதினுள்... எந்தக் குணங்களுக்காக அவளை வெறுத்தானோ அந்தக் குணங்களே அவனை ஈர்த்து அவளை நோக்கி செல்ல வைத்தது...

மனதில் எந்தவித கல்மிசமும் இல்லாது வெள்ளை மனதுடன் இருந்த அந்தக் குழந்தை குமரியவள்

அழுத்தமாய்த் தனது காலடி தடத்தை அழுத்தி பதித்து அவனுள் உட்பிரவேசித்தாள் குதூகலமாக...!!!

தித்திக்கும்...!!!

அஜய் தன் முன் நின்றிருந்த வலமங்கையை உற்று நோக்கினான்... ஏனோ தானோ என்று நேர்த்தியில்லாது உடை உடுத்தி, எந்தவித ஒப்பனையும் இல்லாது இருந்த அவள் எந்தவிதத்தில் அவனை ஈர்க்கிறாள் என்று அவனுக்குத் தெரியவில்லை...

பெரிதாக அழகு இல்லை... சரி அழகு தான் இல்லை என்றாலும் பரவாயில்லை திறமையாவது இருக்கிறதா...? அதுவும் கிடையாது... அவள் வேலைக்குச் சேர்ந்த இத்தனை நாட்களில் அவளின் வேலை திறமை பற்றித் தான் அவனுக்கு நன்கு தெரியுமே... எதையும் சொல்லி கொடுத்தால் மட்டுமே கற்பூரமாய்ப் பற்றிக் கொள்பவள்... மத்தபடி வேலையில் எப்போதுமே ஒருவித அசட்டை இருக்கும் அவளிடத்தில்...

அடுத்தவர்களிடம் பழகும் நாசுக்காவது இருக்கிறதா என்றால், அதற்கும் அவனது பதில் இல்லை தான்... இருந்த போதும் இந்தப் பெண் அவனது கருத்தினைக் கவர்ந்து மனதினையும் வெகுவாய் கவர்ந்தாள்...

பார்த்தவுடன் ஒரு ஆணை கவர கூடிய எந்த அம்சமும் அவளிடத்தில் இல்லாது இருக்கலாம்... ஆனால் அவளிடத்தில் அடுத்தவர்களைச் சிரிக்க வைக்கும் நல்ல குணம் இருந்தது... அத்தோடு யாரையும் நோகடித்துப் பேசாத அவளது குணம் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது...

கணினி துறையில் எத்தனையோ டென்சன்களோடு பணி புரியும் அவனுக்கு எப்போதுமே கோபம் வரும்... ஆனால் கொஞ்ச நாட்களாக அவனது மன அழுத்தம் சுத்தமாக மறைந்து போயிருந்தது... அதற்குக் காரணம் வலமங்கை என்றால் மிகையில்லை... தினம் தினம் அவள் செய்யும் குட்டி கலாட்டாக்களில் அவன் தனது மன அழுத்தத்தினை மறந்தான்... தனது கோபத்தை மறந்தான்... மொத்தத்தில் அவளது குறும்புத்தனத்தை ரசிக்கப் பழகியிருந்தான்... அது தான் அவனை அவளிடத்தில் ஈர்க்கின்றது...

"ஆக உன் வேலையை எல்லாம் என் தலையில் கட்டிவிட்டுப் போகத் தயாராகிட்ட அப்படித்தானே...?"

அவளிடம் பேச்சு வளர்க்க வேண்டி அவன் அப்படிக் கூறினான்...

"ஐயோ அஜய்... இது அடுக்குமா...? இது தகுமா...? நான் அப்படி எல்லாம் நினைத்தது கூடக் கிடையாது... கொஞ்சம் இருங்க..." என்று அனுமதி வேண்டி கொண்டு அவள் வெளியில் செல்ல...

அடுத்து அவள் ஏதோ பெரிதாய் கலாட்டா பண்ண போகிறாள் என்பதை உணர்ந்தவனாய் அஜய் அவளுக்காக ஆர்வமாய்க் காத்திருந்தான்... ஐந்தே நிமிடத்தில் மீண்டும் உள்ளே வந்தவள் உடன் அருணை அழைத்து வந்தாள்...

"என் வேலைகளை எல்லாம் நான் வரும் வரை என் உயிர் நண்பன் அருண் பார்த்துக்குவான் அஜய்..." என்று அஜயிடம் கூறியவள் அருணிடம்,

"அப்படித்தானேடா..."

அப்பாவி அருண் அஜய் முன் மறுத்து பேச முடியாது பரிதாபமாய்த் தலையாட்டி வைத்தான்...

"நான் சொன்னேன்ல என் உயிர் நண்பன்னு... எனக்காக அவன் உயிரை கூடத் தருவான்..." என்று அவள் பெருமையாக அருணை பார்க்க... அருணோ அவளைப் பயத்துடன் பார்த்தான்... நம் உயிரை இவள் வாங்காது விட மாட்டாள் என்பது போல்...

"இப்போ ஓகேவா...?" என்று வலமங்கை கேட்க...

'இவளை என்ன செய்தால் தகும்...?' என்று நினைத்த அஜய்க்குச் சிரிப்பு பீறிட்டது... ஆனாலும் முயன்று அடக்கி கொண்டான்...

"அருண்... நீங்க போகலாம்..." என்று அருணை அனுப்பி வைத்தவன்,

"மிஸ். வலமங்கை நாச்சி...யார்... நீ இரு..."

"எதுக்கு...?"

"நான் இன்னும் உனக்கு லீவு சாங்க்சன் பண்ணவே இல்லையே..."

அவன் கூறியதை கேட்டு முகம் வாடி போனாள் வலமங்கை... என்றும் புன்னகையுடன் இருக்கும் அவளது முகம் வாடி போனதில் அவனது மனமும் சேர்ந்து வாடியது...

"உனக்காக மாற்று ஏற்பாடு எல்லாம் பண்ணிட்டு போகிற... அதற்காகவாவது உனக்கு லீவு கொடுத்து தான் ஆகவேண்டும்..."

அவனது வார்த்தையில் அவளது முகம் பூவாய் மலர்ந்தது...

"தேங்க்யூ அஜய்..." என்று சிறு பிள்ளை போல் குதூகலம் அடைந்தவளை கண்டு அவனுக்கும் மகிழ்ச்சியாக இருந்தது...

நன்றி உரைத்துவிட்டுக் கிளம்பப் போனவளை தடுத்து நிறுத்தியவன், "யாரோ ஊருக்கு எல்லாம் வரச் சொல்லி கூப்பிட்டாங்க... இப்போ காரியமானதும் கழட்டி விட்டுட்டாங்களே..."

"ஹி... ஹி... அப்படியெல்லாம் இல்லை அஜய்... நீங்க எப்போ வேணும்ன்னாலும் வரலாம்..." என்றவளை கூர்ந்து பார்த்தவன்,

"ம்ஹூம்... அப்படியா... கண்டிப்பா ஒரு நாள் உங்க ஊருக்கு வரத்தான் போகிறேன்..."

"வாங்க... வாங்க..." என்று புன்னகைத்தவள்,

"இப்போ நான் போகலாமா...?"

"தாராளமா..." என்று அவன் அறைக்கதவை கை காட்டினான்...

வலமங்கை சென்றதும் அந்த அறையினுள் ஒருவித வெறுமை சூழ்ந்து கொண்டதை அவன் உணர்ந்தான்... அவனுக்கு எந்தவிதத்திலும் அவள் பொருத்தம் இல்லை தான்... ஆனாலும் அவனது மனது அவளிடத்திலேயே மையம் கொண்டிருந்தது...

அவன் உடல் பொருத்தத்தை விட மனப்பொருத்தத்தைத் தான் அதிகம் விரும்பினான்... வலமங்கையால் மட்டுமே தன்னைச் சந்தோசமாக வைத்திருக்க முடியும் என்று அவன் உறுதியாக நம்பினான்...

அதோ இதோ என்று அழகுவும், வலமங்கையும் ஊருக்கு கிளம்பும் நாளும் வந்தது... அழகு அவளுக்கு வாக்குக் கொடுத்தது போல் பேருந்து நிலையத்திற்குச் செல்லும் முன் அவளுக்கு உணவு விடுதியில் பரோட்டாவும், கறிக்குழம்பும் வாங்கிக் கொடுத்து அவளது வயிற்றைக் குளிர்வித்தான்...

பேருந்தில் ஏறி அவளது இருக்கையில் அவளை அமர சொன்னவன் அவளுக்குப் பின்பக்கம் இருந்த இருக்கையில் அவன் அமர்ந்தான்...

"டேய் இதை விட நல்லா பஸ்ஸா பார்த்து டிக்கெட் போட்டிருக்கலாமே..." பேருந்தை சுற்றிலும் பார்த்துக் கொண்டு அவள் கேட்டாள்...

"இப்படித் திடீர்ன்னு கிளம்பினால் இது தான் கிடைக்கும்... வாயை மூடிட்டு பேசாம வா..."

அவன் கூறியதை கேட்டு திரும்பி பார்த்து அவனை முறைத்துவிட்டு சிறிது நேரம் அமைதியாக இருந்தாள்... பின் அவன் புறம் திரும்பி,

"டேய்... உன்னால நான் ஒரு திங்க்சும் கொண்டு வரலை... எனக்கு என் டெடிபியரை கட்டிப்பிடிக்காம தூக்கம் வராது... இப்போ நான் என்ன செய்றதுடா...?" என்று சிணுங்கியவளை அவன் முறைத்து பார்த்ததில் அவள் சட்டென்று வாயை மூடி கொண்டாள்...

இந்தப் பயணம் முழுவதும் அவனின் துணை வேண்டுமே... தன் விதியை சபித்தபடி மனதிற்குள் முணுமுணுத்து கொண்டாள்...

திடுமென அழகு எழுந்ததில் பயந்து போனவளாய், "எங்கேடா போகிற...?"

"ஆம்பிளைக்கு ஆயிரம் வேலையிருக்கும்... அதை எல்லாம் உன் கிட்ட சொல்லிட்டு இருக்க முடியாது..."

"ஏய்... நீ தம் அடிப்பியா...?" என்று கேட்டவள் அவனைச் சந்தேகமாய்ப் பார்த்து வைத்தாள்...

"கொழுப்புடி உனக்கு..." என்று பல்லை கடித்தவன்,

"அப்படித் தம் அடிச்சா தான் என்ன...?" என்று திமிராகக் கேட்டான்...

"இரு, இரு... உன்னை மாமா கிட்ட சொல்லிக் கொடுக்கிறேன்..."

தந்தை என்றதும் அழகு கையெடுத்து கும்பிட்டு விட்டான்...

"அம்மா, தாயே... ரொம்ப வருசம் கழிச்சு ஊருக்குப் போகிறேன்... நீ பாட்டுக்கு போட்டு கொடுத்துக் கொடுமை பண்ணிடாதே..."

"அது அந்தப் பயம் இருக்கட்டும்..."

"எல்லாம் என் நேரம்டி..." என்று முணுமுணுத்துக் கொண்டே அவன் சென்றான்...

அழகு சென்று வெகுநேரமாகியும் அவனைக் காணவில்லை... வலமங்கை மனதில் பதற்றம் தொற்றிக் கொண்டது...

"கொஞ்சம் நகர்ந்து உட்காரும்மா..." என்றபடி அவளை இடித்துக் கொண்டு உடல் பருமனான ஒரு பெண்மணி அவளருகில் அமர்ந்தார்...

மற்ற நேரமாக இருந்தால் அவரை அவள் கிண்டலடித்து இருப்பாள்... இன்று அவளுக்கு இருந்த மனநிலையில் எதையும் கவனிக்கும் நிலையில் இல்லை...

அதே நேரம் பேருந்து கிளம்ப ஆயத்தமானது... அவ்வளவு தான் வலமங்கையின் பதற்றம் இன்னமும் அதிகரிக்க ஜன்னல் வழியே எட்டிப்பார்த்து அழகினை தேடினாள்... எங்கும் அவனைக் காணவில்லை... அவனைக் காணாது அவளது கண்களில் கண்ணீர் அரும்பியது...

தவிப்புடன் இருந்தவளின் காதில், "மங்கை..." என்று அழகின் குரல் தேனாய்ப் பாய்ந்தது...

"இவ்வளவு நேரம் எங்கேடா போய்த் தொலைஞ்ச...?"

தனது பதட்டத்தை அவனிடம் காட்டாது அவனிடம் எரிந்து விழுந்தாள் அவள்... பதிலுக்குக் கோபமாய்ப் பேச போன அழகு அப்போது தான் கவனித்தான் அவளது கண்கள் கலங்கி இருப்பதை... அதைக் கண்டு அவன் தனது நாவை அடக்கி கொண்டான்...

தனது கையிலிருந்த பையை அவளிடம் கொடுத்து, "உனக்கு அரைக்கிறதுக்கு ஸ்நாக்ஸ் வாங்க போனேன்..." என்றுரைத்து விட்டு அவன் தனது இடத்தில் சென்று அமர்ந்தான்...

எப்போதும் தின்பண்டம் கொடுத்தால் சந்தோசமாய் வாங்கிக் கொள்ளும் அவளுக்கு இன்று ஏனோ சந்தோசமாக இல்லை... அமைதியாக அதை வாங்கி வைத்து கொண்டாள்... உம்மென்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு இருந்தவளை கண்டு அவனுக்குமே ஒரு மாதிரியாக இருந்தது...

"மங்கை..." பின்னால் இருந்து மெதுவே அவளை அழைத்தான் அவன்...

"என்ன...?" திரும்பி பார்க்காமல் கேட்டாள் அவள்...

"உனக்கு டெடிபியரை கட்டிப்பிடிச்சா தானே தூக்கம் வரும்...?"

"ஆமாம்... அதுக்கு என்ன இப்போ...?"

"உன் பக்கத்திலேயே எவ்வளவு பெரிய டெடிபியர் இருக்கு பாரு..."

அவள் அருகில் அமர்ந்திருந்த குண்டு பெண்மணியை அவன் சுட்டிக்காட்டி சொன்னான்... அவன் கூறியதை கேட்டு அவனைத் திரும்பி பார்த்து முறைக்க முயன்று முடியாது போனவள் சிரித்து விட்டாள்...

அவளது புன்னகை முகத்தைக் கண்டதும் தான் அவனுக்குச் சற்று நிம்மதியாக இருந்தது... வலமங்கைக்கும், கண்ணீருக்கும் சற்றும் சம்பந்தமில்லையே...

"டேய் அழகு... நீ இங்கே வாயேன்டா..."

"நானா...? வேண்டாம் தாயே... அப்புறம் கால் போட்டேன், கை போட்டேன்னு என்னைத் திட்டுவ..."

"பரவாயில்லை வாடா..." என்று அவள் கூற...

அழகு அந்தப் பெண்மணியிடம் இருக்கை மாற்றிக் கேட்டான்... ஜன்னலோர இருக்கை என்றதும் அந்தப் பெண்மணி சந்தோசத்துடன் மாறி அமர்ந்து கொண்டார்...

"நீ இன்னுமா ஸ்டார்ட் பண்ணலை...?" அழகு அவளைப் பார்த்து கேட்க...

"எதை...?"

"அதான் அரைக்கிறதை..." என்று கூறியவன் கண்களால் தின்பண்டங்களைச் சுட்டிக்காட்டினான்...

"மறந்தே போயிட்டேன்டா... நல்லவேளை ஞாபகப்படுத்தின..." என்றவள் உருளைக்கிழங்கு வறுவலை எடுத்து உண்ண ஆரம்பித்தாள்...

"பக்கத்தில் ஒருத்தன் இருக்கானே... அவனுக்குக் கொடுக்கணும்ன்னு கொஞ்சமாவது அறிவு இருக்காடி குள்ளச்சி..."

"நீ ஏற்கெனவே கறுப்பா இருக்கக் கருவாயா... இந்த லட்சணத்துல நீ வறுவல் சாப்பிட்டேன்னு வச்சுக்கோ... இன்னும் கறுப்பா போயிருவ..." என்றவளுக்கு அவனுக்குக் கொடுக்கும் எண்ணம் சிறிதும் இல்லை...

சிறிது நேரம் வறுவலை அரைத்து கொண்டிருந்தவள் பின்னர்ப் போனால் போகிறது என்று அதை அவனிடத்தில் நீட்டினாள்...

"எனக்கு வேண்டாம்... நான் இன்னமும் கறுப்பானால் யார் என்னைக் கல்யாணம் பண்ணிக்குவாங்க...? வேண்டாம்டி குள்ளச்சி..." என்று நமட்டுச் சிரிப்போடு மறுத்தான் அழகு...

"கவலைப்படாதேடா... வேணும்ன்னா நான் உனக்கு வாழ்க்கை கொடுக்கிறேன்..."

ஏதோ போனால் போகிறது என்பது போல் கூறியவளை கண்டு,

"என்னது...? நீயா...?" என்று பயத்தில் அலறியவன்,

"எனக்குக் கல்யாணமே ஆகலைன்னாலும் பரவாயில்லை... இந்தத் தண்டனை மட்டும் எனக்குக் கொடுத்து விடாதேடி... நான் பாவம்..."

"ஹா... ஹா... அந்தப் பயம் உனக்கு எப்போதும் இருக்கணும் கருவாயா... சரி, சரி கவலைப்படாதே... நானே உனக்கு நல்ல பொண்ணா பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்கிறேன்..."

"இது பேச்சு..." என்று அவளை மெச்சியவன் தனது கையிலிருந்த பத்திரிக்கையில் ஆழ்ந்தான்...

சிறிது நேரத்தில் அவனது தோள் பாரமானது போல் உணர்வு... திரும்பி பார்த்தவனுக்குப் புரிந்து போனது அது

எதனால் என்று... வலமங்கை தூக்கத்தில் அவனது தோள் சாய்ந்து இருந்தாள்...

"சாப்பிட, தூங்க இந்த ரெண்டு வேலையை மட்டும், ஒழுங்கா செய்யத் தெரியுது... மத்த ஒரு வேலையும் ஒழுங்கா செய்யத் தெரியாது..." என்று செல்லமாய்க் கடிந்தவன் அவளைத் தனது மடியில் வாகாய் படுக்க வைத்து அவள் அணிந்திருந்த சுடிதார் துப்பட்டா எடுத்து அவளுக்குப் போர்த்திவிட்டான்...

தூங்கும் போது மட்டுமே அவள் அமைதியாக இருப்பதைக் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது... அவளைப் பார்த்து கொண்டிருந்தவனுக்கு அவள் பேசிய வார்த்தைகள் நினைவில் எழுந்தது...

'நீ எனக்கு வாழ்க்கை கொடுக்கிறியா...? கொழுப்புடி உனக்கு... அப்போ நீ இன்னும் யாரையும் காதலிக்கலை... நான் அதற்கு மறுப்புத் தெரிவித்ததும் நீ அந்த எண்ணத்தைக் கைவிட்டுட்ட அப்படித்தானே...? ஆனாலும் உண்மையை ஒத்துக்காம நீ காட்டுகிற கெத்து இருக்கே... அப்பப்பா ஊரில் உள்ள கொழுப்பு எல்லாம் உன் ஒருத்தி கிட்ட தான்டி இருக்கு...'

அவளின் மனதில் யாருமில்லை என்பதை அறிந்து கொண்டவனுக்குப் பெருத்த நிம்மதி ஏற்பட்டது... இதுநாள் வரை அவனது மனதினை அரித்துக் கொண்டிருந்த குற்றவுணர்ச்சி இந்த நொடி மாயமாய்க் காணாமல் போனது...

நிம்மதியுடன் கையிலிருந்த பத்திரிக்கையில் கவனத்தைச் செலுத்தினான்... அவன் தனியாக வந்திருந்தால் இந்நேரம் குறட்டை விட்டு தூங்கியிருப்பான்... இப்போது உடன் வலமங்கை வருவதால் அவனது பொறுப்பு அதிகரித்து இருந்தது...

இடையில் பேருந்து ஒரு இடத்தில் நின்றது... அதில் விழித்துக் கொண்டாள் வலமங்கை... அழகின் மடியில் தான் படுத்திருப்பதைக் கண்டு,

"உன் மடியில் தான் படுத்திருந்தேனா... அதனால் தான் முள்ளு குத்துறது போலிருந்ததா...? கொஞ்சம் வெயிட் போடுடா... அப்போ தான் பஞ்சு மெத்தை போலிருக்கும்..."

"மங்கை..." என்று அவன் பல்லை கடிக்க...

"ஹி... ஹி..." என்று அசடு வழிந்தவள்,

"எனக்குக் காபி வேணும் அழகு... ப்ளீஸ்டா..."

அவள் சும்மா கேட்டாலே அவன் வாங்கிக் கொடுத்திருப்பான்... இதில் கெஞ்சி கேட்கவும் சரியென்றபடி எழுந்து சென்றான்...

இருவரும் காபி குடித்து முடிக்கவும் பேருந்து கிளம்பவும் சரியாக இருந்தது... அழகு கொட்டாவி விட்டுக் கொண்டு வருவதைக் கண்டவள்,

"நீ வேணா தூங்கு அழகு..."

"வேணாம்..." என்று அவன் மறுக்க...

"டேய் கருவாயா... உன்னை யாரும் தூக்கிட்டு போகாம நான் பத்திரமா பார்த்துக்கிறேன்... நீ தூங்கு..."

"எல்லாம் என் நேரம்டி..." என்றவன் கண்ணயர ஆரம்பித்தான்...

அடுத்த நொடி ஆழ்ந்த உறக்கத்திற்குச் சென்றவன் தலை அவளது தோள் பக்கமாய்ச் சாய்ந்தது... அந்தத் தூக்க கலக்கத்திலும் அவளிடம் இருந்து விலகியவனைக் கண்டு அவளுக்கு ஆச்சிரியமாக இருந்தது...

"பரவாயில்லை அழகு... படுத்துக்கோ..." என்றபடி அவனைத் தனது தோளில் தாங்கி கொண்டாள் அவள்...

அதே நேரம் அவர்களது வீட்டில் வைதேகி சிறிது பதட்டத்துடன் இருந்தார்...

"மதினி... நாச்சி ஏதாவது தகராறு பண்ணினா என்ன பண்றது...? எனக்கு என்னமோ நாளைய பொழுதை

நினைச்சா இப்பவே ரொம்பப் பயமாயிருக்கு..."

"இதில் கவலைப்பட ஒண்ணுமே இல்லை மதினி... உன் மருமகளுக்குப் பிடிச்ச ரவா லட்டும், திரட்டு பாலும் செஞ்சு மணவறையில் அவளுக்குப் பக்கத்தில் வச்சிரு... அதைத் தின்னுக்கிட்டே மாப்பிள்ளை யாருன்னு கூடப் பார்க்காம தாலி வாங்கிக்குவாள்..." என்று சித்ரவேணி அவரைச் சமாதானம் செய்தார்...

"மதினி... இந்தக் கல்யாணம் சரி வருமா...?" வைதேகியின் குரலில் உண்மையான கவலை இருந்ததைக் கண்டு அவரை ஆறுதல்படுத்தினார் சித்ரவேணி...

"நம்ம பிள்ளைங்க மேல எனக்கு நம்பிக்கை இருக்கு..." என்று அவர் நம்பிக்கையுடன் சொல்ல... அதில் வைதேகி சற்று மனம் தெளிந்தார்...

அதிகாலையில் ஊர் வந்து சேர்ந்ததும் தான் அழகு கண் விழித்தான்... அவளது தோளில் தலை வைத்து தான் படுத்திருந்ததை உணர்ந்து சங்கடமாய் அவளைப் பார்த்து புன்னகைத்தவன்,

"சாரி..." என்க...

"சாரி கேட்டா எல்லாம் சரியா போச்சா... நீ படுத்து என் தோள்பட்டை எல்லாம் வலிக்குது... அதனால..." என்று அவள் இழுக்க...

"அதனால...?" அவன் கேள்வியாக அவளைப் பார்த்தான்...

"ஒரு ஐஞ்சு கிலோ ஸ்வீட் பாக்ஸ் வாங்கிக் கொடு... என் தோள் வலி எல்லாம் பறந்து போயிரும்..."

பேருந்து படிக்கட்டில் இருந்து துள்ளி குதித்து இறங்கியபடி கூறியவளை அவன் புரியாது பார்த்தான்...

"தோள் வலிக்கும், ஸ்வீட்க்கும் என்னடி சம்பந்தம்...?"

"அது எல்லாம் அப்படித்தான்... உன்னால் வாங்கிக் கொடுக்க முடியுமா...? முடியாதா...?"

"இப்போ எந்தக் கடையும் திறந்திருக்காது... பிறகு வாங்கித் தர்றேன்... இப்போ நீ சீக்கிரம் வா..." அவளை அழைத்துக் கொண்டு அவன் பேருந்து நிலையத்தை விட்டு வெளியில் வந்த போது பொன்னுரங்கம் காரோடு அவர்களுக்காகக் காத்திருந்தார்...

"மாமா... நீங்க எங்கே இங்கே...?"

"உங்க ரெண்டு பேரையும் கூட்டிட்டுப் போகத்தான் வந்தேன்..." என்றவர்,

"எப்படியிருக்க மருமகனே...?" என்று பாசத்தோடு கேட்க...

"எனக்கென்ன மாமா... நல்லாயிருக்கேன்..."

"அப்பா... இது அநியாயம்... நீங்க பெத்த மகள் நான் கல்லு குண்டாட்டம் உங்க கண் முன்னாடி நிற்கிறேன்... என்னைய ஒரு வார்த்தை கேட்க மாட்டீங்களா...?" என்று வலமங்கை சிலிர்த்துக் கொண்டு தந்தையிடம் சண்டைக்கு நிற்க...

"அதான் நீயே சொல்லிட்டியே... கல்லு குண்டாட்டம் இருக்கேன்னு... அதுக்கு அப்புறம் நலம் விசாரிக்க என்ன இருக்கு...?"

"அச்சோ சிங்கம் தானா அசிங்கப்பட்டுப் போச்சே..." என்று அவள் முணுமுணுக்க...

அதைக் கேட்டு அழகு சிரித்து விட்டான்... அவன் சிரிப்பதை கண்டு அவள் அவனை முறைத்து பார்த்தாள்...

"ரெண்டு பேரும் காரில் ஏறுங்க..."

பொன்னுரங்கம் கூறியதை கேட்டு வலமங்கை கண்களை அகல விரித்தாள்...

"ஐய்... எங்களைக் கூட்டிட்டுப் போகக் கார் எல்லாம் எடுத்துட்டு வந்திருக்கீங்களா...?"

காரை ஆசையுடன் பார்த்தபடி கேட்டவள் உடனே அதில் ஏறி அமர்ந்து கொண்டாள்...

"எதுக்கு மாமா தண்டச் செலவு...? நாங்க ஆட்டோ பிடிச்சு வீட்டுக்கு வந்திருப்போமே...?" அழகு கவலையுடன் கேட்க...

"இருக்கட்டும் மருமகனே... முதல்ல நீ காரிலேறு..." என்று கூறினார் அவர்...

மூவரும் ஏறியமர்ந்ததும் கார் கிளம்பியது...

**********************

வீட்டிற்குள் நுழையும் போதே வலமங்கைக்கு ஏதோ ஒன்று வித்தியாசமாகத் தோன்றியது... வீட்டு வாசலில் கட்டியிருந்த வாழை மரங்கள், குழுமியிருந்த உறவினர் கூட்டங்கள் என்று எல்லாமே அவளுக்குப் புதுமையாக இருந்தது...

திருவிழாவிற்கு அவளது உறவினர்கள் வருகை தருவார்கள் தான்... ஆனால் இது சற்று வேறுபாடாக இருந்தது...

எத்தனை நேரம் அவளிடம் இருந்து விசயத்தை மறைக்க முடியும்... விசயம் கேள்விப்பட்டதும் தாம்தூம் என்று குதித்தாள் அவள்...

"என்னது நாளான்னைக்கு எனக்குக் கல்யாணமா...? யாரை கேட்டுட்டு இந்த ஏற்பாட்டைப் பண்ணினீங்க...? எனக்கு என் கல்யாணத்தைப் பத்தி எத்தனை ஆசைகள், கனவுகள் இருக்கும்... அதை எல்லாம் நொடியில் அழிச்சிட்டீங்களே..." என்று அந்தக் கால நடிகை போல் நெற்றியில் கை வைத்தபடி சோக கீதம் வாசித்தவளை கண்டு எல்லோரும் திகைத்து போயினர்...

சித்ரவேணி ஒரு பெண்ணாய் மகளுக்காக மனம் வருந்தினார்... திருமணத்தில் அவளது விருப்பம் கேட்டு இருக்க வேண்டுமோ என்று அவரது மனதில் கேள்வி எழுந்தது...

அவளது தந்தையும், தாத்தாவும் செய்வதறியாது நின்றிருந்தனர்...

"அம்மா... நீங்க ஒரு பொண்ணு தானே... ஒரு பொண்ணோட மனசு ஒரு பொண்ணுக்கு தானே தெரியும்... ஏம்மா என்னோட மனசு உங்களுக்குத் தெரியாம போச்சு..."

"அது வந்து நாச்சி..." என்ன கூறி மகளைச் சமாதானம் செய்வது என்று தெரியாது விழித்தார் அவர்...

"பாருங்கம்மா... நீங்க வாங்கி வச்சியிருக்கிற பட்டுப்புடவைகள், நகைகளை எல்லாம் நல்லா பாருங்க..."

அங்குக் கட்டிலில் பரத்தி வைக்கப்பட்டிருந்த பட்டுப்புடவைகள், நகைகளைச் சுட்டிக்காட்டியவள் அதிலிருந்து ஒரு பட்டுப்புடவையைக் கையில் எடுத்து அதிலிருந்த சரிகை கரையைக் கையினால் அளந்தவள்,

"என் கல்யாணத்துக்கு ஒரு முழ நீளத்திற்குச் சரிகை வச்சு முகூர்த்தப்புடவை எடுக்கணும்ன்னு எனக்கு ஆசை இருந்தது... ஆனா நீங்க உள்ளங்கை அகல அளவு கூடச் சரிகையில்லாம புடவை எடுத்திருக்கீங்க... அப்புறம் இந்த நகைங்க... இத்தனை மெல்லிசா நான் உங்க கிட்ட கேட்டேனா...? எனக்குக் கோவில் சிலை போட்டிருக்கிற மாதிரி உளி உளியா, பெருசு பெருசா நகைங்க வேணும்... கடையில் போய் 'antique jewelry'ன்னு கேட்டு பாருங்க... விதம் விதமா எடுத்து காட்டுவான்..."

"என் கல்யாணம் பற்றி எத்தனை ஆசைகள் வச்சிருந்தேன்... எல்லாம் கனவா போயிருச்சே..." என்று கண்களில் வராத கண்ணீரை துடைத்தபடி அவள் புலம்பியதை கண்டு மூவரும் கொலைவெறி ஆனார்கள்...!!!

தித்திக்கும்...!!!

"பெண்ணா பிறந்தால் எனக்குன்னு தனிப்பட்ட ஆசைகள் இருக்கக் கூடாதா...?" என்று சோக கீதம் வாசித்த வலமங்கையைப் பெரியவர்கள் மூவரும் வெட்டவா, குத்தவா என்பது போல் பார்த்து வைத்தனர்...

"க்ராண்ட்டா மேரேஜ் பண்ணணும், என் பிரெண்ட்சை எல்லாம் கூப்பிட்டு எல்லோருடைய காதிலும் பொறாமையில் புகை வர வைக்கணும்... இப்படி நிறைய ஆசைகள் எனக்கு இருக்கு... இதில் ஒண்ணு கூட நிறைவேறலையே..." அவள் மீண்டும் முகாரி ராகம் இசைத்தாள்...

"உன் பிரெண்ட்ஸ் எல்லோருக்கும் சொல்லியாச்சு... கல்யாணத்தன்னைக்கு எல்லோரும் வந்திருவாங்க..." முகத்தைச் சுளித்தபடி பதில் கூறினார் சித்ரவேணி...

இப்படிப்பட்ட மகளைப் பெற்றதற்கு அவர் என்ன தவம் செய்தாரோ... அவருக்கே அது தெரியவில்லை...

"அடப்பாவிங்களா... ஒரு பக்கி கூட ஃபோன் பண்ணி விசயத்தை என் கிட்ட சொல்லலையே..." என்று தோழிகளை நினைத்து பல்லை கடித்தவள்,

"சரி போனது போகட்டும் விடுங்க... எனக்குப் பிடிச்ச மெனு தானே கல்யாண சாப்பாட்டில் கொடுத்திருக்கீங்க... இல்லை அதுக்கும் பட்டை நாமம் தானா...?"

அவள் கேட்ட கேள்வியில் பொன்னுரங்கம் மானசீகமாய்த் தலையில் கை வைத்தார்...

'பொண்ணைப் பெத்து கொடுடின்னா ஒரு தின்னிப்பண்டாரத்தைப் பெத்து கொடுத்திருக்கியே...' என்று கொலைவெறியோடு மனைவியைக் கண்டு முறைத்தார் அவர்...

'அய்யே... ரொம்பத்தான் அலட்டிக்கிறீங்க... என்னமோ நான் மட்டும் தனியா புள்ளைய பெத்த மாதிரி... உம்ம

பொண்ணை நீங்களே சமாளியுங்க...' என்பது போல் பதில் பார்வை பார்த்து வைத்தார் சித்ரவேணி...

எப்போதும் பேத்திக்கு ஆதரவாகப் பேசும் சுப்பிரமணியம் கூட இன்று அவள் அடித்த லூட்டி கண்டு மனதிற்குள் நொந்து போனார்...

"யாராவது சொல்ல போறீங்களா இல்லையா...?" அவள் கத்தியதும் தான் அனைவரும் தங்களது யோசனையில் இருந்து வெளியில் வந்தனர்...

வேறுவழியின்றிப் பொன்னுரங்கம் சமையல் பட்டியலை கொண்டு வந்து அவளிடம் காட்டினார்... அதை வாங்கிப் பார்த்தவளின் முகத்தில் சிறு திருப்தி நிலவியது...

"அப்பா... காலையில் அக்காரவடிசலும், மதியம் காலிஃப்ளவர் ப்ரையும் சேர்த்துக்கச் சொல்லுங்க... இந்த இரண்டும் எனக்கு ரொம்பப் பிடிக்கும்..." என்று தந்தையிடம் உரைத்தவள் அன்னையின் புறம் திரும்பியவள்,

"அம்மா... எனக்குப் பிடிச்ச ஐயிட்டம் எல்லாம் மீதமிருந்தா தனியா எடுத்து வைச்சிருங்க... நைட்டுக்கு வீட்டுக்கு வந்து சாப்பிட்டுக்கிறேன்..."

'ஏன் சாப்பிட்டுட்டு ஃபர்ஸ்ட் நைட்டில் தூங்கி வழியறதுக்கா...? பாவம்டி என் மருமகன்...' சித்ரவேணி அழகு சுந்தரத்தை எண்ணி இப்போதே பரிதாபப்பட்டார்...

அவ்வளவு தான் அதற்கு மேல் வலமங்கை கேட்பதற்குக் கேள்விகள் எதுவுமில்லை... மணமகன் யார், அவன் பெயர் என்ன, என்ன வேலை பார்க்கிறான், எப்படி இருப்பான்? என்று எல்லாம் அவள் கேட்கவில்லை... அவளது ஆசைகளின் எல்லை மிகச் சிறியது தானோ...

"அம்மா... சூடா காபி போட்டு கொடுங்க... எனக்குத் தூக்கமா வருது..." என்றவள் குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்...

அழகு சுந்தரம் வீட்டில் நுழையும் போதே அங்குத் தென்பட்ட காட்சிகளை வைத்து வரப் போகும் விபரீதத்தை உணர்ந்தவனாய் நேரே தனது அன்னையின் முன் போய் நின்றான்... உடன் பாட்டி வேதநாயகியும் இருந்தார்...

"அம்மா... என்னம்மா நடக்குது இங்கே...?"

"வா அழகு... இப்பத்தான் எங்களைப் பார்க்கணும்ன்னு உனக்கு மனசு வந்துச்சா..." என்று மகனை ஆசைத்தீர பார்த்த வைதேகியின் கண்கள் கலங்கியது...

"ராசா... என்னைய கூட நீ மறந்து போயிட்டியே..." என்று வேதநாயகி கண்ணீர் விட்டபடி பேரனை அணைத்துக் கொள்ள...

அழகு தனது கோபத்தினைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவர்களது பாசத்தில் சிறிது நேரம் கட்டுண்டு அமைதியாக நின்றான்... பிறகு,

"அம்மா... என்னன்னு சொல்லுங்கம்மா...?"

"உனக்குக் கல்யாணம் அழகு..."

"கல்யாணமா...? எனக்கா...?" என்று அவன் அலறினான்...

வலமங்கைக்குத் திருமணம் முடிக்கத்தானே அவன் சொன்னது... இதில் அவனது திருமணம் எங்கே இருந்து வந்தது...

"ஏன்ம்மா இப்படி...? நான் கேட்டேன்னா எனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கச் சொல்லி...? எனக்கு எப்போ கல்யாணம் பண்ணணும்ன்னு தோணுதோ அப்ப பண்ணிக்கிறேன்... இப்போ என்னை ஆளை விடுங்க" என்று அவன் கோபமாய் இரைந்தான்...

தந்தை அங்கில்லை என்பதால் வந்த தைரியம் இது...

"டேய்... அபசகுனமா எதுவும் பேசிடாதே... நேரம் தானா கூடி வரப்போ சட்டுப்புட்டுன்னு காரியத்தை முடிஞ்சிடணும் அழகு..."

"ஆமாம்... ஆமாம்... கல்யாணங்கிற பேரில் நீங்க எனக்குக் காரியம் பண்ணத்தான் பார்க்கறீங்க..." மகன் முணுமுணுத்தான்...

"அப்படி எல்லாம் சொல்லாதே அழகு... நாங்க உனக்குக் கெடுதல் பண்ண நினைப்போமா...? பொண்ணு வேற யாருமில்லை நம்ம நாச்சி தான்... அதனால் வர போறவளை பத்தி நீ கவலைப்படத் தேவையில்லை..."

"என்னது...? மங்கையா...?"

அவன் செய்த வினை அவனையே திருப்பித் தாக்கியதில் அவன் அதிர்ந்து போய் நின்றான்...

"ஏன்ம்மா... தெரியாத பிசாசை விடத் தெரிந்த பேய் நல்லதுன்னு அவளை என் தலையில் கட்டி வைக்க முடிவு பண்ணிட்டீங்களா...? அவளை எல்லாம் என்னால் கட்டிக்க முடியாதும்மா..."

"ஏன் ராசா...? நாச்சிக்கு என்ன குறைச்சல்...?" வேதநாயகி இடைப்புகுந்தார்...

"ஆச்சி... நீ எப்போ கட்சி மாறின...? அவளைத் தான் உனக்குப் பிடிக்காதே..."

"இப்ப பிடிக்கும்... ஏன்னா உனக்குப் பொண்டாட்டியா வர போகிறாள் இல்லையா... அதான்..."

எல்லோரும் சேர்ந்து கூட்டு சதி செய்வது அவனுக்குத் தெள்ளத்தெளிவாகப் புரிந்து போனது... அதனால் அவனது குரல் சுருதி இறங்கி போய் ஒலித்தது...

"அம்மா... புரிஞ்சிக்கோங்கம்மா... மங்கை என் கூடவே வளர்ந்த பொண்ணும்மா... அவளைப் போய் என் மனைவியா என்னால் நினைச்சு கூடப் பார்க்க முடியலை..."

இதற்கு மேல் அன்னையிடம் எப்படி விளக்கி கூறுவது என்று வளர்ந்த ஆண்மகனான அவனுக்குத் தெரியவில்லை... வலமங்கையின் மீது அவனுக்கு அன்பு

இருக்கிறது... அக்கறை இருக்கிறது... ஆனால் திருமணம், மனைவி என்பது வேறு அல்லவா...

'இவள் தான் என்னவள்' என்று ஒரு பெண்ணைப் பார்த்ததும் கண்டபடி இளமை ஹார்மோன்கள் சுரக்க வேண்டும்... வலமங்கையைப் பார்த்தால் ஹார்மோன்கள் எங்கே சுரப்பதற்கு...? அடுத்து என்ன செய்து அவனைக் கவிழ்ப்பாளோ என்ற பயத்தில் வியர்வை தான் அவனுக்குச் சுரக்கும்...

அந்தக் கணம் அவனது மனதில் ரேஷ்மா முகம் மின்னி மறைந்தது... இருந்திருந்து அதிசயமாய் அவனுக்கும் ஒரு பெண்ணைப் பிடித்துத் தொலைத்தது... அந்தப் பிடித்தத்தையும் வலமங்கைக்காக அவன் விட்டு கொடுத்து விட்டான்... சரி வீட்டில் பார்க்கும் பெண்ணைத் திருமணத்திற்குப் பின் காதலித்துக் கொள்ளலாம் என்று நினைத்திருந்தால், இப்போது அந்த நினைவிலும் டன் டன்னாய் மண்ணை அள்ளி போடுகின்றனரே அவனது குடும்பத்தினர்...

"அழகு... பத்திரிக்கை அடிச்சு, ஊரை கூட்டி சொல்லி நாளன்னைக்குக் கல்யாணம் வச்சியிருக்கிற இந்த நேரத்தில் நீ இப்படி எசகுபிசகா பேசாதேடா..."

வைதேகி மகனிடம் கெஞ்சி கொண்டிருக்கும் போது வைத்தியநாதன் அங்கு வந்தார்... அவரது முகத்திலிருந்த இறுக்கமே சொல்லாமல் சொல்லியது அவர் மகனது பேச்சை கேட்டு விட்டார் என்று...

நேரே மகனது கையைப் பிடித்தவர் அவனைத் தரதரவென அறைக்குள் இழுத்து சென்றார்...

"வைத்தி...", "என்னங்க..." என்று வேதநாயகி, வைதேகி கூக்குரலிட்டது அவரது செவியில் விழவில்லை...

தந்தையின் செயலில் அதிர்ந்து போனவன் அவரின் செயலை எதிர்க்கும் துணிவில்லாது அவர் இழுத்த இழுப்பிற்கு உடன் சென்றான்... சுமார் அரை மணி நேரம்

கழித்து வெளியில் வந்த வைத்தியநாதன் முகம் இன்னமும் இறுக்கத்தில் இருந்தது என்றால், அழகின் முகமோ உணர்வுகளைத் துடைத்து வெறுமையாக இருந்தது...

அதன் பின்னர் அழகு திருமணத்தை மறுத்து ஒரு வார்த்தை பேசவில்லை... ஒன்றும் பேசாது தனது அறைக்குள் சென்று முடங்கிக் கொண்டான்... மதிய உணவிற்கு அறையை விட்டு வெளியில் வந்தவன் தனது அன்னையிடம் மெதுவே திருமணப் பேச்சை எடுத்தான்...

"அம்மா... மங்கைக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்பம் இருக்கா...?" தயங்கி தயங்கி அவன் கேட்டான்...

"ராசா... உன்னைய கட்டிக்கிறதுக்கு அவளுக்கு என்ன கசக்கவா செய்யுது... அதெல்லாம் அவளுக்கு விருப்பம் இருக்கு... விருப்பமில்லாமல் தான் பட்டுப்புடவையில் சரிகை போதாது, நகை இன்னமும் பெருசா வாங்கி இருக்கலாம்ன்னு சண்டை போட்டிருக்காளா... அது கூடப் பரவாயில்லை ராசா... கல்யாணத்தன்னைக்கு அக்காரவடிசல் வேணுமாம், காலிஃப்ளவர் வறுவல் வேணுமாம்..." என்று வேதநாயகி நீட்டி முழக்கி நொடித்துக் கொண்டார்...

'குள்ளச்சி... உனக்கு நிகர் நீ மட்டும் தான்டி... உன்னால் மட்டுமே இந்த நேரத்திலும் கூடச் சாப்பாட்டைப் பத்தி நினைக்க முடியும்...'

பாட்டி சொன்னதைக் கேட்டு வலமங்கையை எண்ணி பார்த்தவன் முகத்தில் புன்னகையின் சாயல்...

அன்று முழுவதும் வலமங்கையைப் பற்றிய யோசனை தான் அவனுக்கு... மாலையில் அன்னையிடம் வந்தவன்,

"அம்மா... மங்கையைக் கடைவீதிக்கு அழைச்சிட்டு போய் அவள் கேட்ட மாதிரி பட்டுப்புடவை, நகை எல்லாம் வாங்கிக் கொடுங்க..." என்றவன் தனது கடன் அட்டையை அன்னையின் கரத்தில் திணித்தான்...

அவனது நான்கு வருட சேமிப்பு வங்கியில் கணிசமான தொகையாகச் சேர்ந்திருந்தது... அதைத் தான் அவன் வலமங்கைக்காகக் கொடுத்தான்...

"என்னடா இது அதிசயமா இருக்கு...? காலையில் அந்தக் குதி குதிச்ச...? இப்போ இப்படி மாறி போய் நிற்கிற...? உங்கப்பா அப்படி என்னடா மந்திரம் போட்டாரு..."

தந்தையைப் பற்றிச் சொன்னதும் அவனது முகம் மாறிப் போனது...

"அவர் சொன்னதுக்காக எல்லாம் நான் கல்யாணம் பண்ணலை... மாமா, அத்தை பாவம்ன்னு தான் கல்யாணம் பண்ணிக்கிறேன்... என்னால அவங்க சபையில் தலைகுனிஞ்சு நிற்க கூடாது பாருங்க..." என்றான் உண்மையை மறைத்தபடி...

"இந்த அன்பு, அக்கறை தான்டா கல்யாண வாழ்க்கைக்கு வேணும்... நீயும், நாச்சியும் நூறு வருசம் சந்தோசமா வாழ்வீங்க பாரு..."

"நீங்க சொல்வதில் பாதி உண்மைம்மா... உங்க மருமகள் சந்தோசமாக இருப்பாள்... ஆனா நான்...? அவளுக்குச் சமைச்சு போட்டே என் வாழ்க்கை முடிஞ்சிரும்..." என்று சலித்துக் கொண்டவன்,

"ஊருக்கு கிளம்பறதுக்கு முன்னாடி உங்க மருமகளுக்குப் பிடிச்ச சமையலை எனக்குக் கொஞ்சம் சொல்லி கொடுங்க... இல்லைன்னா என்னை அடிச்சே கொடுமைப்படுத்துவாள் அந்த ராட்சசி..."

இதைக் கூறும் போதே அவனுக்குச் சிரிப்பு பீறிட்டது...

"கட்டாயம் சொல்லித் தர்றேன்டா... இதை விட எனக்கு வேறு வேலை என்னயிருக்கு..." என்று வைதேகி கூறியதை கேட்டு,

“எனக்குன்னு அம்மாவா வந்து வாய்ச்சிங்களே... இப்பவாவது அந்தக் குள்ளச்சிக்கு சமையல் கத்து

கொடுத்து, குடும்பக் குத்துவிளக்கா எப்படி இருக்கணும்ன்னு அவளுக்கு ட்யூசன் எடுப்பீங்களா... அதை விட்டுட்டு எனக்குச் சமையல் சொல்லி கொடுக்கிறீங்களா... இப்பவே இப்படின்னா... உங்க மருமகள் இந்த வீட்டுக்கு வந்தால் என் கதி அதோ கதி தான்..." என்று அவன் போலியாய் அலறினான்...

"பாவம்டா... சின்னப் பொண்ணு... அவளைக் கண் கலங்காம பார்த்துக்கோடா..."

"முதல்ல அவள் கிட்ட என்னைக் கண் கலங்காம பார்த்துக்கச் சொல்லுங்க..."

கேலி போல் உரைத்து விட்டு சென்ற மகனை கண்டு அதுவரை மனதிலிருந்த சஞ்சலங்கள் மறைத்து நிம்மதியாய் உணர்ந்தார் வைதேகி...

வைதேகி விசயத்தைக் கூறியதும் வலமங்கை சந்தோசத்தில் துள்ளி குதித்தாள்...

"அத்தைன்னா அத்தை தான்... பார்த்தீங்களா என்னோட அத்தையை..." என்று இல்லாத காலரை தூக்கிவிட்டுக் கொண்டு பெருமை பொங்க தனது தாயை பார்த்தாள்...

சித்ரவேணி அப்போதும் அழகுவை நினைத்து தான் கவலைப்பட்டாரே ஒழிய... மகளிடம் மணமகனை பற்றிச் சொல்வோம் என்கிற எண்ணம் அவருக்குச் சிறிதும் தோன்றவில்லை...

மாலையில் எல்லோரும் கடைவீதிக்கு கிளம்பினர்... வைத்தியநாதன் மகனை உடன் வரும்படி அழைத்தார்...

"நான் வரலைப்பா..." தந்தை முகம் நோக்காது வேறு பக்கம் பார்த்தபடி அவன் கூறினான்...

"நாச்சியா உன்னை எதிர்பார்ப்பாள்... நீ கட்டாயம் வந்து தான் ஆகணும்..." என்று கட்டளையிட்ட தந்தையை எதிர்த்து அவனால் பதில் பேச முடியவில்லை...

காரிலேறிய போது தான் வலமங்கை அழகுவை கவனித்தாள்... அவனைக் கண்டதும் முகம் மலர அவன் அருகில் சென்று அமர்ந்தவள்,

"டேய் அழகு... என்னைப் பார்த்தா கல்யாண பொண்ணு மாதிரி இருக்காடா..." என்று ஆர்வமாய்க் கேட்க...

"கல்யாணமாகப் போகுது இன்னும் என்ன 'டா' போட்டு பேசிக்கிட்டு இருக்க... ஒழுங்கு மரியாதையா மாமான்னு கூப்பிட்டு பழகு..." மகளின் தலையில் ஒரு குட்டு வைத்தார் சித்ரவேணி...

"கல்யாணமானா எல்லாம் மாறி போயிருமா...?" என்று வலித்த தலையைத் தடவியபடி அன்னையை முறைத்து பார்த்தவள் அழகுவிடம்,

"நீயே சொல்லுடா... கல்யாணமானா நமக்குள்ள இருக்கிற உறவு மாறி போயிருமாடா...?"

அவள் கூறிய பாவனையில் அவனது உதட்டில் புன்னகை அரும்பியது...

'இல்லை...' என்பது போல் தலையசைத்தவன், "உனக்கு எப்படி விருப்பமோ அப்படிக் கூப்பிடு..." என்றான் தன்மையான குரலில்...

"ஹா... ஹா... இப்ப என்ன சொல்வீங்க...?" அன்னையைப் பார்த்துப் பழிப்பு காட்டியவளை கண்டு பொன்னுரங்கம் முறைத்துப் பார்த்ததும் வேறுவழியின்றி அடக்கி போனாள் வலமங்கை...

கடைக்குச் சென்று பட்டுப்புடவையை வலமங்கை தேர்வு செய்வதற்குள் அங்கிருந்த எல்லோரையும் ஒருவழி பண்ணிவிட்டாள் அவள்... இது சரியில்லை, அது சரியில்லை என்று ஒவ்வொன்றையும் அவள் நிராகரித்துக் கொண்டு இருந்தாள்...

அவள் செய்யும் அழிச்சாட்டியம் பார்த்து ஆண்கள் மூவரும் தள்ளி போய் அமர்ந்து கொண்டனர்... அவளது

அன்னையும், அவனது அன்னையும் தான் அவளிடத்தில் மாட்டி கொண்டு விழி பிதுங்கினர்...

இறுதியில் பெரிய மனது பண்ணி வலமங்கை ஒரு புடவையைத் தேர்வு செய்தாள்... அதைக் கண்டு நிம்மதி பெருமூச்சு விட்ட சித்ரவேணி அழகை அருகில் அழைத்தார்...

"உனக்குப் பிடிச்சியிருக்கா அழகு...?"

"மங்கைக்குப் பிடிச்சியிருந்தால் போதாதா அத்தை..." என்று புன்னகையுடன் அவன் உரைத்தான்...

"நான் கட்டுகிற புடவையை நான் தான் செலக்ட் பண்ணணும்... அதை எதுக்கு இவன் கிட்ட கேட்கறீங்க...?"

வலமங்கை அந்த இடத்திலேயே போர்க்கொடி தூக்கினாள்...

"புடவை கட்டுறது நீயாக இருந்தாலும் அதைப் பார்த்து ரசிக்கப் போகிறது என் மகன் தானே..." என்று பெருமையுடன் வைதேகி கூற...

அவர் கூறியதன் அர்த்தம் வலமங்கைக்கு மெதுவே உறைத்ததில் அவள் அதிர்வுடன் அழகினை நோக்கினாள்... அவளது விழிகளில் தெரிந்த திகைப்பில் அவன் உள்ளுக்குள் நொறுங்கி போனான்... குற்றம் செய்துவிட்டவனின் மனப்பான்மையில் அவளைப் பார்க்க முடியாது அவன் தலை குனிந்தான்...

அதன் பின் வலமங்கையிடம் இருந்து எந்தவொரு பேச்சும் இல்லை... மூச்சும் இல்லை... இயந்திரகதியில் செயல்பட்டவளை கண்டு அழகு தான் அவளுக்கு வேண்டிய நகையை அவனே தேர்வு செய்தான்...

அவள் ஆசைப்பட்டுக் கேட்டதை விட அதிக விலையில் எல்லாம் வாங்கிய போதும் அவளது முகத்தில் புன்னகை இல்லை... எப்போதும் துருதுருவென்று கலகலப்பாய்

இருப்பவளின் இந்த அமைதி அவனது மனதினை வாள் கொண்டு அறுத்தது...

பெரியவர்கள் முன்னிலையில் அவனாலும் அவளிடம் எதுவும் பேச முடியவில்லை... வீட்டிற்கு வந்து இறங்கும் போது வலமங்கையைத் தடுத்து நிறுத்தியவன்,

"நான் உன்னிடம் பேசணும்... பதினோரு மணிக்கு மாடிக்கு வா..." என்றுரைத்துவிட்டு அவன் சென்றுவிட்டான்...

வெறுமையான மனநிலையுடன் அவனது முதுகை வெறித்துப் பார்த்து கொண்டிருந்தவளுக்கு மனதில் மிகப் பெரிய போராட்டம்... சிட்டுக்குருவியாய் சிறகடித்துப் பறந்தவள் தலையில் பனங்காயை தூக்கி வைத்தது போல் அவளுக்கு மிகவும் பாரமாக இருந்தது...

அதன் பின் மணமகளைத் தனித்திருக்க யாரும் விடவில்லை... உறவினர் பெண்கள் சுற்றிச் சூழ்ந்திருக்க அழகு நிலையத்தில் இருந்த வந்த பெண் அவளது கைகளில் மருதாணியிட்டு கொண்டிருந்தாள்...

வலமங்கையோ எந்தவொரு உணர்வையும் பிரதிபலிக்காது எங்கோ வெறித்துப் பார்த்து கொண்டிருந்தாள்... அதற்கும் உறவினர் கூட்டம் கேலி செய்தது...

"இப்பவே மாம்ஸ் கூட டூயட் பாட போயாச்சா...?" என்று...

எதற்குமே அவள் வாய் திறக்கவில்லை... திருமண வேலையில் பரபரப்பாய் இருந்த சித்ரவேணி மகளின் அமைதியை உணராது போனார்...

பன்னிரெண்டு மணியாகியும் வலமங்கையால் அழகை பார்க்க போக முடியவில்லை... யாராவது ஒருத்தர் மாற்றி ஒருத்தர் அவளைச் சுற்றியிருந்து கொண்டே இருந்தனர்... வேறுவழியின்றி அன்னையிடம் வந்து உதவி கேட்டு நின்றாள்...

"இப்போ அழகை பார்த்து என்ன செய்யப் போகிற...? அவன் கூடச் சண்டை போட போறியா...?" என்று மகளைச் சந்தேகமாய்ப் பார்த்தார் சித்ரவேணி...

"ச்சே... ச்சே... இல்லைம்மா... அவன் தான்..." அன்னை முறைத்த முறைப்பில் அடங்கிப் போனவளாய்,

"அவன்... அவங்க தான் பேசணும்ன்னு கூப்பிட்டாங்க..."

மகளின் இந்த அமைதி, மாற்றம் அவருக்குமே பெருத்த ஆச்சிரியமாக இருந்தது... இது தான் திருமணத்தின் சக்தியா...? என்று கூட அவர் வியப்பாய் நினைத்தார்...

"சரி பார்த்துட்டுச் சீக்கிரம் வந்து சேரு..." என்று மகளை அவர் அனுப்பி வைத்தார்...

*****************************************

வலமங்கை மாடிக்கு வந்து பார்த்த போது அழகு கைகளைக் கட்டியபடி வானை வெறித்துக் கொண்டிருந்தான்... அவன் நின்றிருந்த தோற்றத்தில் அவளது நடை ஒரு நொடி தயங்கியது... மறுநொடி வேகமாய் அவன் அருகில் வந்தாள்...

"சாரி... கொஞ்சம் லேட்டாகிருச்சு..."

வலமங்கையின் குரலில் அவளைத் திரும்பி பார்த்த அழகு அவளது வார்த்தையில் வியப்பாய் புருவத்தைத் தூக்கினான்...

"அட... மங்கையா சாரி எல்லாம் கேட்பது..."

கேலி குரலில் கூறி சிரித்தவனைக் கண்டு அவள் பதிலுக்குச் சிரிக்கவில்லை... மாறாக அமைதியாக அவனைப் பார்த்தபடி நின்றிருந்தாள்... அதில் அவனது சிரிப்பும் நின்றது...

"இங்கே உட்கார் மங்கை..."

அங்கிருந்த சுவரில் அவளை அமர சொன்னவன் அவள் அமர்ந்ததும் தானும் அமர்ந்தான்...

"இந்தத் திடீர் கல்யாணம் உனக்கு எந்தளவுக்கு அதிர்ச்சியைக் கொடுக்கிறதோ... அதை விட அதிகமாய் எனக்கும் அதிர்ச்சியாக இருக்கிறது..."

அவன் பேசுவதைக் குறுக்கிடாது அவள் மௌனமாய்க் கேட்டு கொண்டிருந்தாள்...

"பெரியவங்க எதைச் செய்தாலும் நம்ம நல்லதுக்குத் தான் செய்வாங்க... அதனால்..." என்று இடை நிறுத்தியவன் அவளை ஏறிட்டான்...

அவளும் அவனைக் கேள்வியாய் ஏறிட்டு பார்த்தாள்...

"நம்ம கல்யாணம் நடப்பதால் அவங்களுக்குச் சந்தோம்ன்னா இதை நாம ஏத்துக்கிறதில் எந்தத் தப்பும் இல்லையே..." என்றவனின் விழிகளுக்குள் ஊடுருவி பார்த்த வலமங்கை,

"நம்ம கல்யாணத்தைப் பத்தி நீ என்ன நினைக்கிற அழகு...?" சலனமில்லாது கேட்டவளின் மனதோ சலசலத்து சத்தமாய் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது...

"நான் நினைக்க என்ன இருக்கிறது...?" அவன் புரியாமல் அவளைப் பார்த்தான்...

"இதில் உனக்குச் சந்தோசமா...?" அவனை நேர் கொண்டு பார்க்க முடியாது அவள் தன் கையிலிருந்த மருதாணியைப் பார்த்து கொண்டிருந்தாள்...

"தெரியலை..." என்றான் அவன்...

'இது என்ன மாதிரியான பதில்...?' என்பது போல் அவனைப் பார்த்தவள்,

"உன்னை மாமா எதுவும் வற்புறுத்தினாங்களா அழகு...?"

அவள் கூறியதை கேட்டு அவன் திடுக்கிட்டு போய் அவளைப் பார்த்தான்... அவனது மனதினை அறிய அந்த நொடி நேர திகைப்பு அவளுக்குப் போதுமானதாய் இருந்தது...

அவளின் மனதினை பெரும் துயர் பாரமாய் அழுத்தியது... அவள் விளையாட்டுப் பெண் தான்... எதையும் மனதில் வைக்காமல் கலகலப்பாய் பேசி விடும் வெகுளிப்பெண் தான்...

ஆனால் அவளுக்கும் மனமிருக்கிறது... அதில் நிறைய ஆசைகள், கனவுகள் இருக்கிறது என்பதை யாருமே அறியவில்லையே...

ஊரில் இருந்து வந்ததும் பெற்றோர் திருமணம் என்று கூறிய போது கூட அவள் அதைப் பெரிதாக எடுத்து கொள்ளவில்லை... தனது வாழ்க்கை மீது அவர்களுக்கு இல்லாத அக்கறையா தனக்கு இருக்கப் போகிறது என்று அவள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் இருந்து விட்டாள்...

ஆனால் ஏனோ இப்போது அவளால் அது போல் இருக்க முடியவில்லை...

அருகில் அமர்ந்திருந்த அழகினை அவள் பார்த்தாள்... அவன் எதையோ யோசித்துக் கொண்டு அமர்ந்திருந்தான்...

சிறுவயது முதல் அவள் அழகினை அருகில் இருந்து பார்க்கிறாள்... படிப்பு முதல் உடுத்தும் ஆடை முதற்கொண்டு எல்லாமே அவனது தந்தையின் விருப்பமாகத் தான் இருந்து வந்திருக்கிறது... அவனுக்கு என்று தனிப்பட்ட ஆசைகளோ, கனவுகளோ இருந்தது கிடையாது... அவரின் சந்தோசத்திற்காக அவன் நிறையத் தடவை தனது சந்தோசத்தினை விட்டுக் கொடுத்திருக்கிறான்...

இதோ இப்போதும் அவருக்காக அவனது வாழ்க்கையையும் விட்டு தர அவன் துணிந்து விட்டான்... ஏனோ அவனைப்

பார்க்கும் போது அவளுக்குப் பாவமாக இருந்தது...

"பதில் சொல்லு அழகு...?"

"அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லை மங்கை... பெரியவங்க விருப்பப்படுறாங்க... அவங்க விருப்பத்தை நிறைவேற்றுவது நம் கடமை..."

"அவங்க விருப்பத்திற்காக நாம கடமையேன்னு கல்யாணம் பண்ணி வாழ முடியுமா அழகு...? அதற்காக நம்ம ஆசைகள், கனவுகளைப் பலி கொடுக்க முடியுமா...?"

"ஓ... என்னைக் கல்யாணம் பண்ணுவதால் உன்னுடைய ஆசைகள், கனவுகள் எல்லாம் பலியாகி விட்டது அப்படித்தானே..."

உணர்ச்சியற்ற குரலில் கூறியவனின் வார்த்தையில் அவளது விழிகள் மின்னியது...

"நிச்சயமா அப்படித்தான் அழகு..." என்று உறுதியாய் கூறியவளை அவன் வெறித்துப் பார்த்தான்...

"எனக்குன்னு ஆசைகள், கனவுகள் இருக்கக் கூடாதா அழகு...?"

அவளது வார்த்தையில் அழகின் முகம் மாறியது... தன் முன்னே தேவதை போன்று எழிலுடன் நின்றிருந்த வலமங்கையின் தோற்றம் அவனுள் ஒருவித தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தியது... மௌனமாய்த் தலைக்குனிந்து நின்றான்...

அவன் தலைக்குனிந்து நின்றதில் அவளுக்குப் பிடித்தம் இல்லையோ என்னவோ...

"பேசாம இந்தக் கல்யாணத்தை நிறுத்திருவோமா...?"

அவள் கூறி முடிக்கும் முன் அவளது முழங்கையைப் பற்றி அருகில் இழுத்து ஆத்திரத்துடன் அவளை உறுத்து விழித்தவன்,

"இன்னொரு தடவை இந்த வார்த்தையைச் சொன்ன நான் பொல்லாதவனாகிருவேன்..."

அவள் தனது கையினை விடுவிக்கப் போராட, அதில் அவன் அவளது கையை விடுவித்தான்...

"இங்கே பார் அழகு... இது நம்ம ரெண்டு பேருக்கும் பொருந்தாத கல்யாணம்..."

"உனக்கு மட்டும்ன்னு சொல்லு..."

அவனைக் கூர்ந்து பார்த்தவள், "சரி எனக்கும் மட்டும்... இந்தக் கல்யாணத்தால் நம்ம ரெண்டு பேருக்கும் நிம்மதி இல்லைங்கிறப்போ... இந்தக் கல்யாணம் அவசியம் தானா...?"

"பெரியவங்க சந்தோசத்துக்காக இந்தக் கல்யாணம் அவசியம்..." என்றவனது குரல் இறுகி போய் ஒலித்தது...

"அப்படி எல்லாம் என்னால் பொய்யாய் வாழ முடியாது அழகு..."

தீர்மானமாய்க் கூறியவளை நிமிர்ந்து பார்த்தவன், "இந்தக் கல்யாணத்தை நிறுத்துறதை தவிர வேறு ஏதாவது ஆப்சன் இருந்தால் சொல்லு..."

"சரி நீ சொல்வது போல் நாம கல்யாணம் பண்ணிக்கலாம்... ஆனா சரியா ஒரு வருசம் கழித்து நீ எனக்கு டிவோர்ஸ் கொடுத்திடணும்..." என்றவளை ஆழ்ந்து பார்த்தவன்,

"கொடுக்கலைன்னா...?"

"நான் எங்கேயாவது ஓடி போயிருவேன்..." அசால்ட்டாய் தோளை குலுக்கியபடி சொன்னவளை கண்டு அவன் வேதனையுடன் கண்களை மூடி திறந்தான்...

"சரி... நீ சொல்றதுக்கு நான் சம்மதிக்கிறேன்..." என்றவனை நிமிர்ந்து பார்த்தவளின் பார்வையில் என்ன இருந்தது என்று அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை...

"இன்னொரு கண்டிசனும் இருக்கு..."

'சொல்லு...' என்பது போல் அவன் கையைக் கட்டி கொண்டு அமைதியாக இருந்தான்...

"இங்கே இருக்கும் போது மட்டும் தான் இந்தக் கணவன், மனைவி உறவு எல்லாம்... ஆனால் சென்னைக்குப் போனதும் நீ யாரோ, நான் யாரோ... நமக்குக் கல்யாணமான விசயத்தை நீ வெளியில் சொல்லக் கூடாது..."

"மீறி சொன்னால்...?"

"நீ சொன்ன அன்னைக்கு நான் உன்னை விட்டு ஓடி போயிருவேன்..." என்றவளை கொலைவெறியுடன் பார்த்தான் அவன்...

"அது போல் நீ எப்போதும் போல் உன் பிரெண்ட்ஸ் கூடத் தங்கிக்கோ... நான் ரேஷ்மிக்கா கூடத் தங்கிக்கிறேன்..."

'ரேஷ்மா' பெயரை கேட்டதும் அவனது முகம் மாறிப் போனது... நொடி நேரத்தில் தன்னைச் சமாளித்துக் கொண்டான்... அதை அவளது விழிகளும் கூர்மையாய் கண்டு கொண்டது...

"இது தான் உன் முடிவா...?" புயலை உள்ளடக்கிய குரலில் அழகு கேட்டான்...

"ஆமாம்..." என்றாள் அவள் சிறிதும் அலட்டி கொள்ளாது...

"சரி நீ போ..." என்றான் அவன் எந்தவித உணர்வும் இல்லாது...

அவன் பேச்சு கேட்டு கிளம்ப எத்தனித்தவள் பின் நின்று மருதாணி கையினைக் கொண்டு அவனது கன்னத்தில் தடவியவள்,

"மணமேடைக்கு வரும் போது கொஞ்சம் சிவப்பாய் மாறி வா மாமோய்..." என்று கிண்டலாய் கூறியபடி அங்கிருந்து சிட்டாக ஓடிவிட்டாள்..

கொலுசு ஒலி இன்னிசையாய் சப்தமிட ஓடியவளை பார்த்து கொண்டிருந்தவனின் முகம் கறுத்துப் போனது... அதை விட அவனது மனம் மிகவும் அடிப்பட்டுப் போனது...

மறுநாள் முழுவதும் அழகு வலமங்கையைக் காண முயற்சிக்கவில்லை... அவளும் அவனைப் பார்க்க எத்தனிக்கவில்லை...

*************************************

திருமணநாள் காலை பொழுது மகிழ்ச்சியாய் விடிந்தது... அழகு வாங்கிக் கொடுத்த புடவையிலும், நகையிலும் அழகுற ஜொலித்த தனது உருவத்தைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டிருந்த வலமங்கைக்கு மனதுக்குள் அத்தனை துக்கமாய் இருந்தது...

"சீக்கிரம் வாடி... இன்னைக்கும் ஆடி அசைஞ்சுக்கிட்டு..." சித்ரவேணி அவளை வைதபடி மணவறைக்கு அழைத்து வந்தார்...

மணமேடையில் அமர்ந்த போது தான் வலமங்கை அழகை கவனித்தாள்... அவள் புறம் திரும்பியும் பார்க்காது கர்மசிரத்தையாய் மந்திரத்தை உச்சரித்துக் கொண்டிருந்த அவனைக் காண காண அவளது வேதனை அதிகரித்தது... இது போன்று மனப்பாரமாய் அவள் என்றும் உணர்ந்தது இல்லை...

அவனது வாடிய முகம் கண்டு அவளது முகமும் வாடியது...

தாலி கட்டுவதற்காக இருவரையும் நேருக்கு நேர் நிற்க வைக்கும் போதும் அழகின் முகம் சுரத்தில்லாது இருந்தது... அந்தக் கணம் அவளுக்கு அவனைச் சிரிக்க வைக்க வேண்டும் போலிருந்தது...

தாலி கட்டும் சடங்கிற்கு முன்பாக அய்யர் இருவருக்கும் வெல்லத்தைப் பிட்டு வாயில் போட சொல்லி கையில் கொடுக்க...

"என்னது... அவனுக்கு மட்டும் அதிகமா வெல்லம் கொடுக்கறீங்க...? எனக்கு மட்டும் கொஞ்சமா தர்றீங்க...? இது அராஜகம் அய்யரே..." என்று அதிர்ச்சியோடு கூவியவளை கண்டு சுற்றியிருந்த எல்லோரும் சிரித்து விட்டனர்...

அவளது வார்த்தைகள் கேட்டு அழகின் முகத்திலும் அத்தனை சிரிப்பு... தனது கையிலிருந்த வெல்லத்தை மொத்தமாய் எடுத்து அவளது கையில் கொடுத்தவன்,

"எல்லாம் உனக்குத் தான்..." என்று கூறி சிரிக்க...

"இதுக்குத் தான் என் அழகு மாமா வேணும்ன்னு சொல்றது..." என்றவள் எல்லா வெல்லத்தையும் அப்படியே தனது வாயில் போட்டு கொண்டாள்...

அவள் கூறியதை கேட்டு அவனது முகம் மலர்ந்து போனது... வெல்லம் உண்ணும் மும்முரத்தில் அவள் அவனைக் கவனிக்கவில்லை...

அய்யர் வேறு வெல்லம் எடுத்து வந்து அவனிடம் கொடுக்க, அதை வாயில் போட்ட அழகு அதன் இனிப்பு சுவையைச் சுவைத்தபடி புன்னகை முகத்துடன் வலமங்கையின் கழுத்தில் மங்கலநாணை பூட்டினான்...

தனது முகத்தருகே தெரிந்த அவனது புன்னகை முகத்தை இமைக்காது நோக்கியபடி அவனது கையால் தாலி வாங்கிக் கட்டி கொண்டாள் வலமங்கை...

அந்தக் கணம் வாயில் போட்டிருந்த வெல்லத்தின் இனிப்பு சுவை அவளுள் கசப்பாய் இறங்கியது...!!!

தித்திக்கும்...!!!

வலமங்கையின் பேச்சில் முகம் கொள்ளா புன்னகையுடன் அவளது கழுத்தில் தாலி கட்டிய அழகு சுந்தரம் அப்போது தான் அவளைக் கவனித்துப் பார்த்தான்... ஏதோ ஒரு யோசனையில் அமைதியாய் இருந்தவளின் தோற்றம் அவனது மனதினை பிசைந்தது... அவளது காதுக்கு அருகில் குனிந்தவன்,

"குள்ளச்சி... இன்னும் வெல்லம் வேணும்ன்னா கேட்டு வாங்கிக்கோடி... அதுக்காக இப்படி உம்முன்னு மூஞ்சை தூக்கி வச்சிக்கிட்டு இருக்காதே... பார்க்கிறதுக்கு இஞ்சி தின்ன குரங்கு மாதிரி இருக்கிற... சகிக்கலை..." என்று கேலி குரலில் சீண்டியவனை வெட்டவா, குத்தவா என்பது போல் கொலைவெறியுடன் பார்த்து வைத்தாள் வலமங்கை...

"அடேய் கருவாயா... சிங்கத்தைச் சீண்டி விட்டுட்ட... இனி சேதாரத்துக்கு நான் பொறுப்பில்லை..." வார்த்தைகளைக் கடித்துத் துப்பியவள் முகம் அவனது கேலியில் கோபத்தைத் தத்தெடுத்துக் கொண்டது...

"ஹா... ஹா... அதையும் பார்த்துடலாம் குள்ளச்சி..." என்று சிரித்தவனுக்கு அவளது அமைதியை விட இந்தக் கோபம் மிகவும் பிடித்திருந்தது...

மணவறையை வலம் வர சொல்லி மணமக்களை அய்யர் பணித்ததும், அழகு தனது வலதுகையை அவளை நோக்கி நீட்டினான்...

'என்னைப் பத்தி தெரியாம கையவா நீட்டுற... இருடா மவனே... இன்னைக்கு நீ செத்தேடி...' என்று மனதில் கோபமாய் முணுமுணுத்து கொண்டவள் வெளியில் அவனைப் பார்த்து 'ஈ'யென்று இளித்தபடி தனது கையை அவனது கரத்தின் மீது வைத்தாள்...

அவளது கரத்தை பிடித்தபடி மணவறையை வலம் வந்தவனுக்கு முதலில் ஒன்றும் தெரியவில்லை... ஆனால்

போகப் போகத் தான் பெரும் அவஸ்தையாக இருந்தது... ஏனெனில் வலமங்கை அவனது உள்ளங்கையில் நறுக்கென்று கிள்ளி கொண்டே வலம் வந்தாள்...

எல்லோர் முன்பும் அவளைக் கடியவும் முடியவில்லை... அதே சமயம் தனது அவஸ்தையையும் வெளிக்காட்ட முடியாது அவன் தான் மிகவும் திணறிப் போனான்... அவனது அவஸ்தையை ரசித்தபடி இருந்தாள் வலமங்கை...

'என்னையவா இஞ்சி தின்ன குரங்குன்னு சொன்ன... இப்போ நீ தான்டா அச்சு அசல் அப்படியே இருக்கிற... வெவ்வவ்வே...' என்று அவள் மனதிற்குள் பழிப்பு காட்டினாள்...

அது போல் தான் மாலை மாற்றும் போதும் வேண்டுமென்றே அவனிடம் தலை குனிந்து காண்பிக்காது சிறிது நேரம் போக்கு காட்டி அவனைத் தலையால் தண்ணி குடிக்க வைத்தாள்...

"இப்பவே மாப்பிள்ளையால பொண்டாட்டியை அடக்க முடியலையே... மாப்பிள்ளையோட ஜம்பம் இவ்வளவு தானா..." என்று உறவினர் கூட்டம் கேலி செய்ததில் தானாக முன்வந்து தனது கழுத்தை நீட்டினாள் வலமங்கை...

அவளது செயலில் அழகின் முகத்தில் புன்னகையைத் தவிர வேறு எதுவும் இல்லை... குடும்பத்தினருக்காகத் தான் இந்தத் திருமணம் என்பது கூட அந்தக் கணம் அவனுக்கு மறந்து போனது...

அடுத்து பால் நிறைந்த வெள்ளி குடத்தில் மோதிரத்தை போட்டு மணமக்களை எடுக்கச் சொன்னார்கள்... இருவரும் அடித்துப் பிடித்துக் கொண்டு குடத்தில் கையை விட்ட போதும், ஏனோ அந்த வேகத்தினை மோதிரம் தேடுவதில் காண்பிக்கவில்லை...

ஒருவருக்கு ஒருவர் விட்டு கொடுத்தபடி சும்மா குடத்திற்குள் கையைத் துளாவி கொண்டு இருந்தனர்...

"நாங்க எல்லாம் பார்க்கலைன்னு ரொமான்ஸ் நடக்குதா...?" என்று கூறி அதற்கும் உறவினர் கூட்டம் சிரித்தனர்...

"மாப்ள... நம்ம மானத்தைக் காப்பாத்துடா..." என்று அவன் வயது உறவினர் பையன்கள் கத்தி சத்தம் போட்டனர்...

வலமங்கை அழகின் காதுக்கருகில், "டேய்... சீக்கிரம் மோதிரத்தை எடுடா..." என்று கடித்தாள்...

"பரவாயில்லை மங்கை... நீயே எடு..." என்று அவன் அவளுக்குத் தாராளமாய் விட்டு கொடுக்க...

"அடேய் கருவாயா... நான் எடுக்கணும்ன்னு நினைச்சா நீ என்ன அந்த ஆண்டவனால கூட என்னைத் தடுக்க முடியாது... ஆனா இன்னைக்கு நாச்சி நல்ல மூடில் இருக்கிறாள்... அதனால் போனா போகுதுன்னு உனக்கு விட்டு கொடுக்கிறேன்..." என்றவளை அழகு அதிசயமாகப் பார்த்தான்...

"ஹலோ என்ன லுக்கு...? இப்போ நான் மோதிரத்தை எடுத்தேன்னு வச்சுக்கோ... இங்கே இருக்கிற பயபுள்ளைங்க எல்லாம் உன்னைய ஓட்டியே கொன்னுருங்க... அதனால் தான் உனக்கு விட்டு கொடுக்கிறேன்..."

அவளது வார்த்தைகள் அவனுள் சுகமாய் இறங்கியது...

"ஏன்னா... உன்னைய கலாய்க்கிற ஏகபோக உரிமை இந்த உலகத்திலேயே எனக்கு மட்டும் தான் இருக்கு... அதை எப்படி நான் அடுத்தவங்களுக்கு விட்டு கொடுப்பேன்..."

புருவத்தை உயர்த்தியபடி மிடுக்காய் சொன்னவளை கண்டு அவன் வாய்விட்டு சிரித்து விட்டான்...

"உன் வாய் அடங்கவே அடங்காதா குள்ளச்சி..."

"நாச்சிக்கு வாய் இல்லைன்னா காக்கா தூக்கிட்டு போயிரும்... சோ நாச்சிக்கு வாய் தான் அழகு..."

அவள் சொன்னதைக் கேட்டு சிரித்தபடி அவன் மோதிரத்தை எடுத்து எல்லோரிடமும் தூக்கி காண்பிக்க... எல்லோரும் 'ஓ'வென்று கத்தி ஆர்ப்பரித்தனர்...

"தேங்க்ஸ்டி குள்ளச்சி..." அவளிடம் அவன் முணுமுணுப்பாய் சொல்ல...

"என்னது...?" என்று கேட்டபடி அவனது உயரத்திற்கு அவள் எம்பினாள்...

"குள்ளச்சி... இன்னும் கொஞ்சம் வளர்ந்தால் தான் என்ன...? என் தோள் உசரம் கூட நீ இல்லையே..."

இது மட்டும் அவளது காதில் விழுந்து விட்டது...

"என்னடா சொன்ன...?" என்று அவள் அவனை முறைத்து பார்க்க...

"ஹி... ஹி... ஹை ஹீல்ஸ் போட்டுக்கோன்னு சொன்னனேன்டி..."

"அதெல்லாம் முடியாது போடா நெட்டை கொக்கு..." என்று அவள் சீறினாள்...

இருவரையும் இணைத்துப் புகைப்படம் எடுப்பதற்குள் புகைப்படக்காரர் ஒருவழியாகி விட்டார்...

இருவரையும் மணமக்கள் கோலத்தில் பார்த்த பொன்னுரங்கம், வைத்தியநாதனின் கண்கள் பனித்தது... பொன்னுரங்கம் கண்களால் வைத்தியநாதனிடம் மன்னிப்பு வேண்ட... அவரோ மறுப்பாய் தலையசைத்து நண்பனின் கையை ஆதரவாய் பிடித்துக் கொண்டார்..

உறவினர் ஒவ்வொருவராய் வந்து மணமக்களை ஆசிர்வாதம் செய்துவிட்டு செல்ல, எல்லோரின் கால்களிலும் விழுந்து இருவரும் மிகவும் களைத்து போயினர்...

"அழகு..." வலமங்கை அவனது கையைச் சுரண்டினாள்...

"என்ன மங்கை...?"

"பசிக்குதுடா..." என்று பாவமாய்ச் சொன்னவளை இரக்கமாய்ப் பார்த்தான் அவன்...

"தாலி கட்டுறதுக்கு முன்னாடி சாப்பிட கூடாதுன்னு உன் அத்தை கண்டிசனா சொல்லிட்டாங்க... அதான் ஒண்ணுமே சாப்பிடலை..."

சிறுபிள்ளை போல் உதட்டை பிதுக்கியபடி கூறியவளின் பாவனை அவனது மனதினை ஏதோ செய்தது என்றால், அவளது கழுத்தில் தொங்கிய தாலி அவனை உள்ளுக்குள் அதிர செய்தது... சற்று முன்னர்த் திருமணச் சடங்கின் போது எடுத்த உறுதிமொழி அவனது காதில் ஒலித்து அவனைக் கதிகலங்க செய்தது...

கட்டிய கணவனாய் அவனது கடமைகள் அவன் கண் முன்னால் பூதாகரமாய் வலம் வந்தது...

"ஏன்டா... சோறு தானே கேட்டேன்... என்னமோ உன் சொத்தை எழுதி கேட்ட மாதிரி ரியாக்சன் கொடுக்கிற..."

அவளது பேச்சில் அவன் தனது கலக்கத்தை மறந்து சிரித்தவன், "சொத்துக் கேட்டா கூடக் கொடுத்துடுவேன்டி... ஆனா உனக்குச் சோறு போடுறது தான்டி ரொம்பக் குஷ்டமான வேலை..."

"அழகு..." என்று அவள் சிணுங்கினாள்...

அவனிடம் கோபம் கொண்டால் காரியமாகாது... அதனால் சோற்றுக்காக அவள் சற்று சாந்தமானாள்...

அழகு கைக்கடிகாரத்தில் மணி பார்த்தான்... மதியம் பன்னிரெண்டாகி இருந்தது... உறவினர் கூட்டம் உண்ணாமல் யாரும் இவர்களை உண்ண அழைக்க மாட்டார்கள்... மணமக்களாக இருப்பதில் இத்தனை சிரமம் இருக்கிறதா என்று வருத்தப்பட்டான் அவன்...

ஏனெனில் எத்தனையோ திருமணங்களுக்கு அவன் சென்று கறிசோறு சாப்பிட்டு விட்டு அதையும் நொட்டை

சொல்லிவிட்டு வந்திருக்கிறான்... அதற்கான பலனை கடவுள் இப்படிச் சேர்த்து வைத்து பழிவாங்கி விட்டாரே என்று மனதுக்குள் எண்ணியவன் அருகில் இருந்த அன்னையை அழைத்தான்...

"அம்மா... பசிக்குதும்மா... ஜூஸ் ஏதாவது இருந்தா கொண்டு வந்து கொடுங்க..."

வைதேகி சரியென்றபடி செல்ல, வைத்தியநாதனோ அவனை முறைத்து பார்த்தார்...

'அச்சச்சோ... இவர் இருக்கிறது தெரியாம வாயை விட்டுட்டோமே... இதுக்கு என்ன மண்டகப்படி கிடைக்கப் போகுதோ தெரியலையே...' அவன் மானசீகமாகத் தலையில் கை வைத்தான்...

"வாழ்க்கையில் ஒரு முறை தான் கல்யாணம் வரும்... அன்னைக்குக் கூட உன்னால் வாயை அடக்க முடியலை இல்லையா...?"

மகனுக்கு மட்டும் கேட்கும் குரலில் வைத்தியநாதன் முணுமுணுத்து விட்டு சென்றார்... திருமணநாள் அதுவுமாய்த் தன்னைத் திட்டி விட்டு போகும் தந்தையின் முதுகை வெறித்துப் பார்த்தான் அழகு...

"அது எப்படிடா மாமா இப்படிச் சொல்லிட்டு போகலாம்...? நாம டிவோர்ஸ் வாங்கினதுக்குப் பிறகு வேற கல்யாணம் பண்ணித்தானே ஆகணும்... இது என்ன சின்னப்புள்ளைத்தனமா இருக்கு..."

இப்போது தான் அவள் அவன் கையால் தாலி வாங்கிக் கட்டியிருக்கிறாள்... அதற்குள் அவள் பிரிவை பற்றிப் பேசியதும் அவன் அவளிடம் சுள்ளென்று எரிந்து விழுந்தான்... அத்துடன் தந்தை மீதிருந்த கோபமும் சேர்ந்து கொண்டது...

"நீ இப்படிச் சின்னப் பிள்ளை மாதிரி பேசுறதை நிறுத்து... கல்யாணம் நடந்த அன்னைக்கே விவாகரத்து பத்தி பேசிக்கிட்டு..."

மெதுவாக அவன் பேசினாலும் அதில் அப்படியொரு அடக்கப்பட்ட கோபம் இருந்தது... அவனை ஏறிட்டு பார்த்தவள் ஒன்றும் பேசாது அமைதியாகி விட்டாள்... அதற்குள் வைதேகி பழச்சாறை எடுத்துக் கொண்டு அங்கு வந்தார்... அதை வாங்கியவன் மனைவியிடம் நீட்டினான்...

"குடி..."

"என்னை நீ திட்டிட்ட இல்ல... எனக்கு ஒண்ணும் வேண்டாம்..." என்று அவள் கோபத்துடன் முறுக்கி கொண்டாள்...

'சரிதான் போடி...' என்று சொல்ல துடித்த நாவை கட்டுப்படுத்தியவன்,

"உன் கோபத்தைப் பற்றிப் பிறகு பேசிக்கலாம்... இப்போதைக்கு உன் வயிற்றைக் கவனி..."

"வேண்டாம்..."

"இப்போ நீ இதைக் குடிக்கப் போகிறாயா...? இல்லை நானே உன் வாயில் ஊத்தி விடவா..." என்று கேட்டவன் அதற்கான வேலையில் இறங்குவதற்காக அவளின் அருகே வந்தான்...

"கொடு கருவாயா..." என்று அதை வாங்கியவள் ஒரே மூச்சில் அதைப் பருகி முடித்தாள்...

மதிய உணவு முடிந்து மணமக்களை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தனர்... அங்கு ஆரத்தி கரைத்து சுற்றி மணமக்களை வரவேற்றனர்...

"நாச்சி... வலதுகால் எடுத்து வச்சு உள்ளே வாம்மா..." வைதேகி பாசத்தோடு கூறினார்...

ஏனோ தெரியவில்லை வலமங்கையால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது அவளது மனம் போல் கால்களும் சத்தியாகிரகம் பண்ணியது... இதற்கு முன் எத்தனையோ முறை அவள் அவனின் வீட்டிற்கு வந்திருக்கிறாள் தான்... ஆனால் அப்போது எல்லாம் வராத தயக்கம் இப்போது அவளிடத்தில் வந்தது...

"மங்கை... என்ன யோசனை..." அழகு அழைக்கவும் அவள் அவனை ஏறிட்டு பார்த்தாள்...

அவளது விழிகளில் தெரிந்த கலக்கத்தில் அவன் தனது கையை அணைவாகக் கொண்டு சென்று அவள் தோள் மீது போட்டவன்,

"எது பத்தியும் யோசிக்காதே... வா..." என்றழைக்க...

"அட பாருப்பா... இப்பவே மாப்பிள்ளைக்குப் பொண்டாட்டி மேலுள்ள கரிசனத்தை..."கூடியிருந்த உறவினர் கூட்டத்தில் இருந்து ஒரு பெண்மணி கிண்டலடிக்க...

"என் பொண்டாட்டி நான் சப்போர்ட் பண்ணுவேன்... உங்களுக்கு என்ன வந்துச்சு..." என்றவனது கை அவளது தோளில் அழுத்தமாய்ப் படிந்து அவளை ஆறுதலாய் அணைத்துக் கொண்டது...

அதில் அவள் திடுக்கிட்டு அவனைத் திரும்பி பார்க்க, அந்தக் கணம் அவனும் அவளைத் தான் பார்த்துக் கொண்டு இருந்தான்... அத்தோடு கண்களால் அவளுக்குத் தைரியமூட்டினான்... அதில் அவளது முகம் மலர்ந்தது... அதைக் கண்டு அவனும் முகம் மலர்ந்தான்...

இருவரும் மலர்ந்த முகத்துடன் வலதுகாலை எடுத்து வைத்து வீட்டினுள் நுழைந்தனர்... இருவரின் புன்னகையையும் புகைப்படக்கருவி அழகாய் தன்னுள் உள்வாங்கிக் கொண்டது...

அதன் பின்னர் நலுங்கு வைப்பது, உறவினர்களுடன் அரட்டை என்று நேரம் சென்றது...

******************************

மாலை மங்கி இரவு பொழுது அழகாய் மலர்ந்தது... வலமங்கையைக் குளிக்கப் போகச் சொல்லி சித்ரவேணி கெஞ்சி கொண்டிருந்தார்... அவளோ சட்டமாய் அமர்ந்து கொண்டு மறுத்து கொண்டிருந்தாள்...

"நான் எல்லாம் ஒரு நாளைக்கு ஒரு தடவை குளிக்கிறதே அதிசயம்... இதில் நைட் குளிச்சா எனக்குத் தூக்கம் வராதும்மா... அப்புறம் கொட்ட கொட்ட நான் மட்டும் தனியா முழிச்சிக்கிட்டு இருக்கணும்..."

அவள் கூறியதை கேட்டுத் தலையில் அடித்துக் கொண்டார் சித்ரவேணி...

"அடிக்கூறுகெட்டவளே...இன்னைக்கு ஒரு நாளாவது என் பேச்சை கேளுடி..." என்று கெஞ்சி கூத்தாடி அவளைக் குளியலறைக்குள் தள்ளிவிட்டார்...

ஒருவழியாய் அவளுக்கு மிதமான அலங்காரம் செய்து முடிப்பதற்குள் அவர் ஒருவழி ஆகிவிட்டார்...

"நைட் கவுந்தடிச்சு படுக்கிறதுக்கு இத்தனை அலங்காரம் எதுக்கு...?" என்று வேறு அவள் சலித்துக் கொண்டாள்...

'கடவுளே... என் மருமகனை காப்பாத்து...' என்று மானசீகமாகக் கடவுளிடம் வேண்டியவர் மகளை அழைத்து வந்து அழகின் அறையில் விட்டு விட்டு வந்தார்...

மலர்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்த தனது அறையில் அமர்ந்திருந்த அழகின் மனதில் இரு வகையான தடுமாற்றம்... அவனுக்குமே தனது திருமணம், தாம்பத்திய வாழ்க்கை பற்றி நிறையக் கனவுகள் இருக்கிறது... அந்தக் கனவில் வருவது போல் அலங்கரிக்கப்பட்டு இருந்த அவனது அறை வேறு அவனது கனவிற்குத் தூபம் போட்டது...

ஒரு ஆணுக்குரிய இளமை உணர்வுகள் அவனைப் பரிசோதித்த போதும், வலமங்கை அவனது மனைவி என்பதில் அவனது உணர்வுகள் எல்லாம் அப்படியே வடிந்து போனது... அதிலும் அவள் கூறிய வார்த்தைகளை அவனால் மறக்க முடியவில்லை...

திருமணம் நடந்தது பற்றி யாரிடமும் சொல்ல வேண்டாம், பிரிந்து விடுவோம் என்று அவள் மிகவும் எளிதாகக் கூறி விட்டாள்... இது எந்தளவுக்கு நடைமுறையில் சாத்தியம்

என்று அவனுக்குத் தெரியவில்லை... இனி தான் பிரச்சினையே இருக்கிறது என்று அவனது அறிவு எச்சரித்தது...

அந்நேரம் அவனது அறைக்கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள் வலமங்கை... அலங்கரிக்கப்பட்ட அந்த அறையைக் கண்டதும் ஒரு நொடி திகைத்து விழித்தவள் மறுநொடி சாதாரணமாக அழகின் அருகில் வந்தாள்...

கையிலிருந்த பால் சொம்பை அழகிடம் நீட்டியவள், "இந்தா குடி..."

முதலிரவு அன்று எந்தவொரு கணவனும் இது போன்ற ஒரு நடவடிக்கையைத் தனது மனைவியிடம் இருந்து எதிர்பார்த்து இருந்திருக்க மாட்டான்... அவனுமே அவளின் இந்தச் செயலை சற்றும் எதிர்பார்க்கவில்லை... அடுத்தக் கணம் அவனையும் அறியாது அவனது முகத்தில் புன்னகை அரும்பியது...

நாச்சி இப்படி நடந்து கொள்ளவில்லை என்றால் தானே அதிசயம்...!!!

"கொடு..." என்று அதை வாங்கியவன் பக்கத்து மேசையில் வைக்க...

"டேய் பக்கி... எல்லாத்தையும் குடிச்சிராதே... எனக்கும் கொஞ்சம் மிச்சம் வை..."

"நீயே எல்லாத்தையும் குடி குள்ளச்சி... அப்படியாவது வளருகிறாயா என்று பார்க்கலாம்..."

"நீ நெடுநெடுன்னு பனை மரம் மாதிரி வளர்ந்திட்டு என்னைய குறை சொல்றியா...? பெண்களுக்கு ஏற்ற சரியான வளர்த்தித் தான் என்னுடையது..." என்றவள்,

"அழகு... நீ கண்ணை மூடு... நான் ட்ரெஸ் மாத்தணும்..."

அவளது பேச்சில் அவன் விதிர்த்து போய் விட்டான்... இதுவரை அவன் இது பற்றி எல்லாம் யோசிக்கவில்லை...

ஒரே நாளில் திருமணம் அவனது வாழ்க்கையை முற்றிலும் மாற்றிவிட்டது...

"எனக்குப் பாத்ரூமில் ட்ரெஸ் மாத்துறது பிடிக்காது... இந்தக் கதையில் வர்ற மாதிரி உன் ரூமில் ட்ரெசிங் ரூம்ன்னு தனியா இல்லை... அப்புறம் நான் எங்கே போய் ட்ரெஸ் மாத்துறது... நீயே சொல்லு..." என்று நீட்டி முழக்கியவளை கண்டு அவன் பேசாது கண்களை மூடி கொண்டான்...

சிறிது நேரம் கழித்தும் அவளிடம் இருந்து எந்தவித சத்தமும் வராததால் அவன்,

"மங்கை... இன்னுமாடி ட்ரெஸ் மாத்துற... எவ்வளவு நேரம் தான் நான் கண்ணை மூடிட்டு இருக்கிறது..." என்று அவன் கத்த...

"டேய்... நானா உன்னைக் கண்ணைத் திறக்க வேண்டாம்ன்னு சொன்னேன்... கண்ணை மூட மட்டும் தான் நான் சொன்னேன்... கண்ணைத் திறக்க வேண்டாம்ன்னு நான் சொல்லவே இல்லையே..."

அவளது குரலில் அவன் அவசரமாய்க் கண்களைத் திறந்து பார்த்தான்... அங்கே இரவு உடையை மாற்றிவிட்டு முதலிரவிற்காக வைக்கப்பட்டு இருந்த இனிப்புகளை எடுத்து உண்டு கொண்டிருந்தாள் வலமங்கை...

"அடிப்பாவி குள்ளச்சி..." என்று அவன் வாயில் அடித்துக் கொண்டான்...

"இப்பத்தானேடி அவ்வளவு மொக்கின... அதுக்குள்ள உனக்குப் பசிக்குதா...?"

"வேணும்ன்னா நீயும் சாப்பிடு... அதை விட்டு சின்னப்புள்ளைய பார்த்து கண்ணு வைக்காதே..." என்றவள்,

"அதுக்காக நீ எல்லாத்தையும் எடுக்கக் கூடாது..." என்றவள் தன் பங்காக அதிக இனிப்புகளை எடுத்து வைத்துக்

கொண்டு அவனுக்குப் போனால் போகிறது என்று கொஞ்சமே கொஞ்சம் எடுத்து வைத்தாள்...

அதைப் பார்த்தவன், "என்னே தாராள மனசுடி உனக்கு... அது கூட எனக்கு எதுக்கு... எல்லாத்தையும் நீயே கொட்டிக்கோ..."

"ரியலி..." அழுத்தி கேட்டவளின் பாவனையில் அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"எல்லாம் சுண்டெலி உனக்குத் தான்... கவலைப்படாம நீ சாப்பிட்டுட்டு தூங்கு... இப்போ நான் தூங்க போகிறேன்..." என்றவன் கையைக் காலை நீட்டியபடி கட்டிலில் படுத்துவிட்டான்...

இத்தனை நேரமிருந்த அவனது கலக்கம் காணாமல் போயிருந்தது... திரும்பி மனைவியவளை பார்த்தான்... அவளோ அவனைக் கண்டு கொள்ளாது கையிலிருந்த லட்டுவை ருசித்துக் கொண்டிருந்தாள்... அவள் பக்கமாய் ஒருக்களித்துப் படுத்தவன்,

"நாளைக்குக் காலையில் ஸ்வீட் வாங்கணும்ன்னு ஞாபகப்படுத்து..."

"ஸ்வீட்டா...? எதுக்குடா...?" என்று வாயை பிளந்தவளை கண்டு,

"நீ தானே கேட்ட... ஐஞ்சு கிலோ ஸ்வீட் வாங்கித் தரணும்ன்னு..."

அதைக் கேட்டவளின் கண்கள் சந்தோசத்தில் விரிந்தது... மகிழ்ச்சியில் அவன் அருகில் குனிந்தவள் அவனது கன்னத்தைப் பிடித்து ஆட்டியபடி,

"சோ ஸ்வீட் அழகு..." என்று கொஞ்ச...

அவள் கொஞ்சியதில் அவனது புன்னகை மேலும் விரிந்தது... ஒருவழியாய் பெரிய மனது பண்ணி வலமங்கை படுப்பதற்கு ஆயத்தமானாள்... அவனும் அவளுக்கு இடம் கொடுத்து தள்ளி படுத்தான்...

"அழகு..."

"என்னடி...?"

"காலையில் இருந்து நின்னு நின்னு கால் எல்லாம் வலிக்குது... கொஞ்சம் பிடிச்சு விடேன்..."

"என்னது...? நானா...?" என்று அலறியபடி அவன் எழுந்து அமர்ந்தான்...

"நீ மட்டும் தானே இங்கே இருக்க... உன் பெயர் தானே அழகு... சோ நான் உன்னைத் தான் சொன்னேன்..." என்று கூலாகச் சொன்னவளை கண்டு முறைத்தவன் அவளுக்கு முதுகு காட்டி படுத்து விட்டான்...

வெகுநேரம் அவள் உறக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்ததைக் கண்டு திரும்பி பார்த்தவன், "பேசாம படுக்க மாட்டியா...?" என்று சத்தம் போட...

"எனக்குத் தூக்கமும் வருது... ஆனா காலும் வலிக்குதே..." என்று பாவமாய்ச் சொன்னவளை கண்டு அவனுக்குப் பாவமாக இருந்தது...

"பிடிச்சு தொலைக்கிறேன்..." அவன் சொல்லி முடிக்கும் தனது கால்கள் இரண்டையும் அவனது மடி மீது அவள் வைத்திருந்தாள்...

அதைக் கண்டு முறைக்க முயன்றவன் பின்பு சிரித்துக் கொண்டே மெல்ல அவளது கால்களைப் பிடித்து விட்டபடி,

"உலகத்தில் எந்த ஆம்பளையும் என்னை மாதிரி ஃபர்ஸ்ட் நைட் கொண்டாடி இருக்க மாட்டான்..."

அதைக் கேட்டு அவளது முகம் ஒரு மாதிரியாய் மாறியது... அடுத்த நொடி அவள் தனது கால்களை விலக்கி கொள்ள முயல, அவனோ விடாப்பிடியாய் பிடித்திருந்தவன்,

"உண்மையைச் சொன்னா மட்டும் கோபம் பொத்துக்கிட்டு வந்திருமே... பேசாம படுடி..." என்று அதட்ட...

அவள் அமைதியாகப் படுத்து விட்டாள்... ஆனால் அவளது கண்களின் ஓரம் கண்ணீர் வழிந்தது... அதை அவன் உணரவில்லை...

அழகு தூங்கிய பிறகும் வலமங்கை வெகுநேரம் முழித்திருந்தாள்... பலவித யோசனைகள் அவளது மனதினுள்...

மறுநாள் அறைக்கதவை தட்டும் சத்தத்தில் இருவரும் விழித்தனர்... வலமங்கை கையைக் காலை நீட்டி சோம்பல் முறித்தபடி,

"அழகு... போய்க் கதவை திறடா..." என்று தூக்க கலக்கத்தில் கூற...

"நீ போய்த் திறடி..." என்றவன் மேலும் தலையணையில் சுகமாய் முகம் புதைத்துக் கொண்டான்...

"என்னைய ரொம்பக் கொடுமைப்படுத்துறடா..." என்றவள் எழுந்து சென்றாள்...

எதையோ நினைத்தவனாய் சட்டென்று எழுந்தமர்ந்த அழகு, "மங்கை... இங்கே வா..." என்றழைக்க...

"என்னடா பக்கி..." என்று கேட்டபடி அவள் கொட்டாவி விட்டுக் கொண்டு அவன் அருகில் வர...

அவனோ பதில் பேசாது அவளது நெற்றியில் இருந்த குங்குமத்தை கலைத்து விட்டு, ஸ்டிக்கர் பொட்டை இடம் மாற்றி ஒட்டி வைத்தவன் அவள் தலையில் இருந்த பூவை உதிர்த்து விட்டான்... பின்பு அவளது இரவு உடையைப் பார்த்தான்... அவள் படுத்துப் புரண்டதில் அது கசங்கியிருந்ததைக் கண்டு வெகுதிருப்தியாய் உணர்ந்தவன்,

"இப்போ போய்க் கதவை திற..." என்றான்...

"ஏன்டா இப்படிப் பண்ணின...?" காலை உதைத்தபடி சிணுங்கி கொண்டு சென்றவள் அறைக்கதவை திறந்தாள்...

வெளியில் நின்று கொண்டிருந்த வைதேகியை கண்டதும் அவரைக் கட்டி கொண்டு அவள் ஓவென அழ ஆரம்பித்து விட்டாள்...

"அத்தை... இந்த அழகு என் பொட்டை கலைச்சு விட்டுட்டான்... அப்புறம் என் பூவையும் கசக்கிட்டான்..."

வலமங்கை கூறியதை கேட்டு வைதேகி லஜ்ஜையுற்றவராய் நாணிக்கோணி கொண்டு நிற்க...

அழகுவோ தலையில் கை வைத்துக் கொண்டு அமர்ந்து விட்டான்...!

தித்திக்கும்...!!!

தன் மகன் மீது வலமங்கை கொடுத்த புகாரை எங்ஙனம் விசாரிப்பது? என்று தெரியாது விழி பிதுங்கி நின்றார் வைதேகி...

மனைவியின் குற்றச்சாட்டில் தலையில் கை வைத்து அமர்ந்திருந்த அழகு மெல்ல வாயிற்புறம் திரும்பினான்... அங்கே அன்னையின் நிலை தன் நிலையை விட மோசமாக இருப்பதைக் கண்டு அடுத்த நொடி அவன் அங்கு விரைந்தான்...

அதற்குள் அங்கு வந்த சித்ரவேணி மகள் கூறியது அனைத்தையும் ஒன்று விடாமல் கேட்டு விட்டார்... அவருக்கு அப்படியொரு கோபம் வந்தது மகள் மீது...

'இந்தக் கூறுகெட்ட மகளைப் பெத்துக்கிட்டு நான் படுற அவஸ்தை இருக்கே... ஐயோ... ஐயோ...' என்று மானசீகமாகத் தனது தலையில் அடித்துக் கொண்டவர், மகளின் தலையில் நறுக்கென்று கொட்டு வைக்கவும் தவறவில்லை...

"ஏன்டி... மத்த நாள் தான் இப்படி இருப்பன்னு நினைச்சா... இன்னைக்கும் இப்படித்தான் இருக்க... உன்னை எல்லாம்...?"

சித்ரவேணி மகளை அடிப்பதற்குள் அழகு மனைவியைத் தன் பக்கம் இழுத்து அணைத்துக் கொண்டான் பாதுகாப்பாய்... மருமகளை அடிக்காத வண்ணம் வைதேகி சித்ரவேணி கையைப் பிடித்துக் கொண்டார்...

“விடு சித்ரா... சின்னப் பொண்ணு தானே...” என்று அவரைச் சமாதானம் செய்தார் வைதேகி...

"அழகு பாருடா இந்தம்மாவை... காலங்கார்த்தால என் உயிரை வாங்கிறாங்க..." என்று சிணுங்கி கொண்டே அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள் அவனது புது மனைவி...

"நான் உன் உயிரை வாங்கிறேனா...? நீ தான்டி என் உயிரை வாங்கிற..." என்ற சித்ரவேணியின் கோபம் கொஞ்சமும் குறைவதாய் இல்லை...

"விடுங்க அத்தை... அவள் ஏதோ பழைய நினைவில் பேசிவிட்டாள்... தூக்க கலக்கத்தில் நேத்து நடந்த கல்யாணத்தை அவள் மறந்து போயிருப்பாள்... இதைப் போய்ப் பெருசா எடுத்துக்கிட்டு..."

அழகு சமாதானம் சொல்லவும் தான் சித்ரவேணி சற்று சமாதானமானார்... அழகு கூறுவது போல் இருக்குமோ என்று அவருக்கும் சந்தேகமாக இருந்தது... ஏனெனில் அவரது மகள் அப்படிப்பட்ட ஒரு விசித்திர பிறவி தான்...

"மருமகனே... நீ சொல்றதால விடுறேன்... இல்லை இன்னைக்கு இவளை..."

கீரை போல் மகளை ஆய்ந்துவிடத் துடித்தது அவரது கரங்கள்...

"அம்மா... இப்போ எதுக்குக் கதவை தட்டினீங்க...?"

"காபியை கொடுத்துட்டு போகலாம்ன்னு கதவை தட்டினேன்டா... அதுக்குள்ள உன் பொண்டாட்டி இப்படி ஒரு அக்கப்போரை இழுத்து விட்டு விட்டாள்..."

வைதேகியின் வார்த்தைகளில் சித்ரவேணியின் கோபம் இன்னமும் அதிகரித்தது... அவர் மகளின் மீது கொலைவெறியில் இருந்தார்...

"அம்மா... நீங்க திரும்பவும் இன்னொரு போரை ஆரம்பிக்காதீங்க... அதை இப்படிக் கொடுங்க..." என்று காபி அடங்கிய தட்டை தனது கையில் வாங்கியவன்,

"மங்கையை நான் பார்த்துக்கிறேன்... நீங்க இரண்டு பேரும் கவலைப்படாம போங்க..." என்று அவர்களை அனுப்பி வைத்தவன் அப்போது தான் மனைவியைக் குனிந்து பார்த்தான்...

வலமங்கை நின்ற வாக்கில் அவனது நெஞ்சில் முகம் புதைத்துச் சுகமாக உறங்கி போயிருந்தாள்... அதைக் கண்டு அவனுக்கு அத்தனை சிரிப்பாக வந்தது...

"குள்ளச்சி... நீ பண்ற அலும்பு தாங்கலைடி..." என்றவன் அருகில் இருந்த மேசை மீது காபி தம்பளர்கள் இருந்த தட்டை வைத்தவன் பின்பு கதவை சாத்திவிட்டு மனைவியை அழைத்துக் கொண்டு கட்டில் அருகே வந்தான்... தூக்கக் கலக்கத்தில் அவனுடன் இணைந்து நடந்தாள் வலமங்கை...

மலரினும் மென்மையான மனையாளை பூப்போல் ஏந்தி படுக்கையில் படுக்க வைத்தான் அழகு... அப்போதும் உறக்கம் கலையாமல் இருந்தவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"எப்போதும் தூக்கமும், சோறும் தான் உனக்குச் சொர்க்கம் இல்லையா குள்ளச்சி..." என்று சிரித்தவன் குளியலறைக்குள் நுழைந்தான்...

தனது சட்டையைக் கழற்றும் போது தான் கவனித்தான் அவளது நெற்றியில் தீட்டியிருந்த குங்குமம் அவனது சட்டையில் ஒட்டியிருந்தது... அதைக் காண காண இனிமையான ஒரு உணர்வு அவனுள் எழுந்தது... அதையும் தாண்டி அவனது குள்ளச்சியின் குழந்தைத்தனமான செயல் அவனது மனதில் ஆழப்பதிந்தது...

"உலகத்தில் சிறந்த மனைவின்னு உனக்குத் தான்டி அவார்டு கொடுக்கணும்..." என்று அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்...

அவன் குளித்து முடித்து உடை மாற்றும் வரை அவனது மனையாளின் துயில் கலையவில்லை... அவள் எழாமல் அவனும் வெளியில் செல்ல இயலாது... கூடியிருக்கும் உறவினர் கேட்கும் கேள்விகளுக்கு அவனால் பதில் சொல்லி சமாளிக்க முடியாது... வேறுவழியின்றி அவளை எழுப்பி விடத் தீர்மானித்தான்...

வலமங்கை அருகில் வந்து நின்றவன் தனது இருகைளையும் கட்டி கொண்டு உறங்கும் மனைவியவளை உற்று நோக்கினான்... நலுங்கிய தோற்றத்தில் அலுத்து போய் உறங்கும் அவளைக் கண்டு அவனது முகத்தில் புன்னகை விரிந்தது...

'இப்படியே போய் இவள் தரிசனம் கொடுத்தால் எல்லோரும் வெட்கப்படத் தான் செய்வார்கள்... அதிலும் கொடுத்தாள் பாரு ஒரு கம்ப்ளையிண்ட்... அடியேய் குள்ளச்சி, நீ தெரிஞ்சு தான் பேசினியா...? இல்லை தெரியாம பேசினியா...? ஆனா நீ தெரிஞ்சோ, தெரியாமலோ பேசிய வார்த்தைகள் நமக்கு நன்மை தான் செய்திருக்கு... இனி யாரும் நம்மளை சந்தேகமா பார்க்க மாட்டாங்க...'

மனதிற்குள் நினைத்துக் கொண்டே வந்தவன் சட்டென்று அப்படியே தனது யோசனையை நிறுத்தினான்... அன்று மங்கை கூறிய வார்த்தைகள் அவனது காதில் ஒலித்து அவனது இத்தனை நேர இதமான மனநிலையை அப்படியே மாற்றியது...

'கல்யாணம் என்ன விளையாட்டு காரியமா...? நான் இவளது கணவன், இவள் எனது மனைவி என்பதை ஏன் மறைக்க வேண்டும்...? மறுக்க வேண்டும்...' அவனது மனதில் குழப்ப மேகம் சூழ்ந்து கொண்டது...

ஆனாலும் நேரம் செல்வதை உணர்ந்து தனது குழப்பத்தைத் தள்ளி வைத்தவன் மனைவியை எழுப்ப நினைத்தான்...

"மங்கை... மங்கை..."

அவளது தோளில் தட்டி எழுப்பினான்... அதற்கு எல்லாம் அசரும் ஆளா அவனது மனைவி... கொசுவை விரட்டுவது போல் அவனது கையைத் தட்டி விட்டு விட்டு மீண்டும் தனது உறக்கத்தினைத் தொடர்ந்தாள்...

"மங்கை..."

சற்றுச் சத்தமாக அவளை அழைத்து அவளது இரு தோள்களையும் பற்றி உலுக்கினான் அவன்... நல்லவேளையாக அவனது இந்த முயற்சி பலித்தது... மெல்ல விழிகளை மலர்த்தினாள் அவனது செல்ல மனையாட்டி...

"ஹப்பாடா... ஒருவழியா கண் முழிச்சிட்டியா...? ரொம்பப் படுத்துறடி... எழுந்திருடி குள்ளச்சி..."

இமாலய சாதனை நிகழ்த்தியது போல் அவனது முகத்தில் அத்தனை மகிழ்ச்சி தெரிந்தது...

கண் விழித்த வலமங்கையோ தன் முகம் அருகில் இருந்த கணவனின் முகத்தைக் கண்டு மந்தகாசமாய்ப் புன்னகைத்தாள்... அவளது புன்னகையில் அவன் வியப்புற்று போய் நின்றிருந்தான்... ஆனாலும் அவளது புன்னகை அவனது மனதினுள் இதத்தினைப் பரப்ப தவறவில்லை...

"ஏய் குள்ளச்சி.... எழுந்திருடி..."

மீண்டும் அழகு உலுக்கியதில் வலமங்கையின் தூக்கம் முற்றிலும் பறந்தோட பதட்டமாய் எழுந்தமர்ந்தவள், "டேய்... நீ எப்படிடா என் ரூமுக்குள்ள வந்த...? அம்மா... அம்மா... இவனைப் பாருங்க..." என்று கத்த துவங்கினாள்...

அவள் கத்தியதில் பயந்து போனவனாய் சட்டென்று தனது கரத்தினால் அவளது வாயை மூடினான் அழகு...

"கத்தாதடி ராட்சசி... நீ கத்துறதை பார்த்து வெளியில் இருக்கிறவங்க தப்பா நினைச்சுக்கப் போறாங்க..." என்று மெல்லிய குரலில் அவளை அதட்டினான்...

கோபமாய் அவனது கையை வாயிலிருந்து அகற்றியவள், "நீ என் ரூமில் இருப்பதைப் பார்த்தா தான்டா எல்லோரும் தப்பா நினைப்பாங்க... முதலில் நீ வெளியில் போ..." என்று கையைக் கதவு பக்கமாய் நீட்டினாள்...

அவள் சொன்னதைச் சிறிதும் கண்டு கொள்ளாது திமிராய் கட்டிலில் அமர்ந்தவன் அவளை அமர்த்தலாய் பார்த்து வைத்தான்... அதில் அவளது இரத்த அழுத்தம் எகிறியது...

"டேய் அழகு... என் கோபத்தைக் கிளப்பாதே..." என்று பல்லை கடித்தவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது... முயன்று அடக்கி கொண்டவன்,

"உன் முட்டை கண்ணை நல்லா விரிச்சு பார்... இது யாரோட ரூம், நீ யார், நான் யார் என்பதற்கான விடை உனக்குத் தெரியும்..."

"என்னது லூசுத்தனமா பேசிக்கிட்டு... நீ அழகு, நான் நாச்சி..." என்றவளை பார்த்து கிண்டலாய் அவன்,

"இல்லை நீயும், நானும் ஆர்யா, நயன்தாரா..."

அப்படிச் சொன்னவனை முறைத்து பார்த்தவள் தனது கண்களை அறையைச் சுற்றி ஓட்டிய போது தான் அந்த வித்தியாசத்தை அவள் உணர்ந்தாள்... உணர்ந்த வித்தியாசமோ நேற்று நடந்த அவர்களது திருமண நிகழ்வை அப்பட்டமாய்ப் பறைச்சாற்றியது அவளிடத்தில்...

கைகளைப் பிசைந்து கொண்டு அவள் அவனை அவஸ்தையாய் பார்க்க... அவனோ கேலியாய் புருவத்தை உயர்த்தியபடி,

"இப்போதாவது விடை தெரிந்ததா திருமதி. வலமங்கை நாச்சியார் அழகு சுந்தரம் பெருமாள் அவர்களே..." என்று அவன் நீட்டி முழக்க...

அருகில் இருந்த தலையணை எடுத்து அவனை மொத்தியவள், "எதுக்குடா இப்படி நீட்டி முழக்கிற...?"

"குள்ளச்சி... நான் உன் புருசன்னு தெரிஞ்சுமா என்னை அடிக்கிற..." என்று போலியாய் அலறியவன் அவளது கழுத்தில் தான் கட்டிய தாலியை கையில் எடுத்து காட்டி,

"எனக்குத் தான் மரியாதை கொடுக்க மாட்ட... ஆனா இதுக்காவது மரியாதை கொடு என் பொண்டாட்டி தாயே..."

என்று கேலியாய் அவன் உரைக்க...

அதில் அவளது முகம் மாறியது... வெடுக்கென்று அவனது கையில் இருந்த தாலியை பறித்தவள், "உனக்கு எல்லாம் இந்த மரியாதையே அதிகம் தான்..." என்று முணுமுணுத்தபடி அவள் படுக்கையில் இருந்து எழுந்தாள்...

"என்னோட மரியாதை இருக்கட்டும்... இப்ப மட்டும் நீ வெளியில் போன உனக்குச் செமத்தியான மரியாதை கிடைக்கும்..."

அவன் அழுத்தி சொன்ன விதத்தில் அவளுக்குப் புரிந்து போனது இதில் ஏதோ உள்விவகாரம் இருக்கிறது என்று...

"என்னடா சொல்ற...?" என்றவளை பார்த்து கண்சிமிட்டியவன்,

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி இங்கே வந்த உன் அம்மா, என் அம்மா கிட்ட நீ பண்ணி வச்ச வேலை அப்படிப்பட்டது..."

"அப்படி என்ன பண்ணினேன் அழகு...? தூக்க கலக்கத்தில் நான் எதுவும் உளறி கொட்டிட்டேனா...?"

"உளறல்ன்னு நீ எதைச் சொல்ற...?"

"அதான் நமக்குள் எதுவும் நடக்கலைன்னு..." தயங்கி தயங்கி உரைத்தவளை கண்டு அவன் பெரும்குரலெடுத்துச் சிரித்தான்...

"இப்போ எதுக்குடா இப்படிப் பேய் மாதிரி சிரிக்கிற...?"

"ஹா... ஹா... இப்போ சொன்னியே இது தான் பெரிய காமெடி..." என்று மீண்டும் சிரித்தவனைக் கண்டு எரிச்சலுடன் பார்த்தாள் அவள்...

"சரி சொல்றேன், சொல்றேன்... பழையபடி முருங்கை மரம் ஏறிடாதே..."

"அப்போ என்னை வேதாளம்ன்னு சொல்றியா...?"

அடிப்பதற்காக அவனை நோக்கி வந்தவளின் நடையைத் தேங்க செய்தது அடுத்து அவன் கூறிய வார்த்தைகள்... அவன் நடந்தது அனைத்தையும் ஒன்று விடாது கூறினான்...

"அத்தை கிட்ட அப்படியாடா சொன்னேன்...?"

அவளது கோபத்தினை வெட்கம் வந்து தடுத்து ஆட்கொண்டது... அவளது கோபத்தினை அவன் எந்தளவுக்கு ரசிப்பானோ அந்தளவுக்கு அவளது வெட்கத்தினையும் அவன் ரசித்துப் பார்த்தான்...

"அடடே... மங்கைக்கும் வெட்கம் வருமோ..."

அவனது கிண்டலில் இன்னமும் நாணம் அடைந்தவள், "போடா லூசு..." என்றுரைத்தவள் வேகமாய்க் குளியலறைக்குள் சென்று புகுந்து கொண்டாள்...

உள்ளே சென்று கதவை சாத்திவிட்டு அதன் மீது சாய்ந்து நின்றவளுக்கு மனம் படபடவென அடித்துக் கொண்டது... ஏனோ மனம் இனிமையாக உணர்ந்தது... அதையும் மீறி அவளது விழிகளில் கண்ணீர் துளிர்த்தது... இவ்வளவு நேரம் லேசாக இருந்த மனம் இப்போது பாரமானது போல் ஒரு தோற்றம்...

அந்த நொடி அவளுக்குப் புரிந்து போனது அழகு தன் மனதினை முழுமையாய் ஆக்கிரமித்து விட்டான் என்று... எந்தக் கணத்தில் அவன் அவளது மனதில் நுழைந்தான் என்று அவளுக்குத் தெரியாது...

இரண்டு நாட்களுக்கு முன்பு அவன் தான் தனக்கு வர போகும் மணாளன் என்று அறிமுகம் செய்து வைத்த போது அவளுக்குச் சற்று திகைப்பாக இருந்தது என்னமோ உண்மை... ஆனால் அதையும் மீறி மனதில் முகிழ்த்த சந்தோசத்தினை அவளால் அடக்கி கொள்ள முடியவில்லை... ஏனென்று புரியாத ஒரு சந்தோசம்...

எல்லாம் சில நொடிகள் தான்... அழகின் வருத்தமான முகம் கண்டதும் தான் அவளுக்கு அவனது காதல் நினைவில் வந்தது... அடுத்த நொடி அவள் உள்ளுக்குள் இறுகி

போனாள்... அதன் பின் அமைதியின் பின்னே ஒளிந்து கொண்டாள் தனது மனதினை மறைத்துக் கொண்டு...

அவனது வேதனையை மறைத்துக் கொண்டு தனக்காக நகையைத் தேர்வு செய்தவனைக் கண்டு அவளுக்குத் தான் அதிக வேதனையாக இருந்தது... அது போல் தான் மாடியில் வைத்து அவன் பேசிய வார்த்தைகளும் அவளது மனதின் வலியை அதிகரிக்கச் செய்தது... குடும்பத்தினருக்காகத் தான் இந்தத் திருமணம் என்று அவன் கூறிய போது அவள் உள்ளுக்குள் நொறுங்கி போனாள்...

என்ன இருந்தாலும் அவளும் ஒரு பெண் தானே... தனக்கு வர போகும் கணவனைப் பற்றி அவளுக்குப் பெரிதாக எதிர்பார்ப்புகள் இல்லாது போனாலும் அவன் தன்னை மட்டுமே காதலிக்க வேண்டும்... தனக்காக மட்டுமே உயிர் வாழ வேண்டும் என்று பல ஆசைகள் பெண்ணின் மனதிலும் இருந்தது...

அழகு அவளது கணவனாக வந்தது குறித்து அவளுக்கு மகிழ்ச்சி தான்... அழகு நல்லவன், நல்ல பண்புகளைக் கொண்டவன் மொத்தத்தில் எந்தக் குறையும் இல்லாதவன்...

'அவன் கொஞ்சம் கருப்பா இருப்பது உனக்குக் குறையாக இல்லையா...' அவளது மனசாட்சி அவளிடம் கேலியாய் கேள்வி கேட்டது...

'கருவாயன் கொஞ்சம் கருப்பு தான்... ஆனாலும் அழகானவன் தான்...' அவள் அவனுக்காக வக்காலத்து வாங்கினாள்...

அதே சமயம் அவளது கண்களில் துளிர்த்த நீரானது ஆறாய் பெருகி கன்னங்களில் வழியே வழிந்து ஓடியது... அவளது அந்தக் கண்ணீரே சொல்லாமல் சொல்லியது அவளது மனநிலையை... அதில் அவளது கணவன் அழகு அழுத்தமாய்ப் பதிந்துவிட்ட கதையை...

அவளைப் பொருத்தவரையில் திருமணம் என்பது வாழ்வில் ஒரு முறை தான் வரும்... அது அழகுவுடன் நடந்து முடிந்துவிட்டது... இனி அவள் உயிர் போகும் வரை அவன் மட்டும் தான் அவளது கணவன்... அதற்காக அவனை இந்தப் பந்தத்தில் பிடித்து வைக்கவும் அவளுக்கு விருப்பமில்லை...

இதுநாள் வரை வாழ்க்கையில் தனக்கு என்று வாழாது பிறருக்காகவே வாழ்கிறவன் அவன்... அப்படிப்பட்டவனின் சந்தோசத்திற்காகத் தனது சந்தோசத்தை இழக்க அவள் முடிவு செய்தாள்... அவனின் சந்தோசம் ரேஷ்மாவிடத்தில் இருக்கிறது என்றால் அதற்காக அவனை விட்டு பிரியவும் அவள் தயாராக இருந்தாள்... அதனால் தான் அவனிடம் அவள் விவாகரத்து கேட்டது...

நிச்சயம் அழகு விவாகரத்துக் கொடுக்கச் சம்மதிக்க மாட்டான்... குடும்பம் அது இது என்று எதையாவது காரணம் காட்டி தடுப்பான் என்று அவள் ஊகித்திருந்தாள்... அதனால் தான் தங்களது திருமணத்தை யாருக்கும் அறிவிக்கக் கூடாது என்று அவள் முடிவு செய்து அவனிடத்தில் சொன்னது...

விவாகரத்து கேட்டதும் அவன் கோபம் கொண்டு தனது கையைப் பற்றி இழுத்த நிகழ்வு அவளுள் இனிமையாகப் பதிந்திருந்தது... அவன் பிடித்திழுத்த கரத்தினை அவள் மென்மையாக வருடி கொடுத்தாள்...

'நான் மட்டும் அதைச் சந்தோசமாகவா சொன்னேன்... உன்னோட சந்தோசத்துக்காகத் தானே அப்படிச் சொன்னேன்... உன்னை இழப்பது எனக்கும் கஷ்டமான ஒன்று தான் அழகு...' அவனது பெயரை 'அழகு' என்று சொல்லும் போதே அவளது மனது 'அழகா' என்று செல்லமாய்ச் சொல்லி பார்த்துக் கொண்டது...

அவன் மீதான இந்த அன்புக்கு பெயர் காதலா, கணவன் என்கிற பந்தமா இல்லை உறவு என்கிற சொந்தமா எதுவென்று அவளுக்குத் தெரியவில்லை...

ஆனால் அந்தக் கணம் அவனைத் தவிர வேறு எந்த ஆண்மகனையும் அவளுக்குப் பிடிக்கவில்லை...

"குள்ளச்சி... இன்னும் உள்ளே என்னடி பண்ணிக்கிட்டு இருக்க...?" அழகின் குரலில் நிகழ்காலத்திற்கு வந்தவள்,

"இதோ ஐந்து நிமிடத்தில் வந்து விடுகிறேன் அழகு..." என்றவள் குளிப்பதற்கு ஆயத்தமானாள்...

குளித்து முடித்து உடை மாற்ற எண்ணி உடையைத் தேடியவளுக்கு அப்போது தான் ஞாபகம் வந்தது தான் கையோடு உடை எதுவும் எடுத்துக் கொண்டு வரவில்லை என்று... துண்டை எடுத்து உடலில் சுற்றிக் கொண்டு கதவை லேசாகத் திறந்தவள் அங்குக் கட்டிலில் அமர்ந்து கொண்டு கணினியை நோண்டி கொண்டிருந்த கணவனைப் பார்த்து,

"அழகு... என்னோட ட்ரெசை எடுத்துத் தாயேன்டா..."

அதில் அவளை நிமிர்ந்து பார்த்த அழகு மனைவியின் தோற்றம் கண்டு நிலைக்குலைந்து போனான்...

அவள் கதவை லேசாகத் திறந்து வைத்திருந்த போதும் அவளது அரைகுறை தோற்றம் அவனது கண்ணில் விழ தவறவில்லை... தாபமா, தாகமா என்று புரியாத ஒரு உணர்வில் அவன் தனது எச்சிலை கூட்டி விழுங்கி கொண்டான்...

"அழகு..." மீண்டும் அவள் அழைக்கவும் தான் அவன் தனது நினைவில் இருந்து கலைந்தான்...

"உனக்குத் தான் பாத்ரூமில் இருந்து ட்ரெஸ் மாத்த பிடிக்காதே... உள்ளே வந்து ட்ரெஸ் மாத்து..."

"அப்போ நீ வெளியில் போடா..."

"நான் தனியா வெளியில் போனா கேள்வி கேட்டே என்னைக் கொன்னுருவாங்க... முக்கியமா உன் மாமனார் என்னைக் கொன்னு போட்டுட்டு தான் மறுவேலை பார்ப்பார்..." என்று அவன் சலித்துக் கொண்டான்...

அதைக் கேட்டதும் அவளது முகம் மாறியது... நொடியில் தன்னைச் சமாளித்துக் கொண்டவள், "அப்போ நீ பாத்ரூம் உள்ளே வந்திரு... நான் சட்டுன்னு ட்ரெஸ் மாத்திடறேன்..."

"ஹான்... இது சூப்பர் டீலிங்..." என்றவன் கணினியை அணைத்து விட்டுக் குளியலறை நோக்கி வந்தான்...

அவன் உள்ளே நுழையவும், அவள் வெளியே செல்லவும் சரியாக இருந்தது... தன்னை இடித்துக் கொண்டு செல்லும் மனைவியின் வழுவழுப்பான தோள் கண்டு அவனது இதயம் தாளம் தப்பியது...

'கடவுளே... இது என்ன சோதனை...?' என்று வலுக்கட்டாயமாய்க் கண்களைத் திருப்பிக் கொண்டு அவன் குளியலறைக்குள் நுழைந்தான்...

சிறிது நேரம் கழித்தும் அவளிடம் இருந்து எந்தவித சத்தமும் வரவில்லை... சரி நேற்று போல் அவள் உடை மாற்றியிருப்பாள் என்று அவனாக நினைத்துக் கொண்டு குளியலறை கதவை திறந்து கொண்டு வெளியில் வந்தான்... ஏனெனில் அவன் கேள்வி கேட்டால் நேற்று போல் அதற்கும் தனி வியாக்கியானம் கூறுவாள் அவனது அருமை மனைவி... இனி அவன் தான் அவளைப் புரிந்து கொண்டு நடந்து கொள்ள வேண்டும்...

அங்கே அவனது மனைவியோ பருத்தி புடவையுடன் போராடி கொண்டிருந்தாள்... அதைக் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது... அவனது சிரிப்புச் சத்தத்தில் அவள் பதறி போய் மறுபக்கம் திரும்பி நின்று கொண்டாள் அவள்... அவளது முகம் வெட்கத்தில் சிவந்து போனது...

"நான் சொல்லாமல் நீ எப்படி வெளியில் வரலாம்...?" என்று கேட்டு வேறு அவனிடம் சண்டைக்குப் போனாள்...

"நேத்து மாதிரி நீ பாட்டுக்கு ட்ரெஸ் மாத்திட்டு வெளியில் போயிருவ... நான் மட்டும் குளியலறையில் தவம் இருக்கணுமாக்கும்...?"

அவன் கூறியதை கேட்டு அவள் பதில் பேசாது உதடுகளைக் கடித்தாள்...

"சரி அதை விடு... இப்போ நீ எதுக்கு இப்படி நின்னுக்கிட்டு இருக்க...?"

"அது வந்து... புடவை கட்ட வர மாட்டேங்குது..."

"புடவை கட்ட வர மாட்டேங்குதா இல்லை கட்ட தெரியாதா...?" என்று கேட்டவனின் குரலில் அத்தனை கேலி இருந்தது...

"அதெல்லாம் புடவை கட்ட தெரியும்... இது பருத்தி புடவை என்பதால் கஷ்டமாயிருக்கு..." அவனது சிரிப்பு கண்டு அவளுக்குக் கோபம் வந்தது...

"நான் வேணா உதவி பண்ணட்டுமா...?"

"நீயா...?"

"ஆம் நானே தான்... இப்போ போய் உன் அம்மாவையோ, இல்லை என் அம்மாவையோ நான் கூட்டிக்கிட்டு வர முடியாது..."

அவன் கூறியதில் இருந்த உண்மை புரிந்ததில் அவள் சரியென்று சம்மதித்தாள்...

அவள் சரியென்றதும் அவன் அவள் முன் வந்து நிற்க, அவளோ சட்டென்று திரும்பி அவனுக்கு முதுகு காட்டி நின்றாள்...

"ப்ச்... இப்படி நின்னா நான் எப்படி உதவுவது...?" என்று அலுத்தவன் அவளது கையைப் பிடித்துத் திருப்பினான்...

அவனது எதிர்பாராத செய்கையில் அவளும் திரும்ப, அவளது நின்ற அழகில் அவனுக்கு மயக்கம் வராத குறை தான்... திகைத்து போய் நின்றவனைக் கண்டு லஜ்ஜையுற்றவளாய் திரும்பி கொண்டவள் அவசரமாகத் தனது மாராப்பு சேலையை எடுத்து போட்டு கொண்டாள்...

பின்பு ஒழுங்காகக் கொசுவம் எடுத்தவள் மெல்லிய குரலில்,

"இதைக் கொஞ்சம் சரி பண்ணி விடு அழகு..."

அவளது குரலில் திகைப்பில் இருந்து வெளியில் வந்தவன், "இதோ..." என்றபடி அவள் முன் வந்து நின்றான்...

அவளது இளமை அழகை மூடி மறைத்திருந்த புடவையைக் கண்டு அவனுள் பெருமூச்சு கிளம்பியது... ஒன்றும் பேசாது கீழே குனிந்து அவளது புடவை கொசுவத்தைச் சரி செய்து விட்டான்...

"இப்ப ஓகே..." அவள் சொன்னதும் எழுந்தவன் தனது கணினியை தேடி சென்றான்...

ஆண் மகனாய் அவனுள் நிகழும் ரசாயான மாற்றம் கண்டு அவனுக்குமே பெருத்த ஆச்சிரியம்... நேற்றுவரை அவளைக் கண்டால் தோன்றாத உணர்வுகள் இன்று எழுவதற்குப் பெயர் என்ன என்று அவனுக்குத் தெரியவில்லை...

அவள் மீதான இந்த அன்புக்கு பெயர் காதலா, மனைவி என்கிற பந்தமா இல்லை உறவு என்கிற சொந்தமா எதுவென்று அவனுக்குத் தெரியவில்லை... ஆனால் இந்தக் கணம் அவனது மனைவி அவனைப் பெரிதாக ஈர்க்கிறாள் அது மட்டும் உண்மை...

இருவரும் கிளம்பி அறையை விட்டு வெளியில் வந்த போது மணி பத்தை தாண்டியிருந்தது...

"நாச்சி... இப்போ உனக்குக் கல்யாணமாகிருச்சு... முதல்ல இருந்த மாதிரி விளையாட்டுத்தனமா இருக்காதே..." என்று அவளைக் கடிந்தபடி அவளது தலையில் பூச்சூடினார் சித்ரவேணி...

"சரி, சரி... காலையிலேயே உங்க கச்சேரியை ஆரம்பிக்காதீங்க..." என்று முணுமுணுத்த வலமங்கை

அன்னையிடம் இருந்து தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடி சென்று நேரே அத்தையிடம் சரணடைந்தாள்...

"எல்லோரும் சாப்பாட்டாச்சு நாச்சி... நீயும், அழகுவும் தான் சாப்பிடணும்... அழகுவை கூட்டிட்டு வந்து பரிமாறு..." என்றுவிட்டு வைதேகி உள்ளே வேலையாய்ச் சென்றுவிட்டார்...

'அச்சோ... இது வேறயா...' என்று அவள் முனங்கியபடி அங்கிருந்து நகர்ந்தாள்... நெய்யில் மிதந்த கேசரி வேறு அவளின் பசியைக் கண்டபடி தூண்டிவிட்டது...

வரவேற்பறையில் வந்து அவள் பார்த்த போது அத்தனை உறவினர் மத்தியில் அமர்ந்து கொண்டு பேசி கொண்டிருந்தான் அழகு... அவன் அருகில் வந்தவள் வழக்கம் போல் 'டேய் அழகு' என்று வாய் வரை வந்த வார்த்தையைக் கஷ்டப்பட்டு உள்ளே தள்ளினாள்...

"மாமா... சாப்பிட வர்றீங்களா...?"

வலமங்கையின் அழைப்பில் வியப்பாய் திரும்பி பார்த்தான் அழகு... அவள் ஈயென்று இளித்ததிலேயே தெரிந்து போனது இந்த மரியாதை உறவினர்களுக்காகத் தான் என்று... அதைப் புரிந்தவனாய் சிரித்தபடி எழுந்தவன்,

"வா போகலாம்..." என்றுவிட்டு முன்னே நடக்க... அவள் அவனைப் பின்தொடர்ந்து ஓடி வந்தாள்...

"எனக்குத் தான்டா ரொம்பப் பசிக்குது... நான் முதலில் போகிறேன்..." என்று கூறியபடி அவள் அவனை முந்தி கொண்டு செல்ல, அவனும் அவளுடன் போட்டி போட்டுக் கொண்டு வேகமாய் அவளைத் தாண்டி முன்னால் சொன்றான்...

"அழகு..." என்று துரத்தியபடி வந்தவளை கண்டு பழிப்பு காட்டியவன் முதலில் உணவு மேசையைச் சென்றடைந்தான்...

"போடா..." என்று சிணுங்கியவளின் தோள் பற்றி நாற்காலியில் அமர வைத்தவன் அவளுக்குத் தட்டு எடுத்து வைத்துப் பரிமாறினான்...

"அழகு... யாராவது பார்க்க போறாங்க...?" சுற்றும் முற்றும் பார்த்தபடி பயத்துடன் பேசியவளை கண்டு,

"பார்த்தா பார்த்துட்டு போகட்டும்... என் மனைவிக்கு நான் பரிமாறுவேன்... இவ்வளவு ஏன் ஊட்டவும் செய்வேன்..." என்று அசால்ட்டாய் அவள் கூற,

"ஆங்..." என்று திகைத்த விழித்தவளின் தலையில் தட்டி,

"கேசரி உன்னை வா வான்னு கூப்பிடறது உனக்குக் கேட்கலையா...?" என்றதும் அவளது கவனம் கேசரி மீது சென்றது...

"ஆமாம்டா..." என்றபடி கேசரியை அள்ளி எடுத்து வாயில் போட்டு கொண்டாள்...

"நீயும் உட்கார் அழகு..."

"ஆஹா... பெரிய மனது பண்ணி என் மனைவி என்னைச் சாப்பிட சொல்லி விட்டாள்..." என்று அவளைக் கிண்டலடித்தபடி அவன் நாற்காலியில் அமர்ந்து தனக்குத் தானே பரிமாறிக் கொண்டு உண்ண ஆரம்பித்தான்...

"அழகு... நீ எதுக்கு மனைவி, மனைவின்னு என்னை ஏலம் போடுற... இனிமேல் இப்படிச் சொல்லாதே என்ன...?" தாழ்ந்த குரலில் ரகசியம் பேசியவளை அவன் அமைதியாய் பார்த்தான்...

சற்று முன் தடுமாறிய நெஞ்சத்தின் இனிமையான உணர்வுகள் இப்போதும் அவனுள் சுகமாய் வியாபித்திருந்தது...

"சென்னையில் தான் அப்படிச் சொல்லக் கூடாதுன்னு சொல்லியிருக்க... இங்கே இல்லையே..."

அவனது வார்த்தையில் விழித்தவள், "ஆங்... நீ சொல்றதும் சரி தான்..." என்றபடி அவள் உண்ண ஆரம்பிக்க...

அவனுக்குத் தான் தொண்டையில் முள் சிக்கி கொண்டது போல் உண்ண முடியவில்லை... அவ்வளவு எளிதில் அவனது உரிமையை அவனால் விட்டு கொடுக்கவும் முடியவில்லை... உரிமையானவளையும் அவனால் விட்டு கொடுக்க முடியவில்லை...

அந்நேரம் அங்கு வந்த வேதநாயகி அழகை கண்டு, "ராசா... சந்தோசமா இருக்கியா...?" என்று கேட்க,

அவனோ கசப்பை விழுங்கியவன் போல் கசப்பாய் புன்னகைத்தான்...

"அதெல்லாம் அவன் சந்தோசமா தான் இருக்கான்... நீ ரொம்பச் சீன் போடாதே கிழவி..." வலமங்கை வெடுக்கென்று பதில் கூற...

"உன்னைக் கல்யாணம் பண்ணியிருக்கான்ல அதான் கேட்டேன்..." நக்கலாய் ஒலித்த வேதநாயகியின் குரலில் நம் வலமங்கை ரோசமாய் நிமிர்ந்தாள்...

"டேய் அழகு... நேத்து நீயும் நானும் சந்தோசமா தானே இருந்தோம்... அதை இந்தக் கிழவி கிட்ட நீயே சொல்லு..."

தாங்கள் சந்தோசமாய்க் கதை பேசிய கதையை அவள் கூற... வேதநாயகி வேறு ஒன்றை நினைத்தவராய் இருவரையும் நிறைவாய் பார்த்தார்... அவருக்கு இப்போது தான் நிம்மதியாய் இருந்தது...

அழகுவின் அத்தனை நேர மனவருத்தமும் வலமங்கையின் பேச்சில் காணாமல் போய்விட்டது... அவனது உதடுகளில் புன்னகை அரும்பியது...

"இது போல் நீங்க ரெண்டு பேரும் எப்போதும் சந்தோசமா இருக்கணும்..." என்று ஆசிர்வதித்த வேதநாயகி அங்கிருந்து செல்ல...

"க்கும்... நீ சொல்லலைன்னாலும் நாங்க சந்தோசமா தான் இருப்போம்..." என்று நொடித்துக் கொண்டே உளுந்து வடையை வாயினுள் போட்டு அமுக்கினாள் வலமங்கை...

"இப்போ நீ பேசியதுக்கு என்ன அர்த்தம்ன்னு புரிஞ்சு தான் பேசினியா மங்கை...?"

"என்ன அர்த்தம்...?" புரியாது அவனைப் பார்த்தாள் அவள்...

"காலையில் எங்கம்மா கிட்ட சொன்னதுக்கும் இப்போ ஆச்சி கிட்ட சொன்னதுக்கும் ஒரே அர்த்தம் தான்..."

அதைக் கேட்டு அவளுக்குப் புரையேறியது...

"பார்த்துடி..." என்றபடி அவன் தண்ணீர் எடுத்து கொடுக்க, அதை வாங்கி ஒரே மூச்சில் பருகி முடித்தவள் திருதிருவென முழித்தாள்...

"இப்போது புரிந்ததா மங்கை... நம் பந்தம் காலத்தாலும் அழிக்க முடியாத நிலையான பந்தம் என்று... இதை நீ ஏத்துக்கிட்டு தான் ஆகணும்... என்னால் உனக்கு விவாகரத்து எல்லாம் கொடுக்க முடியாது..." என்றவனை அவள் முறைத்து பார்த்தாள்...

"அன்று உன் முடிவை தான் நான் கேட்டேன்... அதற்குப் பதிலாக எந்தவொரு உறுதியையும் நான் உனக்கு வாக்குறுதியாய் கொடுக்கவில்லையே... இப்போது நான் உனக்கு உறுதியாக என் முடிவை சொல்கிறேன்... நன்றாகக் கேட்டு கொள்...." என்றவன்,

“நீ எனக்கு ஒரு வருசம் டைம் கொடுத்த மாதிரி நானும் உனக்கு ஒரு வருசம் டைம் கொடுக்கிறேன்... முடிந்தால் இந்த ஒரு வருசத்துக்குள் உன் மனசை மாத்திக்கிட்டு என்னோடு வாழும் வழியைப் பார்... இல்லை என்றால்..." என்று நிறுத்தியவன் அவளது விழிகளை ஆழ்ந்து பார்த்தபடி,

"எனக்கான வாழ்வை எப்படி வாழ்வது என்று எனக்குத் தெரியும்..." என்று அழுத்தமாய், நிதானமாய்க் கூறியவன்

கை கழுவ எழுந்து சென்றான்...

அழுத்தமாய் அவன் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் அவளது காதிலேறி அவளது மூளையை வேலை நிறுத்தம் செய்ய வைத்தது...

அழகு கை கழுவி விட்டு வந்து பார்த்த போது மலங்க மலங்க விழித்தபடி அமர்ந்திருந்த வலமங்கையைக் கண்டு அவனுக்கு இரக்கம் சுரந்தது... குனிந்து அவளது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டவன் அவளது விழியோடு விழி கலந்தபடி அந்த ஆறுதல் வார்த்தைகளைக் கூறினான்...

"ரொம்ப யோசிக்காதே கண்ணம்மா... உனக்கும் சேர்த்து யோசிக்க நானிருக்கிறேன்..."

தித்திக்கும்...!!!

அழகு கூறிய 'கண்ணம்மா' என்ற வார்த்தையில் மனமுருக அவனைப் பார்த்தாள் வலமங்கை... முதன்முறையாக அவளைச் செல்ல பெயரிட்டு அழைத்திருக்கிறான் அவளது கணவன்... அவள் கனவில் கற்பனயாய் உருவாக்கி வைத்திருந்த கணவனுக்கு, அழகு கொஞ்சம் கொஞ்சமாய் உருவம் கொடுக்க முயல்கிறானோ...?

அந்த நினைவு வந்ததும் தலையைக் குலுக்கி அதை விரட்டியடித்தவள், "பக்கத்து வீட்டுக் கண்ணம்மா கெழவிக்கும் சேர்த்து நீ யோசிப்பியா அழகு...? இது என்னடா புதுக் கதையா இருக்கு...? அவளைக் கட்டின மகாராசனுக்கு மட்டும் நீ பேசியது தெரிஞ்சது..." என்று கூறியவள் ஆள்காட்டி விரலை அவன் முகத்திற்கு நேரே நீட்டி ஆட்டியபடி,

"நீ செத்தடா மவனே..."

கண்களை உருட்டி கொண்டு அவள் அவனை மிரட்டிய பாவனையில் அழகிற்குக் குபீரென்று சிரிப்பு பீறிட்டுக்

கொண்டு வந்தது... வாய் விட்டு சிரித்தவன் அவள் வாய் மீது கை வைத்து மூடியபடி,

"இப்படிச் சத்தமா பேசாதே... அந்தாளு கேட்டுட்டுக் கையில் அருவாளோட வந்துர போறாரு..."

அந்நேரம் அந்தப் பக்கமாய் வந்த சித்ரவேணி இருவரின் நெருக்கமான நிலையைக் கண்டு நாணம் கொண்டு அங்கிருந்து அகன்றுவிட்டார்... எதிரில் வந்த வைதேகியிடம் மகிழ்வோடு சின்னவர்களைச் சுட்டிக்காட்டினார்...

வலமங்கை புறம் குனிந்திருந்த அழகுவின் தோற்றம் பார்ப்பவர்களுக்கு ஏதோ இருவரும் அந்நியோன்யமாய் இருப்பது போல் தோன்றும்...

அதைக் கண்டு வைதேகி மனதிற்கு நிறைவாக இருந்தது... திருமணம் வேண்டாம் என்று கூறிய மகன் மருமகளிடம் இழைந்து கொண்டிருப்பது கண்டு அவருக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது...

"இப்பத்தான் மதினி நிம்மதியா இருக்கு..." சித்ரவேணி கூறியதை வைதேகியும் ஆமோதித்தார்...

அதன் பின் இரு மாமியார்களும் சேர்ந்து மற்றவர்கள் யாரும் சிறியவர்களைத் தொந்திரவு செய்யாமல் பார்த்து கொண்டனர்...

அழகு சிரிப்பதை ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்த வலமங்கை மெதுவே, "அழகு... அன்னைக்கு நீ டிவோர்ஸ்க்கு சரின்னு சொன்னியேடா... இப்போ ஏன் இப்படிப் பேசுற...?"

"சரின்னு சொன்னேனா...? எப்போ...?" என்று தாடையைத் தடவியபடி யோசித்தவன், "எனக்கு ஞாபகம் இல்லையே..." என்று அசராது பொய் கூறினான்...

"பொய் சொல்லாதேடா... நீ சம்மதம்ன்னு சொன்னது எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு... இப்போ ஏன் இப்படிப் பேச்சு மாறுகிற...? வார்த்தை தவறி விட்டாய் அழகு..."

மூக்கு நுனி சிவக்க கோபமாய் அவனைப் பார்த்து முறைத்தாள் வலமங்கை...

"வாக்கு தவற கூடாதுன்னு தான் நானும் போராடிக்கிட்டு இருக்கேன்..." என்று ஒரு மாதிரி குரலில் கூறியவன் பிறகு தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"பின்னே உன்னை எப்படி மணமேடைக்கு இழுத்துட்டு வர்றது...? இப்படி நான் பொய் சொன்னதால் தான் நீ மணமேடைக்கு வந்த... இல்லைன்னா நீ எங்கேயாவது ஓடி போயிட்டேன்னா நான் என்ன பண்றது...?"

"நான் சொன்னதை நீ செய்யலைன்னா நான் ஓடத்தான் போகிறேன் பாரு..." முகத்தைச் சுருக்கி கொண்டு அவள் முணுமுணுக்க...

"நானும் உன் கூட வருவேனே..." என்று கூறியபடி அவளை இடித்துக் கொண்டு அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்தான் அவன்...

"ப்ச்... நான் சீரியசா பேசுறேன் அழகு... நீ என்னடான்னா ஜோக் அடிச்சிக்கிட்டு..."

"நானும் சீரியசா தான் சொல்றேன் மங்கை... நமக்கு நடந்த கல்யாணத்தை நீ கேலிக்கூத்தாக்க நான் விட மாட்டேன்..." அவனது குரலிலும் சீரியசாக ஒலித்தது...

"பிடிக்காத திருமணத்தால் யாருக்கு என்ன லாபம்...?" என்று சீறலாய் கேட்டவளை கண்டு அவனது முகத்தில் சொல்லொண்ணா வருத்தம் எழுந்தது...

"யாருக்கு பிடிக்காத கல்யாணம்...? உனக்கா...?"

அவன் கேட்ட கேள்விக்கு அவளால் பதில் கூற முடியவில்லை... அவளுக்கு அவனைப் பிடிக்கவில்லையா, திருமணத்தைப் பிடிக்கவில்லையா...? இல்லையே இரண்டுமே அவளுக்குப் பிடித்துத் தானே இருந்தது...

அவளின் அமைதியை வேதனையோடு பார்த்தவன், "உனக்குப் பிடிச்சியிருக்கோ, இல்லையோ...? நீ என்

மனைவி, நான் உன் கணவன்... இதை யாராலும் மாற்ற முடியாது... மாற்றவும் விட மாட்டேன்... நீ இப்படியே பேசிக்கிட்டு இருந்தேன்னு வச்சுக்கோ ஒரு வருச டைம்மை தூக்கி தூர போட்டுட்டு இன்னைக்கே எனக்கான வாழ்க்கையை நான் வாழ ஆரம்பிச்சிருவேன்..." என்று கூறியவனின் குரலில் சொன்னதைச் செய்யும் தீவிரம் இருந்தது...

"ஆங்..." அதிர்ச்சியில் வாய் பிளந்தவளின் தாடையில் விரல் வைத்து வாயை மூடியவன்,

"இனி இது மாதிரி அபசகுனமா எதாவது பேசின... பேசுற இந்த வாயை எப்படி அடைக்கிறதுன்னும் எனக்குத் தெரியும்..." என்றவனது கை விரல் கணவனாய் மாறி அவளின் இதழ்களை மென்மையாய் வருடி விட்டது...

அதன் மென்மையில் சற்று நேரத்திற்கு முன் அவனுள் எழுந்த உணர்வுகள் இப்போதும் எழுந்து அவனை வேறு உலகத்திற்கு அழைத்துச் சென்றது...

அவளோ மயக்கமா, கலக்கமா என்று புரியாத ஒரு நிலையில் அவனைப் பார்த்து கொண்டிருந்தாள்...

"இனி இது மாதிரி பேசுவியாடி...?"

அவனது உறுமலான குரலில் தன்னினைவு அடைந்தவள் அவனது கையைத் தட்டி விட்டாள்...

"நீ என்னை நம்ப வச்சு மோசம் பண்ணிட்ட அழகு..."

அவளது குண இயல்புக்கு நேர்மாறாய் அவளது முகம் இறுகி போயிருந்தது...

"எதுக்கு இத்தனை பிடிவாதம் மங்கை...? இந்தக் கல்யாணத்தால் உனக்கு என்ன குறை...? என்ன பிடிக்கலை...? ஏன் இத்தனை வெறுப்பு, கோபம்...?"

அவனுக்குச் சத்தியமாகப் புரியவில்லை அவளது பிடிவாதம் எதனால் என்று...

"உன்னைப் பிடிக்கலை..."

அவனது முகம் பாராது தட்டை பார்த்துக் கொண்டு சொன்னவளை கண்டு அவனது மனதில் எரிமலை கனன்றது...

"உனக்கு என்னைப் பிடிக்குதோ, பிடிக்கலையோ... அது எனக்குத் தெரியாது... இந்த ஜென்மத்தில் நான் தான் உனது கணவன்... வேணும்ன்னா அடுத்த ஜென்மத்தில் என்னை விடப் பெட்டரா ட்ரை பண்ணி பாரு..."

வெளியில் சாதாரணமாகக் கூறினாலும் அவனது மனதிலும் பெரும் போராட்டம் எழுந்தது... இரு வேறு வகையான மனநிலையில் அவன் தத்தளித்தான்...

"அழகு... பெரியப்பா ஊருக்கு கிளம்புகிறார்... நாச்சியாவையும் கூட்டிட்டு வாப்பா..."

தந்தையின் குரலில் அவனது மனப்போராட்டம் அப்படியே அடங்கிப் போனது... என்றுமே வலமங்கையைக் கை விடக் கூடாது என்கிற எண்ணம் வலுப்பெற்றது... ஏனெனில் அவன் கேள்வியுற்ற விசயம் அப்படி...

என்றோ காயப்பட்ட உறவுக்காக அவன் வலியை தாங்கி கொள்ளத் தயாரானான்... அவனுக்குமே நன்றாகத் தெரிந்து தான் இருந்தது... வலமங்கையின் அழகிற்கு அவன் சற்றும் பொருத்தமானவன் இல்லை என்பது... அதே சமயம் அவளது மனதில் யாருமில்லை என்பதும் அவனுக்குத் தெரியும்... அதனால் தான் தைரியமாக அவன் திருமணம் வரை வந்தது.. இதோ இப்போதும் அவனுக்கு நம்பிக்கை இருக்கிறது... அவனது குள்ளச்சியின் மனதினை அவனால் வசப்படுத்த முடியும் என்று...

"மாமா கூப்பிட்டது காதில் விழலையா அழகு...?"

கை கழுவி விட்டு வந்த வலமங்கை அவன் ஏதோ யோசனையில் இருப்பதைக் கண்டு அவனின் தோள் தொட்டு அழைத்தாள்... அதில் தன்னுணர்வு பெற்றவன் எழுந்து முன்னே சென்றான்...

"நான் தான் முதலில் போவேன்... நீ என் பின்னால் வா..." என்று அவனை முந்தி கொண்டு அவள் நடக்க... ஒரே எட்டில் அவளது கையை எட்டிப் பிடித்தவன்,

"இதைத் தான்டி குள்ளச்சி அப்போது இருந்து சொல்லிக்கிட்டு இருக்கேன்... எப்போதும் உன்னைப் பின்தொடர்ந்து வருவேன்னு... மக்கு, உனக்குத் தான்டி நான் என்ன சொல்ல வர்றேன்னு புரியலை..."

"கருவாயா..." என்று அவனைக் கோபமாய் அழைக்க முயன்று முடியாது தோல்வியுற்று செல்லச் சிணுங்கலுடன் முடித்தாள் அவள்...

"உனக்கு மட்டுமேயான கருவாயன்..." என்று புன்னகைத்தபடி அவன் அவளை அணைத்துக் கொள்ள,

அவளும் சிணுங்கலுடன் அவனுடன் ஒன்றி கொண்டாள்...

இணைந்து வந்த இருவரையும் கண்டு தந்தையர், தாத்தா மூவருக்கும் மனம் நிறைந்தது... இனி அவர்களது வாழ்வு நன்றாக இருக்கும் என்கிற நம்பிக்கை வந்தது...

அதன் பின்னர் உறவினர் கூட்டம் ஒவ்வொன்றாய் கிளம்பத் துவங்கினர்... மதிய உணவிற்குப் பிறகு மொத்த உறவினர் கூட்டமும் விடைப்பெற்றுச் சென்றிருக்க வீட்டினர் மட்டுமே எஞ்சியிருந்தனர்...

"அழகு... நாம இன்னைக்கே சென்னைக்குப் போகலாம்... நீ மாமா கிட்ட பேசு..." என்று அவள் அவனிடத்தில் முணுமுணுத்தாள்...

"எப்படியோ எங்கப்பா கிட்ட எனக்கு அடிவாங்கிக் கொடுக்கிறதுன்னு முடிவு பண்ணிட்ட...? உன்னால் முடியாததை உன் மாமனார் மூலம் செய்யப் பார்க்கிறியோ...?"

"உன்னை அடிக்கிறதுக்கு மாமாவை எதுக்கு ஊடால இழுக்கணும்... நான் ஒருத்தி போதாதாக்கும்..." என்றவள்

அவன் சுதாரிக்கும் முன் அவனது முதுகில் ஓங்கி ஒரு அடி வைத்து விட்டு ஓடிவிட்டாள்...

"அடிப்பாவி... இப்படியாடி ஓங்கி அடிப்ப... இப்பத்தான்டா புரியுது பொண்டாட்டி பூரிக்கட்டையால அடிக்கிற ஜோக் ஏன் போடறாங்கன்னு... உண்மையில் எல்லாக் கணவனும் பூரிக்கட்டையால் அடிவாங்கி இருப்பாங்க போலயே..." என்று அவன் புலம்பியபடி வரவேற்பறைக்கு வந்தான்...

மனைவி கூறியதை அவன் அப்படியே தந்தையிடம் கூற அவரோ யோசித்தவராய், "நாளைக்குக் குலதெய்வ கோவிலுக்குப் போகணும்... அதுக்கு அப்புறம் உங்களுக்குத் தனிக்குடித்தனத்துக்குத் தேவையான சாமான்கள் வாங்கணும்... எப்படியும் ஒரு வாரமாகும் அழகு... அதனால் ஒரு வாரம் கழிச்சு போங்க..."

அவன் கேள்வியாய் வலமங்கையைப் பார்த்தான்... அவளோ பிரிவை வேண்டி இருப்பவள்... இதில் ஒரே வீட்டில் இருக்கச் சம்மதிப்பாளா என்கிற எண்ணம் அவனுள்... அவளுமே அதிர்ந்து போய் விழித்தாள்... என்ன செய்வது என்று தெரியாது அழகுவை பார்த்தாள்...

மனைவியின் தவிப்பு, திகைப்பு அழகின் மனதினை உருக்கியதோ என்னமோ... முதன்முறையாய் தந்தையை எதிர்த்து பேச முடிவு செய்தான்...

"அப்பா... சென்னையில் உடனே வீடு கிடைக்கிறது கொஞ்சம் கஷ்டம்... அதனால் வீடு கிடைச்சதும் தனிக்குடித்தனத்தைப் பற்றி யோசிக்கலாம்... நாங்க நாளைக்குக் காலையில் கோவிலுக்குப் போயிட்டு நைட் சென்னைக்குக் கிளம்பறோம்... திருவிழான்னு சொல்லித்தான் லீவு போட்டு வந்தது... இப்போ நாங்க போகலைன்னா வேலையில் இருந்து தூக்கிருவான்..."

வைத்தியநாதன் யோசனையாய் மகனை பார்த்தார்... அதில் அவனுள் கலவரம் எழுந்தது...

“கொஞ்ச நாள் தான்ப்பா... எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரத்தில் வீடு பார்த்து விடுவேன்... எனக்கும் மங்கையைப் பிரிஞ்சு ரொம்ப நாள் இருக்க முடியாது...” என்று கூறியவன் காதல் கணவனாய் மனைவியைக் காதல் பார்வை பார்க்க, அவளோ கணவனைக் கனல் பார்வை பார்த்து வைத்தாள்...

‘எல்லாம் என் நேரம்டி...’ என்று அவன் மானசீகமாகத் தலையில் கை வைத்தான்...

அழகு கூறியதை கேட்டு தங்களுக்குள் ஆலோசித்த பெரியவர்கள் கூட்டம் ஒருவாறு அவனின் முடிவிற்குச் சரியென்று சம்மதித்தனர்... ஏனெனில் திருமணத்தை அவசரமாக நடத்தியது அவர்களது தவறு அல்லவா...

தப்பித்தோம் பிழைத்தோம் என்று அழகு அறைக்குச் செல்ல அவனைப் பின்தொடர்ந்து வந்தாள் அவனது அருமை மனையாட்டி... அவனுக்குத் தெரியும் அவள் வருவாள் என்று...

"ரொம்ப ரொம்பத் தேங்க்ஸ் அழகு..." என்று அவனது கைகளைப் பிடித்துக் கொண்டு துள்ளிய மனைவியின் சந்தோசத்தைப் பார்க்கும் போது அவனுக்கு மகிழ்ச்சியாகத் தான் இருந்தது... ஆனால் மனதின் ஓரம் வேதனை ஒன்று எழுவதை அவனால் தவிர்க்க முடியவில்லை...

தனது கைகளைப் பிடித்திருந்த மனைவியின் கைகளை இழுத்து அவளது இடையில் கை போட்டுத் தன்னருகில் இழுத்தவன்,

"ரொம்பச் சந்தோசப்பட்டுக் கொள்ளாதே... நான் உனக்கு ஒரு வருசம் டைம் கொடுத்த மாதிரி நம்ம வீட்டு பெருசுங்க உனக்கு டைம் கொடுக்க மாட்டாங்க... சோ..." என்று நிறுத்தியவன் அவளை உற்றுப் பார்த்தான்...

அவனது செயலில் அவள் திகைத்து போய் அவனை இமைக்காது பார்த்தபடி நின்றிருந்தாள்...

"சீக்கிரமா உன் மனசை மாத்திக்கிட்டு என் கூட வாழும் வழியைப் பார்... அது நடப்பது ஒரு மாதத்திலோ இல்லை இரண்டு மாதத்திலோ...? யார் கண்டது...?"

அவனது பேச்சில் அவன் மீது கோபம் வருவதை விடுத்து அவளுக்கு அவள் மீது கோபம் வந்தது தான் அதிசயத்திலும் அதிசயம்... இப்படி அவன் கூறியும் அவளால் அவனுடன் வாழ முடியவில்லையே என்கிற வருத்தம் அவளது மனதில் மலையளவு இருந்தது... அந்த வருத்தத்தை மறைக்க அவள் வெடுக்கென்று அவனிடம் பேசினாள்...

"உன்னைப் பிடிக்காத பெண்ணை இப்படி வற்புறுத்துவது உனக்கு அசிங்கமா இல்லை..."

அவளது சுடுசொல்லில் அவனது கை ஒரு கணம் தளர்ந்தது... பின் சபதம் கொண்டவனாய் அடுத்தக் கணம் அவனது கை அவளது இடையை இறுக பற்றியது...

"பிடிக்குதா, பிடிக்கலையான்னு டெஸ்ட் பண்ணி பார்த்து விடலாமா...?" என்று இறுகிய குரலில் கூறியவன் அவளின் முகம் நோக்கி குனிந்தான்...

அவனின் செயலில் அவள் அச்சத்துடன் கண்களை இறுக மூடி கொண்டாள்...

'அடப்பாவி அழகு... நீ ஒரு தயிர் சாதம்ன்னு நினைச்சேனே... ஆனா நீ இப்படிச் சிக்கன் பிரியாணியா இருப்பேன்னு நான் கொஞ்சமும் நினைச்சு பார்க்கலையே...' மனதுக்குள் அரற்றியவளாய் பயத்துடன் நின்றிருந்தாள் சண்டிராணி வலமங்கை...

அவள் பயந்து போய்க் கண்களை மூடியிருந்த விதத்தைக் கண்டு அழகிற்குச் சிரிப்பு வந்தது... அவனது கோபம் கூடக் காணாமல் போனது...

'ஹா... ஹா... இவ்வளவு தானாடி உன் டக்குன்னு... வெறும் வாய் சொல் வீரம் மட்டும் தான்... செயலில் ஒண்ணும் கிடையாது...'

மனதிற்குள் நினைத்தபடி அவளின் முகம் பார்த்தவன், "இவ்வளவு பயம் இருக்குல்ல... பின்னே எதுக்குக் குள்ளச்சி என்னை வம்பிழுக்கிற...?"

அவனது குரலில் கண்களைத் திறந்தவள் அவன் ஒன்றும் செய்யாததைக் கண்டு நிம்மதியுற்றவளாய் அவனை விலக்கி கொண்டு கட்டிலில் வந்தமர்ந்தாள்... அவளை யோசிக்க விட்டு விட்டு அவன் வெளியில் சென்று விட்டான்...

வலமங்கை என்ன யோசித்தும் அவளுக்கு வழி ஒன்றும் பிடிபடவில்லை... அழகு சொல்வது போல் பெரியவர்களின் நிர்பந்தத்திற்காக அவனுடன் வாழ வேண்டிய கட்டாயம் வந்துவிடுமோ என்று பயந்து போனாள்... அது கூட அவளால் அவனுடன் மனமொத்து வாழ்ந்துவிட முடியும்... ஆனால் அழகுவின் சந்தோசம் அவளால் தடைபடுவதா...?

மீண்டும் அவளது மனதிற்குள் குழப்ப மேகங்கள் சூழ்ந்து கொண்டது...

*******************************

அன்று மாலை சிறியவர்களைத் திரைப்படத்திற்கு அனுப்பி வைத்தனர் பெரியவர்கள்...

"டேய்... சினிமாவுக்குப் போகணும்ன்னு நீ அவங்க கிட்ட சொன்னியா...?" என்று வலமங்கை அழகுவிடம் சண்டைக்குப் போனாள்...

"உன்னை மாதிரியான ஞானச் சூன்யத்தோட சினிமாவுக்குப் போகிற கொடுமையை நான் ஏன்டி வலிய போய் இழுத்துக்கப் போகிறேன்..."

தந்தையின் இரு சக்கர வாகனத்தை ஓட்டியபடி அழகு சூடாய் பதில் கொடுத்தான்...

"நானாடா முட்டாள்... நீ தான்டா முட்டாள்... இங்கிலீஷ் தெரியாமலே இங்கிலீஷ் படத்துக்குப் போகிற நீயெல்லாம்

என்னைப் பத்தி பேசக் கூடாது..." என்று முகத்தைத் தூக்கி வைத்து கொண்டாள் அவள்...

திரையரங்கம் சென்று அமர்ந்த பின் தான் தெரிந்தது அது ஒரு காதல் படம் என்று... காதல் ரசம் சொட்டிய அந்தப் படத்தை அழகு ரசித்துப் பார்க்க, அதைக் கண்டு அவளுக்குத் துக்கம் பொங்கியதில் மனம் வெறுத்துப் போய்த் தூங்கி போனாள்... தனது தோளில் தூங்கி வழிந்த மனைவியவளை அப்போது தான் அவன் கவனித்தான்...

பிறகு அவளது தோளில் அணைவாய் கை போட்டு தன்னோடு அணைத்துக் கொண்டான்... அவள் தலையில் சூடியிருந்த மல்லிகைப்பூ மன்னவனின் மனதினை மயங்க செய்தது...

'இது ஏதுடா புது அவஸ்தை...?' என்று நினைத்தாலும் மனைவியின் அருகாமையை அவன் அனுபவிக்கத் தவறவில்லை...

திரைப்படம் முடிந்து வெளியில் வந்ததும் வலமங்கை, "இந்தக் கர்மம் பிடிச்ச படத்தைப் பார்க்கத்தான் என்னைய கூட்டிட்டு வந்தியா...? என்ன ரசனையோ...?" என்று அவள் தலையில் அடித்துக் கொள்ள...

"ஹா... ஹா... அப்படி என்றால் அந்தப் பெருமை எல்லாம் உன் மாமனாரை தான் சேரும்..." என்று கூறி அவன் சிரித்ததில் அவள் கப்பென்று வாயை மூடி கொண்டாள்...

பயணத்தின் போது வலமங்கை கணவனது முதுகை சொறிந்தாள்...

"என்னடி...?"

"நீ எனக்குத் தியேட்டரில் வச்சு ஒரு ஸ்நாக்சும் வாங்கிக் கொடுக்கலை..."

"அதுக்கு...?"

"கறி தோசை சாப்பிட கோனார் மெஸ் போகலாமா...?"

"உன்னைப் பத்தி தான் எனக்குத் தெரியுமே... ஏற்கெனவே நான் ப்ளான் போட்டுட்டேன்... அத்தோடு ஜிகர்தண்டாவையும் சேர்த்துக்கோ..."

"சோ ஸ்வீட் டா கருவாயா..." என்று சந்தோச மிகுதியில் அவனது காதுக்கருகில் வந்து அவள் கூவும் போது அவன் திடீரென்று வண்டியை நிறுத்தியதில் அவளது உதடுகள் பச்சக்கென்று அவனது காதோரம் முத்தம் ஒன்றை அழுத்தமாய் வைத்தது...

அதில் அவள் பகலவனாய் தகிக்க ஆரம்பித்தாள் என்றால், அவனோ குளிர் நிலவாய் குளிர்ந்து போனான்...

"டேய் எருமை மாடே... எதுக்குடா இப்போ வண்டியை நிறுத்தின...?"

"நாய் ஒண்ணு குறுக்கே வந்திருச்சு மங்கை..." மந்தகாச புன்னகையுடன் கூறியவனின் தலையில் நறுக்கென்று கொட்ட வேண்டும் என்று அவளது கைகள் பரபரத்தது... நடுத்தெரு என்பதால் அவள் தனது கையைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்...

"வீட்டுக்கு வாடா... உன்னை வச்சிக்கிறேன்..."

அவள் சொன்னதைக் கேட்டு அவனது புன்னகை இன்னமும் விரிந்தது...

"வச்சுக்கோ, வச்சுக்கோ... யார் வேண்டாம்ன்னு சொன்னது...?" என்றவன் வண்டியை கிளப்பினான்...

அவன் என்ன அர்த்தத்தில் கூறினான் என்று தெரியாது அவள் விழித்தாள்...

என்ன கோபம் இருந்த போதும் கறி தோசையையும், ஜிகர்தண்டாவையும் ஒரு கை பார்த்துவிட்டே அவள் வீட்டிற்குக் கிளம்பினாள்...

"மங்கை..."

அந்த ஏகாந்த வேளையில் தனிமையில் கணவனுடன் செல்லும் அந்தப் பயணத்தை மௌனமாய் ரசித்துக் கொண்டு வந்தவளை அவன் அழைத்தான்...

"சொல்லு அழகு..." நல்ல மனநிலையில் இருந்ததால் அவள் தன்மையாய் பதிலளித்தாள்...

"எனக்கு ஒரு ஆசை..."

"அதான் சொல்லுன்னு சொல்றேன்ல..." என்றவளது குரலில் சலிப்புத் தெரிந்தது...

"நீ ஒரு நாளாவது கோபப்பட்டுச் சாப்பிடாம இருக்கணும்... அதை நான் பார்த்து ரசிக்கணும்..."

"அடப்பாவி பயலே..."

அவன் கூறியதை கேட்டு வாயில் கை வைத்து திகைத்தவள் அடுத்த நொடி அவனின் முதுகில் மொத்து மொத்து என்று மொத்திவிட்டாள்...

"ஹா... ஹா... அது என்னடி எந்தக் கோபம் இருந்தாலும் சாப்பாட்டுக்கு மட்டும் லீவு கொடுக்க மாட்டேங்கிற..."

அவளது அடியை சுகமாய்த் தாங்கியபடி அவன் கேட்டான்...

"சாப்பாடு, தூக்கமும் எனது இரு கண்கள்..." கெத்தாய் கூறியவளை கண்டு,

"அப்போ நான்...?"

"ஐய்யே... ஆசை தோசை... உனக்கு எல்லாம் நான் என் கண்ணைக் கொடுக்கணுமாக்கும்... ரொம்பத்தான் உனக்குப் பேராசை..." என்றவளது நெஞ்சம் மட்டுமே அறியும் அவள் அவனைத் தனது இதயத்தில் வீற்றிருக்கச் செய்திருக்கிறாள் என்று...

"ம்ஹூம்... உன்னைப் போன்ற ஜென்மத்தை கட்டிக்கிட்டா இப்படித்தான்..." என்று பெருமூச்சு விட்டவன் பாதையில் கவனத்தைச் செலுத்தினான்...

அவனின் வார்த்தையில் அவளும் அமைதியானாள்...

'ரேஷ்மிக்காவை தான் உனக்குப் பிடிக்கும்... என்னை எல்லாம் உனக்குப் பிடிக்குமா...?' என்று அவளது மனம் முகாரி இசைத்தது...

இரவு தங்களது அறைக்குள் நுழைவதற்கு அவளுக்கு அத்தனை தயக்கமாக இருந்தது... அழகுவோ உல்லாசமாகப் படுக்கையில் காலாட்டியபடி படுத்திருந்தான்...

நேற்று கூட அவள் சர்வ சாதாரணமாகக் கட்டிலில் படுத்து கொண்டாள்... ஆனால் இன்று ஏனோ அவனுடன் ஒரே கட்டிலில் படுக்க அவளுக்குப் பெருத்த யோசனையாக இருந்தது... ஏனெனில் இன்று அவனது பேச்சு, செயல் எதுவுமே சரியில்லை...

வலமங்கை அறைக்குள் நுழைந்தும் இன்னமும் உறங்க வராததைக் கண்டு அழகு எழுந்து அமர்ந்தான்... அறையின் மூலையில் நின்று கொண்டு அவள் யோசித்துக் கொண்டிருப்பதைக் கண்டு அவனது மனம் வலித்தது...

"தூங்காம அங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்க...?" சற்று அதட்டலுடன் அவன் கேட்க...

"நான் என்ன பண்ணினா உனக்கு என்ன...? போடா..."

கோபமாய்க் கூறியவளின் முகத்தில் கோபத்தை விட யோசனையே பெரிதாய்த் தெரிந்தது... அதைக் கண்டு அவன் யோசனையில் ஆழ்ந்தான்...

"மங்கை இங்கே வா..." அவன் தன்மையாய் அவளை அழைக்க...

அவள் மறுத்து பேசாது அவன் அருகில் வந்து நின்றாள்...

"இங்கே உட்கார்..."

அவள் கட்டிலில் அமர்ந்ததும் அவளது கைகளைப் பற்றியபடி, "என்ன யோசனை சொல்லு...?"

"அதான் எனக்கும் சேர்த்து நீயே யோசிக்கிறேன்னு சொல்லிட்டியே... அப்புறம் எதுக்கு நான் யோசிக்கப் போகிறேன்..."

அவள் வெடுக்கென்று சொன்னதும் அவனது புன்னகை விரிந்தது...

"அந்த நம்பிக்கை இருந்தால் எதைப் பத்தியும் யோசிக்காம படுத்து தூங்கு..." என்றவனைப் பார்த்தவள் கண்களில் லேசாய் பயம் படர்ந்தது...

"என்னிடம் பயம் எதற்குக் கண்ணம்மா...?"

அவனது 'கண்ணம்மா' என்றழைப்பு அவளது மனதினை போட்டு பிசைந்து அவளை ஏதோ செய்தது...

"இந்தக் கண்ணம்மா நல்லாயில்லை... நீ எப்போதும் போல் என்னைக் குள்ளச்சின்னே கூப்பிடு..."

வெடுவெடு என்று அவள் பேசிய போதும் அவளது விழிகளில் தெரிந்த தவிப்பில் அவனது புருவங்கள் யோசனையாய் முடிச்சிட்டது...

"எனக்குப் பிடிச்சியிருக்கு... நான் கூப்பிடறேன்..." தனது யோசனையைத் தள்ளி வைத்து விட்டு அவளை வம்பிழுத்தான் அவன்...

"எனக்குச் சுத்தமா பிடிக்கலை..."

"எனக்குப் பிடிச்சியிருக்கே..."

"பிடிக்கலை..."

"பிடிச்சியிருக்கு..."

மாற்றி மாற்றி இருவரும் கூறிக் கொண்டிருந்த போது எந்தக் கணத்தில் வலமங்கை அக்னி பிழம்பாய் மாறி அழகினை தாக்கினாள் என்று தெரியாது... அவன் மீது விழுந்து புரண்டு கட்டிப்பிடித்துச் சண்டை போட்டு கொண்டிருந்தாள் அவள்...

அவள் இழுத்த இழுப்பிற்கு எல்லாம் அவன் இசைந்து கொடுத்த போதும் அவனது மனதில் தவிப்பான அவளது வழிகளே வலம் வந்து அவனைப் பெரிதும் யோசிக்க வைத்தது...

"ஏன்டா கருவாயா... பிடிக்கலைன்னா விட வேண்டியது தானே...?"

கோபத்தில் அவனது முன்னுச்சி முடியை கொத்தாகப் பற்றியபடி ஆட்டுவித்த மனைவியவளை கண்டு அவனுக்குச் சிரிப்புப் பொங்கியது...

"நான் விட்டு தான் இருக்கேன்ம்மா... நீ தான் என்னை விடாம பிடிச்சிட்டு இருக்க..."

அதில் கீழே குனிந்து பார்த்தவள் திகைத்து போய் அவசரமாய் அவனை விட்டு விலகினாள்... சண்டை போடும் மும்முரத்தில் அவன் மீது தான் படுத்திருந்ததை அவள் உணர மறந்து போயிருந்தாள்...

"சாரிடா..." என்றவளின் கையைப் பிடித்து அவன் சுண்டி இழுக்க, அதில் பூமாலையாய் தன் மீது விழுந்தவளை அணைத்து கொண்டவன்,

"கணவன் மனைவிக்கு இடையில் இது எல்லாம் சர்வ சாதாரணம்... இதற்கு எல்லாமா சாரி கேட்பது..." என்று அவளது காதில் ரகசியம் பேச...

அவனது மீசை ரோமம் காதோரம் உராய்ந்ததில் பாவை மனதில் தீ மூண்டது... கண்டபடி அலைப்பாய்ந்த மனதினை கட்டுப்படுத்த முடியாது,

"நீயும் நானும் கணவன், மனைவி இல்லை... பகை கொண்ட எதிரிகள்..."

கோபமாய்ச் சீறியவள் அவனிடம் இருந்து விலக முயல, அவனோ அவளை விலகாதபடி இறுக அணைத்தவன் அவளது காதில் முணுமுணுத்தான்...

"ஆம்... எதிரிகள் தான்... ஆனால் தித்திக்கும் எதிரிகள்..."

தித்திக்கும்...!!!

அழகு சுந்தரம் கூறிய 'தித்திக்கும் எதிரிகள்' என்ற வார்த்தை வலமங்கையின் அடி நெஞ்சு வரை சென்று இனித்தது... கணவன் கூறுவதும் சரி தானே... சிறு வயதில் இருந்து இருவரும் அடிக்காத குறையாகச் சண்டையிட்டுக் கொண்டு, முறைத்துக் கொண்டு ஜென்ம விரோதிகள் போல் திரிந்தவர்களை இப்போது திருமணத்தின் மூலம் இணைத்து வைத்திருக்கின்றனரே அவர்களது வீட்டார்...

இனிவரும் காலங்களிலும் இருவருக்கும் இடையில் இருக்கும் இந்தச் சண்டைகள் ஓயாது என்றே அவளுக்குத் தோன்றியது... அவனும் அவளை வம்பிழுக்காமல் இருக்கப் போவதில்லை... அவளும் அவனிடம் வாயடிக்காமல் இருக்கப் போவதில்லை... குடியும், குடித்தனமுமாய் என்று சொல்வது போல் சண்டையும், சச்சரவுமாய் அவர்களது வாழ்வு இனிதாகச் செல்லும்...

அதை நினைத்தவளின் இதழ்களில் புன்னகை அரும்பியது...

"எதற்குச் சிரிக்கிறாய் என்று சொன்னால் நானும் கூடச் சேர்ந்து சிரிப்பேன் இல்லையா...?"

அழகு கேட்டதும் அவனைக் குனிந்து பார்த்தவளின் இனிமையான நினைவுகள் இப்போது கசந்தது... சட்டென்று அவனை விட்டு விலகி அமர்ந்தாள்... அவனும் அவளை வற்புறுத்தாது எழுந்தமர்ந்தான்...

"நாம தித்திக்கும் எதிரி கிடையாதுடா... கசக்கும் எதிரிகள்..." என்று கூறியவளை கண்டு அவனுக்குக் கோபம் வந்தது...

"இனிப்பா, கசப்பான்னு நாம் வாழ்ந்து பார்த்து தெரிந்து கொள்ளலாம்..." என்றவன் அவள் புறம் நெருங்கி அமர்ந்து அவளது விழி நோக்கியபடி,

"என்ன வாழ்ந்து பார்க்கலாமா...?"

கணவனின் சூடான மூச்சு காற்று முகத்தில் பட்டதும் பாவையவளின் மேனி மட்டுமல்லாது உயிரும் சேர்ந்து அல்லவா உருகியது... அவளுக்கே தன் மனம் செல்லும் திசை கண்டு பெருத்த ஆச்சிரியமாக இருந்தது... நேற்று வரை அவனிடத்தில் சண்டையிட்டுக் கொண்டு அலைந்தவள் மனதில் இன்று அவன் சிம்மாசனமிட்டு அமர்ந்திருப்பது எதனால்...?

இதைத் தான் மஞ்சள் கயிறு 'மேஜிக்' என்கிறார்களோ...!!!

தனது மனதினை மறைக்க முடியாது தவிப்புடன் அவள் அவனைப் பார்த்தாள்... பின்னே அவன் தொட்டால் அவள் உருகி குழைவது நிச்சயம்... இதை அவன் உணர்ந்து கொண்டால் எவ்வளவு பெரிய அசிங்கம்...? ஏனோ அவளுக்கு அழுகை வரும் போல் இருந்தது...

மனைவியின் கண்களில் தெரிந்த தவிப்பில் அழகு சற்று நிதானித்தான்... ஒன்று அவள் வெறுப்பைக் காட்ட வேண்டும்... இல்லை கோபத்தினைக் காட்ட வேண்டும்... இந்த இரண்டும் இல்லாது அவளது இந்தத் தவிப்பு எதனால்...? அவனுக்குச் சத்தியமாகப் புரியவில்லை...

"போய்ப் படு..." என்றவனால் அதற்கு மேல் பேச முடியவில்லை...

அவளோ அசையாது அமர்ந்து கொண்டு அவனை நம்ப முடியாத பார்வை ஒன்றை பார்த்து வைத்தாள்...

"குள்ளச்சி... இப்போ எதுக்கு வில்லனை பார்க்கிற மாதிரி என்னைய பார்த்து வைக்கிற...? நான் வில்லனாடி...? ஐயா, ஹீரோடி ஹீரோ..." என்று அவளைக் கேலி செய்து தனது சட்டைக் காலரை தூக்கி விட்டுக் கொண்டான் பெருமையாக...

"க்கும்... ஹீரோவாக்கும் ஹீரோ... நீ பார்க்கிறதுக்கு வில்லன் மாதிரி தான்டா இருக்க..." என்று நொடித்துக் கொண்டே படுத்தவள் அருகில் வந்தவன்,

"அப்போ வில்லன் வேலையைப் பார்க்கவா...?" என்றவனைக் கண்டு அவள் பயத்தில் பேந்த பேந்த விழித்தாள்...

"அதான்ம்மா ரேப், ரேப்பு..." கேலி போல் கூறியவன் நெஞ்சில் கை வைத்து தள்ளியவள்,

"கொன்னுருவேன் கொன்னு..." என்று மிரட்டியவள் மறுபக்கம் திரும்பி படுத்து கொண்டாள்...

"ஹா... ஹா... அந்தப் பயம் இருக்கணும்..." என்று அவன் வில்லன் போல் வாய் விட்டுச் சிரித்தான்...

"இப்போ நீ அச்சு அசல் வில்லனே தான்டா..." என்று கூறியவளை கண்டு சிரித்தபடி அவனும் மறுபக்கம் வந்து படுத்தான்...

சிறிது நேரம் அமைதியாகக் கழிந்தது... அது அவனது மனையாட்டிக்கு பொறுக்கவில்லையோ என்னவோ...

"அழகு..."

"என்னடி...?"

அவன் பக்கம் திரும்பி படுத்தவள், "பசிக்குதுடா...?"

"என்னது...?" என்று திகைப்புடன் அவளைப் பார்த்தான் அவன்...

பின்னே அவனுக்கு என்று வாங்கிய உணவு வகைகளையும் சேர்த்து அவனுக்கும் கொடுக்காது மிச்சம் வைக்காது மொக்கிய தர்மபத்தினி இப்படிக் கூறினால் அவன் திகைக்காமல் என்ன செய்வான்...?

"ஐயோ, ஐயோ..." என்று வாயில் கையால் அடித்தபடி அலறியவன்,

"குள்ளச்சி... அந்த ஹோட்டல் மொத்தத்தையும் அப்படி வளைச்சு கட்டி அடிச்சியேடி... அதுக்குள்ள எப்படி உனக்கு மட்டும் இப்படிப் பசிக்குது...?"

"ப்ச்... வளவளன்னு பேசாதேடா... என் பசிக்கு ஏதாவது பண்ண முடியுமா...? முடியாதா...?" என்று அவள் கறாராய் கேட்டதில்,

"உன்னை வச்சிக்கிட்டு..." என்று தலையில் அடித்துக் கொண்டவன்,

"வா... கிச்சன்ல ஏதாவது மிஞ்சி இருந்தா வந்து கொட்டிக்கோ..."

அவன் அப்படிச் சொன்னதும் அவள் சந்தோசமாக எழுந்து அவனுடன் சென்றாள்... சமையலறை சென்று பார்த்த போது அங்கு எதுவுமே மிச்சம் இல்லை... வைதேகி அனைத்தையும் கழுவி கவுத்தி இருந்தார்...

"தோசை மாவு தான் இருக்கு... தோசை சுட்டு, பொடி வச்சு சாப்பிட்டுக்கோடி..." என்றவன் அங்கிருந்த மேடையில் ஏறியமர்ந்தான்...

"எனக்குத் தோசைக்குச் சட்னி தான் வேணும்... பொடி எல்லாம் வேண்டாம்..."

"அப்படின்னா சட்னி அரைச்சு சாப்பிடு... உன்னைக் கட்டிக்கிட்ட பாவத்துக்கு நான் தேவுடு காக்கிறேன்..."

"அழகு..." அவள் அவனது பெயரை ஏலம் போட...

"அடச்சீ... சொல்லி தொலைடி..."

"எனக்குச் சமைக்கவும் தெரியாது... தோசை சுடவும் தெரியாது..." அவன் முகம் பார்க்க இயலாது வேறு பக்கம் பார்த்துக் கொண்டே அவள் கூறினாள்...

'ஐயோ... இதை வச்சு இனி வாழ்நாள் பூராவும் என்னை வச்சு செய்வானே...' மனதுக்குள் நொந்து நூடில்சானாள் வலமங்கை...

அவள் நினைத்தது மாதிரியே அவன் வாய் விட்டுச் சிரித்தான்...

" எனக்குத் தெரியும்டி... நீ நல்லா மொக்கும் போதே எனக்குத் தெரியும்... நீ சாப்பிட மட்டும் தான் லாயக்குன்னு..." என்று அவன் நக்கலாய் கூற...

அதில் அவளுக்கும் ரோசம் வர, "நீ ஒண்ணும் செஞ்சு தர வேண்டாம்... போடா..." என்றுரைத்தபடி அவள் அங்கிருந்து நகர முயன்றாள்...

அவளின் கைப்பிடித்துத் தடுத்து நிறுத்தியவன், "உண்மையைச் சொன்னா கோபம் பொத்துக்கிட்டு வருதாக்கும்..."

"ஆமாம், ஆமாம்... நீ பெரிய உண்மையைக் கண்டுபிடிச்சிட்ட... போடா..." என்று அவள் சிலிர்த்துக் கொள்ள...

"இப்போ உனக்குச் சாப்பாடு வேணுமா...? வேண்டாமா...?"

அவன் கேட்டதும் அவள் அமைதியாய் நின்றாள்...

"உனக்காக நானே தோசை சுட்டு தர்றேன்..."

அதில் அவளது முகம் மலர்ந்தது...

"அப்படின்னா அழகு, தோசை வேண்டாம்... வேறு ஏதாவது செஞ்சு கொடுடா..." என்று கெஞ்சும் குரலில் இதழ் குவித்துக் கொஞ்சிய மனைவியைக் கண்டதும் அவனின் எண்ணம் தாறுமாறாக அலைப்பாய்ந்தது...

அவன் தலையைக் குலுக்கி கொண்டு தன்னை நிதானித்துக் கொண்டான்...

"அப்போ செஞ்சு தர மாட்டியா...?"

அவன் தலையைக் குலுக்கியதை அவள் வேறு மாதிரியாக நினைத்து கொண்டாள்... அவளது குரல் சுருதி இறங்கி போய் ஒலித்தது... அதில் கணவன் அழகு மறைந்து அவளது 'தித்திக்கும் எதிரி' அழகு வெளிப்பட்டான்...

"உனக்குச் செய்யாமல் வேறு யாருக்குச் செய்யப் போகிறேன்..." என்றவன் குளிர்சாதனப் பெட்டியை திறந்து பார்த்தான்...

அவனது வார்த்தைகள் அந்த ஏகாந்த வேளையில் சில்லென்று அவளது மனதினுள் இறங்கி அவளைக் கிறங்க வைத்தது...

"முட்டையும், பிரெட்டும் இருக்கு... பிரெட் ஆம்லெட் செஞ்சு தரவா...?"

"ஏதோ ஒண்ணு சாப்பிட தந்தால் போதும்..." என்றவள் சமையல் மேடை மீது துள்ளி குதித்து ஏறியமர்ந்து கொண்டு கால்களை ஆட்டியபடி அவனை வேடிக்கை பார்த்தாள்...

முட்டையை உடைத்து ஊற்றி அதில் நறுக்கிய வெங்காயம், தக்காளி, மல்லியிலை எல்லாம் சேர்த்து, அத்தோடு மிளகு தூள், மிளகாய் தூள், உப்பு சேர்த்து அதை அவன் லாவகமாகக் கலப்பதை அவள் இமைக்காது பார்த்து கொண்டிருந்தாள்...

"எப்படி அழகு, இது எல்லாம் தெரிந்து வைச்சியிருக்கிற...?" அவளது விழிகள் ஆச்சிரியத்தில் விரிந்தது...

"நான் வழக்கமா சாப்பிடும் கையேந்தி பவனில் இந்த டிஷ் செய்றதை நிறையத் தடவை பார்த்திருக்கிறேன்... சில சமயம் வீட்டிலும் நான் ட்ரை பண்ணியிருக்கிறேன்... நல்லா இருக்கும்..."

அவளிடம் பேசியபடி தோசைக் கல்லை சூடாக்கி முதலில் பிரெட் துண்டுகளைச் சூடுபடுத்தித் தனியே எடுத்து வைத்தவன், பின் அதில் முட்டை கலவை பரப்பி ஊற்றி அதன் மீது பிரெட் துண்டுகளை வைத்தான்...

"இது என்னடா புது மெத்தடா இருக்கு..."

"சாப்பிட்டு பார்த்துட்டு சொல்லு..." என்றவன் அது வெந்ததும் மறுபக்கம் திருப்பிப் போட்டான்...

இருபக்கமும் நன்றாக வெந்ததும் நான்கு பிரெட் துண்டுகளையும் இரண்டிரண்டாகச் சேர்த்து மடித்தவன் அதை அழகாக வெட்டி ஒரு தட்டில் வைத்துத் தக்காளி சாஸுடன் அவளின் கையில் கொடுத்தான்...

ஆர்வத்துடன் ஒரு வாய் சாப்பிட்டவள் முகம் மலர்ந்தது...

"சூப்பர் டேஸ்ட் அழகு..." என்று வலதுகை ஆள்காட்டி விரல், கட்டை விரலை சேர்த்து கூறியவள் அதைச் சப்பு கொட்டியபடி உண்ண ஆரம்பித்தாள்...

அவள் உண்பதை கைகளைக் கட்டி கொண்டு பரிவுடன் பார்த்துக் கொண்டிருந்தான் அழகு... மளமளவென்று ஐந்தாறு வாய் உணவு உள்ளே சென்றதும் தான் அவளுக்கு அருகில் நின்றிருந்த கணவனின் நினைவு வந்தது போலும்... கையிலிருந்ததை அவனிடத்தில் காட்டி,

"உனக்கு வேணுமா அழகு...?"

"வேண்டாம்..." என்று புன்சிரிப்புடன் மறுத்தவனைக் கண்டு,

"உன்னைய பார்க்க வச்சிட்டு சாப்பிட்டா எனக்கு வயிறு வலிக்கும்... இந்தா..."

தலையை ஒரு பக்கமாய்ச் சாய்த்தபடி ஒரு துண்டு பிரெட்டை பிட்டு அவனை நோக்கி அவள் நீட்டிய பாவனையில் அவனது மனம் மயங்கித்தான் போனது...

"உனக்கு வயிறு வலிக்கக் கூடாதுன்னு வாங்கிக்கிறேன்..." என்று சிரித்தபடி அவளது கையைப் பிடித்து அந்த உணவை தனது வாயில் வைத்துக் கொண்டான்...

அந்நேரம் தண்ணீர் அருந்துவதற்காக அங்கு வந்த வைத்தியநாதன் சின்னவர்களின் அந்நியோன்யத்தைக் கண்டு மனம் நிறைந்தவராய் சத்தம் செய்யாது வந்த வழியே திரும்பி சென்றார்...

முதன்முறையாய் மனைவி தனக்கு ஊட்டி விட்டது அவனுக்கு அத்தனை மகிழ்ச்சியாக இருந்தது... இந்த

நிறைவான மகிழ்ச்சி வாழ்க்கை முழுமைக்கும் போதும் என்று அவனது மனம் ஆனந்தப்பட்டது...

ஊட்டி விடும் போது அவனது உதடுகளோடு உரசிய தனது கை விரல்களின் வழியே அவளுள் மின்சாரம் பாய்ந்தது... அந்த உணர்வை தாங்க முடியாதவளாய் அவள் சட்டென்று தனது கையை விலக்கி கொண்டாள்... பின்பு அவள் மௌனமாக உண்ண துவங்கினாள்...

முழுவதும் உண்டு முடித்தவள் சமையல் மேடையில் இருந்து கீழிறங்க முடியாது தவித்தாள்... உயரமான அந்த மேடையில் எப்படியோ துள்ளி குதித்து ஏறியவள் இப்போது இறங்கும் வகையறியாது முழித்தாள்... எச்சில் கை வேறு...

"கையைக் கழுவி விட்டு வா... போகலாம்..."

"அழகு... கீழே இறங்க முடியலைடா..." வலது காலால் தரையைத் தொட முயன்றபடி கூறியவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு பீறிட்டது...

"இதுக்குத் தான் சொல்றது குள்ளச்சி... கொஞ்சம் வளரணும்ன்னு..." என்றவன் எதிர்பாராத நேரத்தில் அவளது இடையில் கை கொடுத்து அவளைத் தூக்கி கீழே இறக்கி விட்டான்...

"டேய் சொல்லிட்டுச் செய்ய மாட்டியா...?" திடீரென்று அவன் அப்படிச் செய்ததும் அவள் பயத்தில் அலறினாள்...

"எப்படி, எப்படி...? என் பொண்டாட்டியை நான் தூக்க போகிறேன் என்றா...?"

கண்சிமிட்டி சிரித்தவனைக் கண்டு அவளுக்குக் கோபம் வராது நாணம் வந்து தொலைத்ததில் தன் மீதே கடுப்பானவள் ஒன்றும் பேசாது கை கழுவ போனாள்... அவனோ அவள் கோபமாக இருக்கிறாள் என்று தோளை குலுக்கியபடி அமைதியாகி விட்டான்...

அறைக்கு வரும் வரை அவர்களது அமைதி நீண்டது... மௌனமாகப் படுக்கப் போனவளை கண்டு,

"கஷ்டப்பட்டுச் சமைச்சு எல்லாம் கொடுத்திருக்கிறேன்... ஒரு தேங்க்ஸ் கிடையாதா...?"

அவனைத் திரும்பி பார்த்தவள், "தேங்க்ஸ்..." என்று சொல்லிவிட்டு படுத்துக் கொள்ள...

"இப்படி உப்புச் சப்பில்லாம தேங்க்ஸ் சொல்றதுக்கு நீ சொல்லாமலே இருந்திருக்கலாம்..."

"எப்படித் தேங்க்ஸ் சொல்லணும்ன்னு சொல்ற...?"

"கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்து, புன்னகையோடு 'தேங்க்ஸ் மாமா'ன்னு சொல்லணும்..."

அவன் கூறியதை கேட்டு அவனை முறைத்து பார்த்தவள், "உப்போடு கொஞ்சம் மசாலாவையும் சேர்த்துக்கோ மாமா..."

'மசாலா' என்று மனைவி சொன்னதும் அழகுவின் முகம் பிரகாசமானது... அவன் நிறைய மசாலா படம் பார்த்த 'எபெக்ட்' அவனுள் வேலை செய்தது... 'பரவாயில்லையே நம்ம மனைவி கூடத் தேறி விட்டாளே' என்று நினைத்தபடி அவன் அவளை ஆசையோடு பார்த்து வைக்க, அவளோ கொலைவெறியுடன் அவனைப் பார்த்தவள்,

"கொஞ்சம் அடி, கொஞ்சம் குட்டு, கொஞ்சம் குத்து இந்த மசாலாவையும் சேர்த்துக்கோ மாமா..." என்று பல்லை கடித்துக் கொண்டு கூறியவளிடம் அதற்கு மேல் வம்பு வளர்க்க அழகு என்ன முட்டாளா...

அவன் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு சமத்தாய் படுத்துக் கொண்டான்... அதைக் கண்டு புன்னகைத்தவள் அந்தப் புன்னகையோடு உறங்கி போனாள்...

மறுநாள் காலையில் எழுந்து வலமங்கை கிளம்புவதற்குள் அவனை ஒருவழி பண்ணி விட்டாள்...

"நான் கிளம்பாமல் நீ ரூமை விட்டு வெளியில் போகக் கூடாது... இல்லைன்னா உன் மாமியார் எனக்கு மாமியாரா

மாறி என்னைக் கடிச்சு குதறிருவாங்க..."

அவள் கூறிய அழகில் அவனுக்குச் சிரிப்பு வந்தது... அதற்கும் அவனிடம் காய்ந்தாள் அவனது செல்ல மனையாட்டி...

"இப்போ எதுக்குச் சிரிக்கிற...? மனசுக்குள்ள பெரிய புன்னகை மன்னன் நினைப்பு..." என்று நொடித்துக் கொண்டவள்,

"இந்தப் பட்டுப்புடவையோட கொசுவத்தை ஒழுங்கா எடுத்து விடுடா..." என்று அதிகாரமாய்க் கூறியவளை கண்டு இரு கைகளையும் கட்டி கொண்டு அழுத்தமாய்ப் பார்த்தவன்,

"நேத்து ஏதோ போனா போகுதுன்னு உதவி செஞ்சா இப்படி என்னை அடிமை மாதிரி நடத்துவியா...? இரு இரு உன் அம்மா கிட்ட போய்ப் பத்த வைக்கிறேன்..." என்று வெளியில் செல்ல முயன்றவன் முன் வேகமாய் வந்து நின்றவள்,

"ப்ளீஸ் அழகு... நீ நல்ல பையன் தானே... அடுத்தவங்களுக்கு உதவி செய்றதுக்குன்னே பிறந்தவன் நீ தானேடா..."

"ஆக மொத்தம் என்னை இளிச்சவாய்ன்னு சொல்லாமல் சொல்றியா...?"

"ஹி... ஹி..." என்று வெளியில் இளித்து வைத்தவள் மனதிற்குள் 'அது எப்படிடா இப்படிச் சரியா சொல்கிற...' என்று அவனை ‘புகழ்ந்து’ கொண்டாள்...

இருவரும் கிளம்பி வெளியில் வந்த போது வீட்டினர் எல்லோரும் காரிலேறி அமர்ந்திருந்தனர்... வீட்டை பூட்டுவதற்காக வேண்டி வைத்தியநாதன் மட்டும் வெளியில் நின்றிருந்தார்...

காரிலேறிய வலமங்கை அங்கு அமர்ந்திருந்தவர்களிடம் சண்டைக்கு நின்றாள்...

"நீங்க எல்லாம் இப்படி உட்கார்ந்தா நான் எங்கே உட்காருவது...?"

அவள் வாயடிப்பதை பார்த்துக் கொண்டே கிடைத்த இடத்தில் ஏறியமர்ந்து கார் கதவை சாத்திய அழகு அவளது இடையில் கை கொடுத்து தனக்கு அருகிலிருந்த சிறிய இடத்தில் அவளை அமர்த்திக் கொண்டவன்,

"சத்தம் போடாமல் அமைதியா உட்காரணும்..." என்று வாய் மீது விரல் வைத்து மனைவியை மிரட்ட வேறு செய்தான்...

என்னே அதிசயம்... வலமங்கையிடம் இருந்து அதன் பிறகு சத்தமே வரவில்லை...

"பாருங்க மதினி... நாம சொன்னா கேட்பாளா...? இப்போ அழகு சொன்னதும் அப்படியே கேட்டுக்கிட்டாளே...?" என்று வைதேகியிடம் அதிசயப்பட்டார் சித்ரவேணி...

"என்ன இருந்தாலும் புருசன் மாதிரி வருமா..." என்று அதற்குச் சிலாகித்துக் கொண்டார் வைதேகி...

அழகிற்குமே மனைவியின் அமைதி அதிசயமாக இருந்தது... அதே சமயம் சந்தேகமாகவும் இருந்தது... திரும்பி அவளைப் பார்த்தான்... அவளோ சாலையைப் பார்த்துக் கொண்டு அமைதியாக இருந்தாள்...

"என்னடி குள்ளச்சி... நீயா அமைதியா இருக்கிறது... நம்ப முடியவில்லையே..." என்று அவளது காதில் அவன் ராகம் இழுக்க...

அதில் அவனைத் திரும்பி பார்த்து முறைக்க முயன்று தோற்றவள் பின் மெதுவே, "கையை எடு அழகு..."

அவன் சொன்னதும் தான் அவன் தனது கைகளைப் பார்த்தான்... அவனது வலது கை அவளது ஒரு பக்க இடையைப் பற்றியிருக்க, அவளது மற்றொரு புற இடையைப் பற்றியிருந்த அவனது இடது கை எப்போது அவளது வயிற்றின் மீது படிந்தது என்று அவனுக்குத் தெரியவில்லை... இவ்வளவு நேரம் உணராத மனைவியின்

மேனியின் மென்மையை இப்போது அவனது கரம் உணர்ந்தது... கையை எடுக்கவே அவனுக்கு மனமில்லை... காலம் அப்படியே உறைந்து விடக் கூடாதா என்று அவனுக்கு ஏக்கமாக இருந்தது...

"அழகு..."

மீண்டும் அவள் அழைக்கவும் வேறுவழியின்றி அவன் தனது கையை எடுத்துக் கொண்டான்... அவன் கையை எடுத்ததும் தான் அவளால் நிம்மதியாய் மூச்சு விட முடிந்தது...

குலதெய்வம் கோவில் வரும் வரை இருவரிடையே கனத்த மௌனம் நிலவியது... ஆனால் இருவருமே கணவன், மனைவியாய் தங்களை உணர துவங்கியிருந்தனர்... அது போல் தங்களது இணையைத் தேடவும் துவங்கியிருந்தனர்...

கோவில் வந்து வலமங்கையைப் பொங்கல் வைப்பதற்காக வைதேகி அழைக்கும் வரை இந்த நிலை நீடித்தது... அன்னை மனைவியைப் பொங்கல் வைக்க அழைத்ததும் அழகுவிற்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை...

"அம்மா... தோசை கூடச் சுட தெரியாதவளை போய்ப் பொங்கல் வைக்கச் சொன்னால் எப்படிம்மா வைப்பாள்...? வேணும்ன்னா உங்க எல்லோருக்கும் களி கிண்டி கொடுப்பாள்..." என்று அவன் அவளைக் கிண்டலடிக்க...

அதில் அவளது முகம் கோபத்தில் ஜிவுஜிவெனச் சிவந்து போனது... இப்படியா கணவன் தன் மானத்தை வாங்குவான் என்று அவனைக் கொலைவெறியோடு பார்த்தாள்... அவளுக்குச் சமைக்கத் தெரியாது என்பது ஊரறிந்த ரகிசயம் என்பதை அந்தக் கணம் அவள் மறந்து தான் போனாள்...

"அது தான் எனக்குத் தெரியுமே அழகு... நீ தான் உன் பொண்டாட்டிக்கு கூடமாட ஒத்தாசை செய்து அவள்

பொங்கல் வைக்க உதவி செய்யணும்..." என்று முடித்துக் கொண்டார் வைதேகி...

சின்னவர்களிடம் பொங்கல் வைக்கும் பொறுப்பைக் கொடுத்து விட்டுப் பெரியவர்கள் பூஜைக்கான வேலைகளைப் பார்க்க ஆரம்பித்தனர்...

அன்னை சொன்னதைக் கேட்டு அழகு திருதிருவென முழித்தான்... அதைக் கண்டு வலமங்கை வாய் விட்டு சிரித்தாள்...

"என்னையவாடா கிண்டல் பண்ணின... நல்லா வேணும்டா உனக்கு...?" என்று அவள் பழிப்பு காட்டினாள்...

"நெட் இருக்கப் பயமேன்..." என்று சட்டை காலரை தூக்கி விட்டு கொண்டவன் 'யூ ட்யூப்பில்' சர்க்கரை பொங்கல் வைப்பது எப்படி என்று தேட துவங்கினான்...

ஒருவழியாய் தேடி கண்டுபிடித்தவன் அதை மனைவியிடத்திலும் காட்டி அது போல் செய்யச் சொன்னான்... கணவனின் உதவியோடு வெற்றிகரமாகப் பொங்கலை வைத்து முடித்தாள் வலமங்கை...

"தேங்க்ஸ் அழகு... நீ உதவி செஞ்சதால் தான் வெற்றிகரமாகப் பொங்கலை வைச்சு முடிச்சேன்..." மன நெகிழ்வோடு அவள் கணவனுக்கு நன்றி கூற... அதில் அவனது மனமும் நிறைந்தது...

பூஜை செய்து சாமி கும்பிட்டு முடிந்ததும் வைதேகி அழகின் கையில் குங்குமத்தை கொடுத்து, "நாச்சி நெத்தியிலும், தாலியிலும் வச்சு விடு..." என்று கூற...

அழகு சிரித்தபடி குங்குமத்தை அவளது நெற்றியிலும், மாங்கல்யத்திலும் வைத்து விட, வலமங்கைக்குத் தான் முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது... அவளது அத்தனை நேர இதம் சடுதியில் மறைந்து போனது...

எல்லோரும் சந்தோசமாகப் பேசி சிரித்தபடி பொங்கலை உண்டு கொண்டிருக்க, அவள் மட்டும் கையில்

பொங்கலுடன் அங்கிருந்த மரத்தடி ஒன்றில் தனித்து வந்தமர்ந்தாள்... அவளது மனமோ புயலில் சிக்கிய பூங்கொடி போன்று அலைப்பாய்ந்து கொண்டிருந்தது...

"என்ன அதிசயமாயிருக்கு... பொங்கலை லவட்டாம வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்க..." என்று கிண்டலாய் கேட்டபடி அவளின் அருகில் வந்தமர்ந்தான் அழகு...

வலமங்கை கண்களில் நீர் தளும்ப அவனை ஏறிட்டு பார்த்தாள்... ஏனோ மனதின் கலக்கம் கண்டு அவளது விழியும் சேர்ந்து கலங்கியது போலும்...

"ஏய் அசடு... இது என்ன சின்னப் புள்ளையாட்டம்..." என்று அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான் அவன்...

"பயமாயிருக்கு அழகு..."

தனது வாழ்க்கையை நினைத்து பயந்தாளா இல்லை அவனது வாழ்க்கையை நினைத்து பயந்தாளா... எதுவென்று தெரியவில்லை இனம் புரியாத ஒரு பயம் அவளது மனதினை வந்து கவ்வி கொண்டது...

'இவ்வளவு நேரம் நல்லா தானே இருந்தாள்... இப்போ எதுக்கு இப்படிக் கண் கலங்குகிறாள்...?' என்று யோசித்தவனை அவளது கண்ணீர் மனம் வருந்த செய்தது என்றால் மிகையில்லை...

அவளது நெற்றியில், மாங்கல்யத்தில் தான் குங்குமம் வைத்த பிறகு தான் அவளது முகம் சரியில்லை என்பதை அவன் அறிந்து கொண்டான்... அடுத்த நொடி அவளது தோளை சுற்றியிருந்த அவனது கை அவளை அழுத்தமாய் அணைத்தது...

"நான் இருக்கும் போது உனக்கு என்ன பயம்...? நீ வெற்றிகரமாகப் பொங்கல் வைக்க உதவியது போல், உன் வாழ்நாள் இறுதி வரை நம் வாழ்க்கையை வெற்றிகரமாகக் கடக்கவும் நான் உனக்கு உதவியாய் இருப்பேன் கண்ணம்மா..."

கணவன் கூறியதை கேட்டு அவனைத் திரும்பி பார்த்தவள் பார்வையில் தவிப்பும், ஏக்கமும் சரிபாதியாய்க் கலந்திருந்தது...

"வாழ்க்கையை அதன் போக்கில் வாழ பழகிக்கணும் மங்கை..."

அவன் கூறியது கேட்டு அவள் சட்டென்று அவனிடத்தில் இருந்து விலகி அமர்ந்தாள்...

"ப்ச்... இப்போ என்ன...?"

அவளது விலகலை தாங்க முடியாது அவன் உச் கொட்டினான்...

"ஒண்ணும் இல்லை..." என்றவள் எழுந்து பெரியவர்களை நோக்கி சென்றாள்...

மனைவியவளின் விழி தவிப்பை புரிந்து கொண்டவனுக்கு அது எதனால் என்பதினை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை... அந்தக் கணம் அவன் ரேஷ்மாவை மறந்திருந்தான் என்பது தான் உண்மை... அவனது நினைவில் அவனது 'கண்ணம்மா' மட்டுமே நீக்கமற நிறைந்திருந்தாள் என்பது மட்டுமே நிஜம்...

அதற்குப் பெயர் தான் காதல் என்று அவன் உணரவில்லை... வீட்டினருக்காகச் சேர்ந்து வாழலாம், திருமணப் பந்தத்தை மதிக்க வேண்டும் என்றெல்லாம் மனைவியவளுக்குப் பாடம் நடத்திய அழகு தன் மனதினை அவளுக்கு உணர்த்த தவறியிருந்தான்...

'உனக்காக, உன்னை மட்டுமே நேசித்து உன்னோடு காதலோடு நான் வாழ வேண்டும்... நமக்காக நாம் கணவன், மனைவியாக வாழ்வோம்...' என்று அவன் கூறியிருந்தால் ஒருவேளை அவளும் அவனுடன் மனமொத்து வாழ்ந்திருப்பாளோ...???

அவளின் தவிப்பிற்கான விடை தன்னிடம் தான் இருக்கிறது என்பது தெரியாது அவன் செய்வதறியாது

திகைத்தான்...

************************************

இரவு சென்னை கிளம்பும் வரை இருவரும் ஒன்றும் பேசி கொள்ளவில்லை... மௌனமாகவே எல்லா வேலைகளும் நடந்தது... அதையும் பெரியவர்கள் வேறு மாதிரியாக எண்ணி கொண்டனர்...

"கல்யாணமான உடனே பிரிஞ்சி இருக்கணும்ன்னா கஷ்டமா தானே இருக்கும்..." என்று...

அதை நினைத்து அழகு மனதிற்குள் சிரித்துக் கொண்டான்... அவளோ விரக்தியுடன் நின்றிருந்தாள்... சென்னை சென்ற பிறகு தானே அவளுக்குப் பல சோதனைகள் காத்திருக்கிறது...

குடும்பம் முழுவதும் இருவரையும் இரயில் ஏற்றிவிட வந்தனர்... எல்லோரும் அழகிற்கு அறிவுரை கூறுவதை விடுத்து அவளுக்கு மட்டும் அறிவுரை கூறினர்... மற்ற நேரமாக இருந்தால் அவள் அதற்குத் தனியாகச் சண்டை போட்டிருப்பாள்... ஆனால் இன்று அமைதியாகக் கேட்டு கொண்டாள்...

அவளின் மாற்றம் கண்டு அழகு யோசனையாய் அவளைப் பார்த்தான்... பெரியவர்கள் முன்னிலையில் அவனாலும் அவளிடம் எதுவும் கேட்க முடியவில்லை...

இரயில் கிளம்பிய பிறகே இருவருக்குமான தனிமை கிடைத்தது... வலமங்கை அமைதியாக வெளிப்புற இருளை வெறித்துப் பார்த்துக் கொண்டு வந்தாள்...

"மங்கை... எதுக்கும் கவலைப்படாதே... நான் எந்த விதத்திலும் உன்னைத் தொந்திரவு செய்ய மாட்டேன்... நீ எப்போதும் போல் உன் வேலையைப் பார்... நானாக யாரிடமும் நமக்குக் கல்யாணமான விசயத்தைச் சொல்ல மாட்டேன்..." என்றவனைத் திரும்பி பார்த்தவள் விழிகளில் வேதனை எட்டிப்பார்த்தது...

"ரொம்பச் சந்தோசம்..." என்று வெடுக்கென்று கூறியவள் மறுபக்கம் திரும்பி கொண்டாள்...

அதைக் கண்டு அவனும் தோளை குலுக்கியபடி கையிலிருந்த புத்தகத்தில் ஆழ்ந்து விட்டான்... ஊருக்கு வரும் போது இருவரிடமும் இருந்த குதூகலம் இப்போது போகும் போது இல்லை...

அவன் அவளது மனநிலையைக் கண்டு அமைதியாக இருந்தான்... அவளோ ரேஷ்மாவை நினைத்து மனதிற்குள் புழுங்கி கொண்டிருந்தாள்...

சென்னை வந்திறங்கிய பிறகு தங்களது குடியிருப்பிற்கு வந்த போதும் இருவரும் எதுவும் பேசி கொள்ளவில்லை... அவள் தனது குடியிருப்பிற்குச் செல்லும் போது அவளைத் தடுத்து நிறுத்தியவன்,

"ரெடியானதும் ஃபோன் பண்ணு... நான் கூட்டிட்டு போகிறேன்..."

"இல்லை வேண்டாம்... ரேஷ்மிக்கா கூடப் போயிக்கிறேன்..." என்று சொன்னவளை வெறித்துப் பார்த்தவன் ஒன்றும் பேசாது தனது குடியிருப்பிற்குள் சென்று விட்டான்...

அதைக் கண்டு அவளுக்குக் கண்கள் கரித்துக் கொண்டு வந்தது...

'இன்னமும் ரேஷ்மிக்கா தான் உன் மனசில் இருக்காங்க... அதான் இப்படிக் கோபமா போகிற... இதில் நீ என்னை நம் குடும்பத்துக்காக உன்னுடன் வாழ சொல்கிறாயா...?' வேதனையுடன் நினைத்தவள் தனது வீட்டினை நோக்கி நடந்தாள்...

ரேஷ்மாவை எப்படி எதிர் கொள்வது என்று அவளுக்குப் பயமாக இருந்தது... நல்லவேளையாக ரேஷ்மா அங்கு இல்லை... இரவு பணி முடிந்து அவள் இன்னமும் வீடு திரும்பவில்லை... மனதிற்குள் நிம்மதியாக உணர்ந்தவள் குளித்து முடித்து வேலைக்குக் கிளம்பினாள்...

குடியிருப்பை விட்டு வெளியில் வந்ததும் தான் அவளுக்குச் சென்னை மாநாகரக் கர்ப்பிணி பேருந்துகள் நினைவுக்கு வந்தது...

'ஐயோ... உதவி செய்ய வந்தவனையும் உன் வேலையைப் பார்த்துட்டு போடான்னு அனுப்பி விட்டுட்டேனே... இப்போ என்ன பண்றது...?' என்று மனதிற்குள் கலவரமாய் நினைத்தபடி அவள் கைகளைப் பிசைந்து கொண்டு நிற்க... அப்போது அவளது அருகில் இரு சக்கர வாகனம் ஒன்று ஒட்டி கொண்டு வந்து நின்றது...

யார் அது என்று கோபத்துடன் திரும்பி பார்த்தவள் அது அழகு என்று தெரிந்ததும் அப்படியே குளிர்ந்து போனாள்...

"ஏறு..."

அப்போதும் அவன் தான் அவளிடத்தில் பேசினான்... மறுபேச்சு பேசாது ஏறியவளை கண்டு மனதிற்குள் சிரித்துக் கொண்டவன் தனது வாகனத்தைக் கிளப்பினான்... இருவரிடையே மீண்டும் மௌனம் நிலவியது...

போகும் வழியில் உணவு விடுதியில் உணவு உண்ட போதும் அவர்களது இந்த மௌனம் கலையவில்லை...

அலுவலகத்திற்குள் நுழையும் வரை எந்தப் பிரச்சினையும் இல்லை... உள்ளே வந்து தனது நாற்காலியில் அமர்ந்த வலமங்கையைக் கண்ட அவளது நண்பன் அருண்,

"நாச்சி... உனக்கு எப்போ கல்யாணமானது...?" என்று திகைப்புடன் கூவினான்...

அதில் வலமங்கை திடுக்கிட்டு போய் அருணை பார்த்தாள்... அருணின் கூவல் கேட்டு அங்கு வந்த அழகிற்கு வலமங்கையைக் கண்டதும் அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை...

ஏனெனில் திருமணத்தை மறைக்க எண்ணிய வலமங்கை தனது கழுத்தில் இருந்த புத்தம் புதிய மஞ்சள் கயிறை

மறைக்க மறந்து போயிருந்தாள்...

'பாடி சோடா' வடிவேல் பாசையில் சொல்ல வேண்டும் என்றால் மண்டை மேலிருந்த கொண்டையை மறைக்க மறந்து போனாள் அவனது செல்ல குள்ளச்சி...!!!

தித்திக்கும்...!!!

"நான் உன்னோட உயிர் நண்பன்... உனக்காக உயிரையும் கொடுக்க நினைக்கும் நண்பன்... இதோ இப்ப கூட நீ வர்ற வரைக்கும் உன்னோட வேலை எல்லாத்தையும் மாங்கு மாங்குன்னு செஞ்சு முடிச்ச உன் இளிச்சவாய் நண்பன் எனக்குத் தெரியாம நீ கல்யாணம் பண்ணிக்கிட்டியா...? உன்னால் எப்படி முடிஞ்சது நாச்சி...?"

கண்களில் வராத கண்ணீரை போலியாகத் துடைத்தப்படி கூறிய அருணை கண்டு வலமங்கைக்குக் கடுப்பாக இருந்தது... வந்த கோபத்தில் அவனது தலையில் நறுக்கென்று கொட்டியவள்,

"ஏன்டா எருமை இப்படிக் கத்துற...? நீ இப்படிக் கத்தி ஒட்டுமொத்த ஆபிசுக்கும் போஸ்டர் அடிச்சு ஒட்டாத குறையா சொல்லிருவ போலிருக்கே... லூசு, லூசு..."

"எங்க எல்லோருக்கும் கேட்டிருச்சே..." கோரசாக ஒலித்த குரலில் அவள் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள்...

மொத்த அலுவலகமும் அவளின் முன்னால் நின்றிருந்தது... அவர்களோடு சேர்ந்து புன்னகை மன்னனாய் நின்றிருந்த அழகுவை கண்டு அவளது இரத்த அழுத்தம் ஏகத்துக்கும் எகிறியது...

'மனசுக்குள்ள பெரிய புன்னகை மன்னன்னு நினைப்பு...? மூஞ்சியில் ஒரு குத்து விட்டேன்னா தெரியும் சங்கதி... இந்த மஞ்சள் கயிறு மேட்டரை முதலிலேயே பார்த்து சொல்றதுக்கு என்ன பக்கி...'

வலமங்கை மனதிற்குள் கணவனுக்கு லட்சார்ச்சனை செய்தபடி அவனை முறைத்து கொண்டிருந்தாள்...

அழகுவோ கூலாகக் கைகளைக் கட்டியபடி மனைவியைப் பார்த்துக் கொண்டிருந்தான்... அருணுக்கு அவள் என்ன பதில் சொல்ல போகிறாள் என்பதினை அறியும் ஆர்வம் அவனுள்...

விதவிதமாய் ஒலித்த வாழ்த்துக்களைக் கேட்டு வலமங்கை மனதிற்குள் மிகவும் நொந்து போனாள்... அதில் ரேஷ்மாவின் வாழ்த்தும் அடக்கம்... அதில் அவள் மிகவும் கவலையானாள்...

"உங்க கணவர் என்ன பண்றார்...? என்ன பெயர்...?" என்று எல்லோரும் ஆளுக்காள் அவளைக் கேள்வி கேட்டு துளைத்து எடுத்து விட்டனர்...

அவளால் தன்னெஞ்சறிய பொய் கூற முடியவில்லை... அதே சமயம் உண்மையையும் உரைக்க முடியவில்லை... அதனால் அழகுவின் பக்கம் கையை நீட்டி,

"என்னை விட என் கணவரை பத்தி அழகுக்குத் தான் ரொம்ப நல்லா தெரியும்..." என்று அவனை மாட்டி விட்டாள்...

'அடிப்பாவி... இப்படி மாட்டி விட்டுட்டாளே...' என்று அழகு மனதிற்குள் புலம்பினாலும் வெளியில் அதைக் காட்டி கொள்ளாது,

"ஒரு மனைவிக்குத் தான் அவளோட கணவனைப் பத்தி நல்லா தெரியும்... நீங்க என் கிட்ட கேட்கிறதை விட்டுட்டு மங்கை கிட்ட கேள்வி கேளுங்க..."

அவள் போட்ட பந்தை அவள் பக்கம் திருப்பி அடித்தவன் முகத்தில் அப்படியொரு குறும்பு புன்னகை தவழ்ந்தது...

'இப்போ பதில் சொல்லுடி என்னருமை குள்ளச்சி...' என்று மனதிற்குள் சிரித்தபடி மனைவியைப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்...

என்ன செய்வது என்று தெரியாது கைகளைப் பிசைந்து கொண்டிருந்தாள் வலமங்கை... தனது பதிலை கேட்கும் நோக்கில் தன்னை ஆர்வத்துடன் நோக்கி கொண்டிருந்த ரேஷ்மாவின் மீது அவளது விழிகள் நிலைத்தது... அடுத்த நொடி தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"அது சீக்ரெட்... இப்போதைக்குச் சொல்ல முடியாது..." என்று உரைத்தவளுக்கு அப்போது தான் நிம்மதியாக

இருந்தது...

ஏனெனில் அவள் பொய்யும் உரைக்கவில்லை... உண்மையையும் உரைக்கவில்லை... அந்த மட்டும் அவள் தப்பித்தாள்...

அவளது பதிலில் அழகுவின் கண்கள் யோசனையாய் இடுங்கியது... அவளை உற்று நோக்கி கொண்டிருந்தான்...

'இவன் வேற... இப்ப எதுக்கு இந்தப் பார்வை பார்த்துத் தொலைக்கிறான்...' என்று மனதிற்குள் முணுமுணுத்தவள் மறந்தும் அவன் புறம் திரும்பவில்லை...

"நமக்கு மாப்பிள்ளையா முக்கியம்...? நமக்கு எல்லாம் ட்ரீட் தான் முக்கியம்..." என்று எல்லோரும் கோரசாய் ஆர்ப்பரித்தபடி அவளின் வார்த்தைக்காக ஆவலுடன் காத்திருக்க...

"அவங்க கிட்ட கேட்டுட்டு சொல்றேன்..." என்று சமாளிப்பாய் கூறியவளின் விழிகள் அவளையும் அறியாது கணவனைப் பார்த்தது...

அப்போதும் அவன் தனது பார்வையை மாற்றிக் கொள்ளவில்லை...

'அடப்போடா...' என்று அவள் அசால்ட்டாய் அவனையும், அவனது பார்வையையும் புறம் தள்ளினாள்...

எல்லோரும் சென்றதும் அருணிடம் திரும்பியவள், "எருமை... எருமை..." என்று அவன் தலையில் நங்கு நங்கென்று கொட்டியவள்,

"உன் அப்பா, அம்மா வந்திருந்தாங்களேடா... அவங்க உன் கிட்ட சொல்லலையா...?"

"இல்லையே நாச்சி..." வலித்த தலையைப் பரிதாபமாய்த் தடவியபடி அவன் பதில் கூற...

அதில் சமாதானமானவள் தனது வேலையைப் பார்க்கலானாள்...

தனது இடத்திற்கு வந்த அழகுவால் அவளைப் போன்று அமைதியாக வேலை செய்ய முடியவில்லை... சிறிது நேரம் யோசித்தவன் பின் மனதில் ஒரு முடிவு எடுத்தவனாய் தான் எடுத்த முடிவுக்குச் செயல் வடிவம் கொடுக்க ஆரம்பித்தான்...

"இனி நமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை... இனி நாம நம்ம கல்யாணத்தைப் பத்தி யோசிக்கலாம்..." என்று கூறியபடி தன்னருகில் வந்தமர்ந்த ரேஷ்மாவை அழகு ஒன்றும் கூறாது பார்த்தான்...

அந்நேரம் அவளது அலைப்பேசியில் மின்னஞ்சல் வந்ததற்கான ஒலி கேட்டது... அதைப் பார்த்தவள் திகைத்தவளாய் அதே சமயம் ஆர்வத்துடன் அதைத் திறந்து பார்த்தாள்... அதைப் படித்துப் பார்த்தவள் சிறிது நேரம் அமைதியாக இருந்தாள்... பின்பு அவனிடம்,

"இப்போ நான் பேசும் மனநிலையில் இல்லை அழகு... பிறகு நம்மைப் பத்தி பேசலாம்..." என்றுரைத்தவள் அவனின் பதிலை எதிர்பாராது சென்று விட்டாள்...

அவனோ தோளை குலுக்கியபடி தனது வேலைகளில் ஆழ்ந்தான்...

அஜய் தன் முன் அமர்ந்திருந்த வலமங்கையைப் பார்த்துக் கொண்டிருந்தான்... அவளுக்குத் திருமணமானது குறித்து அவனுக்கு வருத்தம் தான்... அது இல்லை என்பதற்கு இல்லை... அதற்காக அவள் தான் வேண்டும் என்று அவனது மனம் அடம்பிடிக்க வில்லை...

"வாழ்த்துக்கள் வலமங்கை நாச்சி...யார்..."

எப்போதும் போல் தனது பெயரை இழுத்து ராகம் போட்டு சொன்னவனைக் கண்டு இன்று ஏனோ அவளது மனம் மயங்கவில்லை...

"தேங்க்யூ அஜய்..." என்று புன்னகையுடன் அவளால் சாதாரணமாய்ப் பதில் கூற முடிந்தது... அதுவும் தெளிந்த மனதுடன்...

சித்தார்த் மல்ஹோத்ரா மாதிரி அஜய் மீதும் அவளுக்கு ஈர்ப்பு, பிரமிப்பு இருந்தது உண்மையே... ஆனால் அது காதல் எல்லாம் இல்லை... இப்போது அவளது மனம் காதல் என்றால் என்ன என்பதை நன்கு உணர்ந்திருந்தது... அந்தக் கணம் அவளது நெஞ்சில் கணவனின் பிம்பமே நிறைந்திருந்தது...

வேலை விசயமாக அஜய்யிடம் சிறிது நேரம் பேசி கொண்டிருந்தவள் பின்பு அறையை விட்டு வெளியேறினாள்...

வலமங்கையின் மாற்றம் அஜய்க்கு பெருத்த ஆச்சிரியமாக இருந்தது... அவளிடத்தில் எப்போதும் ஒட்டி கொண்டிருக்கும் ஒருவித அசட்டுத்தனம் இன்று அவளிடத்தில் இல்லை... ஒரு பக்குவமான பெண்ணாக நடந்து கொண்டவளை அந்தக் கணம் அவனுக்குப் பிடித்துத் தான் இருந்தது...

அவள் எப்படி இருந்தாலும் அழகு தான் என்று அவனது மனம் நினைத்துக் கொண்டது... அடுத்த நொடி அவன் தன்னைத் தானே கடிந்து கொண்டான்...

'அடுத்தவன் மனைவி எப்படி இருந்தால் உனக்கு என்னடா...?' என்று...

மதிய உணவு இடைவெளியின் போது அழகு மீண்டும் தனது மனைவியைச் சந்தித்தான்... காலையில் நடந்தது பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாது பிரியாணியை மொக்கி கொண்டிருந்த அவளைக் கண்டதும் அவனது வருத்தம் எல்லாம் பறந்தோடி எல்லை தாண்டி பாகிஸ்தானுக்கு ஓடி போனது...

நேரே அவள் அருகில் சென்றவன் அவளை இடித்துக் கொண்டு அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்தான்...

"டேய்... என்னடா பண்ற...?" என்று பல்லை கடித்தவள்,

"நீ இப்படி இடிச்சிக்கிட்டு உட்கார்றதை அருண் பார்த்தா என்ன நினைப்பான்...? தள்ளி உட்காருடா பக்கி..."

"அருண்... நாங்க ரெண்டு பேரும் இப்படி உட்கார்ந்திருப்பதைப் பார்த்து நீ ஏதாவது தப்பா நினைச்சிக்குவியா...?" பாவம் போல் முகத்தை வைத்துக் கொண்டு அருணிடம் கேட்ட அழகை கண்டு செய்வதறியாது தலையில் கை வைத்தாள் வலமங்கை...

"அப்படி எல்லாம் இல்லைண்ணா..." என்று புன்னகைத்த அருண் உணவில் கவனமானான்...

"பார்த்தியா நம்ம அருணே சொல்லிட்டாப்புல..." என்ற அழகு அவளது தட்டை தனது புறம் நகர்த்தி உண்ண ஆரம்பித்தான்... அதுவும் அவள் உண்ட எச்சில் கரண்டியில்...

"அழகு... அருணை விடு... அவனுக்கு நம்மைப் பத்தி நல்லா தெரியும்... ஆனா மத்தவங்க பார்த்தா தப்பா நினைக்க மாட்டாங்களா...?"

"நினைக்க மாட்டாங்க..." என்று உறுதியாகக் கூறியவன்,

"அப்படியே நினைச்சாலும் நினைச்சுக்கிட்டு போகட்டுமே... உன்னோட கள்ளப்புருசன் நான் தான்னு..." என்று கண்சிமிட்டி சிரித்தவனைக் கண்டு அவள் திகைத்தாள்...

'இந்த லூசுக்கு மறை எதுவும் கழண்டு போச்சா...?' என்று சந்தேகமாக அவனைப் பார்த்து வைத்தாள்...

"வளர்ற பையனை கண்ணு வைக்காதே கண்ணம்மா... உனக்கு வேணும்ன்னா வேற வாங்கிட்டு வந்து சாப்பிடு..." என்றவன் அவளுக்கு முதுகு காட்டி அமர்ந்து கொண்டான்...

"தண்டச்செலவு..." என்று முணுமுணுத்துக் கொண்டே அவள் வேறு உணவு வாங்க போனாள்...

என்ன கோபம் இருந்த போதும் அவளால் பட்டினி கிடக்க முடியாதே...

மீண்டும் அவள் வந்த போது அழகுவும், அருணும் சிரித்துப் பேசி கொண்டிருந்ததைப் பார்த்து அழகுவிடம் ரகசியமாக,

"உங்க ரெண்டு பேருக்கும் தான் ஒத்து வராதே... இது என்ன அதிசயமா இருக்கு...? கிழக்கும் மேற்கும் ஒண்ணு சேர்ந்திருக்கு..."

"இனி எல்லாம் ஒத்து போகும்... நீ குறுக்கே வராம ஒத்தும்மா..." என்ற அழகு அவளைக் கழட்டி விட்டு விட்டு அருணிடம் கடலை போட துவங்கினான்...

அதைக் கண்டு அவள் பல்லை கடித்த போதும் கையிலிருந்த சோற்றை மறக்கவில்லை... கை அது பாட்டுக்கு தனது வேலையைச் செவ்வனே செய்து கொண்டிருந்தது...

தலையைக் குனிந்து கொண்டு உண்டு கொண்டிருந்தவளை அழைத்த அழகு, "பை மங்கை..." என்க...

அவளோ அவனை நிமிர்ந்தும் பார்க்கவில்லை... 'ச்சீ போடா...' என்று அவள் அவனை மனதிற்குள் வைதபடி அமர்ந்திருந்தாள்...

"பை மங்கை..." என்று ஐந்தாவது முறையாக விடைப்பெற்றவனைக் கண்டு கோபமாய் நிமிர்ந்தவளின் கோபம் அவனது கையில் இருந்த 'சாக்லேட் சன்டே' ஐஸ்க்ரீமை கண்டதும் அப்படியே காணாமல் போனது...

"ச்சோ ஸ்வீட் அழகு..." என்று குதூகலமாய்க் கூறியபடி அவள் அதைக் கை நீட்டி வாங்க முனைய...

"ம்ஹூம்... லஞ்சம் கொடுத்தால் மட்டுமே கொடுப்பேன்..." என்றவனை அவள் புரியாமல் பார்த்தாள்...

அவன் தனது கன்னத்தினைக் காட்டி, "லஞ்சம் கொடு..." என்க...

அவன் கேட்ட லஞ்சத்தின் லட்சணத்தில் அவளது முகம் சிவந்து போனது வெட்கத்தில்...

"உன் ஐஸ்க்ரீம் ஒண்ணும் வேண்டாம்... போடா..." என்றவள் அவனைக் காண முடியாது லஜ்ஜையுற்றவளாய் தலை

குனிந்து கொள்ள...

"சரி நீ கொடுக்கலைன்னா என்ன...? நான் கொடுக்கிறேன்..." என்றவன் தனது இதழை அவளது நெற்றியில் அழுந்த பதித்து எடுத்தான்...

"அழகு... என்ன பண்ற...?" என்று பதறியவளை கண்டு,

"என் பொண்டாட்டிக்கு நான் முத்தம் கொடுக்கிறேன்..." என்று கண்சிமிட்டி சிரித்தவனைக் கண்டு அவளது இதயம் தாளம் தப்பியது...

அவளின் உறைந்த நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ஐஸ்க்ரீமை அவளது கையில் திணித்து விட்டு அவன் சென்றுவிட்டான்...

அவன் சென்றதும் அவளது முகத்தில் திகைப்பு மறைந்து நாணப் புன்னகை தோன்றியது... முகத்தில் உறைந்த புன்னகையுடன் அந்த ஐஸ்க்ரீமை எடுத்து சுவைத்தவளுக்கு ஐஸ்க்ரீம் தித்திப்பு போன்று கணவன் இதழ் பதித்த இடமும் தித்தித்தது...

அன்று முழுவதும் தன்னுடன் ஒட்டி கொண்டு திரிந்த கணவனைக் கடியவும் முடியாது, அதே சமயம் அவனை ஏற்றுக் கொள்ளவும் முடியாது அவள் மிகவும் திண்டாடி போனாள்... மனதிற்குள் அவனின் ஒவ்வொரு செய்கையையும் அவள் ரசித்தாள் என்பது தான் உண்மை...

*************************************

மாலை அழகுவுடன் வீடு திரும்பும் போதும் அவளது இந்த இனிமையான மனநிலை நீடித்தது... வீட்டிற்கு நுழைந்தவளுக்கு அங்கு ரேஷ்மாவை கண்டதும் தான் நிதர்சனம் மூளையில் உறைத்தது... அதுவரை வானில் பறந்து கொண்டிருந்தவள் தொபக்கடீர் என்று பூமியில் வந்து விழுந்தாள்...

அதில் அவளுக்கு அடி கொஞ்சம் பலமாகத் தான் விழுந்தது...

"அப்புறம் மேரேஜ் லைஃப் எல்லாம் எப்படி இருக்கு மங்கை...?"

"நல்லா இருக்குக்கா..."

வலமங்கையின் நாணம் சுமந்த முகத்தைக் கண்டு வாஞ்சையுடன் புன்னகைத்த ரேஷ்மா, "நாம நினைச்சது கிடைக்கலையேன்னு கவலைப்படுறதை விட்டுட்டு கிடைச்சதை வச்சு சந்தோசப்படணும் மங்கை..."

"அக்கா..." அவள் திகைப்பாய் ரேஷ்மாவை பார்த்தாள்...

"திடீர் கல்யாணம் இல்லையா... அதனால் தான் சொன்னேன்..."

"ஓ... அப்போ சரி..." என்று தலையாட்டி விட்டு வலமங்கை குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்...

இரவு உணவு முடிந்து உறக்கம் வராது தவித்த வலமங்கை கீழே இருந்த பூங்காவுக்குச் செல்ல எண்ணி கீழே சென்றாள்... அங்குக் கல்மேடையில் அமர்ந்து கொண்டு சிரித்துப் பேசி கொண்டிருந்த அழகு, ரேஷ்மாவை கண்டு திகைத்து போய் அப்படியே நின்று விட்டாள்...

அவளது மனதிற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது... அழுகை வரும் போலிருந்தது... முயன்று அடக்கி கொண்டாள்... ஆனால் தனது கண்களை அவர்களிடம் இருந்து விலக்கி கொள்ளவில்லை... சிறிது நேரத்தில் ரேஷ்மா எழுந்து சென்றதும் நேரே கணவன் முன் வந்து நின்றவள் அவனை முறைத்து பார்த்தாள்...

"எதுக்கு இப்போ இப்படிப் பல்லை காண்பிச்சு பேசிக்கிட்டு இருந்த...?" அவள் பொறாமையில் படபடத்தாள்...

அவளது கோபம் கண்டு அழகு வாய் விட்டு சிரித்தவன், "குள்ளச்சி... உன்னைப் பத்தி பேசினால் சிரிக்காமல் பேச முடியுமா...? நீயே சொல்லு..." என்று ஏதோ நகைச்சுவை போல் அதை நினைத்து நினைத்து அவன் சிரிக்க, அதில் கடுப்பானவள்,

"என்னைய பார்த்தா உனக்கு ஜோக்கர் மாதிரி தெரியுதா...?" என்று அவள் அவனைச் சராமாரியாக அடிக்க ஆரம்பித்தாள்...

அடிக்கும் அவளது கைகளை மடக்கி பிடித்த அழகு அவளைத் தனது மடியில் அமர்த்திக் கொண்டு அவளைப் பின்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்...

"இப்ப எல்லாம் உனக்குக் கை ரொம்ப நீளுது... இந்தக் கையை என்ன செய்யலாம்...?"

அவளது காதோரம் குனிந்து கேட்டவனின் குரலில் பாவையவள் மனம் மயங்கி அவன் மீது சாய்ந்து விட்டாள்... அவளது இணக்கமான நிலை உணர்ந்தவன் மேலும் அவளைத் தன்னோடு இறுக்கி கொண்டான்...

"ஏய் நிஷா நில்லு..." என்று யாரோ கத்தி அழைக்கும் குரலில் இருவரும் தங்களது மோனநிலையில் இருந்து வெளியில் வந்தனர்...

"ச்சு... பப்ளிக் ப்ளேசில் இருந்துக்கிட்டு என்னடா பண்ற...?" அவனைக் கடிந்தபடி எழுந்தவள் அவன் அருகில் அமர்ந்து கொண்டு அவனை முறைத்தாள்...

"அப்போ பிரைவேட் ப்ளேஸ்ன்னா அம்மணிக்கு அப்ஜெக்சன் இல்லையா...?" என்று சரசமாகப் பேசியவனைக் கண்டு அவளுக்கு மனம் உருகாது கண்கள் கரித்துக் கொண்டு வந்தது...

"நீ நினைச்சது தான்டா நடக்கணும்ன்னு நினைக்கிற... என்னைப் பத்தி கொஞ்சமும் யோசிக்க மாட்டேங்கிற..." கோபமும், வருத்தமுமாய்ச் சொன்னவளை வெறித்துப் பார்த்தவன்,

"உன்னை மட்டுமே நினைக்கிறதால் தான் நான் உன்னைப் பேச விட்டுட்டு இப்படிக் கையைக் கட்டிக்கிட்டு வேடிக்கை பார்த்துட்டு இருக்கேன்... இதே இது நான் நினைச்சதை நடத்தி காட்டும் வெறி எனக்கு இருந்திருந்தா..." என்று கூறியவன் அவளை ஆழ்ந்து பார்த்தான்...

அவனது பார்வையில் அவளுக்கு உள்ளுக்குள் குளிரெடுத்தது...

'அடேய் பக்கி... கடைசிவரை நீ காமெடி பீசாவே இருந்துடுடா... இப்படி ரொமான்ஸ் மன்னன் லுக்கு எல்லாம் கொடுக்காதே... மீ பாவம்...' மனதுக்குள் அவஸ்தையாய் முனங்கினாள் வலமங்கை...

"இந்நேரம் நீ என் மனைவியாகிருந்திருப்ப..." என்று முடித்தவனைத் திகிலுடன் பார்த்தாள் அவள்...

"என்ன லுக்கு வேண்டி கிடக்கு... நீ இப்படிப் பாவம் போல் பார்த்தால் நான் பாவம் பார்த்து விட்டிருவேனாக்கும்... நெவர் மங்கை..."

'பயப்புள்ளைய நாம என்னமோன்னு நினைச்சா... இவன் என்னம்மா சீன் போடுறான்...' மனதிற்குள் வியந்தபடி கணவனைப் பார்த்தாள் அவள்...

அதன் பின் வந்த நாட்கள் அதன் போக்கில் சென்றது... அழகு எப்போதும் போல் அவளிடம் குழைந்து கொண்டிருக்க, அவளோ குழையும் தன் மனதினை கட்டுப்படுத்த முடியாது அவனிடம் எரிந்து விழுந்தாள்... அதற்கு அவனும் பதிலடி கொடுக்கத் தவறவில்லை...

அழகுவின் நெருக்கத்திற்கான காரணம் அடுத்தப் பத்தாவது நாள் அவளுக்குத் தெரிந்து போனது... அவன் அழகாக அவளது பிரச்சினையைத் தீர்த்திருந்தான்...

அதில் அவளுக்கு அவன் மீது கோபம் வராமல் அவன் மீது இன்னமும் அதிகமாய்க் காதல் வந்து தொலைத்தது தான் விந்தையிலும் விந்தை...!!!

தித்திக்கும்...!!!

இரவு மூக்கு பிடிக்க உண்ட மயக்கத்தில் கண்கள் சொருக வலமங்கை படுக்கையில் சாய்ந்த போது அவளது அலைப்பேசி அலறியது...

"ச்சு... எவன்டா அவன்...? இந்த நேரத்தில் தொந்தரவு பண்றது...?" என்று முணுமுணுத்துக் கொண்டே அலைப்பேசியை எடுத்து பார்த்தவள் அதில் ஒளிர்ந்த அழகின் பெயரை கண்டதும் அவசரமாய் எழுந்து அமர்ந்தாள்...

ரேஷ்மா அவளின் தந்தைக்கு உடல்நலம் சரியில்லை என்று ஊருக்கு சென்றிருந்தாள்... அதனால் அவள் மட்டுமே அறையில் தனியாக இருந்தாள்...

'பக்கத்தில் இருந்து கொண்டு எதற்காக அழைக்கின்றான்...?' என்கிற யோசனையுடன் அவள் அலைப்பேசியை உயிர்ப்பித்தாள்...

"ஏய் குள்ளச்சி... என்ன தூக்கமா...? மாமன் உன்னை நினைச்சு தூங்காம இருக்கேன்... நீ மட்டும் இப்படித் தூங்கிறியே... இது நியாயமா...? தர்மமா...?" என்று மறுபக்கம் அவன் முகாரி பாட...

"அழகு..." என்று கோபத்தில் அவள் பல்லை கடித்தாள்...

'ஹா... ஹா... எப்பவும் என்னைத் தான் பல்லை கடிக்க வைப்பாள்... இன்னைக்கு நாம இவளை பல்லை கடிக்க வச்சாச்சு... ஹப்பா, இன்னைக்குத் தான் எனக்கு நிம்மதியா தூக்கம் வரும்...' என்று மனதுக்குள் மகிழ்ந்தவன்,

"சரி, சரி... உனக்குத் தான் என் மேல் அக்கறை இல்லைன்னு எனக்குத் தெரியுமே..."

அவன் சொன்னதும் அவள் உதட்டை கடித்தபடி அமைதியாகி விட்டாள்...

"நான் பேச வந்த விசயமே வேறு... நீ இப்போ மொட்டை மாடிக்கு வா..."

"அதெல்லாம் முடியாது..." அவசரமாய் மறுத்தவளை கண்டு அவனது உதடுகளில் புன்னகை நெளிந்தது...

"இப்போ நீ எனக்கு வேணும்... அதுக்கு நீ இங்கே வந்தாகணும்... ஒரு ஐஞ்சு நிமிசம் தான் உனக்கு டைம்... சீக்கிரம் வரும் வழியைப் பார்... மாமன் உனக்காகக் காத்திட்டு இருக்கிறேன்..." என்றவன் அவளது பதிலை எதிர்பாராமல் அலைப்பேசியை அணைத்து விட்டான்...

அவனுக்குத் தெரியும் அவள் வருவாள் என்று...

கணவன் கூறிய வார்த்தைகளை மீண்டும் மீண்டும் அசை போட்ட வலமங்கைக்கு உள்ளுக்குள் பகீரென்றது... போவதா, வேண்டாமா என்று மனதிற்குள் 'ஒத்தையா, ரெட்டையா' போட்டவள் இறுதியில் அவனைக் காண சென்றாள்... ஏனோ அவளுக்கு அவனை ஏமாற்ற மனம் வரவில்லை...

தன்னை ஏமாற்றாது வருகை தந்த மனைவியைக் கண்டவன் முகத்தில் சந்தோசம் நிறைந்தது...

"நீ வருவன்னு எனக்குத் தெரியும்டி குள்ளச்சி..."

"எதுக்கு வர சொன்ன...? முதல்ல அதைச் சொல்லு...?" என்று அவள் வெடுவெடுத்தாள்...

"இதுக்குத் தான்..." என்றவன் அவளது கைகளைப் பிடித்து அதில் ஒரு கவரை வைத்தான்...

"என்னதுடா...?"

"பிரிச்சு பாரு..."

அழகு கூறியதும் அந்தக் கவரை பிரித்துப் பார்த்தவளின் விழிகள் அகல விரிந்தது ஆச்சிரியத்தில்...

"அழகு... ரொம்ப அழகாயிருக்குடா..."

"யாரு நானா...?" என்று கண்சிமிட்டி சிரித்தவனை முறைக்க முயன்று தோற்றவள்,

"ச்சு... விளையாடாதே அழகு... நான் இந்தப் புடவையைச் சொன்னேன்..."

"அப்போ நான் அழகாயில்லை... புடவை தான் அழகா இருக்குன்னு சொல்றியா...?"

கணவனின் குரலில் அவனை ஏறிட்டு பார்த்தவள் அவனின் விழிகளில் தெரிந்த ஏதோ ஒன்றில் அவனின் பார்வையைச் சந்திக்க முடியாமல் கையிலிருந்த புடவையைப் பார்ப்பது போல் தலை குனிந்து கொண்டாள்...

அவள் பதில் பேசாது இருப்பது கண்டு அவனது மனதில் பெருத்த ஏமாற்றம் கவிழ்ந்தது... இருந்தாலும் நொடியில் தன்னைச் சமாளித்துக் கொண்டவன்,

"அழகாயிருக்கு சரி... பிடிச்சியிருக்கா...?" என்று மொட்டையாகக் கேட்டவனை அவள் புரியாது நிமிர்ந்து பார்த்தாள்...

அவளது பார்வையில் வாய் விட்டு சிரித்தவன், "நான் புடவையைக் கேட்டேன் குள்ளச்சி..." என்று வலிக்காது அவளது தலையில் குட்டினான்...

"நீ குட்டி குட்டி தான்டா நான் வளராம போயிட்டேன்... இனி நீ என்னைக் குட்டின உன் கையை உடைச்சிடுவேன் உடைச்சு..."

"அடேங்கப்பா... இதுக்கு மேல் நீ வளர போறியாக்கும்.. உன் வளர்த்தி அவ்வளவு தான்டி என் எருமை பொண்டாட்டி..."

அவன் தன்னை எருமை சொன்னதைக் கூடப் போனால் போகிறது என்று காற்றில் பறக்க விட்டவள் பொண்டாட்டி என்று சொன்னதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்...

"டேய்... ஏன்டா இவ்வளவு சத்தமா பேசுற...? யார் காதிலாவது விழுந்து விடப் போகுது..."

"இது என்னடா வம்பா போச்சு... பொண்டாட்டியை பொண்டாட்டின்னு சொல்லாம எப்படிம்மா சொல்ல முடியும்..."

"ம்க்கும்... நீயும் நானும் வாழுகிற வாழ்க்கைக்கு இது ஒண்ணு தான் குறைச்சல்..." என்று முணுமுணுத்து கொண்டாள் வலமங்கை...

"அதுக்குத் தான் ஒரு முடிவு கட்ட போகிறேன்..." என்று அவனும் முணுமுணுக்க...

"என்னடா சொன்ன...?"

"ஒன்றும் இல்லை..." என்றவன்,

"நாளைக்குக் காலையில் இந்தப் புடவையைக் கட்டிட்டு தயாராயிரு... நாம ஒரு இடத்துக்குப் போகிறோம்..."

"ஏதாவது கல்யாணத்துக்குப் போகிறோமா...?"

அதற்கு அவன் மறுப்பாய் தலையசைத்தான்...

"அப்போ... கோவிலுக்கு..."

அதற்கும் அவன் 'இல்லை' என்பது போல் உதட்டை பிதுக்கினான்...

"அப்புறம் எங்கேடா போகிறோம்...?" என்று சிணுங்கலுடன் கேட்ட மனையாளை அள்ளி அணைக்க அவனது கரங்கள் பரபரத்தது...

இரவு நேர தனிமை அவனின் மனதினை மிகவும் மயக்கியது... அப்படி மட்டும் அவன் அவளை அணைத்தால் அவளிடம் உதை கிடைப்பது உறுதி என்று அவனுக்கு உறுதியாகத் தெரிந்த காரணத்தால் சற்று அடக்கி வாசிக்க எண்ணினான்...

"உன்னோட குட்டியூண்டு மூளையை ரொம்பவும் கசக்கி யோசிக்காதே... அது நாளைக்குக் காலையில் தெரிந்து விடும்..."

"இப்போ எதுக்கு இத்தனை விலையில் இந்தப் பட்டுப்புடவை அவசியமா...? கல்யாணத்துக்கு வாங்கிய புடவைகளில் இன்னமும் கட்டாத புடவைகள் நிறைய இருக்கு... தேவையில்லாத செலவு எல்லாம் எதுக்குப் பண்ற...?"

"கழுத்தில் தாலி ஏறியதும் டிபிகல் வொய்ப்பா மாறிட்டாளே என்னுடைய குள்ளச்சி..." என்றவனது குரலில் கேலி இல்லை... வியப்பே அதிகம் இருந்தது...

"கல்யாணத்துக்கே நிறையச் செலவு ஆகிருச்சு இல்லையா...? அதனால் தான் சொன்னேன்..." என்றவள் அருகில் நெருங்கி வந்து நின்றவன்,

"கிப்ட் கொடுத்தா சந்தோசமா வாங்கிக்கணும்... இப்படி ஆராயக் கூடாது மங்கை..."

"ம்..."

அவனது அருகாமையில் அவளால் எதுவும் பேச முடியவில்லை... தொண்டைக்குள் முள் சிக்கி கொண்டது போல் ஒருவித அவஸ்தையாக இருந்தது... அந்த அவஸ்தை துன்பமாக இல்லாது சந்தோசத்தைக் கொடுத்தது அவளுக்குப் பெரும் அவஸ்தையாக இருந்தது...

"பிடிச்சியிருக்கா...?" மீண்டும் கேட்டவனைக் கிண்டலாய் பார்த்தவள்,

"இந்த வார்த்தையை நம் கல்யாணத்துக்கு முந்தி நீ கேட்டு இருக்கணும்... இப்போ டூ லேட் கருவாயா..." என்று போலி பெருமூச்சு விட்டவளை அவன் பதிலுக்குக் கேலியாய் பார்த்தவன்,

"இப்பவும் நான் கேட்டது புடவையைத் தான்..."

"ஹி... ஹி..." என்று அசடு வழிந்தவள் கையிலிருந்த புடவையை வருடியபடி,

"அதான் அழகாயிருக்குன்னு சொல்லிட்டேனே..."

மயில் கழுத்து நிறத்தில் மெல்லிய சரிகையிட்ட அந்தப் பட்டுப்புடவை மிகவும் அழகாக இருந்தது... அவளின் சிவந்த மேனிக்கு நன்றாக எடுப்பாக இருக்கும்... அதன் கூடவே 'பேசன் ஜூவெல்லரி' எனப்படும் பட்டுநூலில் செய்யப்பட்ட அணிகலன்கள் இருந்தது... அதன் வடிமைப்பு மிகவும் அழகாக, நுணுக்கமாக இருந்தது...

இரண்டும் மிகப் பெரிய விலை இல்லை என்றாலும் அவன் ஆசையாக வாங்கிக் கொடுத்ததால் உலகத்திலேயே விலை மதிப்புடையதாய் அவளுக்கு மாறிப் போனது...

"பிடிச்சியிருந்தா சரி தான்..."

"இதுக்குத் தான் வர சொன்னியா...? எனக்குத் தூக்கம் வருதுடா... நான் கிளம்பறேன்..." என்றபடி நகரப் போனவளின் கையைப் பிடித்துத் தடுத்தவன்,

"கண்ணம்மா..." என்று அவளை அழைக்க...

அந்த ஏகாந்த வேளையில் அவனின் உருக்கமான அழைப்பு அவளை ஏதோ செய்தது... அவளையும் அறியாது அவனை அவள் திரும்பி பார்த்தாள்... அவள் அருகில் நெருங்கி வந்தவன் அவளின் நெற்றியில் அழுந்த முத்தமிட்டு,

"குட் நைட்..." என்க...

அவனது செயலில் அவள் உள்ளம் உறைந்து நின்றாள்... இப்போது எல்லாம் அவனது அருகாமையில் அவளது மூளை செயலிழந்து போகிறது...

"குட் நைட்..." என்று முணுமுணுத்தவள் அதற்கு மேல் அங்கிருக்க முடியாது ஓடி சென்று விட்டாள்...

அவளது நாணம் அவனுள்ளும் பல கவிதைகள் படித்ததில் மட்டற்ற மகிழ்ச்சியில் அவன் நின்றிருந்தான்...

**********************************

மறுநாள் அதிகாலையில் வலமங்கையை எழுப்பி அவளைக் கிளப்பி அழைத்துக் கொண்டு போவதற்குள்

அழகு ஒருவழி ஆகிவிட்டான்... ஒருவாறு ஐந்து மணிக்கு கிளம்பி வந்தவளை கண்டு அவன் கண்ணிமைக்க மறந்தான்...

அவன் வாங்கித் தந்த பட்டுப்புடவை அழகு தான் என்றாலும் அது அவளது மேனியில் அழகுற தழுவி இருந்ததில் இன்னமும் அழகாய் இருந்தது... அவனது பார்வை மெல்ல மெல்ல கணவன் பார்வையாக மாற ஆரம்பித்தது...

"எதுக்குடா இப்படிக் காலங்கார்த்தால எழுப்பி விட்டு என் உயிரை வாங்கிற...?" என்று அவனைக் கடிந்து கொண்டே வந்தவள் அவனது பார்வையில் அப்படியே திகைத்தாள்...

'என்னடா இது... இப்படிப் பார்த்து வைக்கிறான்...? என்னாச்சு இவனுக்கு...?' மனதிற்குள் யோசித்தபடி அவன் அருகே வந்து,

"அழகு... கிளம்பலாமா...?" என்று அவள் கூறவும்...

கனவில் இருந்து விழித்து எழுபவன் போல் விழித்த அழகு தன்னைச் சமாளித்துக் கொண்டு, "வண்டியில் ஏறு..." என்க...

அவள் பின்புறம் ஏறியமர்ந்ததும் அவளது கையை எடுத்து தன் தோள் மீது வைத்து கொண்டவன், "புடவை கட்டி இருக்கே இல்லையா... அதனால் என்னை நல்லா பிடிச்சிக்கோ..." முன்புற கண்ணாடி வழியே அவளைப் பார்த்து சொன்னவனின் கண்களோ வேறு ஒரு கதை சொன்னது...

'இவனை...?' மனதுக்குள் முணுமுணுத்து கொண்டாலும் அவள் தனது கையை அகற்றவில்லை...

அந்நேரம் அவனது அலைப்பேசி அழைத்தது...

"ஏன்டா தடிமாடு... ஃபோனை எடுக்க இவ்வளவு நேரமாடா...? அப்படி என்னத்தடா வெட்டி முறிக்கிற... தடிமாடு, தடிமாடு..." என்ற வைத்தியநாதன் குரலோடு கவுண்டமணியின்

காமெடி இசை ஒலித்ததில் அவன் பதறிக் கொண்டு அலைப்பேசியை எடுத்து,

"அப்பா..." என்று பவ்யத்துடன் விளிக்க...

'அடப்பாவி' என்று அவள் தன் வாயில் கையை வைத்தாள்...

"சரிப்பா... சரிப்பா... சரிப்பா..." என்று எதிர் பேச்சு பேசாது நல்ல பிள்ளையாய் தலையாட்டிய கணவனைக் கண்டு அவளுக்குச் சிரிப்பு வந்தது...

பேசி முடித்து அலைப்பேசியை வைத்த அழகு 'அப்பாடா' என்று நிம்மதி பெருமூச்சு விட்டான்... அதைப் பார்த்தவளின் விழிகளில் விசமம் வந்தது...

"இரு இரு... மாமா கிட்ட போட்டுக் கொடுக்கிறேன்... அழகு உங்க அழைப்புக்கு இந்த ரிங் டோன் வச்சிருக்கான்னு மாமா கிட்ட சொல்றேன்..." என்று நமட்டு சிரிப்புடன் கூற...

அதைக் கண்டு அசராது அவளைப் பார்த்தவன், "இனி உன் மாமனார் ஐயாவை ஒண்ணும் சொல்ல மாட்டார்... ஏன்னா அவரது குடுமி என் கையில்..." என்றவன் அவளைக் கெத்தாகப் பார்த்து வைக்க...

அவன் கூறியது புரியாமல் யோசித்தவள் பின் புரிந்தவளாய், "ஏன்டா எருமை மாடே... என்னைத் தானே குடுமின்னு நீ சொன்ன...?"

"ஹா... ஹா... சரியா கண்டுபிடிச்சிட்டியே..." என்று அவன் சிரிக்கத் துவங்க...

"நானா குடுமி..." என்று அவள் அவனை மொத்தினாள்...

"நான் அப்படியா சொன்னேன்... என் குடுமி உன் கையில் என்று அல்லவா சொன்னேன்..." என்று அசராது பொய் கூறியவனைக் கண்டு முறைத்து பார்த்தவள்,

"போடா ப்ராடு..." என்று கூற...

"தேங்க்யூ... தேங்க்யூ..." என்று தலை குனிந்து அவளது பாராட்டை ஏற்றுக் கொண்டவன் முகம் கொள்ளா புன்னகையுடன் தனது வண்டியை கிளப்பினான்...

அதிகாலை பயணம் இனிமையாய் இருந்ததில் இருவரது மனதிலும் மகிழ்ச்சி பொங்கியது... அவர்கள் வேலை செய்யும் நிறுவனத்திற்கு அருகில் இருந்த ஒரு அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்தில் வண்டியை நிறுத்தியவன் அவளை இறங்க சொல்லி தானும் இறங்கினான்...

"இங்கே எதுக்குடா வந்திருக்கிறோம்...? உன் ப்ரெண்ட்ஸ் வீட்டில் ஏதும் விசேசமா...?"

"விசேசம் தான்..." என்றவன் மேலே பேசாது அவளை அழைத்துச் சென்றான்... இரண்டாவது தளத்தில் இருந்த ஒரு வீட்டின் முன் நின்றவன் அதன் கதவில் சாவி போட்டு திறக்க... அதைக் கண்டு அவளது கண்கள் பயத்தில் அகல விரிந்தது...

"டேய் யாரு வீடுடா இது...? வீட்டு ஓனர் சண்டைக்கு வர போறான்..." என்றவளை பார்த்து அவனது முகத்தில் புன்னகை படர்ந்தது...

"மணமகளே... மணமகளே... வா வா... உன் வலது காலை எடுத்து வச்சு வா வா..." என்று அவளைப் பார்த்து அவன் பாட...

"அழகு... நீ என்ன சொல்ற...?" என்று புரியாது நின்றவளின் கையோடு தனது கையைக் கோர்த்தவன்,

"ஏய் பொண்டாட்டி... இன்னுமாடி உனக்குப் புரியலை... இது நம் வீடுன்னு சொல்றேன்... இனி நாம வாழ போகிற வீடுன்னு சொல்றேன்..." என்றவனைக் கண்டு ஆச்சிரியமாய் அவள் விழி விரித்துப் பார்க்க...

"கண்ணம்மா... வீட்டுக்குள் போகலாமா..."

அவனது குரலில் மகுடிக்குக் கட்டுப்படும் பாம்பு போல் அவள் தனது வலது காலை முதலில் எடுத்து வைத்து

வீட்டினுள் நுழைந்தாள்... அவனும் அவ்வாறு செய்து அவளுடன் இணைந்து நுழைந்தான்...

இரண்டு படுக்கையறை கொண்ட அடக்கமான வீடு அது... அவர்கள் இருவருக்கும் இது ஏதேஷ்டம்...

"ரொம்ப அழகாயிருக்கு அழகு..." மனம் நெகிழ்ந்து கூறியவளை கண்டு அவனது முகமும் மலர்ந்தது...

"ரொம்பப் பிடிச்சியிருக்கு..." சுற்றிலும் கண்களை ஓட்டியபடி சந்தோசமாய்க் கூறியவளை கண்டு அவனும் சந்தோசமானான்...

"வா... வீட்டை சுற்றி பார்க்கலாம்..." என்றவன் அவளை அழைத்துக் கொண்டு ஒவ்வொரு இடமாகக் காட்டினான்...

சமையலறைக்கு அழைத்து வந்தவன், "பொதுவா இது பெண்களோட சாம்ராஜ்ஜியம்னு சொல்வாங்க... நம் வீட்டில் எப்படியோ...?" ஒற்றைப் புருவத்தைத் தூக்கி அவன் கேலியாய் கேட்க...

அதில் அவள் பேந்த பேந்த விழித்தாள்...

"அப்போ நளபாகம் தான்னு சொல்லு..."

"ஹி... ஹி..." என்று அசடு வழிந்தவள் தலையில் தட்டியவன்,

"இனி அதுக்கு நோ சான்ஸ்... நான் ஒரு நாள் சமைத்தால் நீயும் ஒரு நாள் சமைக்கணும்... எல்லாவற்றிலும் பிஃப்டி பிஃப்டி... என்ன ஓகேவா...?"

"அழகு... அப்படின்னா நாம ரெண்டு பேரும் சேர்ந்து செய்வோமா...?"

"ஐய்... ஆசையைப் பாரு... அப்படியே எல்லா வேலைகளையும் என் தலையில் கட்ட ப்ளான் போடுறியா..."

'அட எமகாதகப் பய... நான் மனசில் நினைச்சதை அப்படியே புட்டு புட்டு வைக்குதே...' மனதுக்குள் புலம்பியபடி அவள்

அவனைப் பாவமாகப் பார்த்து வைத்தாள்...

"அப்போ அதைத் தான் நினைச்சியா குள்ளச்சி...?" அவன் கேட்டதும் அசட்டு புன்னகையை உதிர்த்தாள் அவள்...

"முதல்ல அத்தை கிட்ட சமையல் பழகிக்கோ... எப்பவும் நான் செய்வேன்னு நினைப்பு இருக்கக் கூடாது..."

"ஐய்யே... எங்கம்மா கிட்ட கத்துக்கிறதுக்கு நான் அத்தை கிட்ட கத்துக்கிறேன்... எங்கம்மா சமைச்சு என்னாலேயே வாயில் வைக்க முடியாது... நீ எப்படிச் சாப்பிடுவ...?"

"இருடி குள்ளச்சி... இதை அப்படியே அத்தை கிட்ட போட்டுக் கொடுக்கிறது தான் என்னுடைய முதல் வேலை..." என்று அவன் நம்பியார் போல் கைகளைப் பிசைய...

"அடேய் கருவாயா... பிரியாணிக்கு வேட்டு வச்சிடாதேடா..." என்று அவள் கெஞ்ச...

"அப்போ... என்னுடைய ரிங் டோனை எங்கப்பா கிட்ட சொல்ல கூடாது..." என்று அவன் 'டீல்' பேசினான்...

"சரி கருவாயா சொல்ல மாட்டேன்..." என்று சோற்றுக்குப் பஞ்சம் வந்து விடக் கூடாதே என்று அவனுடைய ஒப்பந்தத்திற்குத் தலையை ஆட்டியவள்,

"கிச்சனை பிறகு பார்க்கலாம் அழகு... வேற ரூம்மை காட்டு..." என்று அவனைச் சமாதானப்படுத்தி அழைத்துக் கொண்டு சென்றவள் அடுத்து திறந்த அறைக் கதவு அவர்களது படுக்கையறை...

அதைக் கண்டதும் அவள் முகம் வெளிறி வெளியேற போக... அவளைத் தடுத்து நிறுத்தியவன்,

"மேடம் எங்கே போறீங்க... நம்ம வாழ்க்கையில் முக்கியமான ரூம் இதுங்க மேடம்..." என்றபடி அவளது இடையில் கை கொடுத்து அவளை அலேக்காக உள்ளே தூக்கி வந்தான்...

"விடுடா... நானே வர்றேன்..." என்றபடி அவள் துள்ளினாள்...

"சரி போனால் போகுதுன்னு உன்னை விடறேன்..." என்று அவளை இறக்கி விட்டவன் தான் மட்டும் கட்டிலில் அமர்ந்து கொண்டு காலை ஆட்டியபடி அவளைப் பார்த்தான்...

அவளோ வெகு ஜாக்கிரதையாகப் பால்கனி கதவை திறந்து வைத்துக் கொண்டு அதன் அருகே நின்றபடி வெளியில் வேடிக்கை பார்த்தாள்...

"எவ்வளவு நேரமா நிற்கிறதா உத்தேசம்...?"

அவனது கேள்விக்குப் பதில் அளிக்காது, "வாடகை எவ்வளவு அழகு...?"

அவளது கேள்வியில் அவள் அருகே வந்தவன், "இது நம்மளோட சொந்த வீடு மங்கை..."

"அழகு..." அவள் அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தாள்...

"நீ சொல்வது போல் எனக்கு உலகத்தில் உள்ள எதையும் அனுபவிக்கத் தெரியாது தான்... அப்பாவோட கஷ்டத்தைப் பக்கத்தில் இருந்து பார்த்து வளர்ந்ததாலோ என்னமோ அநாவசியமா செலவளிக்க மனசு வராது... எல்லாமே தேவைக்கு மட்டும் தான்... அப்படித் தான் சிக்கனமா வாழ்ந்து எனது சம்பளம் முழுவதையும் சேமித்தேன்... சில சமயம் ஓவர் டைம் வொர்க் கூடப் பார்ப்பேன்... குடும்பத்தை முன்னேற்றணும்ங்கிற வெறி எனக்கு உண்டு... ஆனா அப்பா இதுவரைக்கும் ஐஞ்சு காசு என் கிட்ட வாங்கினது கிடையாது... அதனால் அம்மா கிட்ட தான் கொஞ்சம் கொடுத்துட்டு வருவேன்... அப்படிச் சிக்னமா இருந்து வாங்கியது தான் இந்த வீடு..."

அவள் அவனைப் பிரமிப்பாய் பார்த்ததில் அவனது முகத்தில் புன்னகை தோன்றியது...

"ஹலோ மேடம்... அம்பானி ரேன்ஞ்சுக்கு உன் மாமனை கற்பனை பண்ணாதே... லோன் போட்டு தான் இந்த வீடு வாங்கி இருக்கேன்... இன்னமும் லோன் கட்டிக்கிட்டு இருக்கேன்... இப்போ தான் இந்த வீடு வேலை முடிஞ்சு சாவி என் கிட்ட வந்தது... சரி யாரையோ குடி

வைக்கிறதுக்கு நாமளே வந்து விடலாம்ன்னு முடிவு பண்ணிட்டேன்..."

"நீயும், நானும் சேர்ந்து இந்த லோனை அடைக்கலாம்... நீ கவலைப்படாதே அழகு..." என்று நெகிழ்ச்சியுடன் கூறிய மனைவியை இமைக்காது பார்த்தவன்,

"இந்தப் பொறுப்பான மங்கை உனக்குச் செட்டாகலையே... இந்நேரம் பசியில் என் காதை பிடிச்சி திருகுகிற மங்கையை அல்லவா நான் எதிர்பார்த்தேன்..."

"ஹி... ஹி... பசிக்கவும் செய்யுதுடா..." என்று பரிதாபமாய்க் கூறியவளை கண்டு,

"எனக்குத் தெரியும் என் பொண்டாட்டி சும்மா இருந்தாலும் அவள் வாய் கொஞ்ச நேரம் சும்மா இருக்காதுன்னு... இப்போ சாப்பாடு வந்திரும்..." என்று அவன் சொல்லும் போதே வீட்டின் அழைப்பு மணி ஒலித்தது...

"ஐய்... சாப்பாடா...?" என்று குதூகலமாய்த் துள்ளி குதித்தவளை வாத்சல்யத்துடன் பார்த்தவன்,

"அதுவும் தான்..." என்றபடி முன்னே நடக்க...

"அதுவும் தான்னா... வேறு என்னடா சேர்ந்து வந்திருக்கு..." என்று கேட்டபடி வந்தவள் அழகு கதவு திறந்ததும் உள்ளே வந்தவர்களைக் கண்டு அப்படியே திகைத்து போய் நின்று விட்டாள்...

"நாச்சி... எப்படிம்மா இருக்க...?" என்றபடி அவளை வாஞ்சையுடன் அணைத்துக் கொண்டார் வைதேகி...

"மதினி... முதல்ல என் மருமகனை கவனி... எப்படித் துரும்பா இளைச்சு போயிட்டான்..." என்றபடி அவரை இடித்துக் கொண்டு அழகை நோக்கி சென்ற சித்ரவேணி,

"அழகு... சுகமா இருக்கியாப்பா...? நாச்சி உன்னைய ரொம்பப் படுத்துறாளோ...?" என்று கேட்க...

அதில் சுரணை பெற்ற வலமங்கை, "அத்தை பாருங்கத்தை இந்த அம்மாவை..." என்று செல்லமாய்ச் சிணுங்கினாள்...

"அவள் கிடக்கிறாள் விடு... நீ எப்படிக் கண்ணு இருக்க...?" என்று வைதேகி அவளிடம் பாச மழை பொழிய, சித்ரவேணி மருமகனிடத்தில் பாச மழை பொழிய... இருவரையும் மன நிறைவுடன் பார்த்து கொண்டிருந்தனர் மற்ற நால்வரும்...

"ஏன்டியம்மா வீட்டுக்கு வந்தவங்களை வாங்கன்னு சொல்ல மாட்டியா...?" என்று கேட்டபடி அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தார் வேதநாயகி...

"அதான் வந்து உட்கார்ந்திட்டியே... அப்புறம் என்ன..?" என்று வலமங்கை நொடித்துக் கொண்டாள்...

"மங்கை... நம்ம வீட்டுக்கு வந்தவங்களை இப்படித்தான் வரவேற்பாயா...?"

அழகு கேட்டதும் அவளது முகம் சுருங்கி போனது... போனால் போகிறது என்பது போல்,

"வா ஆச்சி..." என்று வாயெல்லாம் பல்லாக வரவேற்றவள் மற்றவர்களையும் பொறுப்பாக வரவேற்றாள்...

புதுமனை புகுவிழாவிற்கு அவர்களது நிறுவனத்தில் உடன் வேலை செய்பவர்கள் அடுத்தடுத்து வர வலமங்கையால் ஆச்சிரியம் தாங்க முடியவில்லை... அழகிடம் கேட்க வேண்டும் என்றால் அவன் ஒரு இடத்தில் நிற்காது ஏதாவது ஒரு வேலை செய்து கொண்டிருந்தான்...

இருவரும் சேர்ந்து பூஜை செய்து பால் காய்ச்சிய போது இருவருக்குமே மனம் நிறைந்து இருந்தது... சொந்த வீடு வந்த நிம்மதி அவர்கள் இருவரது முகத்திலும் பிரதிபலித்தது... அதற்குக் காரணம் கணவன் அல்லவா... அவள் பெருமையுடன் அவனைப் பார்த்தாள்... இந்தளவுக்குப் பக்குவமான ஒரு குணத்தை அவனிடம் இருந்து அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை...

கணவனாக மனதில் பதிந்து காதலனாக மாறி போனவன் மீது இன்னமும் காதல் அதிகரித்தது...

"உங்களுக்கும், அழகுவுக்கும் பெட்டாமே... யார் முதலில் கல்யாணத்தை அறிவிப்பது என்பதில்... அதனால் தான் கணவருக்காக நீங்க தயங்கினீங்களா...? புருசனுக்காக விட்டு கொடுக்கிற மனைவியை இங்கே தான் பார்க்கிறோம்... நீங்க ரொம்பக் கொடுத்து வச்சவர் அழகு..."

உடன் வேலை செய்பவர்கள் இருவரையும் பாராட்டி விட்டு செல்ல அவள் 'ஙே' என்று விழித்தபடி நிற்க, அழகுவோ நமட்டு சிரிப்புடன் நின்றிருந்தான்...

அது போல் தான் வீட்டு பெரியவர்களும் கூறினர்...

"நாங்க வந்து உன்னைக் கூட்டிட்டு வர்றோம்ன்னு சொன்னோம்... ஆனா அழகு தான் மறுத்துட்டான்... என் பொண்டாட்டியை நான் தான் கூட்டிட்டு வருவேன்னு... அதை விடக் கொடுமை என்னன்னா... நீ வீட்டிற்குள் நுழையாம எங்களையும் உள்ளே நுழைய கூடாதுன்னு சொல்லிட்டான்..."

வைதேகி கூறியதும் அவளது விழிகள் கணவனை நோக்கி சென்றது... அவனோ புன்சிரிப்புடன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்... அவனது புன்னகையில் அவளது இதயம் நழுவி அவனிடத்தில் சுகமாய்த் தொலைந்தது... அவனையே வைத்த கண் வாங்காது பார்த்து கொண்டிருந்தாள்...

ஒரு வழியாய் எல்லோரும் சென்ற பின்னர்ப் பெரியவர்கள் ஓய்வு எடுக்கச் செல்ல சிறியவர்கள் மட்டுமே தனித்து நின்றனர்...

"அழகு... இங்கே வாயேன்..." என்று வலமங்கை அவனது கையைப் பிடித்துக் கொண்டு அவனை இழுத்து சென்றாள்...

"எங்கேடி...?" என்று கேட்டாலும் அவள் இழுத்த இழுப்பிற்கு அவன் உடன் சென்றான்...

சமையலறையை அடுத்த இருந்த துணிகள் காயப் போடும் சிறிய வராந்தாவிற்கு அவனை அழைத்துச் சென்றவள் யார் கண்ணிலும் படாதவாறு நின்று கொண்டு,

"நமக்குக் கல்யாணமான விசயம் ரேஷ்மிக்காவுக்குத் தெரியுமா அழகு...?" என்று படபடப்புடன் வலமங்கை கணவனிடம் கேட்டாள்...

அவளின் படபடப்பை வித்தியாசமாய்ப் பார்த்து கொண்டிருந்தவனுக்கு அப்போது தான் மின்னல் வெட்டியது...

அது அவளது விழிகளில் தென்பட்ட அதிகப்படியான தவிப்பு... இத்தனை நாளாய் அந்தத் தவிப்புக்கான காரணம் என்ன என்று தெரியாது தவித்துக் கொண்டிருந்தவனுக்கு இன்று தான் அதன் முழுமையான காரணம் தெரிந்தது...

தெரிந்த காரணத்தைப் புரிந்து கொண்டவன் மனதில் எழுந்த உவகையுடன் இரு கைகளையும் கட்டியபடி அவளைப் பார்த்து மந்தகாச புன்னகை புரிந்தபடி நின்றிருந்தான்...!!!

தித்திக்கும்...!!!

"டேய் கருவாயா... உன்னைத் தான்டா கேட்டுட்டு இருக்கேன்... நீ என்னடான்னா என் மூஞ்சியைப் பார்த்து ஈன்னு இளிச்சிக்கிட்டு இருக்க..."

தனக்குப் பதில் சொல்லாது தன்னையே பார்த்துக் கொண்டிருந்த கணவனைக் கண்டு வலமங்கைக்குக் கோபம் வந்தது... பின்னே அவள் எத்தனை அதிமுக்கியமான விசயத்தைப் பற்றிக் கேட்டு கொண்டிருக்கிறாள்... அவன் இப்படி ஈயென்று இளித்துக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்...?

அவள் கூறியதை கேட்டதும் அழகு 'ஹா, ஹா' என வாய் விட்டு சிரிக்க ஆரம்பித்தான்...

'அச்சோ... முதல்லயாவது சும்மா தான் சிரிச்சான்... இப்ப என்னடான்னா இப்படிப் பில்டிங் அதிருகிற மாதிரி சிரிச்சு வைக்கிறானே... சும்மா இருந்த சிங்கத்தைத் தேவையில்லாமல் சொறிஞ்சு விட்டுட்டேனோ...? அய்யே... இவன் எல்லாம் சிங்கம்ன்னு சொன்னா சிங்கம் தற்கொலை பண்ணிக்கும்...'

வலமங்கை மனதில் கணவனுக்குக் கவுண்ட்டர் கொடுத்தபடி அவனை முறைத்து கொண்டிருந்தாள்...

"ஹா... ஹா... முடியலைடி குள்ளச்சி... உன்னை வச்சிக்கிட்டு..." என்று மீண்டும் அவன் சிரிக்கத் துவங்க...

"இங்க என்னடா காமெடியா நடக்குது...? நீ இப்படிச் சிரிக்கிறதுக்கு..." குரலை தாழ்த்தி கொண்டு அவனைப் பார்த்து பல்லை கடித்தாள் அவனது செல்ல மனையாட்டி...

"உனக்குச் செல்ஃப் டேமேஜ் தெரியுமா...? செல்ஃப் டேமேஜ்..." என்றவனைச் சந்தேகமாகப் பார்த்தபடி வெகு ஜாக்கிரதையாக,

"தெரியும்... அதுக்கு என்ன இப்போ...?"

"உன்னை நீயே இப்படி டேமேஜ் பண்ணிக்கிட்டியே குள்ளச்சி..." என்று ராகம் இழுத்தவனைப் புரியாமல் பார்த்தாள் அவள்...

"உண்மையை இப்படிப் பட்டுன்னு போட்டு உடைக்கக் கூடாதடி என் பட்டு குட்டி..." இது தான் சாக்கு என்று அவளது இரு கன்னத்தையும் பிடித்துக் கொண்டு அவன் அவளைக் கொஞ்சினான்...

"உன் கன்னம் பட்டு போல் வழுவழுன்னு இருக்குடி..." என்றவனது கை விரல்கள் அவளது கன்னத்தினை மென்மையாய் வருட ஆரம்பித்தது... அதில் மனம் மயங்கினாலும்,

"கேட்டதுக்குப் பதில் சொல்லுடா..." என்றபடி அவனது கையைப் பட்டென்று தட்டி விட்டாள் அவள்...

அவளை ஒரு நொடி குறுகுறுவென்று பார்த்தவன் பின்பு, "உன்னை நீயே இப்படிக் காமெடி பீசுன்னு சொல்லிட்டியே குள்ளச்சி..." என்று கூறிவிட்டு வாய் விட்டுச் சிரிக்கத் துவங்க...

"என் மூஞ்சிய பார்த்தா உனக்குக் காமெடி பீஸ் மாதிரி இருக்கா...?" அவன் கூறியதன் அர்த்தம் புரிந்ததும் அவள் அவனை மொத்த துவங்கினாள்...

"ஆன்ட்டி... என் பொண்டாட்டி என்னை அடிக்கிறாள்... என்னைக் காப்பாத்துங்க..." என்று பக்கவாட்டில் திரும்பி பார்த்து அழகு கத்தினான்...

"இப்படி எல்லாம் கத்தினா நான் பயந்திருவேனா...? இல்லாத ஆன்ட்டியை எங்கே இருந்துடா கூப்பிடுற...?" என்று கூறியபடி சாவகாசமாய்த் திரும்பியவள் அங்கு உண்மையில் ஒரு பெண்மணி நிற்பதை கண்டு வெட்கப்பட்டவளாய் நாக்கை கடித்துக் கொண்டு அழகின் பின்னே சென்று மறைந்து கொண்டாள்...

"புதுசா கல்யாணமான ஜோடியா...?" என்று அந்தப் பெண்மணி அழகிடம் கேட்க...

"ஆமாம் ஆன்ட்டி... இன்னும் என் பொண்டாட்டி புதுசா தான் இருக்கிறாள்..." என்று அவன் சேர்த்து சொல்ல...

"அழகு... என்ன பேச்சு பேசுற...? உள்ளே வாடா உன்னைக் கொல்றேன்..." என்று அவனது முதுகுக்குப் பின்னால் இருந்து அவள் கோபமாய் முணுமுணுத்தாள்...

"ரொம்பத் தமாஷா பேசுறீங்க தம்பி... இது போல் எப்போதும் சந்தோசமா இருங்க..." என்று வாழ்த்தி விட்டு அவர் வீட்டினுள் சென்று விட்டார்...

அவர் சென்றதும் அவனின் பின்னால் இருந்து வெளிவந்தவள், "அடுத்தவங்க கிட்ட இப்படியாடா பேசுவ...?"

"இப்படிப் பேசலைன்னா தான் தப்பு செல்லம்..." என்று அவள் கன்னம் தட்டி அவன் சொல்ல...

"தொடாம பேசுடா பக்கி..." என்று அவள் கண்டிப்புடன் கூற...

"அப்போ நீயும் என்னைத் தொட கூடாது..." என்று அவன் அவளிடம் ஒப்பந்தம் போட்டான்...

"அது எப்படி...? அதெல்லாம் முடியாது..."

அவனை அடிக்காமல் அவளால் இருக்க முடியாதே... அதனால் அப்படிக் கூறினாள்...

"அப்போ என்னாலையும் முடியாது..."

"டேய்... நான் உன்னை மாதிரி தொட்டு தொட்டு பேசலை..."

"அது தான் எனக்கும் தெரியுமே... நீ அப்படித் தொட்டு தொட்டுப் பேசினால் தான் பரவாயில்லையே... ஆனா நீ என்னை அடிக்கிறதுக்கு மட்டுமே தொடுற..." என்று போலி வருத்தத்துடன் கூறியவனை முறைக்க முயன்று தோற்று,

"ப்ளீஸ் அழகு... நான் கேட்டதுக்குப் பதில் சொல்லுடா..." என்று அவள் கெஞ்ச ஆரம்பித்தாள்...

அவன் பதில் சொல்லாது உள்ளே சென்றான்... அவளும் அவன் பின்னேயே சென்றாள்... அவன் சமையலறைக்குச்

சென்று அங்கிருந்த பாத்திரத்தை உருட்டினான்... பின் தனக்குத் தேவையானதை ஒரு கிண்ணத்தில் எடுத்துக் கொண்டு உணவு மேசையை நோக்கி நடந்தான்...

'எப்பவும் நான் தான் சாப்பிட்டுட்டு இருப்பேன்... இன்னைக்குப் பார்த்து இவன் நம்மை வெறுப்பேத்துறானே...' அவள் மனதுக்குள் முனங்கியபடி அவனைப் பின்தொடர்ந்தாள்...

"எல்லோரையும் கவனிச்சதில் நான் என் வயித்தை கவனிக்காம விட்டுட்டேன்..." என்றவன் கிண்ணத்தில் இருந்த பாயாசத்தைக் கரண்டியில் எடுத்து தன் வாயருகே கொண்டு சென்றவன் அவளிடம்,

"உனக்கு வேண்டுமா...?" என்று கேட்க...

பாயாசத்தில் இருந்த வறுத்த முந்திரிபருப்பு அவளை 'வா, வா' என்றது... ஆனாலும் அவனின் பதில் தெரியும் முன் அதை உண்ண கூடாது என்று பிடிவாதமாய் இருந்தவள் தனது தலையைக் குலுக்கி தன்னைச் சமன்படுத்திக் கொண்டாள்...

"எனக்கு வேண்டாம்... முதல்ல நீ பதில் சொல்லு..."

"சந்தைக்குப் போகணும்... ஆத்தா வையும், காசு கொடு..." என்று ஏற்ற இறக்கத்துடன் அந்த வசனத்தைச் சொல்லி சத்தமாய்ச் சிரித்தவன் கையிலிருந்த பாயாசத்தை அவளது வாயில் திணித்தான்...

வாய்க்குள் நுழைந்த பாயாசத்தைத் துப்பி விட அவள் என்ன மான, ரோசமுள்ள வலமங்கையா...? சோற்றைக் கண்டால் ரோசமாவது ஒன்றாவது... அதனால் அவள் அதை ரசித்துச் சுவைத்து உண்டாள்...

"எனக்குப் போதும்... மீதியை நீயே குடி..." என்றவள், "இப்பவாவது சொல்லுடா..." பாதிக் கிண்ண பாயாசத்தைக் காலி செய்து விட்டு அவள் மீண்டும் தனது பல்லவியை ஆரம்பித்தாள்...

"என்ன சொல்ல சொல்ற...? ரேஷ்மாவும் நம்ம கம்பெனியில் வொர்க் பண்ணுகிறவள்... எல்லோருக்கும் சொன்னது போல் அவளிடமும் சொல்லி விட்டேன்..." என்றான் அவன் சர்வ சாதாரணமாய்...

"அழகு..."

அவள் திகைப்புடன் அவனைப் பார்த்தாள்... அவளது விழிகளில் கண்ணீர் துளிகள் கோர்த்தது... அதை அவன் கண்டும் காணாதது போல் இருந்தான்...

"ரேஷ்மிக்கா பாவம் இல்லையாடா..." அதில் அவளை ஏறிட்டு பார்த்தவன்,

"பாவம் தான்... யார் இல்லைன்னு சொன்னது...? நமக்குன்னு நிறைய ஆசைகள் இருக்கலாம்... ஆனால் அது நம் குடும்பத்தைப் பாதிக்காத அளவுக்கு இருக்கணும்... அப்படிப் பாதிக்கும் போது நம் முடிவை நாம் மாத்திக்கிறதில் எந்தத் தவறும் இல்லை மங்கை..."

"நீ ஒரு ஏமாத்துக்காரன் அழகு..."

கண்களில் நீர் கோர்க்க, உதடுகள் துடிக்க அவள் கோபமாய்க் கூறிய போதும் அவன் நிதானமாய் அவளைப் பார்த்தான்...

"உன்னைப் பொருத்தவரைக்கும் அப்படி என்றால்... அப்படியே வச்சிக்கோ..." என்றான் அசால்ட்டாய்...

"நீ என்னை ஏமாத்தியதா நான் சொன்னேன்னா..."

அதில் அவனது விழிகளில் மின்னல் வந்தது...

"நீ ரேஷ்மிக்காவுக்கு ஆசை காட்டி மோசம் பண்ணிட்ட அழகு..." என்றவளுக்கு அழுகை அழுகையாக வந்தது...

அவளது இந்த அழுகை நிச்சயம் ரேஷ்மாவிற்காக இல்லை என்பது மட்டும் அவளுக்கு நன்றாகத் தெரியும்... தாலி கட்டிய கணவனிடம் அவனது காதலிக்காகத் தான் போராட

வேண்டி இருக்கும் தன் அவலநிலையை எண்ணி தான் அவள் கண்ணீர் உகுத்தாள்...

"நீ நினைக்கிற மாதிரி நான் ரேஷ்மா கிட்ட எந்த நம்பிக்கையும் கொடுக்கலை... காதலிக்கிறேன்னும் சொன்னது இல்லை..."

"ஆனா உன் மனசில் காதல் இருந்துச்சு தானே..."

"அது காதலான்னு எல்லாம் எனக்குத் தெரியாது... ஆனா அவள் மீது ஒரு சின்ன ஈர்ப்பு இருந்துச்சு..." என்று அவன் உண்மையை ஒத்துக் கொண்டான்...

கணவன் கூறியதை கேட்டு அவளது மனம் பெரிதாய்க் காயப்பட்டது... அவளது கண்களில் கண்ணீர் அருவி போல் வழிய ஆரம்பித்ததில் அவன் அவளை அணைத்துக் கொண்டான்...

"இப்படி லூசு மாதிரி அழ கூடாது மங்கை... என்னோட மனைவி நீ மட்டும் தான்... என்னோட வாழ்வோ, சாவோ, ஏற்றமோ, இறக்கமோ எல்லாமே இனி உன்னோடு தான்..."

"உனக்கு ரேஷ்மிக்காவை தானே பிடிக்கும்... என்னைப் பிடிக்காது தானே..."

"அப்படின்னு உனக்கு யார் சொன்னா...?"

"வேறு யார் சொல்லணும்...? நீ தானே அப்படிச் சொல்லிக்கிட்டு திரியற..." என்றவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"அது எல்லாம் அப்போ... இப்போ இல்லை... என்ன புரிஞ்சதா...?" என்றவனைப் பார்த்தவள்,

"மாமாவுக்காக உன் மனசை மாத்திக்கிட்டியா அழகு... உனக்குன்னு தனிப்பட்ட ஆசை, விருப்பம் எல்லாம் கிடையாதா...?"

அவளது தவிப்பிற்கான காரணங்கள் ஒவ்வொன்றாய் தெரிந்ததில் அவன் இனிமையாய் அதிர்ந்தான்... அவளது

இந்தக் கோபம், கவலை எல்லாமே அவன் மீதான அக்கறையில் வந்தது தானா...? அவனுக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது...

"நம் கல்யாணத்தினால் எல்லோருக்கும் சந்தோசம்ன்னா அது தான் எனக்கும் சந்தோசம்..." என்றவனைக் கண்டு அவளது மனம் மிகவும் வருந்தியது...

"காதல் மாறலாம் மங்கை... ஆனால் கல்யாணம் மாறக் கூடாது... ஒருவனுக்கு ஒருத்தி... இந்த அழகுக்கு இந்த மங்கை மட்டுமே..." என்றபடி அவன் வலிக்காது அவளது தலையில் தட்டினான்...

"ஆனாலும் ரேஷ்மிக்கா பாவம் இல்லையா...?"

"போச்சுடா... திரும்பவும் முதல்ல இருந்தா..." என்றவன் மயங்கி விழுவது போல் பாவனைச் செய்ய...

"விளையாடாம பேசுடா..."

"ரேஷ்மா கிட்ட தெளிவா பேசிட்டேன்... நீ எப்போ அஜய்யை லவ் பண்ண போறேன்னு என் கிட்ட ஐடியா கேட்டு வந்தியோ அப்பவே அவள் கிட்ட தெளிவா சொல்லிட்டேன்... 'என் குடும்பத்துக்கும் காதலுக்கும் செட்டாகாதுன்னு... நீ தேவையில்லாம ஆசையை வளர்த்துக்காதேன்னு...' இதை எல்லாம் விட ஒரு முக்கியமான விசயம்... நான் இதுவரைக்கும் அவள் கிட்ட 'ஐ லவ் யூ'ன்னு சொன்னது இல்லை..."

தனது கணவன் ரேஷ்மாவிற்கு நம்பிக்கை கொடுத்து ஏமாற்றவில்லை என்பதைக் கேட்டதும் அவளுக்கு நிம்மதியாக இருந்தது...

"நீ என்னைப் பார்த்து கெட்டுப் போய்விடக் கூடாதேன்னு தான் நான் நினைச்சேன்... வீட்டுக்கு மூத்தவனா உனக்கு ஒரு வழிகாட்டியா இருக்கணும்ன்னு தான் நான் நினைச்சேன்..."

"அச்சோ... அழகு அது சும்மா கேட்டதுடா... நான் அஜய்யை அப்படி எல்லாம் நினைச்சது இல்லை..." என்றவள் பயத்தில் கைகளைப் பிசைந்து கொண்டு அவனைப் பாவமாகப் பார்த்து வைத்தாள்...

"ஹா... ஹா... குள்ளச்சி ஜோக் அடிக்காதேடி... உனக்குக் கொட்டிக்கிறதுக்கு மட்டும் தான் தெரியும்... உனக்குக் காதல் எல்லாம் செட்டாகாதுடி... உனக்கு எல்லாம் இப்படிக் கல்யாணம்ங்கிற பேரில் ஒரு அப்பாவி வலிய வந்து மாட்டினால் தான் உண்டு..."

"டேய்..."

பழைய வலமங்கையாய் மாறி சீறியவளை கண்டு அவன் சத்தமாய்ச் சிரித்தான்...

"இது தான் என் வலமங்கைக்கு அழகு... அதை விட்டு ஊ ஊன்னு அழுதுக்கிட்டு..." என்று அவன் கிண்டலடிக்க...

"போடா... இதுக்கு எல்லாம் நீ தான் காரணம்..." என்றவளை வாஞ்சையுடன் பார்த்தவன்,

"நீ எதையும் யோசிக்காது, கவலைப்படாம இருக்கணும்... என்ன சரியா...?"

சரியென்று தலையாட்டியவளை கண்டு அவன், "எனக்காக நீ ஒண்ணே ஒண்ணு மட்டும் செய்யணும்..."

"என்னது... கொட்டிக்கிறதா... அதை எல்லாம் நீ சொல்லவே வேணாம் அழகு..."

"அது எல்லாம் நான் சொல்லவே தேவையில்லை... நான் சொல்ல வந்தது வேறு... நீ இந்த மாமனை எப்போதும் நினைச்சிக்கிட்டு இருக்கணும்..."

வாயாடி வலமங்கைக்குக் கணவன் கூறியதை கேட்டு வெட்கம் வெட்கமாக வந்து தொலைத்தது...

"போடா..." என்றபடி முகம் சிவந்தவளாய் அவள் அங்கிருந்து ஓட...

அவளது வெட்கம் அழகுவை சிறகில்லாமல் வானத்தில் பறக்க வைத்தது... இனி எல்லாம் சரியாகும் என்ற நம்பிக்கை அவனுள் எழுந்தது...

அன்று மாலை குடும்பத்தினர் அனைவரும் சென்னையைச் சுற்றி பார்க்கலாம் என்று கிளம்பினர்... அவர்கள் இருப்பதோ நாளை ஒரு நாள் மட்டுமே... அதனால் அவர்கள் ஊரை சுற்றி பார்க்க முடிவு செய்தனர்...

"மங்கை... எந்த ஷாப்பிங் மாலுக்குப் போகணும்...?" என்று மனைவியைக் கேட்டான் அழகு...

"ஊரை சுத்தி காண்பிக்கச் சொன்னால் ஷாப்பிங் மால்க்கு ஏன் போகணும்...?"

வைதேகி மகனை ஒரு மாதிரியாகப் பார்த்தார்...

"அதை உங்க மருமகள் கிட்ட கேளுங்க... மால்லை சுத்தி பார்த்தால் போதுமாம்... சென்னையைச் சுத்தி பார்த்தது போல் இருக்குமாம்..."

அழகு மனைவியை மாட்டி விட்டான்...

'எருமை... எப்படி டிசைன்னா டிசைன்னா நம்மளை கோர்த்து விடுது...' மனதிற்குள் முனங்கியபடி வெளியில் ஈயெனச் சிரித்து வைத்தாள் வலமங்கை...

ஒருவழியாக அஷ்டலட்சுமி கோவிலுக்கு முதலில் செல்வது என்று ஏகமனதாய் முடிவு செய்யப்பட்டது... அன்று போல் எல்லோரும் காரில் ஏறிய பிறகே கடைசியாக வலமங்கை ஏறினாள்... அன்று போல் கத்துவதற்கு வாயை திறக்க போனவள் கணவனின் கைகள் தனது இடையை நோக்கி வருவதைக் கண்டு சட்டென்று கிடைத்த இடத்தில் சமத்தாய் அமர்ந்து கொண்டாள்...

'வடை போச்சே...' என்பது போல் ஒரு பாவனைக் காண்பித்த அழகு மனைவி அணிந்திருந்த சுடிதாரை முறைத்துப் பார்த்தான்... அவளது இடையைத் தழுவும் பாக்கியத்தை இந்தச் சுடிதார் அல்லவா தடை செய்கிறது...

"இனிமே சுடிதார் போடாதேடி குள்ளச்சி..."

அவளது காதில் அவன் ரகசியமாய் முணுமுணுக்க, "ஏன்...? எனக்கு இது தான் வசதியா இருக்கு..." என்று அவள் கத்தி பேச... அவன் தலையில் கையை வைத்தான்...

"ஏய்... அடங்குடி..." என்று அவளை அவன் அதட்ட...

"அத்தை... இந்த அழகு என்னைத் திட்டுகிறான்..." என்று மாமியாரிடம் அவள் ஒப்பாரி வைத்தாள்...

"டேய்... பேசாம இருக்க மாட்ட..." என்று மகனை அதட்டிய வைதேகி மருமகளைக் கொஞ்ச...

"இல்லைன்னாலும் உன் மருமகளை நீ தான் மெச்சிக்கணும்..." என்று சித்ரவேணி தனது மகளைப் பார்த்து நொடித்துக் கொண்டார்...

"அழகு, நீ அவளை நல்லா திட்டு... அப்படியாவது அவளது கொழுப்பு குறையுதான்னு பார்ப்போம்..." என்று சித்ரவேணி மருமகனுக்கு ஆதரவாய் பேசினார்...

"ஐய்... திட்டினா கொழுப்பு குறையுமா... அப்போ நல்லா திட்டு அழகு..." என்று குதூகலமாய்க் கூறிய வலமங்கையை அவன் சந்தேகமாய்ப் பார்த்தான்...

"இங்கே பாரு... கொஞ்சம் சதை போட்டிருச்சு..." என்று இடுப்பில் இருந்த சதையைப் பிதுக்கி காட்டினாள் அவள்...

"அப்படி ஒண்ணும் சதை தெரியலையே..."

அவளது காதில் ரகசியமாய் முணுமுணுத்தவனின் கை இது தான் சாக்கு என்று அவளது இடையை வருடி விட்டது... அதில் அவள் திகைத்து போய் அவனைப் பார்க்க, அவனோ கண்சிமிட்டி மாயக் கண்ணனாய் புன்னகைத்தான்...

அதற்கு மேல் வாய் திறப்பாளா வலமங்கை...? அமைதியின் மறு உருவமாய் மாறி போனாள்... அவனது கையை விலக்கி விட வேண்டும் என்று அவளுக்கும்

தோன்றவில்லை... விலக வேண்டும் என்று அவனுக்கும் தோன்றவில்லை...

அவளது அமைதி அவனுக்குத் தைரியத்தைக் கொடுக்க நன்றாக அவள் புறம் சாய்ந்து அமர்ந்து கொண்டான் அந்தக் கள்வன்...

***************************************

மாலை முழுவதும் சேர்ந்து ஊரை சுற்றிய போது இருவருள்ளும் இனிமையாக இதம் பரவியது... லேசான மனதுடன் இருவரும் வீடு திரும்பினர்...

பால்கனியில் தனித்து நின்று கொண்டிருந்த தந்தை அருகே வந்து நின்றான் அழகு...

"அப்பா... நாளைக்கு நைட் பஸ்க்கு டிக்கெட் புக் பண்ணி இருக்கேன்..." என்றபடி பயணச் சீட்டுக்களை அவரிடம் கொடுத்தான்... அதை வாங்கிக் கொண்டவர்,

"அழகு... உன்னை நினைச்சு ரொம்பப் பெருமையா இருக்கு..." என்று அவர் பெருமையுடன் கூற...

அதைக் கேட்டு அவனுக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது... வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி பட்டம் வாங்கியது போல் அவன் மகிழ்ந்து போனான்... ஆனால் வாய் விட்டு அவரிடத்தில் சொல்லாது நெகிழ்வுடன் அவரைப் பார்த்திருந்தான்...

"சரிப்பா... நான் தூங்க போகிறேன்..." என்றபடி அவர் சென்று விட்டார்...

தந்தையின் வார்த்தைகளில் நிறைந்த மனதுடன் அவன் இருண்ட வானை பார்த்துக் கொண்டிருந்த போது பொன்னுரங்கம் அங்கு வந்தார்...

"மருமகனே..."

"என்ன மாமா...?"

"நீ ரொம்பப் பெருந்தன்மையானவன்ப்பா... எம் பொண்ணு தப்பு செய்யாம காப்பாத்தி அவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டியே... உன் பெரிய மனசு யாருக்கும் வராது..."

கண்கள் கலங்க கூறியவரை கண்டு அவன் ஆதரவாய் அவரது கைகளைப் பிடித்துக் கொண்டான்...

"என்ன மாமா... ஏதேதோ பேசிக்கிட்டு..."

"அன்னைக்கு நீ மத்த பொண்ணுங்களைப் பார்த்து நம்ம நாச்சியும் கெட்டு போய் விடக் கூடாதுன்னு சொல்ல போய்த் தான் நான் அவளுக்கு அவசரமா கல்யாணத்தை முடிக்க நினைச்சேன்... கடைசியில் கெட்டதில் நல்லது மாதிரி நீயே எனக்கு மாப்பிள்ளையா வந்துட்ட... நான் ரொம்பக் கொடுத்து வச்சவன்... என் பொண்ணை நீ நல்லா பார்த்துப்பேன்னு எனக்குத் தெரியும்..."

"நிச்சயம் மங்கையை நான் நல்லா பார்த்துப்பேன் மாமா..." என்று அவன் உறுதி அளித்தான்...

பொன்னுரங்கமும் சென்றதும் அழகு தனது அறைக்கு வந்தான்... அங்குக் கட்டிலில் முழங்காலை கட்டி கொண்டு அமர்ந்திருந்த மனைவியைக் கண்டதும் அவனுள் உல்லாசம் பொங்கியது... கதவை சாத்திவிட்டு மெல்ல விசிலடித்தபடி அவள் அருகில் வந்தான்...

"மங்கை... இது நீ தானா...? என்னால் நம்பவே முடியலை... நீ இவ்வளவு அமைதியா இருந்து நான் பார்த்தது இல்லையே...?"

அவள் அருகில் அமர்ந்து அவளது முகத்தைத் தன் பக்கம் திருப்பினான்... அவளது முகத்தில் தெரிந்த கோபத்தில் அவனது புருவங்கள் யோசனையாய்ச் சுருங்கியது...

"என்னாச்சு மங்கை...?"

"எங்கப்பா கிட்ட என்னடா சொன்ன...?"

அவள் அமைதியாய்க் கேட்டாலும் அதில் ஒரு எரிமலை குமுறல் ஒளிந்திருந்ததை அவன் உணர்ந்தான்...

"மாமா கிட்ட எத்தனையோ விசயங்களைப் பேசுகிறேன்... நீ எதைக் கேட்கிற...?"

அவளது கோபத்தை அவன் உணர்ந்தாலும் அது ஏன் என்று அவனுக்குப் புரியவில்லை...

"அதான் என்னைப் பத்தி அப்படி என்ன நல்ல விதமா அவர் கிட்ட சொன்ன...?" அழுத்தி சொன்னவளை பார்த்தவனுக்கு அவளது கோபம் எதனால் என்பது புரிந்து போனது...

"மங்கை... மாமா என் கிட்ட பேசினதை நீ கேட்டுட்டியா...?" என்று அவன் திகைப்பாய் அவளைப் பார்த்தான்...

"என்னைப் பத்தி அப்படி என்னடா சொல்லி தொலைச்ச...?"

கோபமும், அழுகையும் போட்டி போட கேட்டவளை கண்டு வேறுவழியின்றி அவன் எல்லா உண்மைகளையும் சொல்லி விட்டான்... அதைக் கேட்டு அவள் அதிர்ந்து போனாள்...

"எவ்வளவு தைரியம் இருந்தா என்னைப் பத்தி தப்பா சொல்லியிருப்ப...? நீ தான்டா ஒருத்தியை காதலிச்சவன்.. நானில்லை... அப்படிப்பட்ட என்னைப் போய் என் அப்பா கிட்ட... ச்சே, நீ எல்லாம் என்ன மனுசன்... கொஞ்சமும் மனசாட்சி இல்லாதவன்... நான் அப்படிப்பட்ட ஆளாடா... சும்மா விளையாட்டுக்கு உன்னிடம் கேட்டதை அப்படியே என் அப்பா கிட்ட போட்டு கொடுப்பியா...?" என்று கோபத்தில் அவனைத் திட்டியவள்,

"கடைசியில் நம் வாழ்க்கை தான் பாழாகி விட்டது..." என்று கத்தியவளின் கண்களில் வழியும் கண்ணீர் நின்ற பாடில்லை...

"இங்கே பார்... என்ன நம் வாழ்க்கை பாழாகி விட்டது... எல்லோரையும் போல் கல்யாணம் பண்ணிக்கிட்டு நம்ம வாழ்க்கையைச் சந்தோசமாக வாழ போகிறோம்... இதில் உனக்கு என்ன இடைஞ்சல் வந்திருச்சு...?"

"என் பெயரை கெடுத்துட்டு நீ எனக்கு வாழ்க்கை கொடுக்கிறியா... நீ கொடுக்கும் வாழ்க்கை பிச்சை எனக்குத் தேவையில்லை..."

"அறைஞ்சிருவேன்னு அறைஞ்சு... அது என்னடி பிச்சை, அது இதுன்னுட்டு...? குடும்ப மானம் காற்றில் பறந்து விடக் கூடாதுன்னு நான் பயந்து தப்பா...? அதனால் தான் மாமா கிட்ட உன் கல்யாணத்தைப் பத்தி பேசினேன்... ஆனா கடைசியில் உனக்குப் பார்த்து இருக்கும் மாப்பிள்ளையா நான் இருப்பேன்னு கொஞ்சமும் நான் நினைச்சு பார்க்கலை... உன்னை மாதிரி தான் நானும்... ஆனா நான் மனசை தேத்திக்கிட்டு நம்ம கல்யாணத்தை ஏத்துக்கலையா...? உன் கூட வாழவும் தயாராகவில்லையா...? இதுக்கு மேல நான் என்ன பண்ணணும்ன்னு எனக்குச் சுத்தமா தெரியலை..."

திருமண வாழ்க்கை வெற்றி பெற இரு மனமொத்த காதல் வேண்டும்... இது ஏன் கணவனுக்குப் புரியவில்லை என்று அவள் ஏமாற்றத்துடன் அவனைப் பார்த்தாள்... அவனது காதலோ வேறிடத்தில்... மதியம் கணவன் படித்துப் படித்துச் சொன்ன பாடம் காற்றோடு காணாமல் போயிற்று...

"இப்படி ஒரு கட்டாயக் கல்யாணத்தை நான் கேட்டேனா... எல்லோரும் என்னை ஏன் சித்ரவதை பண்றீங்க...? எனக்குன்னு ஒரு மனசு இருப்பதை நீ ஏன் புரிஞ்சிக்கலை... நீ எனக்கு வேண்டாம்டா... என்னால் உன் கூட வாழ முடியாது..." என்று கீறல் விழுந்த ரிக்கார்ட் போல் அவள் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்ல...

அதில் அவனது ஆத்திரம் அதிகரித்தது...

"எனக்கு மட்டும் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு வேண்டுதலா...? உன் மாமனார் தான் கெஞ்சினார்... அதனால் தான் நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்... இல்லைன்னா நீ தான் கல்யாண பொண்ணுன்னு தெரிஞ்ச உடனே சந்நியாசம் வாங்கிட்டு போகலாம்ன்னு தான் இருந்தேன்... அந்த மனுசன் காலில்

விழாத குறையா கெஞ்சினாரு... அதனால் தான் போனால் போகுதுன்னு உன் கழுத்தில் தாலி கட்டினேன்..." என்றவன்,

"உனக்குப் பிடிக்குதோ இல்லை பிடிக்கலையோ... நான் தான் உன் கணவன்... அதில் எந்தவித மாற்றமும் இல்லை... இனிமே கொண்டு நீ இப்படி அபத்தமா பேசின நான் இப்படிப் பேசிக்கிட்டு இருக்க மாட்டேன்... உன் கணவன் நான் தான்னு செயலில் காட்டி விடுவேன்..."

தன் முழு உயரத்திற்கும் நிமிர்ந்து நின்று ஐய்யனார் போன்று ஆவேசமாய்ப் பேசியவனைக் கண்டு அவள் பயப்படாது தைரியமாய்ப் பார்த்தாள்...

திருமணத்திற்கு முன்பிருந்த எதிரி போல் இருவரும் சிலிர்த்துக் கொண்டு எதிர் எதிர் பக்கம் நின்றனர்...

தித்திக்கும்...!!!

"ஓஹோ... உன் காலில் விழுந்து கெஞ்சி என்னைக் கல்யாணம் பண்ண கேட்கும் அளவுக்கு அப்படி என்னடா நான் தாழ்ந்து போயிட்டேன்...? இதுக்குத் தான் நான் சொன்னேன் நீ கொடுக்கும் வாழ்க்கை பிச்சை எனக்குத் தேவையில்லை என்று..."

அழகு அத்தனை தூரம் பேசியும் வலமங்கை அவள் நின்ற இடத்திலேயே நின்றாள்...

பெரியவர்களுக்காகத் திருமணம் செய்தாகி விட்டது... எல்லோரையும் போல் கணவன், மனைவியாக வாழ்வதை விட்டு விட்டு இது என்ன எதிர்வாதம், பிடிவாதம் என்று அவனுக்குச் சலிப்பாக இருந்தது... அதே சமயம் மனைவி மீது கோபமும் வந்தது...

அவளோ கணவன் மீது பெரும் கோபத்தில் இருந்தாள்... தேவையில்லாமல் பிரச்சினையை இழுத்து விட்டு கொண்டிருக்கிறானே என்று... கணவன் செய்த தவறால் அவளுடைய வாழ்க்கை மட்டுமல்லாது அவனுடைய வாழ்க்கையும் சேர்ந்து அல்லவா பாழாகிறது...

அவன் என்ன தான் ரேஷ்மாவை காதலிக்கவில்லை... அவளிடத்தில் 'ஐ லவ் யூ' சொன்னது இல்லை என்று சொன்னாலும் அதை அவளால் உண்மையாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை... ஏதோ அவனது தந்தையின் நிர்பந்தத்திற்காக அவன் தன்னுடன் வாழுவதாக அவளாக நினைத்து கொண்டாள்...

அதான் அவனே சொல்லி விட்டானே... அவனது தந்தை காலில் விழுந்து கெஞ்சாத குறையாகக் கேட்டதால் தான் அவளது கழுத்தில் அவன் தாலி கட்டியதாக...

அந்நேரம் அந்தத் தேவையில்லாத காட்சி அவளது மனதில் எழுந்தது... அவள் துயரத்துடன் கண்களை மூடி கொண்டாள்... கணவன் மீது காதல் கொண்ட பெண்ணால்

அதை அவ்வளவு எளிதில் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை...

அந்த ஒன்று தானே அவனுக்காக அவளைத் துடிக்க வைக்கிறது... அவன் விரும்பிய ரேஷ்மாவுடன் சேர்த்து வைக்க நினைக்கிறது...

"உனக்கு எல்லாம் சொல்லி புரிய வைக்க முடியாதுடி... செயலில் காட்டினால் தான் நீ சரிப்பட்டு வருவ..." என்று கோபமாய்க் கூறியபடி அழகு அவள் அருகில் நெருங்கி வந்தான்...

'என்ன செய்யக் காத்திருக்கிறானோ' என்ற பயத்தில் அவள் சட்டென்று கட்டிலில் இருந்து எழுந்து நின்று கொண்டாள்...

"எங்கேடி போகிற...?" என்றவன் கட்டிலில் இருந்து ஒரே தாவாகத் தாவி அதன் மறுப்பக்கம் இறங்கி அவள் முன் வந்து நிற்க.... அவளோ பயந்து போனவளாய் மெல்ல பின்னால் நகர ஆரம்பித்தாள்...

தனது வாழ்க்கையைத் தொலைத்து அவளது வாழ்க்கையை நேராக்க நினைக்கும் கணவனை நினைத்து அவளுக்குக் கோபம் வரவில்லை... மாறாகக் காதல் தான் வந்தது...

எத்தனை ஆணுக்கு இது போன்றதொரு பரந்த மனப்பான்மை இருக்கும்... எத்தனை ஆண்கள் தனது காதலை அழித்து விட்டு விருப்பம் இல்லாது கட்டி கொண்ட மனைவியின் சந்தோசத்திற்காகத் தன்னுடைய வாழ்க்கையைப் பாழாக்கி கொள்வார்கள்...

அவன் மேலிருந்த ஒரே ஒரு கோபம் தனது தந்தையிடம் தன்னைப் பற்றிக் கூறிய விசயம் ஒன்றே... அதுவும் அவன் அவளுக்கு நல்ல கணவனாக, அவளது வீட்டினருக்கு நல்ல மருமகனாக நடந்து கொண்ட போது அந்தக் கோபமும் அவளுக்குச் சற்று குறைந்து போனது...

இதோ இப்போது அவள் அவனுடன் சண்டை போடுவது கூட அவனுக்காகத் தான்... அவனது வாழ்க்கைக்காகத் தான்... நிச்சயம் அவளுக்காக இல்லை...

இவ்வளவு விசயத்தையும் அவள் நினைத்து முடித்த போது அவள் சுவற்றில் இடித்துக் கொண்டு மேலே செல்ல முடியாது தேங்கி நின்றாள்...

"இப்போ எப்படித் தப்பிக்கிறன்னு நானும் பார்க்கிறேன்..."

அவளது இருபுறமும் கைகளை அணைவாகக் கொடுத்தபடி நெருங்கி வந்து நின்ற கணவனை வில்லனாக எண்ணாது காதலனாக எண்ணி அவளது மனம் காதலால் கசிந்துருகியது...

'அடேய்... என்னை டெம்ப்ட் பண்ணி, மெல்ட் பண்ணாதேடா... நீ பக்கத்தில் வந்தால் நான் மூச்சடைச்சு செத்து போயிருவேன்டா...' மனதிற்குள் அவஸ்தையாய் முனங்கியபடி கணவனைப் பரிதாபமாகப் பார்த்தாள் அவள்...

"நான் பேசுறது எதையும் நீ காதில் வாங்குகிற மாதிரி தெரியலை... அதனால் இப்போ என்னோட செயலாவது உனக்குப் புரிகிறதான்னு நான் பார்க்கிறேன்..." என்றவன் அவளது முகம் நோக்கி குனிந்தான்...

அவள் சிறு வயதில் இருந்து பார்த்து பழகிய முகம் தான் அது... அப்போது எல்லாம் தோன்றாத ஒன்று இப்போது தோன்றி அவளைப் பெரும் அவஸ்தைக்கு உள்ளாக்கியது... காதல் கணவனின் கண்களைச் சந்திக்க இயலாது அவளது விழி இமைகள் தாமாக மூடி கொண்டது...

அதை விட அவனது சூடான மூச்சுக் காற்றில் அவள் கொஞ்சம் கொஞ்சமாய் உருகி கொண்டிருந்தாள்...

விழி மூடியிருந்த மனையாளின் தோற்றம் கண்டு அழகு சற்று நிலைத்தடுமாறிப் போனான்... அவள் பேசிய பேச்சு அவனுக்குக் கோபத்தை மூட்டிய போதும் அவளது அருகாமை அவனது மனதில் தீயை மூட்டியது... அந்தத்

தீயின் தகிப்பு அவனது கோபத்தினைக் குறைத்து அவனைப் பனிக்கட்டியாய் மாற்றியது தான் இங்கு விந்தையிலும் விந்தை...

அவன் குனிந்து மென்மையாய் அவளது நெற்றியில் முத்தமிட்டான்... அதில் அவளது மேனி நடுங்கியது... இதற்கு முன்பு கணவன் முத்தமிட்டு இருக்கிறான் தான்... ஆனால் இப்போது அவள் உணரும் உணர்வுகள் போன்று இதற்கு முன்பு அவள் உணர்ந்தது இல்லை...

நெற்றி, விழிகள், நாசி, கன்னம் என்று பயணித்த அவனது உதடுகள் இறுதியில் அவளது இதழில் வந்து இளைப்பாறியது... கோபம் கொண்டு வன்மையாய் அல்லாது, தாபம் கொண்டு காதலாய், மென்மையாய் அவளது இதழில் அவன் புதைந்து காணாமல் போனான்...

கணவன் கொடுத்த இதழொற்றல் அவளை வேறு ஒரு உலகத்திற்கு அழைத்துச் சென்றது... இதுவரை அவள் காணாத ஒரு புது உலகம்... கணவன் துணையோடு அந்தப் புதிய உலகை வலம் வர விரும்பியது பேதையவளின் காதல் நெஞ்சம்...

அவள் ரேஷ்மாவை மறந்தாள்... கணவனது காதலை மறந்தாள்... அவளது நினைவில் இருந்தது எல்லாம் அவனும், அவளும் மட்டுமே... மெல்ல அவளது கரங்கள் எழுந்து கணவனை அணைத்துக் கொண்டது...

அவளது இதழில் சுகமாய்ப் புதைந்திருந்த அந்த வேளையிலும் அவளது செயலை உணர்ந்த அழகிற்கு அத்தனை சந்தோசமாக இருந்தது... மகிழ்ச்சியுடன் அவனது கரங்கள் மனைவியவளின் இடையை வளைத்து அணைத்துக் கொண்டது...

இறுதியில் பல நிமிடங்கள் கழித்து அவள் மூச்சு காற்றிற்குத் தவித்து அவனிடம் இருந்து விலகினாள்...

"த்ச்சு... என்ன கண்ணம்மா...?" என்றபடி அவன் மீண்டும் அவள் முகம் நோக்கி குனிந்தான்...

அவனது விழிகளில் வழிந்த தாபம் அடுத்து என்ன நடக்கக் கூடும் என்பதை அப்பட்டமாய் அறிவித்ததில் மனம் அதிர்ந்தவளாய் அவள் அவசரமாய் அவனிடம் இருந்து விலகி நின்றாள்...

"இன்னும் என்னடி வேணும்...?" என்று அவன் எரிச்சலுடன் கேட்டான்...

"எனக்கு எதுவும் வேண்டாம்..." என்றாள் தன் மனதினை மறைத்தபடி...

"கொஞ்ச நேரத்திற்கு முன் உன்னோட செயல் அப்படி இல்லையே..." தாடையைத் தடவியபடி ஒரு மார்க்கமாய் அவளைப் பார்த்தபடி அவன் கூறினான்...

அவன் பார்வையில் உள்ளம் தடுமாறியவள் அதை மறைத்துக் கொண்டு, "நீ... நீ என் உணர்வுகளைத் தூண்டி விட்டு குளிர் காய நினைக்கிற..." வேறுவழியின்றி அவனைக் குற்றம் சாட்டினாள் அவள்...

"என்னடி சொன்ன...?" என்றபடி கோபமாய் அவளைத் தன் பக்கம் திருப்பியவன்,

"நீ நம்ம கல்யாணத்தை அசிங்கப்படுத்திட்ட... அதை விட என்னை நீ இன்னமும் அசிங்கப்படுத்திட்ட..." என்று வெறுப்பாய் கூறியவன் அவளை விட்டு விலகி சென்று கட்டிலில் அமர்ந்தான்...

அவனுக்கு வந்த கோபத்தில் அவளை அடித்து இருப்பான்... ஆனால் அவனால் அது முடியவில்லை... அவளைக் காயப்படுத்திப் பார்க்கும் தைரியம் அவனுக்கு இல்லை... சிறுவயதில் இருந்து ஒரு பூவை போன்று பார்த்து ரசித்தவளை குதறி விடும் வேகம் ஏனோ அவனுக்கு எழவில்லை... அதனால் அவன் அமைதி காத்தான்...

அவனது விலகல் கண்டு அவளது விழிகளில் கண்ணீர் துளிர்த்தது... ஆழ்ந்து மூச்சிழுத்து கண்ணீரை உள்ளிழுத்து கொண்டவள் எதுவும் நடவாதது போல் சாதாரணமாகக் கட்டில் மறுபக்கம் வந்து படுத்து கொண்டாள்...

அவளது செயலை அவன் பார்த்துக் கொண்டிருந்த போதும் ஒன்றும் சொல்லவில்லை... விளையாட்டாய் சென்று கொண்டிருந்த அவர்களது வாழ்க்கையில் முதன்முறையாகச் சிறு கீறல் விழுந்து விட்டது...

இரவு எல்லாம் விழித்திருந்து யோசித்த வலமங்கை மறுநாள் காலையில் எழுந்த உடனேயே அழகிடம் தனது எண்ணத்தைக் கூறிவிட்டாள்...

"அழகு... நமக்குள் எதுவும் சரியாக வராது... நாம பிரிஞ்சு விடலாம்..." என்று எந்தவித உணர்வையும் பிரதிபலிக்காது கூறியவளை கண்டு அவன் வெறுமையாய் பார்த்தான்...

"நான்... நான் இன்று என் அப்பா, அம்மாவோடு ஊருக்கு கிளம்பி போகப் போகிறேன்..."

அதைக் கேட்டதும் அவனுக்குக் கோபம் வந்தது... குருவி சேர்ப்பது போல் சிறுக சிறுக பணம் சேர்த்து வாங்கிய வீட்டில் அவர்கள் வாழ்வதற்காக அவன் பார்த்து பார்த்து வாங்கிப் போட்ட பொருட்கள் அத்தனையும் அவனைப் பார்த்து இளக்காரமாகச் சிரிப்பது போல் தோன்றியது...

"மாமா கேட்டா என்ன சொல்வ...?" கோபத்தை அடக்கி கொண்டு அவன் கேட்டான்...

"உண்மையைச் சொல்ல வேண்டியது தான்..."

"எந்த உண்மையை...?" அவனது பார்வை அவளைத் துளைத்து எடுத்தது...

"அதான் ஏற்கெனவே எங்கப்பா கிட்ட என்னைப் பத்தி உயர்வா சொல்லி வச்சியிருக்கியே... அதைத் தான் காரணமா சொல்ல போகிறேன்... நான் வேறு ஒருவனைக் காதலிக்கிறேன்னு... அவனை நான் கல்யாணம் பண்ண போவதாய்..."

அவள் பேசியதை கேட்டு அவன் சற்று நிதானித்தான்... இதோ இப்போது கூட அவன் மீது குற்றம் சொல்லாது தன்

மீது குற்றம் சொல்லி கொள்ளும் அவள் அவனுக்குப் புதிராகத் தெரிந்தாள்...

அவள் யாரையும் காதலிக்கவில்லை என்று அவனுக்கு நன்றாகத் தெரியும்... அப்படி இருந்தும் அவள் பொய் கூறுகிறாள் என்றால்...? அதுவும் அவளது பெயரை கெடுத்துக் கொள்ளும் அளவிற்கு... எங்கோ இடித்தது அவனுக்கு... அது என்னவென்று தான் அவனுக்குத் தெரியவில்லை...

அவன் ரேஷ்மாவை காதலிக்கவில்லை என்று அவளிடம் கூறி விட்டதால் அதைப் பற்றி அவன் அறவே சிந்திக்கவில்லை...

அவனின் அமைதி கண்டு அவளுக்கு வருத்தமாக இருந்தது...

"அழகு..."

"என்ன...?" ஏதோ யோசனையில் இருந்தவன் அவளைப் பார்த்தான்...

"என்ன யோசிக்கிற...?"

"ஆங்... உன் உணர்வுகளைத் தூண்டி விட்டு எப்படிக் குளிர் காய்கிறதுன்னு யோசிக்கிறேன்..." என்று நக்கலாய் கூறியவன் குளியலறைக்குள் சென்று கதவை சாத்தி கொண்டான்...

அவனுக்கு நிறைய யோசிக்க வேண்டியது இருந்தது... அதனால் அவளிடம் பேச்சு வளர்க்காமல் விலகி வந்து விட்டான்... தான் கோபத்தில் அவளைக் காயப்படுத்தி விடுவோமோ என்று அவனுக்குப் பயமாக இருந்தது...

வலமங்கையோ கனத்த மனதுடன் நின்றிருந்தாள்... கணவன் சரியென்று சொன்னால் தானே அவள் தன் முடிவை செயல்படுத்த முடியும்... கணவனிடம் இருந்து பிரிந்து செல்வதற்குக் கூட அவள் அவனின் சம்மதத்தை எதிர் நோக்கி காத்திருந்தாள்...

அறையை விட்டு வெளியில் வந்தவள் நேரே சமையலறைக்குச் சென்றாள்... அங்கு அவளது அன்னையும், மாமியாரும் சமையல் வேலையில் ஈடுபட்டு இருந்தனர்...

"வா நாச்சி... இந்தா காபி குடி..."

மாமியார் வைதேகி அவளது கையில் காபி தம்பளரை திணித்தார்... எத்தனை பேருக்கு இத்தனை அன்பான மாமியார் அமைவார்கள்... இவர்களை எல்லாம் விட்டு விட்டு அவள் எப்படி இருப்பாளோ... அவளுக்குக் கண்கள் கரித்துக் கொண்டு வந்தது...

"நாச்சி... நம்ம அழகு இத்தனை பொறுப்பா வீட்டுக்குத் தேவையான பொருட்கள் அனைத்தும் வாங்கிப் போட்டு இருக்கான் பாரு... நீ கொடுத்து வச்சவள்..." என்ற அன்னையைப் பார்த்து கசப்பாய் புன்னகைத்து வைத்தாள்...

"சரி இப்படியே மசமசன்னு நிக்காதே... நாங்க ஊருக்கு போறதுக்குள்ள நீ சிம்பிளான சமையலை செய்யக் கத்துக்கோ... என் மருமகன் பாவம்டி... சமையல் செய்யாம பட்டினி போட்டு கொன்னுடாதேடி நாச்சி..."

அன்னை கூறியதற்கு அவள் சமத்தாய், "சரிம்மா..." என்க...

சித்ரவேணி அவளைச் சந்தேகமாய்ப் பார்த்தார்...

"நீ சமையல் கத்துக்கிறதுக்குச் சரின்னு சொல்றியா...? இல்லை மருமகனை பட்டினி போடுறதுக்குச் சரின்னு சொல்றியா...?"

"அம்மா..." என்று கத்தியபடி அவள் பல்லை கடிக்க...

"ஹி... ஹி... இப்போ தான்டி என் பொண்ணு நாச்சி மாதிரி இருக்கு... நீ அமைதியா இருந்ததைப் பார்த்து ஒரு நிமிசம் நான் பயந்து போயிட்டேன்... இல்லையா மதினி..." என்று வைதேகியை வேறு கூட்டு சேர்த்துக் கொண்டார் அவர்...

அவரின் நல்ல நேரம் வலமங்கை பதிலுக்குப் பதில் வாயாடும் மனநிலையில் இல்லை... அமைதியாக அன்னைக்கு உதவி செய்ய ஆரம்பித்தாள்... ஏனோ அந்தக் கணம் அவளுக்குச் சமையல் கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆசையாக இருந்தது... பிரிந்து செல்லும் கணவனுக்கு விருந்து வைக்க நினைத்தாளோ என்னமோ...

ஆண்கள் நால்வரும் உணவு மேசையில் அமர்ந்தனர்... வலமங்கை கணவனுக்கு அமைதியாக உணவு பரிமாறினாள்... அவளின் அமைதியை ஆராய்ச்சியாய் பார்த்தவாறு அழகு உணவை வாயில் வைத்தான்... அவளோ அவனது கண்களைச் சந்திக்காது கையிலிருந்த சட்னியை கலக்கி கொண்டிருந்தாள்...

"மங்கை, சாப்பிட்டு தயாராயிரு... உன்னோட திங்க்சை எடுத்துட்டு வந்திரலாம்..."

"வேலைக்குப் போகணுமே..." என்று அவள் இழுக்க...

"ரெண்டு பேருக்கும் சேர்த்து நானே லீவ் சொல்லிட்டேன்..."

அதற்கு மேல் பதில் வாயாடாது அவள் அமைதி காத்தாள்...

இருவரும் சேர்ந்து ஆட்டோவில் ஏறி அவள் குடியிருந்த வீட்டிற்குச் சென்றனர்... வரும் போது கால் டாக்சியில் வந்து விடலாம் என்று நினைத்திருந்தனர்...

அங்குச் சென்றதும் அழகு, "நான் அங்கே வருவது சரியாக இருக்காது... முதலில் நீ போய் எல்லாச் சாமான்களையும் வெளியில் எடுத்து வை... அதுக்கு அப்புறம் நான் வருகிறேன்..." என்றவன் அவளின் பதிலை எதிர்பாராது விலகி சென்றான்...

ஒரு பெருமூச்சுடன் அவனைப் பார்த்தவள் தான் தங்கியிருந்த வீட்டை நோக்கி நடந்தாள்...

அழகு அங்கிருந்த பூங்காவில் சென்று அமர்ந்தவன் அமைதியாகத் தனது மனைவியைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தான்... தன்னோடு கலகலப்பாகப் பேசும் மங்கை,

கோபமும், தவிப்புமுமாய்த் தன்னை நோக்கும் மங்கை, பிரிவு கேட்கும் போதும் அவனைக் காப்பாற்ற நினைக்கும் மங்கை, அவனது அருகாமையில் அருவருப்பில் முகத்தைச் சுளிக்காது விழி மூடி அமைதியாக நின்ற மங்கை, அவனது முத்தத்தில் உருகி குழைந்து அவனை அணைத்துக் கொண்ட மங்கை...

கடைசியாக நினைத்தவற்றை அவன் மீண்டும் மீண்டும் யோசித்துப் பார்த்தான்... ஏதோ ஒன்று புலப்படுவது போலிருந்தது... அது அவள் கூறிய 'என் உணர்வுகளைத் தூண்டி விட்டு நீ குளிர் காய நினைக்கிறாய்' என்பதைத் தாண்டிய வேறு ஒன்று...

அந்த ஒன்று புலப்பட்டதில் அவன் முகம் பளிச்சிட நிமிர்ந்து அமர்ந்தான்... அப்படியும் இருக்குமோ என்று அவனுக்குச் சந்தேகமாக இருந்தது... அப்படித்தான் இருக்க வேண்டும் என்று அவனது மனம் அடித்துச் சொன்னது...

அப்படி இருந்தும் அவள் ஏன் தன்னை விட்டு பிரிய நினைக்கிறாள் என்று அடுத்த நொடி அவனது மனம் சோர்ந்து போனது...

எதுவாக இருந்தாலும் அவளின் ஒவ்வொரு செயலின் பின்னும் அவன் மீதான அன்பு, அக்கறை இருக்கிறது... ஒருவேளை அந்த அன்பு காதலாக இருக்கலாம்... அன்பாக இருந்தாலும் சரி, காதலாக இருந்தாலும் சரி தனது மனைவியை விட்டு விட அவன் தயாராக இல்லை...

ஏனோ அவளைக் காண வேண்டும் என்று தோன்ற அவன் கைக்கடிகாரத்தில் மணியைப் பார்த்தான்... அவள் சென்று அரை மணி நேரமாகி இருந்தது... இந்நேரம் பொருட்களை எடுத்து வைத்திருப்பாள் என்று கணித்தவனாய் அவளைக் காண விரைந்தான்...

அவனது நேரம் மின்தூக்கி மேலே சென்றிருந்தது... அந்தச் சிறிது நேரம் கூடக் காத்திருக்க இயலாது அவன் படிகளில் தாவி ஏறினான்... சந்தோசத்தில் படிகளில் ஏறும் சிரமம் கூட அவனுக்குத் தெரியவில்லை...

அவள் தங்கியிருந்த வீட்டின் தளம் வந்ததும் உற்சாகமாய் வீட்டை நோக்கி செல்ல போனவன் அங்கு வலமங்கை ரேஷ்மாவிடம் பேசி கொண்டிருப்பதைக் கண்டு அப்படியே நின்று விட்டான்...

"அக்கா... ஐயம் சாரிக்கா... இப்படி நடக்கும்ன்னு நான் எதிர்பார்க்கவில்லை... நான் அழகுவை விட்டு விலகி போய் விடுகிறேன்... நீங்க அவனைக் கல்யாணம் பண்ணிக்கோங்க..."

அதைக் கேட்டு அவனுக்கு ஆத்திரமாக வந்தது...

'லூசு என்ன பேசறோம்ன்னு தெரியாம பேசிக்கிட்டு இருக்கு பாரு...' மனதில் மனைவியை வைதபடி நின்றிருந்தான்...

"அதற்கு அழகு சம்மதிக்கணுமே..."

அழகுவை பற்றி நன்கு தெரிந்தவளாய் ரேஷ்மா கூறினாள்...

"அவன் சம்மதிப்பான்... அவனுக்கு நீங்கன்னா ரொம்ப இஷ்டம்..."

'குள்ளச்சி... இவளை...' என்று கோபத்தில் பல்லை கடித்தான் அழகு...

"அப்படியா...?" என்று சிரித்த ரேஷ்மா,

"நீ சொன்னதை அழகு வந்து என் கிட்ட சொல்லட்டும்... அப்போ நான் நம்பறேன்..."

வலமங்கையின் அறியாமையை நினைத்துச் சிரிப்பு வந்தது ரேஷ்மாவிற்கு...

"சொல்வான்... கட்டாயம் சொல்வான்... சொல்ல வைப்பேன்..." என்று வலமங்கை கூற...

அதற்கு மேல் தாங்க முடியாதவனாய் அழகு அவள் முன் வந்து நின்றான்...

"ஹாய் ரேஷூ... எப்போ ஊரில் இருந்து வந்த...?" என்று ரேஷ்மாவை பார்த்து சிரித்தவன்,

"சாமான்களை எடுத்துட்டு வர இவ்வளவு நேரமா...?" என்று மனைவியிடம் கடுப்பை காட்டினான்...

'ம்க்கும்... அவளைக் கண்டா மட்டும் பல்லை இளிக்கிறான்... என்னைய கண்டால் மட்டும் இவனுக்குக் கடுப்பா இருக்குதாக்கும்...' என்று மனதிற்குள் நொடித்துக் கொண்டவள் தனது சாமான்களை எடுத்து வருவதற்காக வீட்டிற்குள் நுழைந்தாள்...

அவள் தலை மறைந்ததும் அவன் ரேஷ்மாவிடத்தில், "சாரி ரேஷூ... அவள் ஏதோ தெரியாம உளருகிறாள்... இந்த ஜென்மம் இல்லை... எந்த ஜென்மத்திலும் அவள் தான் என் மனைவி..." என்றவனை ரேஷ்மா வியப்பாய் பார்த்தாள்...

"இதுவரை எந்த நிலையிலும் அவள் என்னை யார் கிட்டேயும் விட்டுக் கொடுத்தது இல்லை... எனக்காகப் பார்த்து பார்த்து யோசித்துச் செய்யும் இவளை விடவா வேறு ஒரு பெண் எனக்கு மனைவியா வந்துவிடப் போகிறாள்..." என்றவனைக் கண்டு ரேஷ்மாவிற்குச் சற்றுப் பொறாமையாக இருந்தது... அந்தப் பெண் தானாக இல்லாமல் போயிட்டோமே என்று...

"ஆல் த பெஸ்ட் அழகு..." தனது மனதினை மறைத்துக் கொண்டு அவள் அவனை வாழ்த்தினாள்...

"ரேஷூ... விரைவில் உன் கல்யாண பத்திரிக்கையை எதிர்பார்க்கிறேன்..."

"நிச்சயமாய்... இந்தத் தடவை அப்பா கண்டிப்பா கல்யாணம் நடத்தியே ஆகவேண்டும்ன்னு சொல்லிட்டாங்க... மாப்பிள்ளை பார்ப்பதற்குச் சரியென்று சொல்லிவிட்டேன்..."

ரேஷ்மா கூறியதை கேட்டு அவனுக்கு நிம்மதியாக இருந்தது...

"ஆல் த பெஸ்ட்..." என்று அவன் கூறும் போதே வலமங்கை வந்துவிட, அவன் அவளை அழைத்துக் கொண்டு குடியிருப்பை விட்டு வெளியில் வந்தான்...

அவர்களுக்காகக் காத்திருந்த காரில் சாமான்களை எடுத்து வைத்தவன் மனைவியை ஏற சொல்லி தானும் உடன் ஏறியமர்ந்தான்... கார் கிளம்பியதும் அவன் மெல்ல மனைவி அருகில் நெருங்கி அமர்ந்து அவளது கையைப் பிடித்துக் கொண்டான்...

"அழகு... என்ன பண்ற...?" அவள் தனது கையை உருவி கொள்ள முயல...

அவன் ஓட்டுநரை சுட்டிக்காட்டி, "அவரைப் பார்த்தா எனக்குப் பயமாயிருக்கு..."

அன்று ஊரில் இருந்து வந்த போது அவள் கூறினாளே அது போல் இன்று அவன் கூறினான்...

"அழகு..." என்று அவனை முறைக்க முயன்று தோற்று சிரித்து விட்டாள் அவனது குள்ளச்சி...

"இப்படிச் சிரிச்சிக்கிட்டு இருந்தா எவ்வளவு நல்லாயிருக்கு..." என்று கூறியவன் அவளது நெற்றியில் முத்தமிட...

அதில் அவளது முகம் வாடி போனது...

"நீ சொன்னதை நான் செய்யணும்ன்னா நீ இப்படிச் சிரிச்ச முகமா இருந்தா தான் நான் செய்வேன்..."

அவள் விழிகள் ஆர்வத்தோடு அவனைப் பார்த்தாலும் அதையும் மீறி சிறு சோகம் அதில் எட்டிப்பார்த்தது...

"மறுபடியும் ஆரம்பிச்சிட்டியா... முடியலைடி குள்ளச்சி... மாமா பாவம்டா..." என்று அவன் கூறிய பாவனையில் அவளுக்குச் சிரிப்பு வந்தது...

"தட்ஸ் குட்..." என்று அவளை மெச்சியவன் பிடித்திருந்த அவளது கரத்தினை விடவில்லை... அவளுக்கும்

விடுவிக்கும் எண்ணம் இல்லை போலும்...

அவர்கள் வீடு வந்த போது மதிய உணவு தயாராக இருந்தது... அதை ஒரு கட்டு கட்டி விட்டு அவன் அலைப்பேசியில் அழைப்பு எடுக்கப் பால்கனி பக்கம் சென்று விட்டான்... பெரியவர்கள் மதிய உறக்கத்திற்காகச் சென்று விட அவள் அவர்களது அறைக்கு வந்தாள்...

கணவனைப் பிரிந்து இரவு வீட்டாருடன் செல்ல வேண்டும் என்பதே அவளுக்குப் பெரும் துக்கமாக இருந்தது... தனக்குள் யோசித்தபடி அமர்ந்து இருந்தவளின் காதருகில் வந்து,

"பே..." என்று அவன் கத்தி பயமுறுத்த...

அதில் பயந்து திரும்பியவள் அங்கு அவனைக் கண்டதும் கோபமாய், "டேய் அழகு..." என்று அவனது சட்டையைப் பிடித்து இழுத்து சண்டைக்குத் தயாராக...

அவள் இழுத்த இழுப்பில் அவன் அவள் மீது வந்து விழுந்தான்...

"ச்சீ... தடிமாடு எழுந்திருடா..." என்றபடி அவள் அவனைத் தன் மீதிருந்து தள்ள முயல... அவனோ அசையாது,

"நீ தானேடி என்னைப் பிடிச்சு இழுத்த... நானா உன்னை இழுத்தேன்... ஒழுங்கு மரியாதையா நான் நின்ன மாதிரி என்னை நிற்க வை..." என்று அவன் அவளை மிரட்ட துவங்கினான்...

"நீ பயமுறுத்த போய்த் தான்டா நான் உன் கிட்ட சண்டைக்கு வந்தேன்... எல்லாத்துக்கும் காரணம் நீ தான்டா..."

"நீ தான்டி குள்ளச்சி..."

"நீ தான்டா..."

"நீ..."

"நீ..."

மாறி மாறி இருவரும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டி கொண்டனர்... எந்தக் கணத்தில் அவர்களது யுத்தம் கட்டில் யுத்தமாக மாற ஆரம்பித்தது என்று அவர்களுக்கே தெரியாது... ஊடலோடு சேர்ந்து கூடலுக்கான அச்சாரம் அழகாய் வித்திடப்பட்டது...

பதிலுக்குப் பதில் வாயடித்த அவளது வாயை தனது வாய்க் கொண்டு அவன் மூடிய போதா... சண்டையிட்ட அவளது கைகளைத் தடுக்க நினைத்து அவன் பிடித்த போது அதன் மென்மையில் வசமிழந்து அவனது கை அவளது மேனியில் கண்டபடி ஊர்ந்த போதா... எப்போது என்று தெரியாது இருவரும் மற்றவர் அருகாமையில் தங்களைத் தொலைத்தனர்...

இதழ் யுத்தம் நீண்டு தாம்பத்திய யுத்தத்திற்கு வழி வகுத்தது...

அவனைப் பிரிய வேண்டுமே என்கிற துயரமே அவளுள் காதலை ஊற்றாய் பெருக்கெடுக்க அவள் அவனைத் தன்னுள் அடக்க முயன்றாள்.. அவனுக்குமே அவளது நேசம் புரிந்ததில் அவள் மீது இன்னமும் அதிகமாய் அன்பு பெருகியது... இருவருமே ஒருவரை ஒருவர் பிரிய மனமில்லாது மற்றவரை இறுக பிடித்துக் கொண்டனர்...

என்ன செய்து தங்களது துணையைத் தக்க வைத்துக் கொள்வது என்று தெரியாது தங்களது இறுகிய அணைப்பிலும், அழுத்தமான இதழொற்றிலும் தங்கள் மனதினை மற்றவர்க்கு உணர்த்திட எண்ணினர்...

அடிதடியாய் ஆரம்பித்த இல்லறம் இறுதியில் நல்லறமாய் மாறி இருவரும் வாழ்க்கையின் அடுத்தக் கட்டத்திற்கு அடி எடுத்து வைத்தனர்... அன்றைய பகல் முதல் பகலாய், மறக்க முடியாத பகலாய் இருவருக்கும் மாறிப் போனது...

தித்திக்கும் எதிரியின் முத்தங்கள் தித்திப்பாய் இறங்கியது இருவருக்குள்ளும்...!!!

தித்திக்கும்...!!!

"அழகு... எழுந்திருடா... மணி ஏழாகுது..."

எங்கோ கிணற்றுக்குள் இருந்து ஒலிப்பது போல் வலமங்கையின் குரல் கேட்டது... அதில் புரண்டு படுத்த அழகுவின் நாடி நரம்பில் எல்லாம் இனிமையான உணர்வுகள் ஓடியது... அவனது கனவில் அவனது குள்ளச்சி அவனோடு டூயட் பாடி கொண்டிருந்தாள்...

இன்னமும் எழாமல் சண்டித்தனம் பண்ணும் கணவன் மீது வலமங்கைக்கு எரிச்சல் வந்தது... அதே சமயம் வெட்கமாகவும் இருந்தது... மதியம் நடந்த கூடல் அவளுள் வெட்கத்தினைத் தோற்றுவித்தது... ஆனால் ஊருக்கு கிளம்பி கொண்டிருக்கும் பெரியவர்கள் நொடிக்கு ஒரு தரம் அவன் எங்கே என்று கேட்டு அவளைப் படுத்தி எடுத்ததில் அவள் எரிச்சலுற்று இருந்தாள்...

"அழகு..." என்று அருகில் கிடந்த தலையணை கொண்டு அவள் அவனை அடிக்கத் துவங்க... அதில் கண் விழித்தவன் மனைவியின் கையைப் பிடித்திழுக்க, அதில் நிலைத்தடுமாறி அவன் மீது விழ போனவள் சட்டென்று கட்டிலில் அமர்ந்து தன்னைச் சமாளித்துக் கொண்டாள்...

தலை நிறையப் பூச்சூடி அழகாய் அலங்காரம் பண்ணியிருந்த மனைவியவளை கண்டு அழகு மந்தகாச புன்னகை புரிந்தவன் உருண்டு வந்து அவளது மடியில் படுத்துக் கொண்டான்...

அவனது செயலில் திகைத்து போனவளாய் அவள் அவனைப் பார்த்தாள்... அடர்ந்திருந்த அவனது சிகையைக் கோதி கொடுக்க வேண்டும் என்று ஆசையாக இருந்தது அவளுக்கு... ஆனாலும் தனது மனதினையும், கரத்தினையும் அடக்கி கொண்டு,

"அழகு... எல்லோரும் ஊருக்கு கிளம்புறாங்க..."

"கிளம்பட்டும்..." என்று அசால்ட்டாய் கூறியவன் அவளது இடையைக் கட்டி பிடித்துக் கொண்டு அவளது மடியில் முகம்

புதைத்துக் கொண்டான்...

"அவங்களோடு நானும் ஊருக்கு போகிறேன்..."

மனைவி கூறியதை கேட்டு அவனது தூக்க கலக்கம் பறந்தோட திகைத்து போய் எழுந்து அமர்ந்தான்...

"ஏன் மங்கை...?"

அதற்குப் பதில் எதுவும் பேசாது அவள் அமைதியாகத் தலை குனிந்து கொண்டாள்...

"கொஞ்ச நேரத்துக்கு முந்தி தானே என்னோடு சந்தோசமா இருந்த... அதுக்குள்ள எப்படி உன்னால் இப்படிப் பேச முடியுது...? உனக்கு என்ன தான்டி பிரச்சினை...? நான் தான் ரேஷ்மாவை காதலிக்கலைன்னு சொல்லிட்டேனே... இதை விட என் மனசை எப்படிச் சொல்றதுன்னு எனக்குத் தெரியலை..."

அழகு இயலாமையுடன் தலையைக் கோதியபடி செய்வதறியாது அமர்ந்து விட்டான்... என்ன சமாதானம் செய்து மனைவியவளை தன்னுடன் தக்க வைத்துக் கொள்வது என்று அவனுக்குத் தெரியவில்லை...

"மங்கை... நமக்குள் இருக்கும் பிரச்சினை நமக்குள் இருக்கட்டும்... நம்ம குடும்பத்துக்குத் தெரிய வேண்டாம்... இப்போது தான் நம்ம அப்பாமார்கள் பகை மறந்து ஒன்று சேர்ந்து இருக்காங்க... இந்த நேரத்தில் நீ என்னை விட்டு பிரிந்து சென்றால்...?" என்று நிறுத்தியவன் அவளைப் பார்த்து,

"என்னால் யோசிச்சு கூடப் பார்க்க முடியலைடி குள்ளச்சி... உன் கிட்ட நான் எப்படி நடந்துக்கணும்ன்னு சொல்லு... அப்படி நடந்துக்கிறேன்... ப்ளீஸ் மங்கை, எதுவாக இருந்தாலும் இங்கேயே இரு..." என்று கெஞ்சிய கணவனைக் கண்டு அவளது கண்கள் கரித்தது...

"நீ நல்லவன் அழகு... ரொம்ப ரொம்ப நல்லவன்... உன்னை நான் எந்தக் குறையும் சொல்லவில்லையே..."

"நான் எப்படி இருந்தாலும் நீ என்னைக் குறை சொல்ல மாட்ட... அது தான் எனக்கும் தெரியுமே... அப்படி இருந்தும் நீ ஏன் பிரிஞ்சு போகணும்ன்னு சொல்ற...?"

புரியாத புதிராய் விளங்கும் மனைவியைக் கண்டு அவன் புரியாமல் விழித்தான்...

"எனக்குக் கொஞ்சம் யோசிக்கணும் அழகு..."

"சரி யோசி..." என்றவன்,

"இது போல் தவறு இனி நடக்காது..." என்றவனின் தலை தானாகக் குனிந்தது...

மனைவியின் மனம் அறியாது தவறு செய்து விட்டோமோ என்று அவனுக்கு ஒரே குற்றவுணர்வாகப் போய் விட்டது...

"நமக்குள் நடந்ததை நான் தவறு என்று சொல்லவில்லையே அழகு... எனக்கு யோசிக்க வேண்டும்... அதற்குத் தனிமை வேண்டும்..."

"உனக்குத் தேவையான தனிமையை நான் கொடுக்கிறேன்... நான் உன்னை எந்த விதத்திலும் தொந்திரவு பண்ணவில்லை... நீ இங்கேயே இருந்து யோசி மங்கை..."

இப்போதும் தனக்காக அவனை மாற்றிக் கொள்ளும் கணவனைக் காதலோடு பார்த்தாள்... பிறகு மெல்ல,

"ப்ளீஸ் அழகு... எனக்காக..." என்று கெஞ்சியவளின் கெஞ்சல் அவனுக்குப் புதுமையாக இருந்தது...

அவன் அறிந்த வலமங்கை ஒரு நாளும் இப்படிக் கெஞ்சியது இல்லை... எல்லாமே அதிரடியாய், அடாவடியாய்ச் செய்து பழக்கப்பட்டவள்...

"சரி மங்கை... உனக்காக இதற்கு ஒத்துக்கிறேன்... ஆனால் நம்ம வீட்டினருக்கு நம் பிரச்சினை எதுவும் தெரிய கூடாது... நீ அங்கே போய் நல்லா யோசிச்சு பார்... உனக்கு எத்தனை நாள் அங்கே இருக்கணும் தோணுதோ அத்தனை நாள்

இருந்துட்டு வா... ஆனா ஒண்ணே ஒண்ணு மட்டும் ஞாபகத்தில் வச்சுக்கோ... இங்கே உனக்காக நான் காத்துக் கொண்டு இருப்பேன்னு..."

வலமங்கைக்கு மிகவும் குழப்பமாக இருந்தது... கணவன் கூறுவது போல் எல்லாவற்றையும் மறந்து விட்டு வாழ்வதா... இல்லை அவனை விட்டு பிரிந்து செல்வதா என்று... மனதில் கணவனாய், காதலனாய் வரித்தவனை உடலளவிலும் கணவனாய் ஏற்றுக் கொண்டாகி விட்டது... இனியும் ஏன் இப்படிக் குழம்பி கொண்டிருக்கிறோம் என்று அவளுக்குத் தெரியவில்லை...

அழகு கூறியது போல் யோசிப்போம்... நன்றாக யோசித்து முடிவெடுப்போம் என்று மனதில் நினைத்தவள் அவனிடம்,

"சரி அழகு..." என்றபடி அவள் எழுந்து சென்றாள்...

செல்லும் மனைவியவளை பார்த்தபடி மூளை மரத்து போய் அமர்ந்திருந்தான் அழகு... அவளது புறப்பாடுக்குக் காரணம் கேட்கும் வீட்டினரை என்ன சொல்லி சமாதானப்படுத்துவது என்று அவன் தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தான்...

அவன் நினைத்தது போல் அவனது தந்தை அவனைச் சத்தம் போட்டார்...

"என்னடா இது... இப்பத்தான் வீடு பார்த்துக் குடித்தனம் ஆரம்பிச்சிருக்கீங்க... அதுக்குள்ள மருமக பொண்ணு ஊருக்கு வர்றேன்னு சொல்லுது... உன்னை விட்டுட்டு வரணும்ன்னு சொல்லுதுன்னா நீ அப்படி என்னடா கொடுமை செஞ்ச என் மருமகளை...?"

"நீ சும்மாயிருடா வைத்தி... மருமகனை சும்மா சும்மா குறை சொல்லிக்கிட்டு... உனக்கு எப்ப பார்த்தாலும் அழகுவை திட்டிக்கிட்டே இருக்கணும்... இவ்வளவு பொறுப்பான பிள்ளையை இந்தக் காலத்தில் எங்கே பார்க்க முடியுது... உனக்கு அப்படிப்பட்ட பொறுப்பான மகன் பிறந்து இருக்கிறானேன்னு நீ சந்தோசப்படணும்... அதை விட்டுட்டு..."

தனது நண்பனை திட்டிய பொன்னுரங்கம் தனது மகளைச் சந்தேகமாய்ப் பார்த்தார்...

"ஒழுங்கு மரியாதையா உண்மையைச் சொல்லு நாச்சி... நீ எதாவது கோணங்கித்தனம் பண்ணினியா...?"

'சபாஷ் மாமா... சரியா யோசிச்சு இருக்கீங்க... குள்ளச்சி, இப்போ என்ன பண்ண போகிற...?' மாமனாரை மனதுக்குள் மெச்சியபடி அழகு மனைவியைத் திரும்பி பார்த்தான்...

அவளோ அவனைத் தைரியமாகப் பார்ப்பதை விட்டு விட்டு அவனைக் கலக்கமாகப் பார்த்து வைத்தாள்... அவளது கலக்கம் சுமந்த முகம் அவனுள் யோசனையை விதைக்க அவள் அருகில் வந்தவன் ஆதரவாய் அவள் தோள் மீது கை போட்டு தன்னுடன் அணைத்துக் கொண்டு,

"ஏதோ உங்களை எல்லாம் பார்த்த ஆசையில் சின்னப் பிள்ளை மாதிரி ஊருக்கு வரணும்ன்னு ஆசைப்படுகிறாள்... கூடக் கூட்டிட்டு போங்க மாமா..."

"அப்போ நீ சாப்பாட்டுக்கு என்ன பண்ணுவ...?"

வைதேகி கவலையுடன் கூறியது உணவுக்கு மட்டுமான கவலையாகத் தெரியவில்லை... மகனது வாழ்க்கைக்கான கவலையாக அது இருந்தது...

"அம்மா... சமைக்கத் தெரியாத உங்க மருமக ஊத்துற கஞ்சி தண்ணிக்கு ஹோட்டல் சாப்பாடு எவ்வளவோ பெட்டர்... முதல்ல அவளை அழைச்சிக்கிட்டு போய் மாமியாரா லட்சணமா அங்கே இருக்கிற நாளில் சமையலை கத்து கொடுத்து அனுப்புங்க..."

அவன் சொல்லி முடித்ததும் தான் தாமதம் வலமங்கை தனது கலக்கம் மறைந்து பழைய வலமங்கையாக மாறி,

"நான் சமைச்சா அது உனக்குக் கஞ்சி மாதிரி இருக்கா...? டேய் அழகு..." என்று அவனது கழுத்தை நெறிக்க வந்தவளை கண்டு,

"ஐயோ அம்மா... இப்படி ஒரு கொலைக்காரியை என் தலையில் கட்டி வச்சிட்டீங்களே..." என்று போலியாய் அலறியபடி அவன் ஓட துவங்க...

"நீ எங்கே போனாலும் உன்னைக் கொல்லாம விட மாட்டேன்டா..." என்று அவனைத் துரத்தியபடி பின்னால் ஓடினாள் அவள்...

பெரியவர்களுக்கு இருவரையும் கண்டு நிறைவாக இருந்தது... அவர்களுக்குள் பிரச்சினை எதுவுமில்லை என்று அறிந்ததும் நிம்மதியாக ஊருக்கு கிளம்ப வேண்டிய வேலைகளைப் பார்க்க ஆரம்பித்தனர்...

கணவனை விடாது அவர்களது அறைக்குள்ளும் விரட்டி கொண்டு வந்த வலமங்கை அவனைப் பிடித்து, "இப்படிச் சொல்லுவியாடா... சொல்லுவியா...?" என்று அவனது முதுகில் மொத்தினாள்...

அவனோ அவளை வளைத்து பிடித்து, "சரி சொல்லலை... அப்படின்னா நீ என்னை விட்டு போகாம இங்கேயே இருந்து விடேன் குள்ளச்சி..."

கெஞ்சும் குரலில் கேட்ட கணவனைக் கண்டு அவள் தனது விழிகளைத் தாழ்த்தி கொண்டாள்... அவளது மௌனத்தைக் கண்டவன் ஒரு பெருமூச்சுடன் தனது பிடியை தளர்த்தி விட்டு வெளியில் சென்று விட்டான்...

அவள் மௌனமாகக் கட்டிலில் வந்து அமர்ந்தாள்... அவளுக்கு எந்த உடைகளையும் எடுத்து வைக்க வேண்டிய அவசியம் இல்லாது எல்லா உடைகளும் பெட்டியில் இருந்தது...

"மங்கை... எல்லோரும் கிளம்பியாச்சு..." என்றபடி மீண்டும் அழகு அறையினுள் வந்தான்...

அப்போது தான் அவளும் மணியைப் பார்த்தாள்... இத்தனை நேரமாக அவள் யோசித்துக் கொண்டு அமர்ந்து விட்டாள் போலும்... எழுந்து தனது உடமைகளை எடுக்கப் போனவளை கை நீட்டி தடுத்தவன்,

"நான் எடுத்துட்டு வர்றேன்..."

கணவன் கூறியதற்குச் சரியென்று தலையசைத்தவள் திரும்பி செல்ல முயன்ற போது அடுத்த நொடி கணவனது இறுகிய அணைப்பில் சிக்கி கொண்டாள்...

"உன்னைப் போகாதேன்னு சொல்ல எனக்கு இஷ்டம் இல்லை... ஏன்னா உன் விருப்பத்தைக் குலைக்க எனக்கு விருப்பமில்லை... ஆனா மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருக்குடி கண்ணம்மா..."

தனது கழுத்தில் முகம் புதைத்தபடி புலம்பியவனைக் கண்டு அவளது மனம் உருகித்தான் போயிற்று... அவள் மீதான அவனது இந்த உணர்வை என்னவென்று எடுத்துக் கொள்வது என்று தெரியாது பேதையவள் மனம் தடுமாறி நின்றாள்...

சிறு வயதில் இருந்து ஒன்றாய் வளர்ந்த பாசமா, மாமன் மகள் என்கிற அன்பா, மனைவி என்கிற அக்கறையா, இல்லை காதலா...? எது என்று உறுதியாக அவளால் கணிக்க முடியவில்லை... அவளுக்கும் சில விசயங்களை ஜீரணிக்க வேண்டியிருந்தது... அதனால் வலுக்கட்டாயமாக அவனிடம் இருந்து தன்னைப் பிரித்து எடுத்தாள்...

கலக்கம் சுமத்த முகத்துடன் நின்றிருந்த மனைவியவளை அள்ளி அணைத்து இதழொற்றல் மூலம் அவளது கலக்கத்தைப் போக்க சொல்லி அவனது உள்மனம் கூறிய போதும் அது அவளுக்குப் பிடிக்குமோ, பிடிக்காதோ என்று தெரியாத நிலையில் அமைதி காத்தான் அவன்...

"வர்றேன் அழகு..."

அவனது முகம் பார்க்காது தரை பார்த்தபடி கூறியவளை கண்டு அவனுக்கு ஆற்றாமையாக இருந்தது... இருந்தாலும் காட்டி கொள்ளாது,

"கொஞ்சம் இரு மங்கை..." என்றவன் தனது பர்சில் இருந்து கொஞ்சம் பணம் எடுத்து அவளிடம் கொடுத்தான்...

"என் கிட்ட இருக்கு அழகு..." அதை அவள் வேண்டாம் என்று மறுத்தாள்...

"நான் வேண்டாம்ன்னு நீ தான் என்னை விட்டு போகிற... ஆனா என்னால் அப்படி எல்லாம் உன்னை விட்டு விட முடியாது... நீ எங்கே இருந்தாலும் நீ என்னோட மனைவி தான்... உனக்காக நான் செய்ய வேண்டியது என் கடமை..."

அவன் சொன்ன ‘கடமை’ என்ற வார்த்தையில் இத்தனை நேரம் ஊஞ்சலாடி கொண்டிருந்த அவளது மனம் ஒரு நிலையில் அப்படியே அடங்கி விட்டது... கடமையில் அவள் காதலை எப்படி எதிர்பார்க்க முடியும்...?

"எங்க வீட்டில் எனக்கு என்ன செலவு வந்துவிடப் போகுது அழகு..." என்று நாசுக்காக அவனது பணத்தை மறுத்தாள்...

"என்னது உங்க வீட்டிலா...? ம்ஹூம், அதெல்லாம் முடியாது... நீ எங்க வீட்டில் இருப்பது என்றால் ஊருக்கு போ... இல்லைன்னா இங்கேயே இரு... ஒண்ணு எனக்கு மனைவியா இங்கேயே இரு... இல்லைன்னா என் அப்பா, அம்மாவுக்கு மருமகளா என் வீட்டிலிரு... அதை விட்டுட்டு உங்க வீட்டு பொண்ணா நீ திரும்பி போவதை நான் ஒரு போதும் அனுமதிக்க மாட்டேன்..."

கண்டிப்பும், கறாருமாய்க் கூறிய கணவனை இயலாமையுடன் பார்த்தாள் அவள்...

"நீ என்னை விட்டு விலக நான் ஒரு போதும் விட மாட்டேன் குள்ளச்சி..." என்று உறுதியாய் கூறியவன் அவளது கைகளில் பணத்தைத் திணித்து விட்டு அவளது பெட்டியை எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறினான்...

அவனைப் பின்தொடர்ந்து அவளும் வெளியில் வந்தாள்... இரவு உணவு முடிந்து எல்லோரும் பேருந்து நிலையத்திற்குக் கிளம்பி சென்றனர்... காரில் அருகில் அமர்ந்திருந்த மனைவியின் கையைப் பிடித்துக் கொண்ட அழகு எதுவும் பேசவில்லை... மனைவியைப் பார்க்கவும்

இல்லை... வெளியில் வெறித்துப் பார்த்துக் கொண்டு வந்தான்...

அவளோ அவனது முகத்தைத் தவிர வேறு எதையும் பார்க்கவில்லை... பிரிவுத்துயர் மனதை அழுத்தியதில் அவளது கைப்பிடி இறுகியது... அதில் அவளை நோக்கி திரும்பியவன் 'என்ன...?' என்பது போல் பார்த்து வைக்க, என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் அவள் வேறு பக்கம் பார்த்தாள்... அவன் ஒன்றும் பேசாது பழைய மாதிரி அமர்ந்து கொண்டான்...

பேருந்தில் இடம் பார்த்து குடும்பத்தினரை அமர செய்த அழகு மனைவியிடம், "ஒரு நிமிசம்..." என்று கூறிவிட்டு பேருந்தை விட்டு கீழே இறங்கினான்...

கணவன் சென்றதும் அவள் இருக்கையில் சாய்ந்தமர்ந்து கண்களை மூடி கொண்டாள்... அருகில் இருந்த அவளது அன்னை பின்னால் திரும்பி வைதேகியிடம் வளவளத்துக் கொண்டிருந்தார்...

சிறிது நேரத்தில் பேருந்து கிளம்புவதற்கு அறிகுறியாக அது உருமி கொண்டு ஆயத்தமாக அதில் கண் திறந்த வலமங்கை முதலில் தேடியது கணவனைத் தான்... அப்போது சென்றவன் இன்னமும் வரவில்லை... அவனைக் காணாது சென்று விடுவோமோ என்ற தவிப்பில் அவளது விழிகளில் விழிநீர் தளும்பியது... பரிதவிப்புடன் ஜன்னல் வழியே வெளியில் எட்டி பார்த்தாள்...

"எங்கே போன அழகு...?"

அன்னையின் குரலில் அவள் சட்டென்று திரும்பி பார்த்தாள்... அங்கு நின்று கொண்டிருந்த கணவனைக் கண்டதும் அவளது மனதிற்குச் சற்று நிம்மதியாக இருந்தது...

மனைவியின் முகத்தைப் பார்த்த அழகின் கண்ணில் முதலில் விழுந்தது அவளது கண்களில் தளும்பிய கண்ணீர் தான்... அன்று ஒரு நாள் இது போன்றதொரு

பேருந்து பயணத்தின் போது அவனைக் காணாது அவள் கண்ணீர் துளிர்க்க இருந்ததன் பின்னணி அப்போது அவனுக்குப் புரியவில்லை... ஆனால் இப்போது அவனுக்கு நன்கு புரிந்தது... அன்றும் இன்றும் அவளது இந்தக் கண்ணீருக்குக் காரணம் அவன் தான் என்று... ஆனால் அதை நினைத்து வருத்தப்படுவதா இல்லை சந்தோசப்படுவதா என்று தான் அவனுக்குத் தெரியவில்லை...

"அத்தை... அங்கே ஒரு சீட் காலியா இருக்கு... அங்கே போய் உட்காருங்க... நான் மங்கை கிட்ட பேசணும்..."

சித்ரவேணி சிரித்தபடி எழுந்து சென்று விட, அழகு மனைவி அருகில் அமர்ந்தான்... அவள் அவனையே இமைக்காது பார்த்து கொண்டிருந்தாள்... அவளது கைகளில் தன் கையிலிருந்த கவர்களை வைத்தவன்,

"இதில் உனக்கு வேண்டிய ஸ்நாக்ஸ் இருக்கு..." என்றவன் சிறிது நேரம் அமைதியாக இருந்தான்... பின் அவளை நிமிர்ந்து பார்த்து,

"எனக்கு என்ன பேசறதுன்னு தெரியலை மங்கை... இதோ இப்போ உன் கண்ணில் இருக்கும் கண்ணீருக்குக் காரணம் நான் தான்னு எனக்குப் புரியுது... என்னை நீ தேடி இருக்கேன்னும் புரியுது... இந்தளவுக்கு என்னைத் தேடுற நீ எதுக்காக என்னைப் பிரிஞ்சு போகிறேன்னு தான் எனக்குத் தெரியலை..." என்றவன் அவளது கைகளைப் பிடித்துக் கொண்டு,

"நான் என்னையும் அறியாமல் உன்னைக் காயப்படுத்தி இருந்தால் என்னை மன்னிச்சிரு மங்கை..." என்றவனைக் கண்டு அவள் பதறி போனாள்...

"அப்படி எல்லாம் இல்லை அழகு..." என்றவளை ஆழ்ந்து பார்த்தபடி,

"உடம்பை பார்த்து கொள்..." என்றபடி எழுந்தவன் அவளிடம்,

"கொஞ்சம் சிரிச்சிக்கிட்டே விடை கொடுக்கிறது... இப்படி அழுது வடிஞ்சா எனக்கே இது என் மங்கை தானான்னு சந்தேகமா இருக்கு..." அவளின் மனதினை மாற்ற வேண்டி அவன் கூற...

அவனுக்காகத் தனது மனதின் வருத்தத்தினை மறைத்தபடி சிரித்தவளின் விழிகளில் துளிர்த்த கண்ணீரை மறைக்க அவளால் முடியவில்லை...

"இப்போ கொஞ்சம் பரவாயில்லை..." என்று அவளின் கன்னம் தட்டி விடைப்பெற்றவன் பேருந்தை விட்டுக் கீழிறங்கினான்...

இறங்கியவன் நேரே அவளின் ஜன்னல் அருகே வந்து அவளைப் பார்த்துக் கையசைத்தான்... அவளும் மௌனமாய்க் கையசைத்தாள்... இருவருள்ளும் துக்கம் பொங்கியது... அவளுக்கு அது ஏன் என்று புரிந்தது... அவனுக்கு அது ஏன் என்று புரியவில்லை...

கண்ணில் இருந்து மறையும் வரை கணவனைப் பார்த்துக் கொண்டு வந்தவள் பின்பு கண்களை மூடியபடி இருக்கையில் சாய்ந்தாள்... ஊர் போய்ச் சேரும் வரை அவள் கண்களைத் திறக்கவில்லை... கணவன் வாங்கிக் கொடுத்த தின்பண்டங்களை உண்ணவும் இல்லை... வலமங்கை வழக்கத்திற்கு மாறாய் அவளது இயல்பு மாறி போய் அமைதியாக அமர்ந்திருந்தாள்...

மனைவி இல்லாத வீட்டிற்குள் நுழைந்த அழகு வெறுமையாக உணர்ந்தான்... இந்த வீட்டில் அவளுடன் அவன் காலம் காலமாய் வாழவில்லை தான்... ஆனால் அவளுடன் இத்தனை காலமாய் ஒன்றாய் வளர்ந்திருக்கிறான்... அவளது குறும்புத்தனத்தை அருகில் இருந்து பார்த்து ரசித்திருக்கிறான்... அதிலும் இன்று அவளுடன் ஓருயிராய் கலந்த பின்பு அவள் இல்லாத ஒரு வாழ்க்கையை அவனால் நினைத்து கூடப் பார்க்க முடியவில்லை...

அதற்காகப் பிடித்தம் இல்லாமல் அவளைத் தன்னுடன் இழுத்து பிடிக்கவும் அவனுக்கு விருப்பம் இல்லை... கனத்த மனதுடன் படுக்கையில் விழுந்தான்... வெகுநேரம் விழித்திருந்தவன் எப்போது உறங்கினான் என்று அவனுக்கே தெரியாது...

மறுநாள் அலுவலகத்திற்குச் சென்று மனைவிக்கு விடுப்பு சொல்லிவிட்டு வேலையில் அமர்ந்தவனுக்கு அதன் பின் அவளை நினைக்கக் கூட நேரமில்லாது போனது... ஏனெனில் அஜய் மீண்டும் வெளிநாடு செல்கிறான் என்பதால் அவனது இடத்திற்கு அழகுவை பணி மாற்றம் செய்யச் சொல்லி மேலிடம் உத்தரவிட்டு இருந்தது... அதற்கான பயிற்சிக்காக அவன் ஒரு மாத காலம் மும்பைக்குச் செல்ல வேண்டியிருந்தது...

அதைக் காரணம் காட்டி வலமங்கை மேலும் ஒரு மாதம் ஊரில் இருந்து கொண்டாள்... அழகுவிற்கும் அதுவே சரியென்று தோன்றியது...

கடந்து சென்ற ஒரு மாத காலமும் அழகுவை வேலை ஆக்கிரமித்துக் கொண்டாலும் அவனது ஆழ்மனதில் அவனது 'குள்ளச்சி'யின் நினைவுகளே...

****************************************

அதே போல் தான் வலமங்கையின் நிலையும்... மனதில் கணவன் மீதான காதலை சுமந்து கொண்டிருந்தவளுக்குச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்பது மூளையில் ஏறவில்லை... ஏதோ ஒரு நினைவில் நடமாடி கொண்டிருந்தாள்...

"ஏய் நாச்சி... இங்கே வா... எனக்குக் கால் எல்லாம் ஒரே வலியா இருக்கு... வந்து தைலம் தேய்ச்சு விடு..."

அவளது மனதினை மாற்ற வேண்டி வேதநாயகி அவளிடம் வம்பிழுத்தார்... அவளோ அவர் சொன்னதைக் கேட்டு சமத்தாய் அவரின் காலில் தைலத்தைத் தேய்த்து விட்டாள்... அதைக் கண்டு அவருக்கு மயக்கம் வராத குறை தான்...

"அடியேய்... இது என் பேத்தி நாச்சி தானா...?" என்று மோவாயில் கை வைத்து அவர் அதிசயிக்க...

"உன் பேத்தி நாச்சி நான் இல்லை... நான் என் மாமனோட பொண்டாட்டி வலமங்கை..." என்று அமைதியாகப் பதில் கூறிவிட்டு அவள் எழுந்து சென்று விட்டாள்...

அதைக் கேட்டு அவருக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது...

சித்ரவேணிக்கு தான் மகளின் அமைதி என்னவோ போலிருந்தது... ஏதேனும் காத்துக் கருப்பு பிடித்திருக்குமோ என்று அவருக்கு ஒரே விசனமாக இருந்தது... அதனால் மகளைக் கோவிலுக்கு அழைத்துச் சென்று தண்ணீர் தெளித்து அழைத்து வர எண்ணினார்...

வலமங்கை அன்னையை நம்பி கோவிலுக்குச் சென்றாள்... அங்கே சென்றதும் தான் தெரிந்தது தாங்கள் வந்ததிற்கான காரணம்... அதை அறிந்தவள் அன்னையைப் பார்த்து முறைத்தாள்...

"ஆமாம், எனக்குக் காத்துக் கருப்பு தான் பிடிச்சியிருக்கு... உன் மருமகன் கருவாயன் தான் என்னைப் பிடிச்சு ஆட்டுறான்... இந்தப் பேயை விரட்ட அந்தப் பெருமாள் தான் மும்பையில் இருந்து வரணும்... இனிமே கொண்டு இப்படி லூசுத்தனமா ஏதாவது செஞ்சீங்க பிச்சு போடுவேன் பிச்சு..." என்று கோபமாய் உரைத்து விட்டு கோவிலை விட்டு வெளியில் வந்து விட்டாள்...

"ஆத்தா, மகமாயி... உன் கோவிலுக்கு வந்த நேரம் என் பொண்ணு சித்தம் தெளிஞ்சிட்டாள்... இப்போ தான் இவளை பார்க்க என் பொண்ணு நாச்சி மாதிரி இருக்கு..."

சித்ரவேணி மகளிடம் திட்டு வாங்கிய சந்தோசத்தில் சாமியை நிதானமாகக் கும்பிட்டு விட்டே கோவிலை விட்டு வெளியில் வந்தார்...

நாளையோடு அழகுவின் மும்பை வேலை முடிகிறது... நேரே சென்னைக்குச் செல்ல விருப்பம் இல்லாதவனாய் அவன்

தனது மனைவியைத் தேடி ஊருக்கு செல்ல
விரும்பினான்...

இனி மனைவி இல்லாது சென்னை திரும்பக் கூடாது என்று
அவன் முடிவு செய்தான்...!!!

தித்திக்கும்...!!!

மறுநாள் அழகு வேலையை முடித்துக் கொண்டு அன்று மாலையில் மதுரைக்கு விமானம் ஏறினான்... இரயிலிலோ, பேருந்திலோ செல்லும் அளவிற்கு அவனுக்குப் பொறுமை இல்லை...

அவன் வீடு வந்து சேர்ந்த போது இரவாகி இருந்தது... அவன் தனது வருகையை யாரிடமும் சொல்லவில்லை... அதனால் எல்லோரும் அவனை ஆச்சிரியமாகப் பார்த்தனர்... ஒரு மாதம் தம்பதிகள் பிரிந்திருந்த போதும் அலைப்பேசியில் அளவளாவியதால் அவர்களை யாரும் தவறாக நினைக்கவில்லை...

வலமங்கை ஒரு மாதம் கழித்து மீண்டும் கணவனைப் பார்த்ததும் மனம் நெகிழ, விழிகளில் நேசம் வழிய அவனைப் பார்த்தாள்... அவனும் அதே போன்றதொரு மனநிலையில் தான் இருந்தான்... ஆனால் இருவரும் அதை வெளியில் காட்டி கொள்ளவில்லை...

இரவு உணவு முடிந்த பின் எல்லோருக்கும் மும்பையில் இருந்து வாங்கி வந்திருந்ததை எடுத்து கொடுத்த அழகு அதே போல் மனைவிக்கு வாங்கி வந்திருந்ததை எடுத்துக் கொண்டு தங்களது அறைக்குச் சென்றான்...

கணவனை எப்படி எதிர் கொள்வது என்று தெரியாது அவள் தனக்குள் யோசனையில் ஆழ்ந்திருந்தாள்... இனியும் அவனை விட்டு விலகியிருக்க முடியாது என்றே அவளுக்குத் தோன்றியது... அதே சமயம் அவனுக்குத் தான் நல்லது செய்யவில்லையே என்கிற தவிப்பும் அவளுள் எழுந்தது...

"மங்கை... இது எல்லாம் உனக்காக வாங்கி வந்தேன்..."

அவன் மும்பை சென்றது அவளுக்குத் தெரியும்... அதனால் அமைதியாக அதை வாங்கி அருகில் வைத்து கொண்டாள்... அவள் அருகில் அமர்ந்தவன் அவளது கையைப் பிடித்துக் கொண்டு,

"என்னால் முடியலைடி கண்ணம்மா..." என்க... அவள் திடுக்கிட்டவளாய் அவனை நிமிர்ந்து பார்த்தாள்...

"உன்னைப் பார்க்காம இத்தனை நாள் எப்படி இருந்தேன்னு தெரியலை மங்கை... மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருந்ததுடி... இனியும் நீ என்னைப் பிரிஞ்சியிருந்தா நான் செத்துருவேன்டி... நீயில்லைன்னா நான் உயிரற்ற பிணம் தான்..." என்ற கணவனை இமைக்காது பார்த்தாள் அவள்...

தனக்காக அவன் தவிப்பது குறித்து அவளுக்கு அத்தனை மகிழ்ச்சியாக இருந்தது... அவனது தவிப்பிற்கான காரணம் அவளுக்கு மெல்ல புரிய ஆரம்பித்தது...

"நம்ம குடும்பத்திற்காக நாம கல்யாணம் பண்ணி இருக்கலாம்... ஆனா இப்போ நம்ம குடும்பத்தை விட நீ தான் எனக்கு முக்கியம் மங்கை... நீ எனக்கு வேணும்... என் வாழ்நாள் முழுவதும்... இது நான் நம்ம குடும்பத்துக்காகக் கேட்கலை மங்கை... எனக்காக, நமக்காகக் கேட்கிறேன்... நீ என் கூட வந்துவிடு மங்கை... உன் மனசு கோணாமல் நான் நடந்து கொள்கிறேன்... உனக்குப் பிடிச்ச மாதிரி என்னை மாத்திக்கிறேன்..."

அதற்கு மேல் தனது மனதினை எப்படி விளக்குவது என்று தெரியாமல் அவன் அலைப்புறுதலோடு அவளைப் பார்த்தான்... அவளோ ஆனந்த கண்ணீரோடு அவனை மகிழ்வாய் பார்த்திருந்தாள்...

"இன்னும் நீ என்னைப் புரிஞ்சிக்கலையா மங்கை... நான் உன்னைத் தேடின மாதிரி நீ என்னைத் தேடலையா...?"

ஏக்கத்துடன் கேட்டவனை அடுத்த நொடி தடைகள் அகன்றவளாய் அவனை அணைத்து கொண்டாள் வலமங்கை... அவள் விரும்பிய மாதிரி அவளை அவளுக்காக மட்டுமே நேசிக்கும் கணவனது அன்பு கிடைத்து விட்டது... இதை விட வேறு என்ன வேண்டும்...

"ஐ லவ் யூடா அழகு..." என்று அவனது முகம் பற்றி விடாது முத்தமிட்டவளை அவன் பிரமிப்பாய் பார்த்தான்...

"இதை நீ கண்டுபிடிக்க இத்தனை நாளாச்சாடா...? நான் தேடலைன்னா சொல்ற... நான் உன்னை எவ்வளவு தேடினேன் தெரியுமா...? எவ்வளவு மிஸ் பண்ணினேன்னு உனக்குத் தெரியுமா...?" என்று கேட்டுக் கொண்டே முத்தமிட்டவளின் அன்பில் அவன் சுகமாய்க் கரைந்தான்...

அவளது மனதின் தேடலை உணர்த்தியவளிடம் தனது தேடலுக்கான விடையைத் தேட ஆரம்பித்தான் அந்தக் காதல் கணவன்... இருவருக்குமான ஏக்கத்தினை, எதிர்பார்ப்பினை மடை திறந்த வெள்ளமாய்த் தங்களது இணையிடம் கொட்டினர்...

மண வாழ்க்கையின் மதிப்பை உணர்ந்த இரு நெஞ்சமும் காதலாய் கூடி களித்தது... முதல் தடவை போல் அல்லாது இந்தத் தடவை நிதானமாய் மலர்ந்த அவர்களது இல்லறம் இருவரின் காதலுக்குச் சாட்சியாய் என்றும் அழியாத நிகழ்வாய் அவர்களது மனதில் நிறைவாய் ஆழப் பதிந்தது...!!!

"மனசில் இவ்வளவு காதலை வச்சிக்கிட்டு ஏன்டி என்னை விட்டு பிரிஞ்சி போன...?" என்று கேட்ட அழகுவிற்கு மனைவியின் பிரிவினால் ஏற்பட்ட சுணக்கம் கொஞ்சமும் குறையவில்லை... அத்தனை மனத்தாங்கல் மனைவி மீது...

"இவ்வளவு காதல் இருந்ததால் தான்டா உன்னைப் பிரிஞ்சு வந்தேன்..." என்றாள் வலமங்கை அவனது மூக்கை பிடித்துத் திருகியபடி...

"வலிக்குதுடி ராட்சசி..."

"இதுக்கே வலிக்குதுன்னு சொன்னா எப்படி...? இனிமேல் தான் நம்ம வாழ்க்கையில் நிறைய அடிதடி காட்சிகள் அரங்கேற இருக்கிறது..." என்று நமட்டு சிரிப்புடன் கூறியவளை பார்த்து முறைக்க முயன்று தோற்றவன்,

"பதில் சொல்லுடி என் குள்ளச்சி..." என்று அவளது தலையில் வலிக்காது குட்டினான்...

"டேய்..." என்று தலையைத் தடவியபடி அவனைப் பார்த்து அவள் கோபமாய் முறைக்க...

"நீ சொன்ன அடிதடி கணக்கில் இதையும் சேர்த்துக்கோ..." என்று அமர்த்தலாகக் கூறியவனை உண்மையில் அடி மொத்தினாள் அவனது செல்ல மனையாட்டி...

"அடிக்கிறதுக்கான ஏகபோக உரிமை இந்த வலமங்கைக்கு மட்டும் தான் இருக்கு..."

கோபத்தில் புஸ்புஸ் என்று மூச்சிரைத்து கொண்டிருந்தவளை இழுத்து அணைத்து கொண்டவன், "சரி அப்படின்னா அணைக்கிறதுக்கு ஏகபோக உரிமை எனக்கு மட்டுமே..." என்று அவளைச் சமாதானப்படுத்தும் விதமாக அவன் அவசர உடன்படிக்கையைப் போட...

"அட... இது நல்லாயிருக்கே..." என்று அவனது நெஞ்சில் சுகமாய்ச் சாய்ந்து கொண்டாள் அவனது தித்திக்கும் எதிரி...

சிறிது நேரம் அமைதியாக இருந்தவள் அவனை ஏறிட்டு பார்த்து, "ஏன் பிரிஞ்சு வந்தேன்னு உனக்குத் தெரியணுமா...?"

அவன் ஆமென்று தலையாட்டினான்...

"நீ ரேஷ்மிக்கா கூடச் சேரணும்ன்னு தான் நான் பிரிஞ்சு வந்தேன்..." என்றவளை முறைத்து பார்த்தவன்,

"இப்போ உண்மையில் உன்னை அடிக்கப் போகிறேன்..." என்றவனது கரங்கள் அவளை அடிக்காது அவளை இறுக அணைத்துக் கொண்டது...

"இது தான் நீ அடிக்கும் லட்சணமா அழகு..." என்று கிண்டலடித்தவள் அவனது அணைப்பில் வாகாய் அடங்கிக் கொண்டாள்...

"உண்மை தான் அழகு... இதுவரை உனக்குன்னு நீ வாழ்ந்தது இல்லை... உங்கப்பாவுக்காக உன்னுடைய விருப்பத்தை எல்லாம் மனசுக்குள் புதைச்சு வச்சிக்கிட்டு

வாழ்ந்து வந்த... கடைசியில் உன் காதலையும் உங்கப்பாவுக்காகப் புதைச்சிட்டு என் கழுத்தில் தாலி கட்டியது எனக்கு ரொம்ப வருத்தமா இருந்ததுடா... உன்னைக் கண்டு பாவமா இருந்தது... நீ விரும்பியது உனக்குக் கிடைக்கணும்ன்னு நான் நினைச்சேன்... அதனால் தான் விலகி வந்தேன்..."

மனைவி மனதில் இருப்பதைக் கூற கூற அவனுக்கு அவள் மீது காதல் அதிகரித்தது... இன்னமும் அதிகமாய் அவளைக் காதலிக்கத் துவங்கினான்...

"நல்லா இருக்குடி நீ சொல்றது... எங்கப்பா கிட்ட என்னை அடி வாங்க வைக்காம நீ ஓய மாட்டேன்னு நினைக்கிறேன்... அன்னையில் இருந்து இன்னைக்கு வரைக்கும் என்னைப் போட்டு கொடுத்து அடி வாங்கிக் கொடுக்கிறதை மட்டும் ஒழுங்கா செஞ்சிக்கிட்டு இருக்க..."

"அச்சோ... இது தெரிஞ்சா மாமா உன்னை அடிப்பாராக்கும்..."

"பின்னே கொஞ்சவா செய்வார்..." என்றவன் அவளைக் கொஞ்சினான்...

"அப்படி எல்லாம் அவர் உன்னை அடிக்க நான் விட மாட்டேன்... உனக்குப் பிடிச்ச வாழ்க்கையை நீ வாழ உனக்கு உரிமை இருக்குன்னு மாமா கிட்ட எடுத்து சொல்வேன்... நீ என்ன சின்னக் குழந்தையா...? இன்னமும் உன்னை உருட்டி மிரட்டிக்கிட்டு இருக்கிறதுக்கு..."

தன்னுடைய நலத்தைப் பேணும் மாமன் மகளை அழகு இன்னமும் இறுக்கமாய் அணைத்துக் கொண்டான்...

"டேய் விடுடா... மூச்சு திணறுது..." என்றவள் அவனது பிடியில் இருந்து திமிறி விலகி அமர்ந்தாள்...

"எங்கேடி போகிற குள்ளச்சி...?" என்றபடி அவளை மீண்டும் அணைத்துக் கொண்டான் அவன்...

"ரொம்ப இறுக்காதேடா கருவாயா..." அவளது வாய் சொன்னாலும் அவனது அணைப்பில் மீண்டும் அவள் அடங்கிக் கொண்டாள்...

"உண்மையைச் சொல்லு அழகு... நீ ரேஷ்மிக்காவை காதலிக்கல...?"

தனது விழிகளைப் பார்த்து கேட்டவளின் கண்களை நேராக நோக்கியவன்,

"இல்லை மங்கை... இதோ இப்போ உன்னைப் பிரிஞ்சப்போ உணர்ந்த மாதிரி அவளிடத்தில் நான் உணரலை மங்கை... நீ இல்லைன்னா வாழ்க்கை இல்லைன்னு நினைக்க வச்சது நீ மட்டும் தான்... இந்த ஒரு மாத காலமும் நமக்குள் நடந்த அந்த ஒரு நாள் உறவை நினைச்சு தான் நான் வாழ்ந்துக்கிட்டு இருந்தேன்... எத்தனை நிறைவான வாழ்க்கை அது தெரியுமா... வாழ்நாள் முழுமைக்கும் அந்த ஒரு நாள் வாழ்ந்தது போன்று ஒரு திருப்தி..."

கணவன் சொன்னதைக் கண்ணிமைக்காது கேட்டவளின் உள்ளம் உருகியது... அவளும் இது போன்று தானே நினைத்தாள்... அவளும் அந்த ஒரு நாளை நினைத்துக் கொண்டு தானே மீதமிருந்த இத்தனை நாட்களைத் தைரியத்துடன் கடந்து வந்தாள்...

"நானும் அது போல் தான்டா அழகு..."

"அப்படி இருந்தும் ஏன்டி இப்படி ஒரு முடிவு எடுத்த..." இன்னமும் அவனது முகத்தில் இருந்த வருத்தம் மறையவில்லை...

"அது வந்து..." என்று இழுத்தவளை பார்த்தவன்,

"எதுவாக இருந்தாலும் சொல்லிரு மங்கை... உன் மாமன் உன்னை மாதிரி எல்லாம் அறிவாளி கிடையாது... கொஞ்சம் ட்யூப் லைட்டு..."

"ஐய்... இப்பவாவது உண்மையை ஒத்துக்கிட்டியே அழகு..." என்று குதூகலமாய்க் குதித்தவளை கண்டு புன்னகை

புரிந்தவன்,

"உண்மை தான் மங்கை... உன்னை மாதிரி எல்லாம் எனக்கு யோசிக்கத் தெரியாது..."

"மாமோய்... இந்த லட்சணத்தில் நீ எனக்காக யோசிக்கிறியா...?" என்று கிண்டலுடன் கேட்டவளை கண்டு அவன் சரணடைந்தான்...

"அம்மா தாயே... இனி எனக்குப் பதிலா நீயே யோசிச்சிக்கோ... இனி நான் யோசிக்கவே இல்லை..." என்று அவன் இரு கரம் கூப்பி அவளை வேண்ட...

"யாம் வரம் அளித்தோம் பக்தா..." என்று அவள் ஆசிர்வாதம் செய்வது போல் வலக்கையை உயர்த்தினாள்...

"அடிங் குள்ளச்சி..." என்று அவன் அவளை அடிக்க வர... சிறிது நேரம் அங்குக் காதல் யுத்தம் நடைப்பெற்றது...

மூச்சு வாங்க அவனிடம் இருந்து விலகியவள், "நீ ரொம்ப மோசம் அழகு..." என்று சிணுங்கலாய் கூறியவளை பார்த்து அவன்,

"ஹா... ஹா..." என்று வில்லன் சிரிப்புச் சிரித்தான்...

அவன் சிரிப்பதை ஆசையுடன் பார்த்து கொண்டிருந்தாள் அவள்...

"என்னை உனக்கு எவ்வளவு பிடிக்கும் அழகு...?"

அவள் திடுமெனக் கேட்டதில் அவன் தனது சிரிப்பை நிறுத்தி விட்டு அவளைக் கூர்ந்து பார்த்தான்... இவ்வளவு நேரம் இருந்த விளையாட்டுத்தனம் மறைந்து ஒருவித தவிப்பு அவளது முகத்தில் தெரிந்தது...

"இங்கே வா..." என்று அவன் இரு கரம் நீட்டி அவளை அழைக்க... அவள் நாய்க்குட்டியாய் அவன் கைகளில் சரண் புகுந்தாள்...

"இங்கே பார் மங்கை... இது போன்றதொரு பேச்சு இன்று மட்டும் தான் நாம் பேசணும்... இதுக்குப் பின்னாடி நீ இப்படி ஒரு கேள்வி கேட்கவே கூடாது... எங்கப்பா கட்டாயத்துக்காகவும், கெஞ்சியதற்காகவும் தான் நான் உன்னைக் கல்யாணம் பண்ணினேன்... அது இல்லை என்பதற்கு இல்லை... அப்போது என் கண் முன் இருந்தது நம் குடும்பம் மட்டும் தான்... அப்பா, மாமாவுக்காகத் தான் நான் இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டேன்... அப்போ அந்த நேரம் நீ கூடப் பின்னுக்குப் போயிட்ட..."

அன்றைய நாள் நினைவுகள் இருவரின் மனதிலும் எழுந்ததோ என்னவோ... அங்கே சிறிது நேரம் கனத்த மௌனம் நிலவியது... அந்தக் கணத்தின் கனத்தில் அவனது தந்தை ஏன் அவனிடத்தில் கெஞ்சினார் என்பதை அவள் கேட்க மறந்து போனாள்...

"நீ விவாகரத்து கேட்டப்போ நான் கொஞ்சம் ஆடித்தான் போனேன்... உன் மேல் கோபம் வந்தது... கல்யாணம் என்பது உனக்கு விளையாட்டா போயிருச்சான்னு..."

"நான் அப்படிச் சொன்னதுக்குக் காரணம் நீ தான் அழகு... உனக்குப் பிடிச்ச வாழ்க்கையை நீ வாழணும்ன்னு நான் நினைச்சேன்... வேறு எந்தக் காரணமும் இல்லை..." என்றாள் அவள் தலையைக் குனிந்து கொண்டு...

அவளது முகத்தை நிமிர்த்தியவன், "என்னை உனக்குப் பிடிக்கலையோன்னு நான் நினைச்சேன்... தேவதை மாதிரி இருக்கிற உனக்கு ஐய்யனார் மாதிரி கருப்பா இருக்கிற நான் பொருத்தம் இல்லையோன்னு நீ நினைக்கிறதா நினைச்சு மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருந்துச்சு..."

அவனைப் பார்த்து முறைத்தவள், "என்னைத் தேவதைன்னு சொன்னதால் நீ பிழைச்ச... இல்லைன்னா மவனே, இப்படி நினைச்சதுக்கு உன்னைக் கொன்னு இருப்பேன்..." என்று கண்களை உருட்டி போலியாக மிரட்டிய மனைவியைக் கண்டு காதல் அதிகரித்தது அவனுக்கு...

"நான் கருப்பா இருக்கேன்னு உனக்கு வருத்தமாக இல்லையா மங்கை..."

"இல்லையே..." என்று அவனது கழுத்தில் கரம் கோர்த்து அவனது முகத்தைத் தன் முகம் அருகே இழுத்து காதலாய் பார்த்தவளை கண்டு அவனது மனம் மயங்கி தான் போனது...

"பின்னே ஏன்டி பிரிஞ்சி போன...? உனக்கு எத்தனை தடவை சொன்னேன்... என் மனைவின்னா நீ மட்டும் தான்னு..."

"அது வந்து அழகு..."

"இன்னும் என்னடி இழுவை...?" என்றபடி விளையாட்டாய் அவளது நெற்றியில் முட்டினான்...

"அன்னைக்குத் தியேட்டரில் படம் பார்க்க போனோமே... அப்போ..."

அன்றைய நாளின் நினைவில் நெற்றியை சுருக்கி அவளை யோசனையாய் பார்த்தான் அவன்...

"அன்னைக்கு ரேஷ்மிக்கா உன் கையைப் பிடிச்சிக்கிட்டு..."

மேலே சொல்ல முடியாது வேதனையுடன் பார்த்தவளை ஆறுதலாய் அணைத்து கொண்டவன்,

"நான் தான் ஏற்கெனவே சொல்லிட்டேனே மங்கை... உன் மாமனுக்கு உன்னைப் போல் அறிவு கிடையாதுன்னு... அன்னைக்கு ஏதோ வயது கோளாறில் அப்படி நடந்துக்கிட்டேன்..."

"அப்போ ரேஷ்மிக்கா உன் கையில் முத்தம் கொடுத்தாங்களா..." என்றவள் அவனது முகத்தினைப் பார்த்தாள்...

அவளது விழிகளில் தெரிந்த வலியில் அவன் மனதிற்குள் செத்துப் போனான்...

"சாரிடி..." அவனால் மன்னிப்பை மட்டுமே வேண்ட முடிந்தது...

"பரவாயில்லை விடு அழகு..." என்றவள்,

"பதிலுக்கு நீயும் அவங்களைக் காதலாய் பார்த்து சிரிச்சிக்கிட்டு இருந்த... நீயே சொல்லு... அதை நான் எப்படி எடுத்துக்கிறது...? அதனால் தான் நீ அவங்களை உயிருக்கு உயிராய் காதலிக்கிறதா நான் நினைச்சேன்... உனக்காக உன் காதலை உனக்குத் திரும்பக் கொடுக்க நினைச்சேன்... உனக்காக என் வாழ்க்கையை விட்டு கொடுக்க நினைச்சேன்..."

அவள் பேச பேச அவனது வருத்தம் மறைந்து முகத்தில் புன்னகை படர்ந்தது...

"அதே சமயம் நீயும் கடமைக்காக, குடும்பத்துக்காக வாழ்வோம்ன்னு சொன்னதும் மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருந்துச்சு... அதனால் தான் மொத்தமா விலகி வந்து விடலாம்ன்னு இருந்தேன்... ஆனா அன்றைக்கு நமக்குள் நடந்த உறவுக்குப் பின் நான் எடுத்த முடிவு ஆட்டம் காண ஆரம்பிச்சது... நீ எனக்கு மட்டுமே வேணும்ன்னு மனசுக்குள் ஏங்க ஆரம்பிச்சேன்... அது மாதிரி நீயும் நான் தான் வேணும்ன்னு என்னைத் தேடி வந்துட்ட... ஆனாலும் ரேஷ்மிக்கா பாவமில்லையா...?"

நீளமாய்ப் பேசிய மனைவியை இமைக்காது பார்த்தான் அவன்... பின்பு அவன் வாய் விட்டு சிரித்து விட்டான்...

"டேய்... நான் சீரியசா பேசிக்கிட்டு இருக்கேன்... நீ இப்படிச் சிரிச்சிக்கிட்டு இருக்க..." என்று முறைத்தவளை கண்டு,

"பின்னே காமெடி பண்ணினால் சிரிக்காம என்ன பண்ணுவாங்க... இதுக்காகவா என்னை இந்தப் பாடு படுத்தின குள்ளச்சி... இதுக்கு உன்னைப் படுத்தாம விட மாட்டேன்டி..." என்று வீர சபதமிட்டவன் அவளைப் படுத்தியதில் அவள் மகிழ்ந்து தான் போனாள்...

நிறைவாய் அவனது நெஞ்சில் சாய்ந்தவளை அவன் அணைத்து கொண்டவன், "ரேஷ்மா என் கையில் முத்தமிட்டது கூட எனக்குத் தெரியாது மங்கை..." என்றவனை அவள் ஆச்சிரியமாய்ப் பார்க்க...

"சத்தியமா மங்கை... அவள் என் கூடப் பேசிக்கிட்டு இருந்தாலும் நான் உன்னைத் தான் பார்த்துக் கொண்டிருந்தேன்... நீ சாக்லெட்டை நக்கி நக்கி சாப்பிட்ட அழகை தான் பார்த்து சிரிச்சிக்கிட்டு இருந்தேன்... அதே சமயம் யாருக்கும் கொடுக்காம நீ மட்டும் மொக்குறியேன்னு உன் மேல் கடுப்பும் வந்தது..." என்றவன்,

"கடைசியில் ஒன்றும் இல்லாத சப்ப மேட்டருக்காக என்னைப் போட்டு இந்தப் பாடு படுத்திட்டியேடி குள்ளச்சி..." என்று சோகமாக அவன் கூறிய போதும் அவனது கண்கள் அவளைப் பார்த்துச் சிரித்தது...

"நீ என்னைத் தான் பார்த்துட்டு இருந்தியா அழகு... நான் தான் உன்னைத் தப்பா நினைச்சிட்டேன் போலிருக்கு..."

"அப்பவே மாமன் உன்னைக் காதலாய் பார்த்து இருக்கேன்னா... என்னையும் அறியாமல் நான் உன்னை விரும்பி இருக்கணும்ன்னு நினைக்கிறேன்... ஆனால் அதை இப்போ நல்லா உணர்றேன் மங்கை..." என்றவன் அவளது நெற்றியில் முத்தமிட்டு,

"ஐ லவ் யூ கண்ணம்மா..." என்றான் காதலாக...

"அதே தான் எனக்கும் அழகு... நீ தான் எனக்குப் பார்த்து இருக்கிற மாப்பிள்ளைன்னு சொன்னப்போ நான் உன்னை நினைச்சு தான் கவலைப்பட்டேனே தவிர... என்னை நினைச்சு கவலைப்படவில்லை... உன்னை வெறுக்கவும் இல்லை... உன்னை என் கணவனா முழு மனசுடன் ஏத்துக்கிட்டேன்டா..."

"அதான் ஏற்கெனவே எனக்குத் தெரியுமே... எனக்காக என்னை விட்டு பிரியணும்ன்னு நினைச்ச நீ என்னைப்

பத்தி ஒரு வார்த்தை குறை கூற உனக்கு மனசு வரலையே... உன் இடத்தில் வேறு ஒரு பொண்ணு இருந்திருந்தா இந்நேரம் எங்கப்பா கிட்ட பஞ்சாயத்து வச்சு என்னை நாறடிச்சு இருந்திருப்பாள்..."

"ச்சீ, ச்சீ... நான் அப்படி எல்லாம் செய்ய மாட்டேன்... எங்கே இருந்தாலும் நீ நல்லா இருக்கணும்ன்னு தான் நான் நினைச்சேன்..."

"உன்னோட இந்த நல்ல மனசு தான்டி இந்த ஒரு மாசமா என்னைத் தூங்க விடாம பண்ணுச்சு... உன்னைத் தேடி வரவழைச்சது... இனி எந்தச் சந்தேகமும் இல்லையே கண்ணம்மா... உன் மாமன் உனக்கு மட்டும் தான்..."

"எந்தச் சந்தேகமும் இல்லை..." என்றவளை அணைத்து வாசம் பிடித்தவன்,

"ஆனா எனக்கு நிறையச் சந்தேகம் இருக்கே..."

"என்னதுடா...?"

அவன் தனது சந்தேகத்தினை அவளின் காதில் ரகசியமாய்க் கூற, "டேய் அழகு... வேண்டாம்டா..." என்று அவள் போலி பயத்துடன் பின்னால் செல்ல...

"எனக்கு வேணுமே..." என்றவன் அவளை இழுத்து அணைத்துக் கொண்டு தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தான்...

"டேய்... உன் கருப்பு எல்லாம் என் மேல் ஒட்ட போகுது..."

"ஒட்டினால் ஒட்டிட்டு போகட்டும்... நானே உனக்குச் சோப் போட்டு நல்லா தேய்ச்சு குளிப்பாட்டி விடறேன்..." என்று கண்சிமிட்டி சிரித்தவனின் வாயில் பட்டென்று அடி போட்டவள்,

"பேட் பாய்..." என்க...

"எல்லாக் கணவனும் மனைவியிடத்தில் பேட் பாய் தான்ம்மா..." என்றவன் தனது சந்தேகத்தினைத் தீர்க்க

எண்ணி அவளது முகம் நோக்கி குனிந்தான்...

அவள் விழிகளை மூடி அவனை மௌனமாக உள்வாங்கிக் கொண்டாள்...

மறுநாள் காலையில் அறை கதவு தட்டப்படும் சத்தத்தில் விழித்த மங்கை தூக்க கலக்கத்துடன் எழுந்து வந்து அறை கதவை திறந்தாள்... அங்கு நின்று கொண்டிருந்த அன்னையைக் கண்டு,

"என்னம்மா நீ...? இவ்வளவு நேரம் அழகு தூங்க விடலை... இப்போ நீ..." என்று தரையில் காலை உதைத்துக் கொண்டு சிணுங்க...

"சரி கண்ணு... இந்தக் காபியை குடிச்சிட்டு நீ போய்த் தூங்கு..." என்று வாஞ்சையுடன் கூறியவர் அவளின் கைகளில் காபி தம்பளர்கள் அடங்கிய தட்டை வைத்து விட்டு அகன்று சென்று விட்டார்...

அன்னையில் செயலில் வலமங்கையின் தூக்கம் பறந்தோடியது... ஆச்சிரியமாய் விழி விரித்து நின்றாள் அவள்... இவர்களது பேச்சுச் சத்தத்தில் கண் விழித்த அழகு, மாமியாரிடம் மனைவி ஏதாவது ஏடாகூடமாக உளறி விடக் கூடாதே என்கிற அக்கறையில் அங்கு விரைந்து வந்தான்... அதற்குள் சித்ரவேணி சென்று விட அவன் கதவை சாத்தி தாள் போட்டு விட்டு அவளது கைகளில் இருந்த காபி தம்பளர் அடங்கிய தட்டை அருகில் இருந்த மேசை மீது வைத்தவன்,

"நான் உன்னைத் தூங்க விடலையா...?"

இரு கைகளையும் கட்டி கொண்டு தலை சாய்த்தபடி கேட்டவனைக் கண்டு அசடு வழிந்தவள், "அது வந்து அழகு..." என்று தலையைச் சொறிந்து அசடு வழிந்தாள் அவனது செல்ல மனையாட்டி...

"அது வரும் போது வரட்டும்... இப்போ நீ வா..." என்றவன் அவளை அள்ளி எடுத்துக் கொண்டான்...

"ம்... ம்... நீ ரொம்ப மோசம் அழகு..." என்று சிணுங்கியவளை அதற்கு மேல் அவன் பேச அனுமதிக்கவில்லை...

*******************

'ஐயோ.... இன்னைக்குன்னு பார்த்து என்ன ஏழரையைக் கூட்டி வச்சேன்னு தெரியலையே... இப்போ எதுக்கு என்னைக் கூப்பிட்டு விட்டிருக்கான்...' என்று டென்சனோடு நகத்தைக் கடித்துக் கொண்டு அழகுவின் அறை நோக்கி வலமங்கை நடந்தாள்...

இப்போது அலுவலகத்தில் அவளது அணி தலைவன் அவளது கணவன் தான்... மனைவி என்கிற கருணையைக் கொஞ்சம் கூட அவனிடம் எதிர் பார்க்க முடியாது... அவள் ஏதேனும் தவறு செய்தால் அவளை அப்படித் திட்டி தீர்த்து விடுவான்... அவன் திட்டுகிறான் என்பதற்காகவாவது அவள் ஒழுங்காக அக்கறையாக வேலை செய்யலாம்... என்ன செய்தாலும் ஏதாவது ஒரு சிறு விசயத்தில் அவள் சறுக்கி அவனிடம் திட்டு வாங்கி விடுவாள்...

அப்போது எதிரில் வந்த ரேஷ்மாவை கண்டதும் தனது டென்சனை கொஞ்சம் தள்ளி வைத்து விட்டு அவளைப் பார்த்துக் கண் சிமிட்டி சிரித்தவள்,

"என்னக்கா... நேத்து ராத்திரி தூங்கலை போலிருக்கு... இப்படிக் கண் எல்லாம் சிவந்திருக்கு..." என்று குறும்பாகக் கேட்க...

"போடி அந்தப் பக்கம்... அரட்டை, எப்ப பாரு கிண்டல் பண்ணிக்கிட்டு..." என்று வெட்கத்துடன் சிரித்தபடி அங்கிருந்து நகர்ந்தாள் ரேஷ்மா...

ரேஷ்மாவிற்குத் திருமணமாகி இப்போது தான் இரண்டு மாதங்களாகி இருந்தது... இப்போது அவள் வலமங்கைக்கு நல்ல தோழி...

"எக்ஸ்க்யூஸ் மி..." என்று அனுமதி கேட்டு உள்ளே நுழைந்த மனைவியைக் கண்டு அழகுவிற்கு அப்படியொரு கோபம்

வந்தது...

வேலையில் தவறு செய்து விட்டு அதை எவ்வளவு தைரியமாக அவனது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைப்பாள் என்று...

"உட்காருங்க மிஸஸ். வலமங்கை..." என்று தன் முன்னிருந்த நாற்காலியை அவன் சுட்டி காட்டினான்...

'வீட்டுக்கு வந்து கண்ணம்மா, கண்ணம்மா கொஞ்சும் போது உன்னைக் கவனிச்சிக்கிறேன்டா... வலமங்கையாம் வலமங்கை...' மனதிற்குள் கணவனை வறுத்தெடுத்தபடி அவள் அமர்ந்தாள்...

"உங்க மனசில் என்ன நினைச்சிக்கிட்டு இருக்கீங்க...?"

'உன்னைத் தான்டா பக்கி...'

"இப்படிக் கவனம் இல்லாமல் வேலை செய்தால் கூடிய சீக்கிரம் நிரந்தரமாக வீட்டில் உட்கார வேண்டியது தான்..."

'அப்படியா சொல்ற... இரு இரு உனக்குச் சமையல் பண்ணி போட்டு உன்னை டார்ச்சர் பண்றேன்...'

அவளுக்கு இன்னமும் உப்புக்கும், சர்க்கரைக்கும் வித்தியாசம் தெரியாது... அது போல் துவரம் பருப்புக்கும், கடலை பருப்புக்கும் வித்தியாசம் தெரியாது...

அடுத்து கடந்து சென்ற சில மணி துளிகள் கணவன் திட்டிய திட்டை அமைதியாக வாங்கிக் கொண்டு தனது இடத்திற்கு வந்து அமர்ந்தாள் வலமங்கை...

அவள் சென்றதும் அழகு தலையில் கை வைத்தபடி அமர்ந்து விட்டான்... இன்று தனக்குச் சேதாரம் அதிகம் என்பது மனைவியின் அமைதியில் அவனுக்குத் தெரிந்து போனது... எவ்வளவோ சமாளித்து விட்டோம் இதைச் சமாளிக்க மாட்டாமோ என்று தைரியமாக மனதை தேற்றிக் கொண்டான் அவன்...

தித்திக்கும்...!!!

அன்றிரவு அழகு வேலை முடிந்து வீட்டிற்கு வந்த போது வீடு நிசப்தமாக இருந்தது... அதிலேயே தெரிந்து போனது அவனுக்கு இன்று ஏழரை என்று... அவனுக்கு முன்னமே வீட்டிற்கு வந்த அவனது மனையாள் கட்டிலில் படுத்து உறங்கி போயிருந்தாள்...

"மங்கை... மங்கை..." என்று அவன் அவளை எழுப்ப துவங்க...

அவளோ அசையாது படுத்திருந்தாள்... அதிலேயே தெரிந்தது அவன் வரவு உணர்ந்து அவள் விழித்து விட்டாள் என்று...

"சாரி மங்கை... நீயும் அப்படித் தப்புப் பண்ணியிருக்கக் கூடாது தானே..."

அதைக் கேட்டு சட்டென்று எழுந்து அமர்ந்தவள், "அதுக்குன்னு என்ன வேணும்ன்னாலும் திட்டுவியா...? எனக்கு அறிவு இல்லைன்னு நீ எப்படித் திட்டலாம்...?"

"உண்மையைச் சொன்னதுக்கு இத்தனை அக்கப்போரா...?" என்றவனை முறைத்து பார்த்தாள் அவனது மனையாட்டி...

"சரி சரி... நமக்குள் இது எல்லாம் சகஜம் தானே... இப்போ எழுந்து வா சாப்பிடலாம்..."

அவன் கூறியதும் விசம சிரிப்புடன் அவள் எழுந்தாள்... அதைப் புரிந்து கொண்டவன் போல் அவனது புன்னகையும் விரிந்தது...

வலமங்கை உணவு மேசையில் உணவை எடுத்து வைத்து விட்டு அவனை அழைத்தாள்...

"கொஞ்சம் இரு மங்கை..." அவன் சொல்லும் போதே வீட்டின் அழைப்பு மணி ஒலித்தது...

"இந்நேரம் யார்...?" என்று முனங்கியபடி முன்னறைக்கு வந்தவள் அங்கு அழகு பீட்சா வாங்குவதைக் கண்டு

அவனை முறைத்தபடி நின்றாள்...

அதை வாங்கிக் கொண்டு திரும்பியவன் அவளைக் கண்டு முதலில் திகைத்துப் பின் அசடு வழிந்தபடி,

"உனக்கு இருக்கிறது ஒரே ஒரு புருசன்... உப்பில்லாத காயும், உரப்பான குழம்பும் சாப்பிட எனக்குத் தெம்பு இல்லைம்மா... அதனால் இன்று பீட்சா மட்டும் போதும்..." என்று அவளைப் பார்த்து கும்பிடு போட்டான் கையிலிருந்த பீட்சாவோடு...

கொஞ்சமும் வெட்கம் இல்லாது, "முதலில் எனக்குத் தான்..." என்று அவனது கைகளில் இருந்த பீட்சாவை பிடுங்கி கொண்டு அவள் உள்ளே ஓட... அவனும் பின்னேயே அவளை விரட்டி கொண்டு ஓடினான்...

இரவு உணவு முடிந்து வந்தவன் மடிகணினியை உயிர்ப்பித்துக் கொண்டு வேலையில் அமர்ந்து விட... அவனது அருகில் வந்து அவனது முதுகு புறமாய்க் கட்டி அணைத்து கொண்டவள்,

"அழகு... எப்போதும் வேலை தானா...? வர வர நீ என்னைக் கவனிப்பதே இல்லை... பேசாம உன்னை டிவோர்ஸ் பண்ணிரலாமான்னு யோசிக்கிறேன்..."

"முதல்ல அதைச் செய்டி குள்ளச்சி... உன் வேலையையும் சேர்த்துப் பார்க்கிற கொடுமை எனக்குக் குறையும்... ஆபிசில் உன்னைத் திட்டி விட்டு வந்து வீட்டில் உனக்கும் சேர்த்து வேலை பார்த்து கொடுக்கிறேன்ல... நீ இதுவும் பேசுவ... இன்னமும் பேசுவ..."

"ஹி... ஹி... அது என்னவோ உண்மை தான் அழகு... உன்னை மாதிரி அப்பாவி புருசன் கிடைக்க மாட்டான்... அதனால் எனக்கு நீ மட்டும் போதும்..." என்றவள் அவனது காது மடலை கடித்து முத்தமிட....

"ஏய்... ஒழுங்கா வேலையைப் பார்க்க விடுடி..." என்று அவளை விலக்கியவன் வேலையில் கவனமாக...

"போடா..." என்று பழிப்பு காட்டியபடி அவள் படுத்து கொண்டாள்...

அவனோ சிரித்தபடி வேலையில் ஆழ்ந்து போனான்... இன்று அவள் சொதப்பி வைத்த வேலையை எல்லாம் அவன் சரி செய்து முடித்து விட்டு நிமிர்ந்த போது மணி ஒன்றை கடந்திருந்தது... மடி கணினியை அணைத்து விட்டு மனைவி அருகில் வந்தவன் அவளை அணைத்துக் கொண்டு தூங்க முற்பட்டான்...

அந்நேரம் அவளது கரங்கள் அவனது கழுத்தில் மாலையாகக் கோர்த்தது...

"கருவாயா... தூக்கமா...? ஆனால் எனக்குத் தூக்கம் வரவில்லையே..."

அவளது கிசுகிசுப்பான குரலில் அவனது தூக்கம் பறந்தோட,

"தூக்கத்தை விட எனக்கு என் பொண்டாட்டி தான் முக்கியம்..." என்று அவனும் அவளை அணைத்துக் கொண்டான்...

மறுநாள் காலையில் இருவரும் தாமதமாக எழுந்தனர்... அதனால் அடித்துப் பிடித்துக் கொண்டு அலுவலகத்திற்குக் கிளம்பினர்...

"ஏன்டி... சட்னியில் உப்பு போட மறந்துட்டியா...? வாயில் வைக்க முடியலை..."

"உப்புப் பக்கத்தில் தானே இருக்கு... எடுத்து போட்டுக்கோயேன்... அப்படியே பாத்திரத்தில் உள்ள சட்னியிலும் உப்பு போட்டிரு... எனக்கு உப்பு இல்லாம சாப்பிட முடியாது..." தலையை வாரி கொண்டே அவள் அறையில் இருந்து கத்தினாள்...

"குள்ளச்சி இவளை..." பல்லை கடித்தாலும் அவள் சொன்னதைச் செய்ய அவன் மறக்கவில்லை...

"வந்து சாப்பிடு மங்கை... இன்னமும் என்ன பண்ற...?" அந்த அவசரத்திலும் அவன் அக்கறையாய் அவளை உண்ண அழைத்தான்...

"வர்றேன்... வர்றேன்..." என்றவள் இன்னமும் வந்த பாடில்லை...

அவனே இட்லியை எடுத்துக் கொண்டு அறையை நோக்கி சென்றான்... அங்கே எதையோ தேடி கொண்டிருந்த மனையாளை கண்டு,

"அப்படி என்னத்தடி தேடுற...?"

இட்லியை பிட்டு அவளது வாயில் வைத்தபடி அவன் கேட்க... அதை அவள் சுவைத்துக் கொண்டே,

"இன்னும் கொஞ்சம் உப்பு போட்டு இருக்கலாம் அழகு..." என்று கூற...

அவன் அவளை முறைத்துப் பார்த்ததும், "என்னோட க்ளிப்பை தேடுறேன்டா..." என்று அவள் சமாளித்தாள்...

"அது அப்போ எனக்கு ரொம்ப டிஸ்டர்ப்பா இருந்ததுன்னு நான் தான் அதைக் கழட்டி வச்சேன்..." என்றபடி அவன் படுக்கையின் ஓரம் சொருகி வைக்கப்பட்டு இருந்த க்ளிப்பை எடுத்து அவளிடம் நீட்டினான்...

அதிகாலை நினைவில் இருவரது விழிகளும் இனிமையோடு சந்தித்துக் கொண்டது... அழகிய கனவு மலர்ந்தது இருவருள்ளும்...

"இன்னைக்கு லீவு போடலாமா கருவாயா..."

அவனது சட்டை பொத்தானை திருகியபடி அவள் அவனைக் கண்டு மையலாய் கண் சிமிட்டினாள்...

"அடிங்... அங்கே அவ்வளவு வொர்க் பெண்டிங்கில் இருக்கு... உனக்கு லீவு கேட்குதா...?"

"ம்க்கும்... இந்தக் கொடுமைக்குத் தான் டீம் லீடரா புருசன் இருக்கக் கூடாதுங்கிறது... அதுவும் நீ இருக்கிறியே கருவாயா... ரொம்ப மோசம்..." என்று பழிப்பு காட்டியபடி கண்ணாடி முன் நின்றவள் க்ளிப்பில் தனது முடியினை அடக்கினாள்...

"ஒரு வேலையை ஒழுங்கா செய்ய முடியலை... இதில் வாய் வேறு..." என்று அவளை அதட்டி உருட்டி கிளப்பிக் கொண்டு அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றான்...

அலுவலகத்தில் இறங்கியவள் அவனது தலையில் நறுக்கென்று குட்டி விட்டு, "பை கருவாயா..." என்று காற்றாகப் பறந்து செல்ல...

"குள்ளச்சி..." என்று பல்லை கடித்தபடி வலியில் தலையைத் தடவினான் அந்தப் பாவப்பட்ட கணவன்...

இது போல் இனிமேலும் அவர்களது காதல் வாழ்க்கை அடிதடியும், நகைச்சுவையும் கலந்து இனிமையாகச் செல்லும் என்பது உறுதி...

********************

ஐந்து வருடங்களுக்குப் பிறகு...

"உங்க எல்லோரையும் விட்டுட்டு நான் எப்படி இருப்பேன்..." என்று மூக்கை சிந்தியபடி சென்னை விமான நிலையத்தை வெள்ள அபாய எச்சரிக்கை விடும் அளவுக்குத் தனது கண்ணீரால் மூழ்கடித்துக் கொண்டிருந்தாள் வலமங்கை...

அழகுவிற்குப் பதவி உயர்வோடு அவனது வேலையை அமெரிக்காவிற்கு மாற்றி இருந்தனர்... அங்குச் செல்வதற்குத் தான் வலமங்கை இத்தனை ஆர்ப்பாட்டம் பண்ணி கொண்டிருந்தாள்...

"அப்பா... அம்மா சின்னப் பிள்ளை மாதிரி பிஹேவ் பண்றாங்க... சூப்பி வாங்கிக் கொடுங்க..."

அழகின் கரத்தில் இருந்த அவர்களது நான்கு வயது மகன் கிரண் என்கிற சண்முகநாதன் தனது அன்னையைப்

பார்த்து கிண்டலடித்தான்... பெற்றோரை கொண்டு உருவத்தில் மட்டுமல்லாது குணத்திலும் அவர்களைக் கொண்டு பிறந்திருந்தான் அவன்... அத்தனை சுட்டி அவன்...

"ஹா... ஹா... கட்டாயம் வாங்கிக் கொடுத்திடலாம்..." என்று மகனுடன் சேர்ந்து சிரித்தான் அழகு...

"டேய்... அப்பாவுக்கும் மகனுக்கும் என்னடா சிரிப்பு வேண்டியிருக்கு... இங்கே என்ன காமெடி ஷோவா நடக்குது..." என்று கோபமாய்க் கேட்ட வலமங்கையைக் கண்டு நமட்டு சிரிப்புடன் இருவரும் பார்த்து கொண்டனர்...

அந்நேரம் அவன் அருகில் வந்த பொன்னுரங்கம், "மருமகனே... உன்னை நினைச்சு பெருமையா இருக்குய்யா... வசதி இல்லை, அமெரிக்கா வாழ்க்கைக்கு ஒத்து வர மாட்டாள்ன்னு தான் நாச்சியோட அத்தை அவளை நிராகரிச்சாள்... ஆனா நீ அதே அமெரிக்காவுக்கு என் பொண்ணைக் கூட்டிட்டு போகிற பாரு... அங்கே நிற்கிறய்யா நீ..."

"மாமா... மங்கை உங்க பொண்ணு மட்டும் இல்லை... என் மனைவியும் கூட... அவளைக் கூட்டிட்டு போகாம வேறு யாரை கூட்டிட்டு போவேன்..." என்றவனைப் பெருமிதமாகப் பார்த்தார் பொன்னுரங்கம்...

திடுமென அவரது மீசையைப் பிடித்திழுத்த கிரண், "ஒரிஜினலான்னு செக் பண்ணினேன் தாத்தா..." என்று நமட்டுச் சிரிப்பு ஒன்றை உதிர்க்க...

வலி உயிர் போன போதும் பேரனை திட்டவா முடியும்...

"ஒரிஜினல் தான்டா என் பேராண்டி..." என்று பெருமையாக மீசையை முறுக்கி விட்டுக் கொண்டார் பொன்னுரங்கம்...

"ச்சு... தாத்தா கிட்ட இப்படி எல்லாம் விளையாட கூடாது கிரண்..." அழகு மகனை அடக்கினான்...

"எனக்கு இப்படி விளையாட தான் பிடிச்சியிருக்கு..." என்று கிளுக்கி சிரித்தான் அந்தச் சுட்டி குழந்தை...

ஒருவாறு எல்லோரிடமும் விடை பெற்று விமானத்தில் ஏறியமர்ந்த அழகு, "என்னோட நீண்ட நாள் கனவு நிறைவேறி விட்டது..." என்றான் சந்தோசமாய்...

இந்தப் பதவி உயர்வுக்காகக் கணவன் எத்தனை கஷ்டப்பட்டான் என்று அவளுக்குத் தான் தெரியுமே...

"இது உன் உழைப்புக்கு கிடைச்ச பரிசு அழகு..."

"இல்லையடி பெண்ணே... இது உனக்காக நான் கொடுக்கும் பரிசு..."

"அழகு..." அவள் மனம் நெகிழ கணவனைப் பார்த்தாள்...

"உன்னை அமெரிக்காவுக்குக் கூட்டிட்டுப் போகணும்ங்கிறது என்னோட கனவுகளில் ஒன்று..."

"எனக்காகவா அழகு...?"

"உனக்காக மட்டுமே..." என்று அவன் கூற...

"ஹேய்..." என்று சந்தோச மிகுதியில் அவள் உற்சாகமாய்க் கத்தினாள்...

அவளைப் பார்த்து அவர்களது மகனும் மகிழ்ச்சியில் கத்த, விமானத்தில் இருந்த மற்ற பிரயாணிகள் அவர்களை விசித்திரமாகப் பார்த்து வைத்தனர்... அதைக் கண்டு சிரிப்பை அடக்கி கொண்ட போதும் அவர்களது முகத்தில் மகிழ்ச்சி குறையவில்லை...

அமெரிக்கா வந்து நான்கு மாதங்கள் ஆயிற்று... அன்று வேலையில் இருந்து வரும் போதே பரபரப்புடன் வந்தான் அழகு...

"இன்று பார்ட்டிக்கு போகணும்ன்னு சொன்னேன் இல்லையா..."

"ஞாபகம் இருக்கு அழகு... அதற்கு இன்னமும் நேரமிருக்குடா..." என்றவள் மகனிடம் பால் கோப்பையைக் கொடுத்தாள்... அதே போல் கணவனுக்குக் காபி கலந்து நீட்டினாள்... அதை வாங்கிப் பருகியபடி அவன் அவளிடம்,

"அந்த டார்க் க்ரீன் கலர் ஷிபான் சேரியை கட்டிட்டு வா மங்கை..." என்றவனை அதிசயமாகப் பார்த்தாள் வலமங்கை...

"என்னடா அழகு... அதிசயமா இருக்கு... நீ புடவையைப் பத்தி எல்லாம் பேசுற..."

"ப்ளீஸ்டா கண்ணம்மா..." இறைஞ்சுதலுடன் கூறியவனைக் கண்டு வியப்பாய் இருந்த போதும் அவனது பேச்சை தட்டாது அவள் செய்தாள்...

அடர் பச்சை நிற புடவையில், முத்து அணிகலன்களுடன் தேவதை போல் தயாராகி வந்த மனைவியவளை கண்டு அவனது மனம் மயங்கியது... கணவனது பார்வையில் பாவையவள் செங்கொழுந்தாய் சிவந்து போனாள்...

"போகலாமா அழகு..." என்று முணுமுணுத்தபடி அவள் கேட்க...

அழகு ஒரு கையில் மகனை தூக்கி கொண்டு மறு கையால் மனைவியை அணைத்தபடி நடந்தான்... கணவனது அணைப்பில் பாவையவள் மேலும் சிவந்து போனாள்...

அங்குப் போனதும் தான் தெரிந்தது அது யார் வீடு என்று... அது அவளது அத்தை இராணியின் வீடு... நம் அழகு தான் அவரது முதல் மகன் ரிஷியின் மேலதிகாரி... அதனால் அவனது மகனது பிறந்தநாள் விழாவிற்கு அவன் அழகை அழைத்திருந்தான்...

வலமங்கையை இராணிக்கு அடையாளம் தெரியவில்லை... ஏனெனில் அமெரிக்கா வந்த நாளில் இருந்து அண்ணன் குடும்பத்தினரை தான் அவர் மறந்து விட்டாரே... ஆனால் வலமங்கைக்கு அவரை நன்கு அடையாளம் தெரிந்தது...

"இங்கே அழைச்சிக்கிட்டு வர்றதுக்குத் தான் இத்தனை ஆர்ப்பாட்டமா...?" என்று கணவனின் காதை கடித்தாள் வலமங்கை...

"அவர்களது பார்வையில் என் மனைவி இறங்கி போய் விடக் கூடாது இல்லையா... அதற்காகத் தான்..." என்று அவன் பதிலளித்தான்...

அதற்கு அவள் பதில் ஒன்றும் பேசவில்லை... அத்தையின் அலப்பறையைப் பற்றித் தான் அவள் கேள்வியுற்று இருந்தாளே... அவரது அலட்டல் அவளது அன்னை வாயிலாக அவள் அறிந்த ஒன்று தானே...

அங்கிருக்கும் வரை அவள் தன்னை அவரிடம் அடையாளப் படுத்திக் கொள்ளவில்லை...

கிளம்பும் முன் அழகு இராணியிடம், "எங்களை உங்களுக்கு அடையாளம் தெரிகிறதா...?" என்று கேட்க...

"இல்லையேப்பா..."

"நான் வைத்தியநாதனின் மகன்... என் மனைவி உங்களுடைய அண்ணன் மகள்..."

அதைக் கேட்டு அதிர்ந்து போய் நின்று விட்டார் இராணி... ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"அன்று நடக்காத ஒன்றை இன்று நடத்தி காட்டி விட்டானா உன் அப்பன்..." என்று வெறுப்புடன் அழகை பார்த்து கேட்டவர் அண்ணன் மகளைப் பார்த்து,

"ஏம்மா... உனக்குக் கல்யாணம் பண்ண வேறு யாரும் கிடைக்கலையா...? போயும் போயும் இவன் தான் கிடைத்தானா...?"

அவர் கேட்டதும் தான் தாமதம் வலமங்கை பொங்கி எழுந்து விட்டாள்...

"இங்கே பாருங்க... என்னைப் பேச உங்களுக்கு உரிமை இருக்கு... ஆனால் என் புருசனை பேச உங்களுக்கு உரிமை

இல்லை... ஏன் அழகுக்கு என்ன குறைச்சல்...? அவனை மாதிரி ஒரு நல்லவனை நீங்க பார்த்திருக்க முடியுமா...? புற அழகை பார்ப்பதை விட அக அழகை பாருங்க... அப்படிப் பார்த்தால் என் அழகை விட அழகன் இந்த உலகத்தில் யாருமில்லை... உங்க மகனுக்கு அழகை விட வயது அதிகம் இருக்கும்... ஆனால் அவருக்கு மேலதிகாரியா என் அழகு இருக்கிறான்னா அதற்குக் காரணம் அவனோட திறமை... அவனின் குணம், திறமை முன்னாடி நீங்க எல்லோருமே தூசு தான்... இன்னொரு தடவை என் அழகை இப்படிப் பேசி பாருங்க... அப்புறம் என் வாய் பேசாது... கை தான் பேசும்..." என்று அத்தையை மிரட்டியவள்,

"வா அழகு போகலாம்..." என்று கணவனை அழைத்துக் கொண்டு கிளம்பி விட்டாள்...

ரிஷி பின்னால் ஓடி வந்து தாயின் பேச்சிற்கு அவர்களிடம் மன்னிப்பு கேட்டான்... இது எதுவுமே அழகின் மூளையில் ஏறவில்லை... மனைவியின் வார்த்தைகளே அவனது காதில் மீண்டும் மீண்டும் ஒலித்தது... என்றோ நேர்ந்த தவறுக்கு இன்று அவனவள் தீர்ப்பு கொடுத்து விட்டாள் என்றே அவனுக்குத் தோன்றியது...

வீட்டிற்கு வந்து மகன் உறங்கும் வரை அமைதியாக இருந்த அழகு அடுத்த நொடி மனைவியைக் கைகளில் அள்ளி முத்த மழையில் குளிப்பாட்ட துவங்கினான்...

"டேய் விடுடா... மூச்சு முட்டுது..." என்று கத்தியவளை அவன் சட்டை செய்யவே இல்லை...

தன்னுள் மூழ்கி முத்தெடுக்கத் துவங்கியவனை அவளும் ஆர்ப்பாட்டமாய் அரவணைத்து கொண்டாள்... அன்றிரவு முழுவதும் தன்னைக் கொஞ்சி கொஞ்சி கூத்தாடிய கணவனது செயல் அவளுக்கு விசித்திரமாக இருந்தது...

"என்னோட அழகுக்கு என்னாச்சு..."

"ஏதேதோ ஆச்சு..." என்று கண்சிமிட்டி சிரித்தான் அவன்...

"உண்மையைச் சொல்லுடா புருசா..." என்று அவனது நெற்றியில் முத்தமிட்டு கொஞ்சி கேட்டவளிடம் அவன் உண்மையைக் கூற துவங்கினான்...

"உன் அத்தையை என்னோட அப்பா விரும்பினது உனக்குத் தெரியுமா...?"

அவன் கூறியது கேட்டு அவள் அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தாள்...

"ஆமாம் மங்கை... அவங்களைப் பிடிச்சுப் போய்த் தான் அப்பா மாமா கிட்ட சொல்ல போயிருக்கிறார்... அதுக்குள்ள மாமாவே அவங்க ரெண்டு பேரோட கல்யாண பேச்சை எடுத்ததும் அப்பாவும் ரொம்பச் சந்தோசமா சரின்னு சொல்லிட்டார்... இது வீட்டில் இருந்த பெரியவங்களுக்குத் தெரியாது... மாமா சம்மதிச்ச தைரியத்தில் எங்கப்பா உங்கத்தைக் கிட்ட தனது விருப்பத்தைச் சொல்ல, அதுக்கு அவங்க அப்பாவை ரொம்ப அவமானப்படுத்தி விட்டாங்களாம்... 'நீ ரொம்பக் கருப்பா இருக்க... வாத்தியார் வேலை பார்க்கிற உனக்கு அழகான நான் கேட்குதா... என்னோட அழகுக்கு வசதியான மாப்பிள்ளை வருவான்... நீ என் வழியை விட்டு ஒதுங்கி போன்னு...' "

"அதுக்கு அப்புறம் அப்பா மாமா கிட்ட இந்தக் கல்யாண பேச்சு வேண்டாம்ன்னு சொன்னதும் மாமாவுக்கு அப்பா மேல பயங்கரக் கோபம் வந்திருச்சாம்... என் வீட்டில் வசதி இல்லைன்னு தானே என் தங்கச்சியை வேண்டாம்ன்னு சொல்லிட்டேன்னு கோபம் வந்து அதுக்கு அப்புறம் பேசுறது இல்லையாம்... மாமா சந்தேகப்பட்ட மாதிரி அம்மாவும் அவங்களை விடக் கொஞ்சம் வசதியான இடத்தில் இருந்து வரவும் இன்னமும் பகை அதிகமாகப் போயிருச்சாம்... இதுக்காகவே எல்லாச் சொத்துக்களையும் வித்து உங்கத்தைக்கு நல்ல வசதியான இடத்தில் கல்யாணம் பண்ணி வச்சாராம் உங்கப்பா..."

"ஓ... இத்தனை நடந்திருக்கா..."

"இதுக்கு மேலயும் நடந்திருக்கு... உன்னை உங்கத்தைப் பையனுக்குக் கல்யாணம் பண்ணி கொடுக்கணும்ன்னு மாமா விருப்பப்பட்டு இருப்பார் போலும்... ஆனால் உன் அத்தை உங்க கிட்ட வசதியில்லைன்னு சொல்லி உன்னை நிராகரிச்சுட்டாங்களாம்... அந்தச் சமயத்தில் எங்கப்பா மாமா கிட்ட எனக்காக உன்னைப் பொண்ணு கேட்டு நம்ம கல்யாணத்தைப் பேசி முடிச்சார்... இதைத் தான் நாம ஊருக்கு போனப்போ அப்பா என் கிட்ட கெஞ்சி கேட்டார்... 'ஏற்கெனவே பொன்னு மனசை நான் நோகடிச்சிட்டேன்... இப்போ நீயும் எதையாவது பேசி அவன் மனசை நோகடிச்சிராதேன்னு...' அந்தக் கணம் மாமா, அப்பாக்காகத் தான் இந்தக் கல்யாணத்திற்கு நான் சம்மதிச்சேன்..."

அவன் தன்னைத் திருமணம் செய்தது, அது நிலைத்திருக்கப் பாடு பட்டது எல்லாம் ஏனென்று இப்போது அவளுக்குப் புரிந்தது... அவன் மீது காதல் அதிகரித்தது...

"ஐ லவ் யூடா மாமூ..." என்றாள் காதலாக...

“மீ டூ பொண்டாட்டி...” என்று அவளைச் சிறிது நேரம் கொஞ்சி மகிழ்ந்தவன் பின்பு,

"ஆனா அவங்க ரெண்டு பேர் பட்ட கஷ்டத்துக்கு இன்னைக்கு நீ பதிலடி கொடுத்துட்ட மங்கை..." என்றவனது வார்த்தையில் நேசத்தைத் தவிர வேறில்லை...

"அது உண்மை தானேடா..."

"எல்லாமே உனக்காகத் தான் கண்ணம்மா... சின்ன வயசில் உன் முன்னாடி அடி வாங்கி அவமானப்படக் கூடாதுன்னு நினைச்சு தான் நான் நல்லா படிக்க ஆரம்பிச்சேன்... அது போல் இப்போதும் உன்னை நல்லா வச்சுக்கணும்ன்னு தான் இந்தளவுக்கு வெறியோடு உழைக்கிறேன்... என்னோட ஒவ்வொரு வெற்றிக்கு பின்னாடியும் நீ தான் இருக்கக் கண்ணம்மா..."

அதைக் கேட்டு அவளுக்குச் சந்தோசமாக இருந்தது... ஆனாலும் முகத்தினைச் சோகமாக வைத்துக் கொண்டு,

"ஆனால் என் வெற்றிக்கு பின்னாடி நீயில்லையேடா..."

அதைக் கேட்டு அவன் அவளை முறைத்தான்...

"நான் சொல்றதை எதையாவது நீ கேட்கிறியா...? இதோ இப்போது கூட வேலைக்குப் போன்னு சொல்றேன்... கேட்கிறியா...? கிரணை கவனிக்கணும்ன்னு வீட்டிலிருக்க..."

"அது..." என்று இழுத்த மனைவியை இழுத்து அணைத்து கொண்டவன் அவளது காதில்,

"ஒரு விசயத்தில் உன் வெற்றிக்குப் பின்னால் நானிருக்கிறேன் கண்ணம்மா..." என்று விசமமாகக் கூற...

"எதற்குடா...?"

"உன் மகனின் வரவிற்குப் பின்னாடி நான் தானே இருக்கிறேன்..." என்று கண்சிமிட்டி சிரித்தவனை அவள் முறைத்து பார்த்தாள்...

"அந்த விசயத்தில் எல்கேஜியில் இருந்து உன்னைப் பிஎச்டி பாஸ் பண்ண வச்சியிருக்கேன் கண்ணம்மா... அதுக்கு நீ என்னைப் பாராட்டணும்..."

"பாராட்ட தானே வேண்டும்... இதோ..." என்றவள் தலையணையால் கணவனை மொத்த துவங்க...

"வேண்டாம் குள்ளச்சி..." என்று சிரித்தபடி அவளைத் தடுத்தவன் ஒரு கட்டத்தில் அவளை அடக்கி தனது ஆளுகையின் கீழ் கொண்டு வந்தான்...

"எனக்கு உன்னை மாதிரி மகள் வேணும்டி..." என்றவன் அவள் முகம் நோக்கி குனிந்தான்...

“ம்ஹும்... விதி வலியது...” என்று சிரித்தவள் அவனது செயல்களுக்கு முழுமனதாய் உடன் பட்டாள்...

என்ன தான் சண்டை போட்டாலும் கணவன் அருகில் வந்தால் வலமங்கை உருகி குழைந்து விடுவாள் அவனது

கரத்தில்... அது போல் இன்றும் உருகி குழைந்தவளை அவன் தாபத்துடன் அள்ளி கொண்டான்...

****************

"அழகு... என்னப்பா வீடு ரொம்ப அமைதியா இருக்கு..." என்று வைத்தியநாதன் கேட்டார்...

ஸ்கைப்பில் மறுபக்கம் இருவரது மொத்த குடும்ப உறுப்பினர்களும் குழுமியிருந்தனர்...

"யுத்தம் நடந்த பூமிப்பா... அதான் இவ்வளவு அமைதியாக இருக்குது... வாங்க, யுத்த பூமியை காட்டுறேன்..." என்றவன் ஐபேட்டை எடுத்துக் கொண்டு சமையலறைக்குச் சென்றான்...

அங்கு எல்லாப் பொருட்களும் வாரியிறைக்கப்பட்டுக் கிடந்தது...

"அட என்ன ராசா இது...?" அதைக் கண்டு வேதநாயகி மிரண்டு போனார்...

"எல்லாம் உன் கொள்ளு பேரன் அட்டகாசம் தான்..."

"அப்படின்னா சரி... எங்கே போனா அந்த மேனாமினுக்கி... அவளை வந்து கழுவி விடச் சொல்லு..."

"சத்தமா சொல்லாத ஆச்சி... அப்புறம் உன்னை வந்து கழுவி விடச் சொல்ல போகிறாள்..." கண்களை உருட்டி பேரன் எச்சரிக்கை செய்தான்... அதில் அவர் கப்சிப் என்று வாயை மூடி கொண்டார்...

"நாச்சியும், சண்முகமும் எங்கே...?" சுப்பிரமணியம் ஆர்வத்தோடு கேட்டார்...

"வெளியே ஓடி பிடிச்சு விளையாண்டுக்கிட்டு இருக்காங்க..." என்றவன் ஐபேட்டை தூக்கி கொண்டு வெளியில் வந்தான்...

வெளியில் கலவர பூமி போன்று அம்மா, மகனது சத்தம் பெரும் சத்தமாய்க் கேட்டது...

"டேய்... குட்டி குரங்கே நில்லுடா..." என்று கத்தியபடி வலமங்கை மகனை துரத்தி கொண்டு இருந்தாள்...

"முடியாது... நின்னா நீங்க அடிப்பீங்க..." என்று கூறியபடி கிரண் முன்னால் ஓடி கொண்டிருந்தான்... அவன் மீது மாவு கொட்டி தலை முதல் கால் வரை வெள்ளையாகக் காட்சி அளித்தான்...

இருவரது ஓட்ட பந்தயத்தைப் பெரியவர்கள் அனைவரும் மடிகணினியில் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தனர்...

"மங்கை... எல்லோரும் உனக்காக வெய்ட்டிங்..."

அழகு அழைத்ததும் மகனை மறந்தவளாய் அவள் கணவனை நோக்கி வந்தாள்...

"அம்மா... பாருங்கம்மா உங்க பேரனை... கிச்சன் முழுக்க மாவு, எண்ணெய், தண்ணின்னு எல்லாத்தையும் கொட்டி வச்சியிருக்கான்..." என்று அவள் அன்னையிடத்தில் புகார் வாசிக்க...

"நீ கொஞ்சமாவா சேட்டை பண்ணின...? உன்னைப் போல் உன் மகன் இருக்கிறான்..."

"ஆச்சி... அம்மா பொய் சொல்றாங்க... சுகர், சால்ட், வீட் ஃப்ளார் எல்லாம் வாட்டர், ஆயில்ல கரையுதான்னு எக்ஸ்பரிமென்ட் செஞ்சு பார்த்தேன்... அதுக்கு அம்மா என்னை அடிக்க வர்றாங்க..."

"ராசா... நீ தங்கம் கண்ணு... உனக்கு இருக்கிற மூளை உன் அம்மாவுக்கு இருந்தா அவள் எங்கேயோ போயிருப்பாள்... என்ன செய்ய...? நான் பெத்தது அப்படி..." என்று சித்ரவேணி சலித்துக் கொள்ள...

"அம்மா..." என்று வலமங்கை பல்லை கடித்தாள்...

அதைக் கண்டு அப்பாவும் மகனும் 'ஹை பை' கொடுத்து கொண்டனர்... அதைக் கண்டவள் தனது கோபத்தினை அவர்களிடம் காட்ட துவங்கினாள்... ஒரு கட்டத்தில் முடியாது,

"உங்க ரெண்டு பேரையும்..." என்றபடி அவர்களைத் துரத்த துவங்க...

அழகு ஒரு கையில் மகனை தூக்கி கொண்டு மறுகையில் ஐபேட்டை பிடித்தபடி வீட்டை சுற்றி ஓடினான்...

"நாடு விட்டு நாடு மாறி வந்தும் வீட்டை சுற்றி ஓடும் வேலை உன்னை விட மாட்டேங்குதுடா அழகு..." என்று அவன் போலியாக அலுத்துக் கொண்டே ஓட...

அதைக் கேட்டுப் பெரியவர்கள் அனைவரும் சிரிக்கத் துவங்கினர்... அதைக் கண்டு கிரணும் சிரிக்கத் துவங்க மகனது சிரிப்பு தந்தையையும் தொற்றிக் கொண்டது...

எல்லோரின் சிரிப்புச் சத்தம் கேட்டு வலமங்கையும் தனது கோபத்தினை மறந்தவளாய் சிரித்து விட்டாள்... மனைவியின் சிரிப்பை கண்டதும் தைரியமாய் அவளின் அருகில் வந்த அழகு அவளைக் காதலோடு அணைத்துக் கொண்டான்...

விழிகளில் நேசம் வழிய அவளும் அவனது தோள் சாய்ந்து கொண்டாள்... அந்தக் காட்சியைப் பார்க்க அத்தனை கவிதையாக இருந்தது...

வைதேகி சமையலறை சென்று மிளகாய் வற்றல், உப்பு, கடுகு எடுத்து வந்து மடிகணினியில் தெரிந்த மகனது குடும்பத்தினருக்கு திருஷ்டி கழித்தார்... அதைத் திரையில் கண்ட வலமங்கை, அழகின் புன்னகை இன்னமும் அதிகமானது...

இந்த மகிழ்ச்சி அவர்களது வாழ்நாள் முழுவதும் தொடரும் என்கிற நம்பிக்கையுடன் நாம் விடை பெறுவோமாக...!!!

பகை கொண்ட உறவு காதலாய் மாறி கரும்பாய்
தித்தித்தது...!!!